
உ
சிவமயம்

# தேரடிச்சித்தர் செல்லப்பா சுவாமிகள்



## நூற்றாண்டு விழா

## சிறப்பு மலர்

23.03.2015


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

உ
சிவமயம்

# தேரடிச்சித்தர்
# செல்லப்பா சுவாமிகள்



## நூற்றாண்டு விழா
# சிறப்பு மலர்

**2015**

11223P(PL)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தில் இழம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் ஆலயத்தின் தெற்கே அமைந்துள்ள
இராஜகோபுரத்தின் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் ஆறுமுக சுவாமியின் அலங்காரத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்லப்பா சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நல்லூர் கந்தசாமி கோவில் தேரடித் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூறாவது ஆண்டில் பிரதிஷ்டை செய்யப்பட்ட
செல்லப்பரின்
திருவுருவத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| பதிப்புரை | 01 – 03 |
| குரு சங்கம வழிபாடு | 04 |
| திருவடிவாகிய விசர்ச் செல்லப்பன் | 05 – 07 |
| நல்லூரரான் தேரடியை நாடு | 08 |
| நல்லூர் வீதியில் திருநடனம் புரிந்து அருளாட்சி செய்த ஆசான் செல்லப்பா சுவாமிகள் | 09 – 10 |
| யாழ்ப்பாணத்து நல்லூர் தேரடி மகான் செல்லப்பா சுவாமிகள் | 11 – 17 |
| காலத்தை வென்றோன் | 18 – 19 |
| யாழ்ப்பாணத்து ஞானியர் பரம்பரை | 21 – 25 |
| அத்வைத, சைவசித்தாந்த பார்வையில் மாயை | 26 – 30 |
| தேரடிச் செல்லப்பா சுவாமிகளைத் தரிசிப்போம் வாரீர் | 31 – 32 |
| சித்தம் மகிழும் செல்லப்பர் | 33 |
| நல்லூரரானும் செல்லப்பா சுவாமிகளும் | 34 – 35 |
| நல்லூர் ஆறுமுகசிவவேலவன் தெய்வ சிவஞானி சிவசித்தர் செல்லப்பா குருவாழி | 36 – 37 |
| ஆசான் அருளால் ஆசான் ஆயினேன் | 38 |
| செல்லப்பா நூற்றாண்டு விழா கவிதை | 39 |
| இந்து ஆலயங்களின் இன்றைய நிலை | 40 – 41 |
| செல்லப்பா சுவாமிகள் | 42 |
| Nallur Theradi Chellappar Swamigal | 43 – 48 |
| Chellappar Swamigal | 49 – 51 |
| நல்லூர் செல்லப்ப சுவாமிகள் | 52 – 56 |
| மீள்பதிப்பு | 57 – 75 |
| வராகி மாலை | 76 – 78 |
| செல்லப்பா சுவாமிகளின் பாமாலைகளின் தொகுப்பு | 79 – 113 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

"தின்னப் பொசிப்பு உள்ளவனுக்கு
திண்ணைக்கப்பிலை தேனடா"

என்பது செல்லப்பா சுவாமிகளின் அருள்வாக்கில் இருந்து வந்த விடயம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வல்லிபுரம் எனும் வேளாளன் நல்லூரைச்சேர்ந்த பொன்னம்மா என்னும் பெண்ணை திருமணம் செய்து வயலில் சிறு குடிசை அமைத்து வேளாண்மை செய்து சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தனர். அவர்களின் தவப்பயனாக இரு ஆண் பிள்ளைகளும்,இரு பெண் பிள்ளைகளும் பிறந்தனர். அவர்களில் ஒருவர்தான் செல்லப்பா சுவாமிகள் . செல்லப்பா கல்வியை கசடறக் கற்று அரசாங்க உத்தியோகம் பார்த்தார். நல்லூர் ஆலய முன் தென் கிழக்கு மூலையில் இவர்களது குடிசை இருந்த படியால் நல்லூர் கந்தசாமியரை தரிசிக்கின்ற பாக்கியம் இவருக்கு உண்டானது. அடங்கன் முறை, திருவாசகம், வராகி மாலை, பன்னிரு திருமுறை, கிளிப்பாட்டு, முருகன் பாடல்கள், பாராயணத்தில் செல்லப்பா ஈடுபடலானார். அவரது போக்கு மாறியது. உத்தியோகத்தை தூக்கியெறிந்தார் விசர்க் கோலம் பூண்டு தன்னைக் காட்டிக்கொள்ளாமல் பெருஞானியானார். பரம்பொருளை நிர்க்குணப்பிரமாய் அனுபவிக்கும் நிலை சாதனையால் உயர்ந்தபடியால் உள்ளவர்களிற்கே அமையும்.

ஊரிலான் குணங்குறி யிலான் செயலிலானுரைக்கும்
பேரிலாரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரிலான் வரல் போக்கினான் மேலோன் தனக்கு
நேரிலோ னுயிர்க்க கடவுள் யென்னுள்ளே நின்றான்

என்ற கந்தபுராணப் பாடல் நோக்கற்பாலது. உண்மையான ஞானி தன்னைக் காட்டிக் கொள்ளாமல் வாழ்ந்து, பின் தனது சீடன்மூலம் உலகிற்குக்காட்டிக் கொள்வர். அதேபோல செல்லப்பா சுவாமிகளும் சீடர் யோகர் சுவாமிகள் மூலம் தன்னை உலகிற்கு எடுத்துக் காட்டினார்.

யோகர் சுவாமிகள் தமது குருநாதரின் அகத்தோற்றத்தையும் புறத்தோற்றத்தையும் குணாதிசயங்களையும் பின்வருமாறு நற்சிந்தனையில் கூறுகின்றார்.

சிரித்து நல்லூர் தெருவிற் திரிபவர்
வெறித்த பார்வையர் வேடம் விரும்பியலர்
கறுத்த மேனியர் கந்தைத் துணியினர்
பாதிச்சாமத்தின் பின் பள்ளி கொள்பவர்
வீதியிற் செல்லும் வீண்ணர்கள் தங்களைப்
பேதிக்கும்படி வேண்டியே பேசுவார்
கோலமொன்றும் விரும்பிலன் கும்பிடச்
சால வன்புடன் தான் வரும் பக்தரைக்
கால னெனக் கருத்துடன் சீறுவான்

உல்லாசமான நடையுடை யோனே
பித்தரென்று பிறர் பேசும் திறத்தான்
புகழ்ச்சியும் இகழ்ச்சியும் ஒன்றாக கொள்பவன்
சிங்காரமான நடையோடு சிரிப்பினை யுடையான்
ஆரறிவாரென்று அடிக்கடி சொல்லுவான்
தேரடிப்படியில் சிங்காரமாய்க் கிடப்பான்
பேரறிவாளனெனப் பிறரெவருமோ வறியார்
பித்த னென் றுலகோர் பேசுவர் ஏசுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாதி சமயமெனும் சங்கடத்துக்குள்ளாகான்**
**சேதி யொன்றும் சொல்லதகில்லான் – சின்னத்தங்கம்**
**சித்தப் பிரமை யென்பார் (எல்லோரும்)**

**நீதி அநீதி என்னும் நிலமை யொன்றும் இல்லாதான்**
**மாதிரிகள் ஒன்றும் செய்யான் – சின்னத்தங்கம் (மத்தனைபோல் திரிவானடி)**
**ஆறுதலாய் யிருமென்பான் ஆணவத்தை நீக்குமென்பவான்**
**மாறுபாடாய் பேசிடுவான் – சின்னத்தங்கம்**
**மதியிழந்தான் என்பாரடி**

சிவபெருமானே செல்லப்பராக வந்து நல்லூரில் ஆன்மாக்களுக்கு அருள் செய்வதற்காக நடனமாடினார் என்பதனை வரும் பாடலில் அறிய முடிகின்றது.

**காட்டிலே காளியுடன் கூத்தாடும் கண்ணுதலோன்**
**நாட்டிலே ஞானகுருவாய் நயந்து வந்து**
**மீட்டானவன்றன் விரையார் மலரடியை**
**மாட்சிமை சேர் நல்லைத்தேர் மாணடியிற் கண்டேனே.**

**மாலயனுந் தேட யறியா மலரடிகள்**
**கோல வருட் குருவாய்க் குவலயத்திலே போந்து**
**சாலப் பெரும்பகையைத் தானீக்கி யாண்டானை**
**ஞாலம் புகழு நல்லைத் தேரடியிற் கண்டேனே**

இவ்வாறு பெருமைவாய்ந்த செல்லப்பா சுவாமிகளின் குடிசை மா, பலா, வாழை, பலாமரம் சூழ்ந்த சூழலில் இருந்தது. அந்தச் சூழலில் குடிசையில் வாழ்ந்த சுவாமிகளிற்கு பணிவிடை செய்யும் பாக்கியம் அவரின் உறவினரான எமது தந்தையாருக்கு கிடைத்தது. சுவாமிகள் அவரை சிறு சிறு வேலைகளிற்கு ஏவுவார். உதாரணமாக வைத்திய சம்பந்தமான குடிநீர் மூலிகைகளை நீண்ட தூரம் சென்று எடுத்து வா என்பார். அதனை சிலவேளை பயன்படுத்துவார். சில வேளை "வேண்டாம் கொண்டு போ." என்று கூறுவாராம் கடைசி நேரத்தில் சமாதியாக இரண்டு நாட்களுக்கு முன்னர் "இங்கே வா எனக்கு சுகமில்லை உடம்பெல்லாம் நோகுது பரியாரியார் வீடுகளிற்கு செல்வதில் பயனில்லை நான் வைத்தியம் சொல்கிறேன் நீ செய்வியா?" என்று கேட்டாராம். தந்தையார் அதற்கு உடன்படவே, "வளவிலுள்ள பொச்சு மட்டைகளை பொறுக்கி தணலை மூட்டு, அதில் ஒரு பொச்சு மட்டையை எடுத்து தணலில் பிறத்தி மட்டையை பிடித்து சூடாக்கி ஒத்தணம் உடம்பிற்கு கொடு" என்றாராம் அவர் கட்டளைப்படி தந்தையார் செய்ய "இதல்லவோ வைத்தியம் சுகமாகி விட்டது" என்றார். அடுத்த நாள் அவரது கொட்டிலில் நித்தம் வந்து படுக்கும் ஒருவருக்கு சொன்னாராம், "இன்று இரவு வருவாயா? இங்கு அதிசயம் நடக்கும்" என்றாராம் . அன்று அவர் இரவு அங்கு வரவில்லை. அடுத்த நாள் வந்து பார்த்தபோது, சுவாமிகள் நடராச வடிவத்தில் ஒரு காலைத்தூக்கி அபய வரத கோலத்தில் சமாதி நிலையில் அவரது உடம்பு விறைத்தபடி இருந்ததாம். சுவாமிகளின் கட்டளைப்படி எமது தந்தையார் சடையர் சபாரத்தினம் அவர்கள் அவரது தீர்க்கடன் நீர்க்கடன்களினைச் செய்தார். அன்றைய பங்குனி மாத அச்சுவினி நட்சத்திரத்தைக்கொண்டு சுவாமிகளின் குருபூசை அவரது குடிசையில் நூறு ஆண்டுகளாக பக்திபூர்வமாக சிறப்பாக அமைதியாக நடைபெற்று வருகிறது.

முற்காலங்களில் சுவாமிகள் பாவித்த அடங்கன் முறை கிளிப்பாட்டு, சங்கு ஆகியவற்றை நினைவாக வைத்து குரு பூசை நடைபெற்று வந்தது. அன்னதானம் நல்லூர் தேரடியிலுள்ள அறுபத்து மூன்று நாயன்மார் மண்டபத்தில் நடைபெற்றது. பின் நினைவாலய முன்றலில் நடைபெற்று வரு கின்றது. அன்றைய தினம் நினைவாலயபூசை முடிந்த கையோடு சுவாமிகள் தவமிருந்த தேரடியிலும் பூசை நூறு ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. எமது தந்தையால் 1915ம் ஆண்டில் இருந்து முப்பத்தெட்டு வருடங்கள் செய்து வந்தார். அவருக்கு உதவியாக கொழும்புத்துறை விதானையார், கணக்காளர் நவரத்தினம், கல்வி அதிகாரி திருமதி நவரத்தினம், சுருட்டு தொழில் அதிபர் வை. சி.சி குமாரசாமி குடும்பம் ஆகிய நான்கு பேரும் உதவியாக இருந்தனர். 1954ம்ஆண்டிலிருந்து எனது தமையனார் கனகரத்தினம் அவர்களும் அடியேனும் செய்து வருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் அண்ணாவும் சிறுவர்களாக இருந்த நேரத்தில் எமது தந்தையாருடன் யோகர் சுவாமிகளை சந்திக்க கொழும்புத்துறை ஆச்சிரமத்திற்கு சென்றோம். நாங்கள் தங்கச்சங்கிலி அணிந்து சென்றோம். சுவாமிகள் எங்களைக் கண்டவுடன் "இங்கே ஏன் வந்தீர்கள்" என்று தந்தையாரைப் பார்த்து அங்கேதான் எல்லாம் இருக்கு என்று தகாத வார்த்தைப் பிரயோகத்துடன் எங்களைப்பார்த்து "அணிந்திருக்கும் லாடன்களை கழட்டிக்கொள்" என்று சொல்லி சந்தோசமாக அனுப்பி வைத்தார். சிவயோக சுவாமிகள் சமாதியடைய சில நாட்கள் முன்னர் காரில் வந்து நல்லூரரைக் கும்பிட்டு நினைவாலயப்படலையில் காரில் இருந்த படியே "நான் வைத்தியரை தேடிவந்தேன் கண்டு விட்டேன்" என்று கூற எங்களுடன் நின்ற எமது தாயார் அவர்களை "உள்ளிற்கு வாருங்கள்" என்று அழைக்க "நான் வரத்தேவையில்லை பிள்ளைகள் நலமாய் இருப்பபார்கள்" என்றும் "உனக்கு பல்லும் போச்சு, தலையும் நரைக்க போகுது" என்றார்.

கைதடி பொறியியலாளரான நாகலிங்கம் அவர்கள் மரக்கம்புகளுடன் கொட்டிலாய் இருந்த நினைவாலயத்தை கற்தூண்கள் நிறுத்தி நிலத்திற்கும் சீமெந்தினால் தரை போட்டு நில வேலையும் செய்தார் அதன் பிற்பாடு 1983 இல் சுவாமிகளின் நினைவாலயத்தை கொட்டிலில் இருந்து கல் மண்டபமாக சுப்பிரமணிய சுவாமிகளின் நிதியுதவியுடன் புதிதாக அமைத்தோம். சுவாமிகளின் நூறாவது குருபூசை தினத்தில் ஒரு மாற்றம் செய்ய வேண்டும் என்று எமது மனதில் தோன்றியது அதில் நினைவாலயத்தில் இருந்தது போல படத்தை வழிபாடு செய்வதா திருவுரு வைத்து வழிபாடு செய்வதா சுவாமிகளின் ஐம்பொன்னாலான திருவுரு பிரதிட்டை செய்வதா என்று சிந்தித்தோம் எங்கள் குல தெய்வமான நல்லூர் கந்தனில் திருவுளச்சீட்டு (பூக்கட்டிப் பார்த்தல்) மூலம் நல்ல நாளில் கேட்டோம். திருவுருவிற்கான விடை கிடைத்தது. அதன் படி 22.03.2015 இல் சுவாமிகளின் திருவுரு பிரதிட்டை நல்லூர் சிவாச்சாரியார் வைகுந்தக்குருக்கள் மூலம் சிறப்பாக நடைபெற்றது. அன்றைய தினம் நூறாவது ஆண்டு மலர் ஒன்று வெளியிட இருந்தோம் அது முடியாமல் போய்விட்டது . அதனை இவ்வாண்டு வெளியிட்டு வைக்கின்றோம்.

அதில் நற்சிந்தனைப்பாடல்கள் சுவாமிகளின் வரலாறு, அறிஞர்களின் கட்டுரை, படங்களுடன் சிறப்பாக வெளிவருகின்றது. இதற்கு பல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்த திரு. ஆறு திருமுருகன், திரு. தொண்டு நாத சுவாமிகள், திரு. விஜேஸ்வரன், தியாகி அறக்கொடை நிலைய உரிமையாளர் திரு வா. தியாகேந்திரன், பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், யாழ். பல்கலைகழக விரிவுரையாளர் திரு. வேதநாதன், பண்டிதர் தி. பொன்னம்பலவாணர், திரு. சோ. எதிர்வீரசிங்கம் திரு தியாகலிங்கம், குமாரதேவன் (லண்டன்), திருமதி வி. கிருஸ்ணபிள்ளை, திரு. வே. சிவகுருநாதன், திரு. ச. உசாந்தன் , திரு. க. ஜனகன் , மலருக்கான படங்களை தந்துதவிய பேபி போட்டோ உரிமையாளர், அமரர் பொறியலாளர் நாகலிங்கம் (கைதடி), அமரர் முத்துகுமாரசுவாமி (இளைப்பாறிய அதிபர் - கைதடி), அமரர் V.S.S.K குமாரசுவாமி, அமரர் மயில்வாகனம் கைதடி (ஆசிரியர்) , திருமதி எஸ். சக்திவேல், திரு. எஸ் . சிவபாலன், கைதடி மயில்வாகனம் அமரர் சங்கீதவித்துவான் ஊரிக்காடு நடராசா, அமரர் இராமலிங்கம் (திருநெல்வேலி) அமரர் ஆசிரியர் தில்லைநாதன் (சாவகச்சேரி) சிவதொண்டர் நிலைய அடியார்கள், ஆகியோருக்கு நன்றி கூறிக்கொள்கின்றோம். அத்துடன் இம்மலரின் ஆக்கத்திற்கு கட்டுரை தந்த அனைவருக்கும் நன்றி கூறிக்கொள்கின்றோம்.

இம்மலரை அச்சிட்டு வெளியிடவும் சுவாமிகளின் நூறாவது ஆண்டு குரு பூசையில் பல வழிகளிலும் உதவி புரிந்த பொஸ்கோ நிறுவன உரிமையாளர் திரு. சிவச்சந்திரபோஸ் அவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கின்றோம். எல்லா வழிகளிலும் உதவி புரிந்த அன்பர்களிற்கும் எல்லா நலன்களுடன் வாழ செல்லர் சுவாமிகளின் திருவருள் புரிய வேண்டுமென அவரின் பொன்னடிகளை இறைஞ்சுகின்றோம்.

**செல்லப்பா சுவாமிகள் நினைவாலயம்**
**252, பருத்தித்துறை வீதி,**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**
**19 ஆவணி 2015**

இங்ஙனம்
ச. கனகரத்தினம்
ச. கனகசபாபதி
(செல்லப்பா சுவாமிகளின் பேரன்மார்)

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு - சங்கம வழிபாடு

பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்
சித்தி விநாயகர் தேவஸ்தானம்
பொன்னாலை

சைவசமயத்தில் விதிக்கப்பட்ட மூன்று வழிபாடு களுள் இக்காலத்தில் ஒரு வழிபாடே மிகப் பலரால் மேற்கொள்ளப்படுகின்றது. அப்படி மேற் கொள்ளப்படும் வழிபாட்டை நம் சமய நூல்கள் லிங்கவழிபாடு என்கின்றன. லிங்க வழிபாடு தவிர்ந்த குருவழிபாடு - சங்கம வழிபாடு என்பன இக்காலத்தில் மிகச்சிலரால் மிகக்குறைந்த அளவே மேற்கொள்ளப்படுகின்றன. இந்நிலை நீங்கி மூன்று வழிபாடுகளும் நன்கு பின்பற்றப்படுவது அவசியம்.

குருவழிபாடு - சங்கம வழிபாடு என இரண்டாகக் கூறப்பட்டாலும் ஒன்றினுள் ஒன்று கலத்தல் வழக்கமே. இப்படிக் கலத்தல் தவறோ - குற்றமோ அன்று. ஏனெனில் குருவாக விளங்குபவர் அடியவராக இருத்தலும் அடியவராக இருப்பவர் சிறுபான்மையாவது குருவாக அருள்புரிதலும் இயல்பே.

தமிழ்நாட்டிலும் இந்தியா முழுவதிலும் சங்கம வழிபாடு வலுப்பெற்று இருப்பதுபோல் நம் நாட்டில் இல்லை என்றே கருத வேண்டியுள்ளது.

இந்த இரு வழிபாடுகளும் சைவசமயத்துக்கு வெளியே வைணவம் முதலிய சமயங்களில் மட்டுமன்றி கிறீஸ்தவம், சோனகம் முதலிய சமயங்களிலும் நன்கு உள்ளது.

இவ்விடயத்தில் நம்மவர் அக்கறை சிறிது அதிகரிக்க வாய்ப்பாக நல்லூர் செல்லப்பா சுவாமிகள் திருவுரு அமையும் நிகழ்ச்சி உள்ளது எனலாம்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் மகிமையை சுவாமி விவேகானந்தரால் உலகம் முழுவதும் அறிந்தது போல் நல்லூர் செல்லப்பா சுவாமிகள் மகிமையை யோக சுவாமிகளால் அறியமுடிகின்றது. ஆனால் திருஞானசம்பந்தர் முதலிய சமயகுரவர்களையோ தூய யோக சுவாமிகளையோ கூட வழிபட்டு நன்மையுறத் தெரியாமல் உள்ள நம்மவர் தம் எதிர் காலத்தில் திருந்தி விரைந்து முன்னேற செல்லப்பா சுவாமிகள் திருவுருவ வழிபாடு வழிவகுக்கும்என நம்புவோம்.

ஏனெனில் இக்காலத்தில் நம்மவர் அனைவரும் உருவ வழிபாட்டால் வழிபாட்டு வலிமை பெறுபவர்களாக உள்ளனர்.

நம் நாட்டில் மட்டுமல்ல உலகம் முழுவதுமே 18 அடி ஆஞ்சநேயர் 20 அடி சிவபெருமான் எனப் பெரிய பெரிய திருவுருவங்களை மகிழும் நிலை உள்ளபோது உருவமே இல்லாத வழிபாடு திருப்தியளிக்காது என்பது வெளிப்படையே. இந் நிலையைச் சரிசெய்யத்தக்கதான திருவருள் தூண்டுதலால் செல்லப்பா சுவாமிகள் திருவுருவம் உருவாகியுள்ளது. செல்லப்பா சுவாமிகள் வழிபாட்டை யோக சுவாமிகளே நற்சிந்தனை மூலம் எல்லோருக்கும் அருளியிருக்கிறார்.

நாம் நற்சிந்தனைமூலம் யோகசுவாமி களையும் செல்லப்பா சுவாமிகளையும் வழிபட வேண்டிய கட்டாயம் உள்ளவர்களே. எமக்குரிய செல்லப்பா சுவாமிகள் வழிபாட்டிற்கு உதவும் செல்லப்பா சுவாமிகள் திருவுரு செல்லப்பா சுவாமிகள் வழிபாட்டுக்கு மட்டுமன்றி குருசங்கம வழிபாடுகளுக்கும் ஊக்கமளிக்க வேண்டுமெனப் பிரார்த்திப்போம்.

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவடிவாகிய விசர்ச் செல்லப்பன்

திருமதி. நாச்சியார் செல்வாநாயகம்
ஓய்வுநிலை முதுநிலை விரிவுரையாளர்
முந்நாள் இந்து நாகரீகத்துறைத்தலைவர்

"பித்தா பிறை சூடி பெருமானே அருளாளார்" என்று சுந்தரமூர்த்தி நாயனார் சிவனைக் காட்டியமை சைவர்கள் அறிந்த உண்மை. பித்து பிடித்தவர்கள் கணந்தோறும் மாறிக்கொண்டே இருப்பது உலகியல் உண்மை. ஆனால் அருளில் பித்தநிலை என்பது வேறு வேறு வடிவு கொண்டு அருளாடல் செய்து பக்தர்களை கரையேற்றுவது. அவ்வகையில் விசர்ச் செல்லப்பன் என்ற பரமஞானி செய்த கூத்துகள் பல. அவற்றுளொன்று ஒருமுறை சாவகச்சேரிச் சந்தையில் செல்லப்பனும் யோகனும், ஒரு கத்தரிக்காய் வாங்கி வந்து ஒரு சோறும் கறியும் சுவையாக சமைத்தனர் குருவாகிய செல்லப்பனும் சீடராகிய யோகனும் பசியாறுவதற்கு ஆயத்தமாகும் வேளையில் சாதமும் கறியமுதமும் நிறைந்த பானை சட்டிகளை உடைத்து கொட்டிவிட்டு "இப்பொழுது இதற்கு சாப்பாடு எதற்கு?" என்று கூறியவண்ணம் செல்லப்பன் நல்லூரான் தேர்முட்டிக்குச் சென்று தியானத்தில் ஆழ்ந்தனன். இந்நிலையில் பசியால் வாடியிருந்த போதும் குருவாகிய செல்லப்பரின் அருளால் சாப்பாடு இந்த தேகத்திற்குதானே ,நான் தேகமா? என்று யோகர் சிந்திக்கலானார்.

நான் தேகமன்று, நான் என்றுமழியாத நித்ய வஸ்துவாகிய ஆத்மாவே என்ற ஆன்ம சுகத்தை ஒருவாறு உணரலானார் யோகர். எவவே விசர்ச் செல்லப்பர் என்னும் அருளுருவைக் குருவாக கொண்டு மெய்யுணர்வை பெற்றுக் கொண்டார். இறைவனை அறிவதற்கு ஒரே வழி அவன் மீது நம்பிக்கை கொள்ளுதல். அவ்வகையில் இறை அருள் வடிவாகிய குருவில் முழுமையான நம்பிக்கை வைப்பவர் குருவின் மூலம் ஆன்மீக சுகத்தை மெய்யுணர்வை பெறுகின்றனர். செல்லப்பனிடத்தே உண்மையான நம்பிக்கை கொண்ட யோகர் காலகதியில் உலகம் போற்றும் மெய்ஞானச் செல்வரானார். ஆன்மீகம் என்பது நம்பிக்கையின் மலர்ச்சியே.

ஒன்றுக் கொன்று முரணானது போலத் தோன்றும் அறிவுரைகளை செல்லப்பன் யோகருக்குக் கூறுவார். "காண்பதெல்லாம் வீண்பாவனை" "பார்ப்பதெல்லாம் பரம்" என்றிவ்வாறாகப் பல மாறுபாடான கருத்துகளை கூறியிருப்பதை நாம் காணலாம். ஆனால் மெய்யுணர்விற்கான வழியாகவே இத்தகைய முரண்பாட்டு உத்திகளை செல்லப்பர் கையாண்டுள்ளமை ஆன்மீக சாதகர்களினால் மட்டுமே உணரக்கூடியது. உலகில் வாழும் மனிதன் மனக்குரங்கினால் அலைக்கழிக்கப்படுவது இயல்பு.

உண்மையான பேரின்ப நிலை அதாவது மெய்யுணர்வு ஏற்படும் வகையில் இத்தகைய செயற்பாடுகள் கற்றவர்களுக்கும் கல்லாதவர்களுக்கும் ஏற்படுகின்றன. யோகர் தன் குருநாதரான செல்லப்பரை தன்னை மனச் சேட்டைகளிலிருந்து விடுவிக்கமாறு வேண்டும் வகையில்

**"செல்வக் குருநாதா செல்வக் குருநாதா**

**"சிந்தை தடுமாறுதடா திருவருளை தந்திடடா"**

**என்றும்**

**"கூத்தாடுதே மனமென்ன கொடுமை கும்பிட்டேன்**

குருநாதா நான் உன் அடிமை" என்றும் கூறியிருப்பது நோக்கற்பாலது மனமாக முற்றும் நீங்கிய நிலையிலே மனக் குரங்கு மௌனமாகின்றது அதற்கு குருவருள் இன்றியமையாதது. "குருவே சிவமெனக் கூறினன் நந்தி" என்பது திருமந்திரம் உண்மை களை உணர்ந்த ஞானிகளின் செயல் உலக த்தவர்களுக்குப் பைத்தியமாகவே காண ப்படும். ஏனெனில் பூரண அறிவில் இடம் பெறும் செயல்கள் சிற்றறிவினர்களால் விளங்கிக்கொள்ள முடியாமையினால் அவற்றைப் பைத்தியமாக வே கருதுவர். செல்லப்பன் யோகரை "யாரடா நீ தேரடா" என்ற வாசக தீட்சை யினால் மெய்யுணர்வு பெற வழிகாட்டினார். "என்னை எனக் கறிவித்தான் எங்கள் குருநாதன்" என்று யோகர் கூறும் செய்தி குருவின் அருளால் தன்னை அறியும் பேர றிவைக் குருநாதர் தனக்குக் கொடுத்தமையை போற்றுவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் திருநாட்டிலே செல்லப்பன் தன்னை ஆட்கொண்டு அருள் பாலித்த தன்மைகளை எல்லாம் ஊன் உருக உயிர் ஒளிரச் செய்தமையை அதாவது மணிவாசகர் கூறுவது போன்று ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் செல்லப்பன் ஈந்தவற்றை மேல்வருமாறு விபரிக்கிறார்.

**"என்புநனி நெக்குருக என்னை வலிந்தாண்ட**
**என் குரவன் காட்டி வைத்த தெங்கள் வள நாடே"**
**ஓதாமலோதுவித்த உயிர்க்குயிராம் நாதன்**
**ஒண் கழல்கள் காட்டிவைத்த தெங்கள் வள நாடே**
**மட்டுப்படா மயக்கமெலாந் தீரவெனை ஆண்டான்**
**மலர்ப்பாதங் காட்டிவைத்த தெங்கள் வள நாடே**
**ஐயனடியேனறியாய்ப் பருவத்தே வந்து**
**ஆட்கொண்டு காட்டி வைத்த தெங்கள் வள நாடே**
**தஞ்சமென்ற எளியனெனை அஞ்செலன்று காத்த**
**தவஞானக் குருவடிவம் காட்டி வைத்த நாடே.**

செல்லப்பன் பைத்தியக் கோலத்தில் தன்னை ஆண்டு கொண்ட பெரும் பேற்றினை "உன் மத்தன் போல வந்தென்னுடல் பொருளாவி மூன்றும் தன்னத்தம் வாங்கிக் கொண்ட சற்குரு வாழ்கள் வாழ்க "எனப் போற்றுவது நோக்கற் பாலது.குரு என்பவர் அறியாமையை நீக்கி அறிவைக் கொடுப்பவர். சத்குரு என்பது உண்மையை மெய்யுணர்வை விளைவிப்பவர். யாரடா நீ ? தேரடா என்ற வாசக தீட்சையினால் பித்தன் செல்லப்பன் யோகரின் பித்தை நீக்கிப் பெரு வாழ்வு பெற வைத்தார். தேரடி என்பது நம்மை நாம் தேர்ந்து நம் தலைவனாம் இறைவனைத் தேர்ந்து "அவனே தானே ஆகி நிற்கும் நிலையே "ஆகும்" என்னை எனக்கறிவித்தான் எங்கள் குரு நாதன்" என்ற யோகர் மொழி செல்லப்பர் சத்குரு என்பதையும் " பார்வை என மாக்களை முன் பற்றிப் பிடித்ததற்காம் போர்வை எனக்காணார் புவி.என்று திருவருளின் பயன் குரவடிவால் சிந்திக்கப்படுவதையும் வெளிப்படுத்து வதாகும்.இறைவன் முதற்குருவாகும் அவன் அருளுருவம் தாங்கி குருவடிவாக மானிடச் சட்டை தாங்கி வருவது உலகை உய்விப்பதன் பொருட்டே. செல்லப்பன் என்னும் பித்தன் இறையருளின் திருவடிவே. அத்திருவுருவை போற்றி வழி படுவதன் மூலம் நாமும் திருவுருவாகலாம்.

மனிதனுக்கு எதற்கு வீடுகள்? அவர்களால் தங்குமிடமில்லாமல் காட்டில் வாழும் மிருகங்களைப் போல் வாழமுடியுமா? மாறும் சீதோஷண நிலையிலிருந்து பாதுகாத்துக் கொள்ள மனிதர்களுக்குப் பாதுகாப்பு தேவை. எனவே தங்கள் உடலைச் சௌகரியமாக வைத்துக் கொள்ள மனிதர்களுக்குப் பாதுகாப்பு தேவை. எனவே தங்கள் உடலைச் சௌகரியமாக வைத்துக் கொள்வதற்கு மனிதர்கள் வீடுகளைக் கட்டுகிறார்கள். அதே போல் ஆன்மீக மலர்ச்சிக்கு மெய்யுணர்விற்கு ஸத்சங்கம் ஒரு உறைவிடம். சத்சங்கம் மனிதனுக்கு உண்மையை உணரக் காப்பளிக்கிறது எனவே சத்சங்கம் ஒரு காப்புக் கவசம். அன்பையும் ஆனந்தத்தையும் பெறும் ஒரு கூடே சத்சங்கம். இவ்வகையில் செல்லப்பனின் உபதேசங்கள் அவர் உலகுக்களித்த மெய்ஞானச் சீடராகிய யோகர் சுவாமிகள் சிந்தனைகள் என்பவற்றை நாம் நம்முடன் இணைக்கும் போது அவற்றுடன் சங்கமமாகி நாம் புகலிடம் பெறுகின்றோம். உண்மை தர்க்கத்திற்கும் பகுத்தறிவிற்கும் அப்பாற் பட்டது. குருவுடன் அவர் வெளி ப்படுத்தும் ஞானத்துடனும் பிணைப்பை ஏற்படுத்துவதால் உண்மை உணரப்படுகிறது. மனதில் விழிப்புணர்வும் இதயத்தில் அன்பும் செயலில் நேர்மையும் கொள்வதற்கு சத்சங்கமே வழியாகும். விசர்ச் செல்லப்பன் காட்டிய வழி, மனதில் விழிப்புணர்வையும் இதயத்தில் அன்பையும் செயலில் நேர்மையும் காட்டுவன. ஒரு ஆசிரியர் போதனை தருகிறார். ஒரு குரு தீக்ஷை அளிக்கிறார்.சமஸ்கிருதத்தில் தீக்ஷை என்றால் புத்தியின் எல்லையை கடைந்துபின் செல்வது. எனவே ஆன்மீகம் என்பது அறிவைக் கடந்த மெய்யுணர்வு அன்பில் மலரும் முழுமை. செல்லப்பன் காட்டிய வழி அதுவே.

செல்லப்பன் என்னுந் திருவுடையான் தேரடியில் பொல்லாப்பில்லை யென்றான் போற்று. நல்லூர்த் தேரடியில் செல்லப்ப சுவாமிகள் என்னும் திருவுடையான் , ஒருவன் தன்னைத் தேர்ந்து கொள்ளும் வகையை அறிந்தால் அவனுக்கு வாழ்வில் பொல்லாப் பில்லை.

என்பதை ஆணையாகக் கூறுகின்றார். சிவனே குருவாய் எழுந்தருளி பக்கு வமுள்ள ஆன்மாக்களுக்கு குரு சிஷ்யர் என்னும் வழிமுறையில் அருள் புரிதலின் இதனைக் குரு நெறி என்றும் சிவநெறி என்றும் சைவ மரபில் கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சைவப் பெருமைத் தனி நாயகன் நந்தி**
**உய்ய வகுத்த குரு நெறி ஒன்றுண்டு**
**தெய்வச் சிவநெறி சன்மார்க்கம் சேர்ந்துய்ய**
**வையத்துள்ளார்க்கு வகுத்து வைத்தானே**

என்பது திருமந்திரம். எனவே சிவ நெறியாகிய குரு நெறியை பேணுதல். நமக்கான அறமாகும். இவ் வகையில் செல்லப்பன் கூறிய குரு மொழியை முழுமையாக நம்பி அதன் வழி நடந்தால் நமக்கொரு பொல்லாப்புமில்லை. செல்லப்ப சுவாமிகளின் திருவுரு அவர் வாசம் செய்த இடத்திலே ஐம்பொன்னால் ஆக்கப் பட்டுப் பிரதிஷ்டை செய்யப்படும் பாக்கியம் அவர் இறையுடன் ஐக்கியப்பட்ட நூறாவது வருடத்தில் நடை பெறுவது திருவருட் செயலே. இறை அருளே முழுதும் உண்மை இதை அறிவதால் ஒரு பொல் லாப்புமில்லை அருளால் உலகம் தொழிற் படுவதென்பது எப்பவோ முடிந்த காரியம் இவை அனைத்தும் முழுதும் உண்மை. சத்தியத் தினாலேயே சத்தியம் உணரப் படுகின்றது. இது ஞானிகளின் அநுபவ சித்தாந்தம். அன்பு தான் உலகில் சத்தியமான பொருள் எனவே சிவம் என்பது மெய்யன்பே. அந்த முழு உண்மையை உணருவதே பேரா னந்தம். இதுவே செல்லப் பரின் வாழ்க்கையின் வெளிப்பாடு.

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரான் தேரடியை நாடு

மூத்த கலைஞர் . பண்டிதர் சி.கா சேந்தனார்

இராகம்:- பந்துவராளி தாளம்:-ஆதி

### பல்லவி

தேரடியை தினம் நீ நாடு நல்லூரான்
தேரடியை தினம் நீ நாடு

### அநுபல்லவி

ஆரா அன்பால் அடியார் அவாவும்
சீராம் திரு நல்லூராம் கோயில்

(தேரடியை)

### சரணம்

கருமம் சுகத்தில் தழைக்கத் தார்மீக
அதன் நெறி அறிந்து ஆணவம் அகன்று
திரு முறை புராண தெய்வீக சிந்தனை
அருமறை அகம பெருகிட

(தேரடியை)

காமக்குரோம் ஆறும் அகன்று
சேம வாழவின் சிவனே தெரிந்து
நாம் பதிபசு பாசம் மூன்றும்
அழியா தன்மை தெரிந்திட

(தேரடியை)

அவன் தான் நீ என்னும் ஆன்ற அறிஞர்
தவம் தாம் தான் தெரிந்து சாத்திய உண்மையை
அவன் தான் இன்றி அகிலம் இல்லையென
உவந்தே உணர ஓதிய நல்லூர்

(தேரடியை)

யோகர் செல்லப்பர் குருவை அறிந்து
போக போக்கிய பொருளை தேடி
தாக வாழ்வை தவிர்து சிவனாம்
போக வாழ்வை தேடன கூறிய

(தேரடியை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் வீதியில் திருநடனம் புரிந்து அருளாட்சி செய்த ஆசான் செல்லப்பா சுவாமிகள்

சிவதொண்டன்
தில்லையம்பலம் சிவயோகபதி
உலக சைவப் பேரவை - கனடா

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.

- திருமந்திரம்.

தவத்திரு சிவயோகசுவாமிகளின் ஞானகுரு செல்லப்பா சுவாமிகளின் 100வது குருபூசைத் தினம் பங்குனி மாதம் அச்சுவினி நட்சத்திரம் கூடிய நாளாகிய ஞாயிற்றுக்கிழமை 22.03.2015 ஆகும்.

சிவயோக குருமணி அருளிய நற்சிந்தனை எனும் பதிகத்தில் தனது குருமணி தேரடிச்சித்தர் செல்லப்பா தேசிகர் அருளிய ஞான விளக்கங்கள் பற்றி போற்றிப் பாடி இருக்கிறார். செல்லப்பா தேசிகர் அருளிச் செய்த மகாவாக்கியங்களூடாக உண்மை விளக்கம் செய்வதே நற்சிந்தனையின் தனிச்சிறப்பாகும். புண்ணியர் யோகர் நல்லூரில் கண்ட குரு மருந்தாகிய வல்லவன் பற்றிய பின்வரும் சில விபரங்களை அறிந்து கொள்வோம்.

ஈழவள நாடு எங்கள் தாய் நாடு. இந்நாட்டின் வடபாலுள்ள சிறந்த நகரம் செந்தழிழ் வழங்கும் யாழ்ப்பாணமாகும். அங்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வல்லிபுரம் - பொன்னா தம்பதிகளின் தவப்புதல்வராக வந்துதித்தார் செல்லப்பா. பின்பு விவசாயத்தின் பொருட்டு இவரது பெற்றோர் நீர்வளம், நிலவளம் குன்றாத நல்லூரான குமரன் உறையும் குறைவற்ற ஊராம் நல்லூரில் குடியேறினார்கள். நல்லூர் பெருமானின் வெளிவீதியோரமாக தென்கிழக்கில் இருந்த ஒரு குடிசையில் வாழ்ந்து வந்தார்கள். அக்குடிசை இருந்த இடம் செல்லப்பா சுவாமிகளின் நினைவாலயமாக காட்சி அளிக்கிறது. செல்லப்பா சுவாமிகள்

இக்குடிசையிலிருந்து கல்வி கற்ற பின்பு, சிலகாலம் யாழ்ப்பாணக் கச்சேரியில் ஆராச்சி உத்தியோகத்தர் பதவியை வகித்தாரென்பர். செல்லப்பா சுவாமிகள் நல்லூரில் பிரபல வைத்தியர் சின்னத்துரையின் மைத்துனராவார். வெகு விரைவில் தனது பட்டம் பதவி அனைத்தையும் விட்டு விசர்க்கோலம் பூண்டார். அவரை யாவரும் விசர்ச் செல்லப்பா என அழைத்தனர் எனினும் அவரிடம் செல்லும் பக்தர்கள் முழு நம்பிக்கையுடன் அவரை வணங்கினார்கள்.

செல்லப்பா சுவாமிகள் நல்லூர் வீதியில் பெரும்பாலும் சஞ்சாரம் செய்த போதிலும் அவர்களுடைய அடியார்கள் வசித்த கொழும்புத்துறை திருநெல்வேலி, கைதடி முதலிய இடங்களுக்குச் சென்று திரும்புவார்.

அங்குள்ள அன்பர்களிடத்து சில வேளைகளில் தாமாகவே உணவு பெற்றுண்பார். செல்லப்பா சுவாமிகள் விசிறி கட்டுவதிலும், தென்னோலையைக் கொண்டு கிடுகு பின்னுவது போன்ற கைப்பணிகளிலும் விற்பன்னராக விளங்கினார். இராமநாதன் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டிய தினத்தில் சுவாமிகள் மருதனாமடம் சென்று சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களுக்கு ஒரு விசிறியைக் கொடுத்து,

"ஒரு பொல்லாப்பமில்லை
எப்பவோ முடிந்த காரியம்
முழுவதும் உண்மை
நாம் ஒன்றுமறியோம்"

ஆகிய மகாவாக்கியங்களைக் கூறிவிட்டுத் திரும்பியதாக எம்முன்னோர் கூறுவர்.

சிவயோக சுவாமிகள் நல்லூர்த் தேரடியில் தனது ஞான குருவைத் தரிசிக்க சென்ற சமயம் "ஆரடா நீ?" என அதட்டி கேட்டார். ஆரடா நீயென்று அதட்டினான். தீரடா பற்று என்றான். அன்றே யான் பெற்றேன் அருள் என்றார் தவத்திரு சிவயோக சுவாமிகள். ஒருமுறை சிவயோக முனிவர் கரிர்காம யாத்திரைக்குச் சென்றபோது நீண்ட நாட்களாக யேசுநாதனைக் காணாத உறவினர் பின்பு குருவிடம் வந்து நின்றபோது எங்கேனும் வேர் விராயைப் பார் என குரு மொழிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருமொழியைப் பின்பற்றிய சீடர் கொழும்புத்துறை சென்று சந்தியில் இருந்த இலுப்பை மரத்தின் இருக்கை போன்ற வேரில் அமர்ந்து கொண்டார். அங்கும் குருவானவர் அடிக்கடி செல்வார். அப்போ சீடர் கும்பிட எழுகையில் நீயென நானென வேறில்லை எனக் கூறினார். தவத்திரு சிவயோகசுவாமிகள் தமது குருநாதரின் அகத்தையும் புறத்தையும் சிந்தையில் வர்ணித்துள்ளார்.

சிரித்து நல்லூர் வீதியில் திரிவார், வெறித்த பார்வையர் வேடம் விரும்பிலர், கறுத்தமேனியர் கந்தைத் துணியினர், புகழ்ச்சியும் இகழ்ச்சியும் ஒன்றாக கொள்பவர், சிங்காரமான நடையோடு சிரிப்புடன் ஆரறிவாரென்று அடிக்கடி சொல்லுவார். தேரடிப் படியில் சிங்காரமாய்க் கிடப்பார். உல்லாசமான நடையுடையோனே. பித்தரென்று பிறர் பேசும் திறந்தான்.

குருவருள் பெற்று,குணமென்னும் குன்றேறி நின்ற சிவயோக சுவாமிகளுக்கு சித்தியும், பக்தியும், முக்தி எய்திய நிலையில் சுவாமிகள் பலவருட காலம் தமது குருநாதனின் திருவடி பிரியாது திரிந்தனர்.குருநாதர் தமது சீடனைப் பல சோதனைகளுக்கு உட்படுத்தினார். இருவரும் சேர்ந்து சமைத்த பின், சாப்பிட முன்பே சமைத்தனவற்றையெல்லாம் குருநாதர் உடைத்தெறிவார். குளிப்பதற்கென கீரிமலைக்குச் சென்று இருவரும் குளிக்காமல் திரும்புவார்கள். வருடா வருடம் பங்குனி முதற் திங்களில் இருவரும் மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோவிலுக்குச் சென்று பொங்கிச் சாப்பிடுவர். சிவயோகசுவாமிகள் குருவின் உபதேசங்களை அவதானமாய் கேட்டு வந்தார். செல்லப்பா சுவாமிகள் சாதாரணமாக விசரன் போல் பேசுவார். அப்பேச்சுக்களுக்கு இடையில் உயர்ந்த கருத்துக்கள், தத்துவங்கள் வருமென்று அவற்றைக்காத்துக் கொண்டு மணிக்கணக்காய் தாமிருந்ததாகவும் சிவயோக சுவாமிகள் கூறுவர். சமய விடயங்களைச் செல்லப்பா சுவாமிகளிடமல்லவோ கேட்க வேண்டுமென்றார். எங்கள் சிவயோக சுவாமிகள்.

நல்லூர் சித்தர், தேரடிச் சித்தர் என்று போற்றி வணங்கி வந்த செல்லப்பா சுவாமிகள் ஒருநாள் இரவுவேளை தன்னுடன் துயில வரும் அயலவரிடம் இன்று பெரிய புதினம் நடக்கும் நீ வருவாயோ? எனக் கேட்டார். அன்று இரவு அன்பர் செல்லவில்லை. அடுத்தநாள் காலை சென்றபோது சிறுபிள்ளை போல் ஒரு விரலை வாயில் வைத்த படியும், காலொன்றை மடக்கி நடராஜா பாவத்தில் வைத்த வண்ணம் செல்லப்பாவின் உடம்பு விறைத்துக் காட்சி அளித்தது!

*1915* ஆம் ஆண்டு பங்குனி அச்சுவினி நட்சத்திர தினம் செல்லப்பா சுவாமிகள் சமாதி அடைந்த தினமாகும். எங்கள் குருநாதன் எழில் நல்லைவாசன். இங்கும் அங்கும் எங்கும் பிரகாசன். ஞானத்தேசிகன்றன் திருவடி வாழ்க! வாழ்க! குருபக்தி வளர்க! சிவதொண்டு வளர்க!

*"குருபரன் அடியிணை ஏத்துதல் இன்பம்*
*குருபரன் அருட்பணி ஆற்றுதல் இன்பம்*
*குருபரன் அருள்வாக் காக்கிடும் இன்பம்*
*குருபரன் சரண்புகக் கூடிடும் இன்பமே"*

- நற்சிந்தனை -

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்து நல்லூர் தேரடி மகான் செல்லப்பா சுவாமிகள்

பேராசிரியர், டாக்டர் கனகசபாபதி நாகேஸ்வரன்
சப்ரகமுக பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணத்துச் சித்தர் மக்களின் அறியாமையினாலே "விசர்ச் செல்லப்பா" என்றும் இன்னுஞ் சிலரால் "மகான் செல்லப்பா" என்றும், அழைக்கப்பட்டவர் நல்லூர்த் தேரடியில் தவஞ்செய்து வாழ்ந்த - அலைந்து திரிந்த "மகாஞானி" செல்லப்பா சுவாமிகளாவார். அனைத்துத் தவமுயற்சியும், யோக முயற்சியும், தியான முயற்சியும் இயல்பாகவே உடைய இவர் செய்கைகள் யாவும் இனம்புரியாதவையாக இருக்கும். விளக்கந்தரமுடியாதனவாக அமைவன. சுவாமி விவேகானந்தருக்கு இராமகிருஷ்ண பரமஹம்சர் எப்படியோ அப்படியே சிவயோக சுவாமிகளுக்கு குரு செல்லப்பா சாமியார்.

ஈழநாட்டிலே சித்தர்பரம்பரை ஒன்று வாழையடிவாழையாக இருந்துவருகின்றது. இது பற்றிச் செவிவழிச் செய்திகள் - கதைகள் பலவும் இருக்கின்றன. இவற்றை விளங்கியோ விளங்காமலே, புரிந்தோ புரியாமலோ பொதுமக்கள் கூறிவருகின்றனர்.

என் பேராசான் "அறிவொளி" மாவிட்டபுரம் த.சண்முகசுந்தரம் "ஈழத்துச் சித்தர் சிந்தனையிலிருந்து (30.05.1984) என்னும் மகுடத்திலே எழுதியுள்ள நூலிலே "மகான் செல்லப்பா" என்னும் சுவாமிகளைப் புரிந்துகொள்ளத்தக்கனவாக அமைகின்றமையினாலே முதலிலே அவரது செய்திகளைத் தருகிறேன்.

ஈழத்துச் சித்தர் பரம்பரையில் முக்கியமானவர் செல்லப்பா சாமியார். இவரே கொழும்புத்துறை குரு மகான் சிவயோகசாமியின் குரு. செல்லப்பா சாமியாரை "விசர்ச் செல்லப்பா" என்பர். இவருடைய போக்கும் கூற்றுக்களும் புதுமை யானவை. உலகியல் நோக்கில் நின்று இவற்றை விளக்க இயலாது. மேலும் இவருடைய கூற்றுக்களில் வருகின்ற சொற்கள் யாவும் சாதாரண கருத்தை உணர்த்துபவை அல்ல. இது சித்தர் பரம்பரையின் போக்கு" என்று எழுதியுள்ளார். அவர் மேலும் எழுதுவதாவது, மகான் செல்லப்பா சித்தர் அல்லர். அவர் மெய்ஞானி; ஞானவான்" எனக் கொள்வாரும் உளர். "சித்தர்க்கு முத்தி இல்லை" என்பது ஒருசாராரின் கருத்து. "சித்தர்கள் கடும் நோன்பு இருந்து அட்டமாசித்திகளைப் பெற்றவர்கள். தாங்கள் பெற்ற தவத்தைச் சித்துவிளையாடிச் செலவு செய்வார்கள்" எனவும் இச்சாரார் வாதிடுவர். "உண்மையான ஞானியைச் சமாதி வைத்தால், அந்த இடத்திலே சிவலிங்கம் தானாகவே தோன்றும். அப்படித் தோன்றா விட்டால் அவர் ஞானி அல்லர்" என்றும் இச்சாரார் கருதுவர். எது எப்படி இருப்பினும் மகான் செல்லப்பா பற்றி எந்தவிதமான பிரசாரமோ அல்லது புகழ்பாடுகின்ற முயற்சியோ இல்லை. இருந்தும் வாழையடி வாழையாக அவர் புகழ் வளர்ந்துவந்துள்ளது. அவரின் போதனைகள் அவரின் சீடர் பரம்பரை நன்கு பேணிவந்துள்ளது. தான் செய்த தவத்தைத்தான் சீடர் சிவயோக சாமியிடம் கையளித்துப் போனார் என்பர். எது எவ்வாறாக இருப்பினும், ஈழத்து மெய்யியல் வாழ்க்கையின் தனிக் கலங்கரைவிளக்கமாகவே செல்லப்பா சாமியார் திகழ்கின்றார் என்பதில் அவரின் சீடர் பெருமையடைவர். இவர்களின் கூற்று போதனை எல்லாம் உயர்ந்த படியில் நின்று செய்யப்பட்டவை. விசர்ச் செல்லப்பாவின் புகழ்பெற்ற நிகழ்ச்சி ஒன்றுக்கு விளக்கம் தரலாம். இதனை எனக்குக் கூறியவர் என் அருமைத் தந்தையார் ஆ.தம்புச்சட்டம்பியார். இவர் யோகர் சாமியின் இளமைத் தோழன். என் தந்தையார் எனக்குச் சொல்லியவற்றை அப்படியே இங்கு பதித்துவைக்கிறேன்" என்று எழுதுகிறார் என் பேராசான் மாவை அறிவாளி த.சண்முகசுந்தரம் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப்பா அடிகளார் ஒருநாள் தவம் கலைந்து நல்லூர் கோயிலுக்கு வந்தார். அப்போது அவருக்கப் பசி எடுத்தது. தனக்கு விருப்பமான அடியார் ஒருவர் வீட்டிலே போய் உணவு கேட்டார். பிற்பகல் நான்குமணி. அப்போது வீட்டில் உணவு இல்லை. அந்த அடியார், சாமி உணவு முடிந்துவிட்டது இதோ காய்பிஞ்சு எல்லாம் இருக்கின்றன. என் மனைவி உடனே திருவமுது செய்விப்பார் தங்களை" என்றார். அப்போது அந்த அம்மையாருக்குக் காய்ச்சல். இதனைத் தன் அகக்கண்களால் உணர்ந்துவிட்டார் அடிகளார். "நல்லது, அரிசி காய் பிஞ்சை அப்படியே தா, நான் சமைப்பேன். உன் பத்தினிக்கு நாளை சுகம் வரும்" என்றார். அரிசி காய் பிஞ்சைப் பெற்ற செல்லப்பா அடிகளார் நேரே நல்லூர்க் கந்தன் கோயில் கிழக்கு வாசலுக்கு வந்தார். இரண்டு முறை ஒரு குடுவையில் அரிசியை கிள்ளிப் போட்டார். அடுப்பை நன்கு எரித்தார். அடுப்பு எரியும்போது காய் பிஞ்சுகளைப் பாகஞ் செய்தார். அவிசு வைப்பதே அடிகளார் நோக்கம். அடுப்பு நன்கு எரிந்துகொண்டிருந்தது. நெருப்புச் சுடர் நான்கு பக்கமும் வீசியது. "அவிசு எரிந்து போகாமல், அடுப்பைச் சற்றுத் தணித்துவிட்டார். நல்லமணம் குடுவையிலிருந்து வந்தது. பசி மேலீட்டினால் அவரின் வாயிலிருந்து உமிழ்நீர் சுரந்தது. அது கடைவாய்ப்பல் பக்கத்தால் வழிந்தது. அடிகளாருக்கு இது பிடிக்கவில்லை. தன் மீது அவருக்கு கோபம் வந்துவிட்டது. உடனே "ஏய் வயிறே! நீ என்ன செய்கிறாய்? இந்தக் கட்டையை இப்படி ஆட்டலாமா? வயிற்றுப் பசி முருகதாகத்தை இல்லாமற் செய்துவிட்டதே" எனப் புலம்பினார். பின்னர் குடுவையைப் பார்த்தார். "ஏய் குடுவையே! நீ எனக்கு இன்று நல்லபாடம் படிப்பித்தாய்" என்றார். சிறிதுவேளை தியானத்தில் ஆழ்ந்தார்; புலம்பினார்; அழுதார்; தனக்குத் தானே பேசினார். புலன் அடங்கவில்லை என்ற கவலை.

"அங்கே ஒரு நெருப்பு
இங்கே ஒரு நெருப்பு"

என்றார். மீண்டும் மௌனம் நிலவியது.

"அங்கே குடுவை கொதிக்கிறது,
இங்கே குடுவை கொதிக்கிறது"

என்று கூறினார். விறகுக் கட்டையை எடுத்துக் குடுவையை உடைத்தார். மீண்டும் மௌனமாக இருந்தார். இந்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர் சிலர்.

"பார் விசர்ச் செல்லப்பாவின் கூத்தை. பசி என்று மனிதன் சமைத்து, பின்னர் விறகுக் கட்டையால் பானையை உடைத்துவிட்டது. அவிசு அடுப்பிலே அப்படியே சிந்திக்கிடக்கின்றது. இந்தப் பைத்தியத்துக்குத்தான் தருமம், பிச்சை போடுவது பிழை" என்றனர். இவை அடிகளார் காதிலே பட்டனவோ என்னவோ தெரியாது, அவர் மீண்டும் தியானத்தில் ஆழ்ந்துவிட்டார். "நல்லது செல்லப்பா அடிகள் கூறியவற்றை இங்கு ஆராயலாம்.

" அங்கோ ஒரு நெருப்பு. இங்கோ ஒரு நெருப்பு". அங்கே ஒரு நெருப்பு என்பது அடுப்பிலே எரிகின்ற நெருப்பு. இங்கே ஒரு நெருப்பு என்பது வயிற்றுப்பசி. இது கொள்ளிப்பசி. உதராக்கினி என்பர் வடமொழியாளர். அதாவது வயிற்று நெருப்பு என்பது பொருள்.

"அங்கே குடுவை கொதிக்கின்றது
இங்கே குடுவை கொதிக்கின்றது"

அடுப்பிலே இருந்துகொண்டு குடுவை கொதிக்கின்றது. இங்கே வயிறு என்கிற குடுவை கொதிக்கின்றது என்பது பொருள். அந்தக் குடுவை கொதித்தால் உணவு கிடைக்கும். இந்தக் குடுவை கொதித்தால் என்ன பயன்? சிவத்தியானமே இல்லாது போய்விடும். இதுதான் செல்லப்பா அடிகளின் ஏக்கம். அந்த ஏக்கத்தினால் அவர் மீண்டும் தியானத்தில் ஆழந்துவிடுவார்.

இது இப்படி இருக்க அடிகளாரது சீடருடைய மனைவியின் காய்ச்சல் உடனே நின்றுவிட்டது. உடலைச் சுத்தம்செய்த அந்த அம்மையார் ஏதோ ஓர் எண்ணத்தில் உந்தப் பட்டார். உடனே பிட்டு அவித்து அரையலும் தயாரித்தார். சுத்தமான பெட்டியில் பிட்டையும் அரையலையும் கணவனும் மனைவியும் எடுத்துச் சென்றனர் தங்கள் குருவிடம். இவர்களைக் காணாமற் கண்ட அடிகளார் கண்ணைத் திறந்தார். பிட்டை வாங்கி அன்புடன் உண்ணத்தொடங் கினார். அந்த அடுப்பையும் உடைந்த குடுவையை யும் பார்த்த அந்தச் சீடர் எதுவும் பேசவில்லை. குருபக்தி அப்படி.

"டேய் என்ன பார்க்கிறாய்? குடுவை உடைந்துபோய்விட்டது உனக்கு ஆச்சரியமாக இருக்கிறதா? செல்லப்பாவின் போக்கு இப்படித் தான் என்று நினைக்கிறாய்" என்றார். சாப்பாடும் முடிந்துவிட்டது. எழுந்துபோய் அடிகளார் கிணற்றிலே வாயைக் கழுவினார். மீண்டும் அமைதி நிலவியது. அடிகளார் பேசினார்,

"அந்தப் பானையும் உடையும். இந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பானையும் உடையும்" என்றார். தொடர்ந்து பேசினார். "மகனே கேள்; அது மண்ணாற் செய்த பானை. இந்த உடம்பான பானையும் ஒருநாள் உடையுந்தானே. இதற்கு ஏன் கவலைப்படல் வேண்டும்" என்று அறிவுரை வழங்கினார். அந்த அடியாரின் பெட்டியில் ஒருபிடி மண்ணைக் கிள்ளிப்போட்டார். " மகனே என் நிலையில் உனக்குத் தர ஒன்றும் இல்லை; இதுதான் என் நன்கொடை" என்றார். அந்த அடியார் பின்னர் தன தானியம் பூமிச் சிறப்பு எல்லாம்பெற்று வாழ்ந்தார் என்பது செவிவழிக்கதை. அடியார் யார் என்பது தெரியவில்லை. தெரிந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். இந்தப் பின்னணியைப் பலர் விளங்குவதில்லை. "செல்லப்பா சாமியார் சமைப்பார்" என எழுதிப்போயினர். தவநிலையை உயர்ந்த சிந்தனையை இந்த நிகழ்ச்சி விளக்குகின்றது. இவரைப்பற்றி இப்படி எத்தனையோ கதைகள் இருப்பதாகக் கேள்வி. இவற்றை நினைவில் பதிந்து வைத்திருத்தல் நன்று. இதற்குச் சிவயோக சாமியார் நிறுவனத்தார் ஆவன செய்யவேண்டும். இவ்வாறான குறிப்புகள் ஆராய்ச்சிக்கு உதவும்.

சாமியாரின் ஞானபரம்பரையைப் பற்றி அறிய இவை உதவும். செல்லப்பாச் சாமியாரின் பரம்பரையில் வந்தவர் குடைச்சாமியார். இவர் சில காலங்களுக்கு முன்னர் அடங்கிவிட்டார். இது இவ்வாறாக, சுதுமலையில் பிறந்து மாவிட்டபுரத்தில் திருமணம் செய்த பிறிதொரு சிறந்த முருகனடியார் செல்லப்பாச் சாமிகள் என்ற பெயரில் இருந்தார் என்று கூறும் அறிவொளி த.சண்முகசுந்தரம் அவர் குறித்தும் தமது நூலிலே குறிப்பிட்டுள்ளார். (பார்க்க ஈழத்துச் சித்தர் சிந்தனை விருந்து (1984), பக். 25 - 27.

இனி தமது சற்குருவும், ஞானகுருவுமான செல்லப்பா சுவாமிகள் பற்றி உலகப்புகழ் பெற்ற ஞானி யாழ்ப்பாணம் கொழும்புத்துறை சிவயோக சுவாமிகள் கூறியவற்றை செல்லப்பா சுவாமிகள் மொழிந்த மறைமொழிகள் - மகாவாக்கியங்கள் ........... பற்றியவை தொடர்பான செய்திகளைத் திருச்சியைச் சேர்ந்த முனைவர் அ.அறிவொளி அவர்கள் "எனது குருநாதர் யாழ்ப்பாணம் யோகர் சுவாமிகள்" (2012) எனும் நூலில் எழுதியுள்ள சில கருத்துகளையும் நோக்கலாம். இவற்றின்மூலம் செல்லப்பாச் சுவாமிகளின் கீர்த்தி, மகிமை, பெருமை, வித்தகம், புகழ் அனைத்தும் வெளிப்படையாகத் தெரியவரும்.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப"

என்ற திருக்குறள், மகாவாக்கியங்களையும், மந்திரங்களையும் விளக்குகின்றது.

செல்லப்பா சாமிகள் நிறைமொழிமாந்தர், பழுத்த ஞானி, பெருமகான், தவமுனி, நிறைமொழி உடைய பெரியோர் வாய்க்கு வந்தபடி தாமே கூறாமல் தமக்கும் கடவுளுக்கும் இருக்கும் தொடர்பாகிய ஆணையை ஒட்டிக் கூறப்படும் என்பதும் உணரலாம்.

பல வாக்கியங்களைச் செல்லப்பா சாமிகள் யோகர் சுவாமிகளுக்குக் கூறினாலும் அவற்றில் தலையானவை நான்கு மகா வாக்கியங்களேயாம். இவற்றைச் செல்லப்பர் எப்போதும் முணுமுணுத்த படியே இருப்பாராம். அவ்வழியிலேயே யோகர் சுவாமிகளும் இவ் வாக்கியங்களை அடிக்கடி வாயால் உபதேசித்தும், பாட்டிலும், உரையிலும் விளக்கியும் உள்ளார்கள்.

*01.* ஒரு பொல்லாப்பும் இல்லை
*02.* முழுதும் உண்மை
*03.* எப்பவோ முடிந்த காரியம்
*04.* நாமறியோம்

செல்லப்பா சாமியின் மகாவாக்கியங்க ளான இவை ஆழ்ந்த நுண்பொருளும், அனுபவமுடையவை. பொருளுரைத்து முடியாதன.

"முழுதும் உண்மை என முனி ............ எழுதிக்காட்ட என்னால் இசையுமோ" என்றும்,

"செப்பமுடியாதபடி தங்கமே தங்கம்
செல்லப்பன் திருவாக்கு தங்கமே தங்கம்" என்றும் யோகர் சுவாமிகள் தம்மாலும் இவற்றை விளக்கமுடியாது என்று கூறியுள்ளார்.

"ஒரு பொல்லாப்பு மில்லை என்பான்
உண்மை முழுதும் என்பான்
ஒருவருக்கும் தெரியாது என்பான் - சின்னத்தங்கம்
ஓவியம் போல் இருந்தானடி"

என்று யோகர் சுவாமிகள் தம் குருவான செல்லப்பா சாமிகள் பற்றிக் கூறுகின்றார். இம்மகாவாக்கியங் களையே செல்லப்பர் அடிக்கடி முணுமுணுத்துக் கொண்டிருந்ததும் அப்போதே நிட்டையில் அசைவில்லாமல் துரியாதீத நிலையில் இருந்ததும் தெரிகிறது.

செல்லப்பா சாமியார் கூறியவை பாமர மக்களுக்குப் பயன்பெறுமாறு சொல்லப் பெற்றவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒருநாள் என்றெனை உற்று நோக்கி
ஓர் பொல்லாப்புமில்லை என்று
சும்மா இருக்கும் சூட்சத்தில் மாட்டிவிட்டான்"
என்று கூறுகிறார் யோகர் சுவாமிகள்.

"கைகாட்டிச் சொல்லல் உற்றான்
கந்தன் திருமுன்றில்
மெய்மறந்து நின்றேன் வியந்து"
என்று யோக சுவாமிகள் கூறுகிறார். இதனையே திருநாவுக்கரசு நாயனாரும் தேவாரத்தில்,

"ஞானத்தால் தொழுவார் சில ஞானிகள்"
என்று அருளியுள்ளார். "பாம்பின்கால் பாம்பறியும்" என்று கூறுகிறது தமிழ் பழமொழி. இவற்றாலும் சித்தர்களது - மகா புருஷர்களது - ஞானிகளது - அமானுஷ்யர்களது தத்துவம் அத்தகு பண்புநலன் வாய்த்தோருக்கு மட்டுமே புரியும்; விளங்கும்.

இம்மகாவாக்கியத்தைச் சொல்லிய அளவில் சும்மா இருப்பதாகிய துரிய நிலைக்குக -மனம் அடங்கி வேலைசெய்யாத பெருநிலைக்கு யோக சுவாமிகளை அழைத்துப் போனது என்பதால் இதன் மந்திர மகிமையை அறியலாம். இவற்றால் இந்த மகாவாக்கியங்களின் தவத்தன்மை வெளிப்படுத்தப்படுகிறது.

பார்த்தாலும், கேட்டாலும், படித்தாலும், பக்கத்திலிருந்து அறிந்தாலும் இம்மகாவாக்கியங்கள் மந்திர சக்தியால் எவரையும் கவர வல்லனவாகும்.

### 1. ஒரு பொல்லாப்பும் இல்லை

வாழ்வதற்குத் தேவையான உடலையும் உணர்வதற்குத் தேவையான (காரணம்) கருவிகளையும் அவற்றால் செயற்படுத்தப்பெற எல்லா வசதியும் கொண்ட புவனத்தையும் அதனிலே அனுபவம் பெறல் போகத்தையும் (இன்பம்) இறைவன் யாவர்க்கும் குறைவில்லாமல் கொடுத்துவிட்டான். அவை யாவர்க்கும் அவரவர் விதிப்படி பயன்படும். அதனைத் தடுக்க யாராலும் முடியாது. இதற்குமேல் கடவுள் நமக்குக் கொடுக்கவேண்டியது ஏதுமில்லை. ஒரு குறையுமில்லை; தடை எதுவுமில்லை; ஆகவே நீ நன்கு வாழத் தலைப்டு என்பது இம்மகாவாக்கியக் கருத்தாகும். யோகர் சுவாமியின் நற்சிந்தனையில் வரும்,

"தன்னை அறிந்தால் தவம் வேறில்லை
தன்னை அறிந்தால் தான் வேறு இல்லை
தன்னை அறியச் சகலமும் இல்லை
தன்னை அறிந்தவர் தாபதர் ஆமே"
என்ற பாடல் இம்மகாவாக்கியப் பயனை விளக்குகின்றது. அத்துடன் தாம் இருக்கும் ஊரும் நாடும் துன்பம் இல்லாதிருக்கட்டும் என்று வாழ்த்துவதற்கும் இம்மகாவாக்கியம் பயன்படும். சொல்லச் சொல்ல - நினைக்க நினைக்க இம் மகாவாக்கியம், தீமை யாவும் விலகி நன்மைமிகும் என்பதில் ஐயமில்லை. ஆகவே ஒரு "பொல்லாப்பும் இல்லை" என்ற மகாவாக்கியம் வாயுறை வாழ்த்து என்று கூறத்தக்கதாகும்.

### 2. முழுவதும் உண்மை

இது மகான் செல்லப்பரால் ஆய்ந்து அனுபவித்த முடிவாக - அனுபவ வாக்கியமாக உள்ளது. எத்தனை சமயத்தவர் - அவற்றில் எத்தனை ஞானிகள் - கடவுளைத் தியானித்து உணரும்போது அந்த உண்மை பேறுபடாது யாவும் ஒரே கடவுளாக உள்ளது என்பதும் இவ்வாக்கியப் பொருளாகும்.

பெரியோர் சொற்களாகி ஆப்தவாக்கியம் என்பதும் உண்மையே முழுதும் என்பதும் ஆகும்.

"நீயும் நானும் அவனும் அவரும்
காயும் தீயும் கடலும் வானும்
பேயும், பூதமும் பிரானும் பிறவும்
ஆயும்பொழுது அவராய் விளங்குமே"
என்னும் யோக சுவாமிகளின் தியானமாலைப் பாடலால் உலகிலே காண்பன எல்லாம் உண்மையே என்பதும் இவ்வாக்கியமாகும்.

பஞ்சபூதங்களும் - அவற்றால் உண்டாகிய உடம்புகளும் அவற்றை இயக்கும் உயிர்களும் சிலருக்கும் உண்மையாகத் தோன்றும் கருத்துப் பிறருக்கு இல்லாததாகத் தோன்றச் செய்வதும் - நான் என்ற ஆணவமும் - எனது என்ற செருக்கும் கூட இறைவன் செய்கைவழிப்படும் என்பது மாணிக்கவாசகர் கூறும் உண்மையே என்று இவ்வாக்கியம் கூறுகிறது. வேறாக இருக்கும் உண்மையே கடவுள் நிலை என்று இம்மகா வாக்கியம் குறிக்கிறது. கடவுள் அனுபவத்தை மறப்போரும் - வெறுப்போரும் சொல்வன உண்மையல்ல என்று கூறுவதே இந்த மகாவாக்கியமும் கூறுகின்றது. ஆன்மிக வாழ்வில் பொய்க்கு இடம் இல்லை. அது நிலைக்காது என்றும் கொள்க.

"உண்மை முழுதும் என்றால்....... நெஞ்சமே
பின்னைப் பிறப்புண்டோ பேசு"
என்ற நற்சிந்தனைப் பாடலால் இதை முழுதும் உணர்வோர் பெருவாழ்வு பெறுவார் என்றாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உண்மை முழுதும் என ஓதும் ஒருமொழியால்
என்னை மறந்தேன் இடர் அகன்றேன்
பின்னை இங்கு ஆச்சரியம் உண்டோ
அண்ட பிண்டம் எல்லாம் போச்சது
ஒன்றாப் புகழ்"

எனும் யோக சுவாமிகளின் அனுபவப் பாடல் அறிக

"முழுதும் உண்மை ஆச்சுதடி
மூச்சுப் பேச்சு போச்சுதடி"

என்பதுங் காண்க. இதை உணர உணர உண்மை பிரபஞ்சம் முழுதும் தன்னைவிட்டு நகர்ந்து விலகுவது தெரிகிறது. மூச்சுக்கூடவிடுகிறோமோ என்பதும் அழியாத அனுபவம் வருகிறது. என்கின்றார்.

ஐயமில்லாமல் முழுதும் உண்மை எனத் தெரியும்போது அவர் அமர்ந்துள்ள நிலத்தைவிட அகன்ற வானமே அருகில் இருப்பதாகத் தோன்றும் என்பது திருக்குறள் கருத்து. தியானத்தால் பிரபஞ்சம் நமக்குள் வருகிறது; அகப்படுகிறது என்ற அனுபவமுமே இம்மகாவாக்கியத்தின் பொருளாகும்; அனுபவமுமாகும். இம்மகா வாக்கியம் அனுபவித்துப்பார் என்று உபதேசம் செய்யும் பொருள் கொண்டது எனலாம்.

### 3. எப்பவோ முடிந்த காரியம்

ஒரு நூதனமும் இல்லை - முடிந்த முடிவு - அப்படியே உள்ளது ஆகியனவே அத்தொடர் வாக்கியங்கள். இவையெல்லாம் சேர்த்துப் பார்க்கும்போது இதன் பொருள் விளங்கும்.

"முடிந்த முடிவென்று முன்னின்று சொல்லப்
படிந்தது உள்ளம் பதியில்"

என்ற நற்சிந்தனைப் பாடலால் இதன் பொருள் விளங்கும். மகான் செல்லப்பா சாமியார் இம்மகா வாக்கியத்தைச் சொன்னபோது என் உள்ளம் கடவுள் சிந்தனையில் பதிந்தது என்கிறார் சுவாமி. அதாவது, இப்பிரபஞ்சத்தைப் படைத்தபோது இது இது இப்படி இருக்கவேண்டும் என்று யாவும் நிறைவாக கடவுள் செய்துவிட்டதால் தூற்றி மறு எண்ணம் மொழி என்பதாம். விதிவசத்தால் துன்பத்தை யாவரும் போக்கிக்கொள்ள முடியாது என்பதையும் முடிந்த காரியம் என்ற சொல்லால் உணர்த்தியதும் அறியலாம்.

### 4. நாம் அறியோம்

இது நான்காவது மகாவாக்கியம். கடவுள் அறிவே பேரறிவு. அதாவது முற்றறிவு. நம்முடைய அறிவு சிற்றறிவு. அதைக்கொண்டு ஓரளவுதான் அறியமுடியும். ஆக, நம்மால் கடவுள் திட்டம் முழுதும் அறியமுடியாது என்று புலனடங்கி இருப்பதே இந்த மகாவாக்கியம் ஆகும். கடவுள் திட்டம் அறிதலும், கடவுளையறிதலும் இயலாதன. சும்மா இருந்தால் விளங்கவேண்டியது தானாக விளங்கும். தேடாமல் தேடு; நாடாமல் நாடு; பாடாமல் பாடு என்னும் கூற்றுக்கள் மனதில் கொள்ளத்தக்கன. "நாம் அறிவோம்" என்பது செருக்கை வளர்க்கும். நாம் அறியோம் என்பது பணிவை வளர்க்கும் இதுவே கடவுள் முயற்சியில் செய்ய வேண்டிய ஆன்மிக முறை என அறியலாம். தாயுமானவரும்,

"சந்தமும் எனது செயல், நிறை , யான் எனும் தன்மை நினையன்றி இல்லாத தன்மையால் வேறலேன் வேதாந்த சித்தாந்த சமரச சுபாவம் இதுவே" என்பர்.

மகாஞானி - சற்குரு செல்லப்பா அடிகள் பற்றி யோக சுவாமிகள் அருளிய "எங்கள் குருநாதன்" எனும் தலைப்பிலமைந்த நற்சிந்தனைப் பாடலைத் தினமும் பாராயணஞ் செய்தால் மகான் செல்லப்பா சுவாமிகளையும் அவரது தீர்க்க தரிசனத்தையும் மகாவாக்கியங்களின் தத்துவார்த்த விளக்கங்களையும் அறியமுடியும்.

எடுத்துக்காட்டுக்காக ஒரு பாடலை மட்டும் ஈண்டு குறிப்பிட விரும்புகிறோம்.

"என்னையெனக் கறிவித்தான் எங்கள் குருநாதன்
இணையடியென் தலைவைத்தான் எங்கள் குருநாதன்
அன்னை பிதா குருவானான் எங்கள் குருநாதன்
அவனியெல்லாம் ஆளவைத்தான் எங்கள் குருநான்
முன்னைவினை நீக்கிவிட்டான் எங்கள் குருநாதன்
மூவருக்கும் அறியவொண்ணான் எங்கள் குருநாதன்
நன்மை தீமை அறியாதான் எங்கள் குருநாதன்
நான் தானாய் விளங்குகின்றான் எங்கள் குருநாதன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவயோக சுவாமிகள் தம்மை ஆட்கொண்ட செல்லப்பா சுவாமிகளைச் சிவனாகவே பல இடங்களில் பாடியுள்ளார். தன்னை அறியும் அறிவு என்பது ஞானம். ஞானத்தால் தான் உடலற்ற குருநாதன் தவத்தால் ஒரு சீடன் ஆன்ம இயக்கத்தை அறியமுடியும். பக்குவமடையாதார் யாவரும் மனத்தின் செயல் பாடுகளை மட்டுமே அறிவர். சிவயோக சுவாமிகளுக்கு அவர் குரு மகான் செல்லப்பா சுவாமிகளுக்கு பயிற்சி அளித்ததாக வரலாறு இல்லை. ஆனால் ஒரு பார்வை, ஒரு பரிசம், ஒரு சொல் முதலியவை போல ஒரு குரு தன் சீடனுக்கு எல்லாப் பயிற்சியும் வந்ததாகச் செய்துவிடுவார்.

மகான் செல்லப்பர் யாழ்ப்பாணத்து நல்லூர் கோயிலடியிலிருந்து சொல்லிய ஒரு தொடராலும் பிறகு கூறிய மகாவாக்கியங்களாலும் யோகர் சுவாமிகள் அருள்பெறுமாறு குருநாதர் முயன்றுள்ளார், இதனால் மகான் செல்லப்பா சுவாமிகளின் தவமேன்மையை யாவரும் அறிய முடிகிறது.

"ஓதும் ஒரு மொழியில் என்னை மறந்தேன்"

என்று ஒரு சொல்லால் தம்மை மாற்றியதைக் கூறுகிறார்.

எளிய - சாமானிய மனிதர்கள் கைகளால் வாழ்த்துதல் பயன் தரும். யோகிகள், ஞானிகள் கால்களால் வாழ்த்துதலே அருள்மிக்கதாகும். திருவடி தீட்சை என்பது இதுவேயாம். செல்லப்பா சுவாமிகள் யோக சுவாமிகளுக்குப் பேச்சால் மட்டுமன்றி ஸ்பரிசமாகிய தமது திருவடிகளாலும் தீட்சை வழங்கினார் என்பது "இணையடியென் தலை வைத்தார்" என்று கூறுவதாலறியலாம்.

"நல்லூரில் தேரடியில் நான் கண்டு போற்றினேன்
சொல்லும் தரமோ சுகம்"

நல்லூரில் குருவைப் பார்த்ததும் அவர் சொல் கேட்டதும் தமக்கு எப்படிப்பட்ட சுகம் வந்தது என்று சொல்லமுடியாது என்றார். இது இறையின்பத்தை நுகர்வதாகிய அனுபவம் என்றுணரலாம். எல்லா உலகங்களைப் பற்றியும் அறிவால் உணரவைத்தான் எங்கள் குருநாதன். அதாவது வெவ்வேறு பிறவிகளில் வெவ்வேறு உலகங்களில் வாழ்ந்த வாழ்வு முழுவதும் குருவருளால் தம் மனதில் படர்ந்ததையும் கூறுகிறார். நல்லூரில் தேரடியில் நின்றபோது ஏதோதோ பேசினாராம் இவர் குரு. கடைசியாக அங்கே "ஏன் நின்றாய்" ; "நீ யார் " என அதட்டினாராம். அந்த அளவிலேயே அவரது தவ அருள் - வலிமை முழுவதும் தமக்கு வந்தது என்கிறார் யோகர் சுவாமி. " ஆசானைக் கண்டேன் அருந்தவர்வாழ் நல்லூரில் பேசாதன எல்லாம் பேசினான் - கூசாமல் நின்றேன் நீ யாரடா என்றே அதட்டினான் அன்றே யான் பெற்றேன் அருள்" என்பாார். பல பிறவிகளிலும் செய்த வினை முழுவதையும் எங்கள் குருநாதன் நீக்கிவிட்டான்.

மும்மூர்த்திகளாகிய பிரம்மா, திருமால், இந்திரன் ஆகியவராலும் அறியமுடியாதவன் எங்கள் குருநாதன். நன்மை தீமைகளை உணரும் எளியார்போல இக்குருநாதன் உணர்வது இல்லை. நான் என்ற (சபலமான) உணர்ச்சியை இறைவனாகவே உணர்ந்து அறிகிறான். உணர்வு மயமான நீ உன் உடலையே உயிர்போலக் கருதிக்கொள்ளக்கூடாது என்று குருநாதன் கூறினான். சித்தத்தில் எப்போதும் தோற்றந் தருபவன் எங்கள்குருநாதன். காமம் முதலிய எல்லா ஆசைகளையும் வெறுத்து ஒதுக்குக என்று சொன்னான். முத்தியடையக் காரணம் இது என்றான் குருநாதன். எந்தவகையிலும் வேகங் கொள்ளாதபடி என்னை ஆண்டான் எங்கள் குருநாதன்.

மகான் செல்லப்பா சாமியின் மகாவாக்கியங் களை மனத்திலே பதியவைத்தால் மனோவேகம் முதலிய எல்லா வேகமும் அடங்கும்.

தெய்வம் வாழும் விண்ணுலகும், மக்கள் வாழும் மண்ணுலகும் ஒன்றானது போல் எங்கள் குருநாதனாகிய செல்லப்பா சாமியார் விளங்கு கின்றார். முத்தி அடையும் விருப்பத்தை ஒரு தவிப்பாக எனக்குள் ஆக்கிவிட்டான் குருநாதன். என்றும் நிலையான பரம்பொருளை உணர்வால் காணவைத்தார் எங்கள் குருநாதன். வாசியோகமான பிராணாயாமத்தைச் செய்து பழகி அதன் அனுபவம் பெறுவாயாக என்று கூறினான். சக்திக்குரிய "வ" என்னும் எழுத்தின் பயனை அறிந்திடுக என்று கூறினான். யோக சாதனையில் ஈடுபட்டோருக்கும் தாம் எல்லோருக்கும் இரவு பகல் என்ற பிரிவும் விளக்கமும் இல்லை என்றான் குருநாதன். மூக்கின் நுனியை நோக்கிப்பார் என்று கூறினான். யோகம் செய்யும்போது பத்துவித ஓசைகள் கேட்கும் என்று கூறினார் எங்கள் குருநாதன். இவ்வாழ்விற் கொண்ட பற்றுகளை விட்டு விலகுக என்றான் எங்கள் குருநாதன். "கருவழியைக் கட" என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமத்தை மாற்றினால் மனமும் தானாகவே கட்டுப்படும் என்று கூறினான். ஆன்மிக அனுபவங்களை ஒருபொழுதுதம் அறிய மாட்டார்கள் என்று குருநாதன் சொன்னார். ஓங்காரத் தியானமே எல்லாம் பெற வழியாகும். மலம் எனப்படும் குற்றங்களிலிருந்து நீங்கி இரு. பொதுவகையாலும் சிறப்புவகையாலும் நீயும் நானும் ஒருவரே என்றான். எல்லாத் திசைகளின் தொடக்கம் முதல் முடிவுவரை காட்சிதருகிறார். நினைத்ததும் உணர்வை சித்தத்திற்குள்ளாகவே நிற்கவைத்தான். குரு உபதேசங்களைச் செயல்படுத்துவதைப் பக்குவமாய்க் காத்துக்கொள்க. பார்க்கும் காட்சியெல்லாம் அந்நியம் என்று நினைக்காமல் நீயே அது என்று உணர்வாயாக என்றான். திருவைந்தெழுத்தாகிய சிவமந்திரத்தை ஓதுக என்றான் எங்கள் குருநாதன். எலும்பெல்லாம் உருகுமாறு பக்தியில் திளைத்திரு என்றும் அழியாத நிலையான பொருள் உன் ஆன்மா என்று கூறினான் எங்கள் குருநாதன். தேடும் வழிமுறைகள் ஈடுபடாமல் கடவுளைத் தேடும் முயற்சியில் விடாது ஈடுபடுக என்றான். வாழ்வோர்க்கு உயிராக இருப்பது சிவமே என்று கூறினான். தேடுதல், நாடுதல் முதலியவைகளின் பலனாக நல்வழி தோன்றும் என்றான். தாமாக பாடமுடியாவிடினும் அடிகள் பாடியதை ஏற்றுப் பாடுக என்றார். பிற பக்தர்களுடன் கூடி பக்திசெய்க என்றான். வையகம் (பூமி) வாழ்வதற்காகவே படைக்கப்பட்டதால் அந்த வாழ்க்கை வாழ்வது கடவுள் எண்ணம் என்று கூறினார். மனவிருப்பத்தின் மாட்சியைக் காண வைத்தான் எங்கள் குருநாதன். குரு எல்லாத் திசைகளிலும் சீடன் துணையாகி நின்றார் எங்கள் குருநாதன். விதையேதும் இல்லாமல் நாற்றை வளரச்செய்வான் எங்கள் குருநாதன். விண்ணிலுள்ள தேவர்களாலும் அறியமுடியாத ஆற்றல் கொண்டவர் எங்கள் குருநாதன். தத்துவவியலில் கட்டுப்படுத்தமுடியாதவன் ஆனான். எல்லாவித மான சொத்து சுகங்களும் தந்தவன். தோன்றுதலும், முடிதலும் ஆகிய இரண்டும் இல்லை என்று எங்கள் குருநாதன் கூறினான். ஆதியந்தம் இல்லாத கடவுளைப் போல நீயும் இருக்கிறாய் என்றுரைத் தான். சோதிவடிவமாகவே எங்குமாய்க் கடவுள் இருக்கிறார். இவ்வகையின், இப்படிப்பட்டவன் என்று ஒருவரால் சுட்டிக் கூறப்படாமல் வாழ் என்றான். பிறப்பினால் வேறுபாடு கருதப்படும் சாதியும், கொள்கையால் வேறாகும் சமயமும் (இல்லை) மேற்கொள்ளக் கூடாது என்றான். தானாகிய சிவத்தன்மையுடன் குருநாதன் விளங்குகிறான். சொல்லால் வெளிப்படுத்த முடியாத இன்பத்தை எங்கள் குருநாதன் தந்தான். அச்சமும் கோபமும் தடைப் படுத்தும். ஆகவே இவை இரண்டும் குருநாதரிடம் கிடையா. நம் ஆன்மா கடவுள் அருள்பெறத் தயாராகிவிட்டதால் நமக்குக் குறைவு என்று எதுவும் இல்லை. சிவமாகியபின் வேறு நினைவாகிய சங்கற்பம் இல்லை. ஓங்காரத் தியானமே உறுதியான நலந்தரும் என்றும் செல்லப்பா சாமி உபதேசித்தார் என்று சிவயோக சாமி குறிப்பிட்டுள்ளார்.

எனவே இவற்றை வைத்துக்கொண்டு மேலும் ஆராய்ச்சியை வளர்த்துச் செல்லவேண்டிய தேவை தமிழ்கூறும் சைவ உலகிற்கு உண்டு. சர்வ தேசத்திற்குமுண்டு.

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “காலத்தை வென்றோன்”

கந்த தியாகராசா
ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

ஆருயிர் முழுதும் ஒன்றி அருளாட்சி புரியும் ஈசன்
அனல் பொறி தந்தமைந்தன்
முருகன் திரு அமுது உண்டு மூவாசை விட்டேகி
உறக்கமொடு ஊன் ஒறுத்து
பெரும் பேறு காண வெண்ணி ஆண்டியான பித்தன்
ஊருக்கு உபதேசித்த பொன்மொழி
ஒரு பொல்லாப்புமில்லை முழுதும் உண்மை என வோதி
வைத்தவன் செல்லப்பா என்று தேர்

வண்ணத்தமிழ் தெய்வம் வடிவேலன் என் திருமுன்
மகுடி முன் நாகமென மயங்கி
எண்ணரும் பொருள் பொதிந்த ஏற்புடை வாசகம்
யாரடா நீ தேரடா என இயம்பியவை
மண்ணிற் பிறந்த மாந்தர் அறியாமை அகன்றொழுகும்
மார்க்கம் அருளிய மா தவத்தோன்
மாண்பினை ஆர் அறிவர் மாயப் பிறவி கெடவெல்லோ!
மாமுனி இயம்பியவை உண்மையாம் உயர்!

நல்லை வேல் சுரந்த நரையொத்த போதத்தால் முற்றும்
இழந்து நின்ற ஆசான் தேரடி
வில்வமர நிழலில் வீற்றிருந்து அருந்தவம் செய்தாங்கே
காணற்கரியன கண்ட மகான்
கல்லால தருக்கீழ் கருப்பொருள் காட்டிய சிவனுருவை
ஒப்பதோர் தோற்றமாய் தோற்றி
எல்லாமே செப்படி வித்தை யென்றனன் அழ்ந்தறியின்
மெய்ப்பொருள் காணலாம் காண்!

ஆவியோடாக்கை யனைத்தும் அரன் மகனுக்காக்கி
நிட்டைகூடி நினைப்பொழிந்தகுரு
ஓவியம் போலிருந்தே ஒருவருக்கும் தெரியாதென ஓதி
எப்பவோ முடிந்தகாரியம் என்றவன்
காவியமானான் கரியநிறத்தன் நேரியநோக்குடை
தூயோனை விசரனாய் வசைபாடினும்
காவிபுனையா சாமி, கந்தையணி மேனியன் காலத்தை
வென்றோன் நாமம் என்றும் வாழும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விந்தை மிகு இவ்வுலகில் விடியலைத்தேடும் மாந்தர்க்கென்றும்
இருண்டவீட்டிற்கொரு விளக்கென
வந்துற்ற மகான் ஞாலமதில் வாழும் வழி சொன்ன சித்தரை
சிந்தையில் இருத்தி வாழ்த்துதல் நன்றாம்
செந்தண்மை பூண்ட செம்மல் செப்பிய மகா மொழிகள்
மெய்யெனத்தெளிவார் புனிதராவார்
வெந்து விழும் பாழுடம்பின் பிறப்பேழும் அறவே!
சீரான மார்க்க முரைத்தாரை வந்திப்போம்!

புகழ் சேவடிப் புண்ணியன் நெகுவேல் ஈர்த்தாங்கொருவன்
பித்தனாய் ஆண்டியாய் திரிந்தானை அறியாதார்
இகழ்ந்தார் ஈன மொழிபகர்த்தார் எதையும் எண்ணா சித்தர்
பூத்து நின்ற பேரொளியில் திளைத்து
அகந்தெடுத்த பொன்னாய் அணையா சுடராய் வில்வமரம்
கீழ் தவமியற்றி நின்றானை
திகழொளி வீசிய திவ்வியனை செல்லப்பசுவாமியை எண்ணி
சிந்திப்பார் வான் எய்த வழி காண்பாரே!

ஆத்ம ஞானம் வேண்டி அகவிருள் நீக்கியிங்கு
இச்சைகள் உதறி கந்தனுக்குதாசனாகி
முத்தமிழ் மண்ணில் முளைத்தெழுந்த செல்லப்பதேசிகரை
அரியவை இயம்பிய தெய்வீக சித்தரை
பித்தனென புறமொதுக்கி பிதற்றிய வன்நெஞ்சர் புனிதரின்
நல்நெஞ்சை எண்ணி உணர்வரோ
இத்தரை மாந்தர் இகபரசுமமெய்த நேசிய நெறி
காட்டிய சீலத்தை அறிவரோ சொல்!

சுற்றும் பூமியில் சுடர்விடும் யோகியின் கீர்த்தியை தேடும்
திறனில்லா மாந்தர் அறிவரோ
பற்றினை விட்டு பரமபதம் சேரநெறி சொன்னதும் பொய்யோ
சித்தர் சுவடுகள் நிறை மண்ணில்
உற்றாகும் பக்தி உருவாகும் மெய்யன்பு நல்லை வேலின்
திருச்சோதியுள்ள காந்தஞானி
ஏற்றிய ஞானத் தீ என்றும் அணையாது தேடி தெளிவார்க்கு
தேரடி வில்வமரம் சான்றாம் பார்!.

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்து ஞானியர் பரம்பரை

சந்திரலீலா நாகராசா
*அருளம்பலம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.*

ஈழவள நாட்டின் கண் வடபகுதியில் ஒரு ஞானியர் பரம்பரையே வாழ்ந்துள்ளது. கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமி, யோகர் சுவாமிகள் மார்க்கண்டு சுவாமிகள் என நினைவு கூரலாம். கிழக்கின் கண்ணே சித்தாண்டி சுவாமி, ஆனைக்குட்டி சுவாமியும், மலைநாட்டில் நவநாத சித்தரும் தோன்றினர். இவர்களை யோகியர், ஞானியர், சித்தர் மகான் என அழைக்கலாம். சித்தர்கள் தேகாபிமானம் இல்லாமல் எளிய உடையணிந்து யாசித்துக் கிடைப்பதை உண்டு, உலகியலைப் பற்றிய சிந்தனையின்றித் திரிவர். உலக இன்ப துன்பங்களில் சிக்காமல் தாமரையிலைத் தண்ணீர் போல் வாழ்வர். தாம் ஆற்றும் கருமங்களில் பலனையும் எதிர் பாரார். பட்டினத்தார் பாடிய பாடலின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**"வீடு நமக்குத் திருவாலங்காடு விமலர் தந்த
ஒடு நமக்குண்டு வற்றாத பாத்திரம் – ஓங்கு செல்ல
நாடு நமக்குண்ட்டு கேட்ட தெல்லாம் தர நன்நெஞ்சே
ஈடு நமக்குச் சொல்ல ஒருவரு மிங் கில்லையே"**

நிலையில்லாத மாய வாழ்க்கையை துறந்தவர்கள் இவர்களை நம்மால் அறியமுடியாதென்பதைப் பாரதியார் பாடுகிறார்.

**"ஞாயிறைச் சங்கிலியால் அளக்கலாமோ
ஞான குரு புகழினை நாம் வகுக்கலாமோ
ஆயிரம் நூல் எழுதினும் முடிவுறாதாம்"**

எமது அயல் நாடான பாரதத்திலும் பதினெண் சித்தர்கள் தோன்றினர். சிவவாக்கியர், குதம்பைச் சித்தர், அகத்தியர், பட்டினத்தார், அகப்பேய் சித்தர் திருமூலர் இன்னும் பலர்.

சட்டை முனிச்சித்தர் சித்தரைப் பற்றிக் கீழே பாடுகிறார்.

**" கடவுளைக் காண முயல்பவர் பக்தர்
கடவுளைக் காணத் தெரிந்தவர் சித்தர்
எழும்பாமல் வாசனைக் கொன்றோன் ஞானி
ஏகாமல் வாசனையை அழித்தோன் சித்தன்...."**

ஞானிகள் புகழ்ச்சி, இகழ்ச்சி, விருப்பு, வெறுப்பு போன்ற இயல்புகளுக்கு ஆட்படாமல் சிவனே எனத் திரிவார்கள். பரம் பொருளைச் தேனைப் பருகுவார்கள்.

**யோகர் சமாதியின் உள்ளே அகலிடம்
யோகர் சமாதியின் உள்ளே உளரொலி
யோகர் சமாதியின் உள்ளே உண்சக்தி
யோகர் சமாதியின் உகந்தவர் சித்தரே.**

யாழ் சித்தரில் முதலிடம் வகிப்பவர் கடையிற் சுவாமிகள் இந்தியாவின் கர்நாடகத்தைச் சேர்ந்தவர். ஆங்கிலம், ஹிந்தி, கன்னடம், தமிழ் மொழிகளைக் கற்றவர். வழக்கறிஞராக இருந்தபோது குற்றவாளிக்கு மரண தண்டனை வழங்க தான் யார்? என மறுத்து நடுத்தர வயதில் துறவு பூண்டவர். சித்திகளைச் செய்தவர். உருகிய மெழுகைக் குடித்தல், இரும்பை பொன்னாக்குதல், ஓரிடத்தில் தோன்றிப் பின் மறைந்து வேறு இடத்தில் நிற்பார். சிறுங்கேரி சாரதா பீடத்தலைவர் நரசிம்ம பாரதியே இவரது குருவாவர். தீட்சா நாமம் முத்தியானந்தர் 1862 இல் யாழ்ப்பாணம் வரக் காரணமாயிருந்தவர் வண்ணை வைரமுத்துச் செட்டியார். யாழில் கத்தோலிக்க சமயம் பரவியிருந்த காலத்தில் சக்திமிக்க சற்குருவாக இருந்து சைவசமயத்திற்கு புத்துயிர் அளித்து மக்களிடம் பரவச் செய்தவர். 1882 புரட்டாதி மாதம் பூரணை தினத்தன்று சமாதியானர். இவரது சமாதி வண்ணார் பண்ணை நீராவியடியிலுள்ளது. பெரிய கடையடியில் குடையுடன் நடமாடியதால் கடையிற் சுவாமி எனப் பெயர் ஏற்பட்டது. இவரது சீடரே நல்லூர் தேரடியில் இருந்த செல்லப்பா சுவாமிகள் மற்றொரு சீடர் குழந்தைவேல் சுவாமிகள் யாழில் குரு சீடர் பரம்பரையைத் தோற்றுவித்து அருளுரைகளை வழங்கினார்.

செல்லப்பா சுவாமிகளே தனது குருநாதரான கடையிற் சுவாமிகளைக் கண்டு புள காங்கிதம் கொண்டார். கடையிற் சுவாமிகளும் இவரே பக்குவப்பட்ட சீடரெனக் கொண்டு தனக்குப் பின் குரு சீட பரம்பரையை நடத்துவானென ஏற்றுக்கொண்டார். ரூபா நாணயத்தை வெற்றிலையில் மடித்து கைகளில் வைத்தார். 1860 இல் வட்டுக்கோட்டையில் பிறந்தார். நல்லூர் கந்தசுவாமி கோவில் தேரடியிலுள்ள வில்வ மரத்தடியில் பல நாட்கள் ஞானத் தவத்தில் இருப்பார். உள்ளத்தில் சுடர் விட்ட ஞானஒளி தேகத்திலும் வீசியது. கறுத்த உருவம் பழைய கந்தல் ஆடையுடன் பிதற்றிக் கொண்டு திரிவார்.

இவரின் ஞான நிலையை உணராத மக்களை வாய்க்கு வந்தபடி பேசிக் கலைப்பார். மக்கள் தன்னுடன் தொடர்பு கொள்ளாமல் இருப்ப தற்காகவே விலகியிருந்து விசரன் மாதிரி நடந்து கொள்வார். பக்குவப் பட்டோர் சென்றால் ஆசிர் வதித்து அருளுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதையே திருமூலரும் ஞானியரை நிந்திப்பவன் பிழையுணர்ந்து திருந்துவான். வந்திப்பவன். இருவினையும் தீர்ந்து சிவ போகத்துள் சேருவான் என்றார்.

**"ஞானியை நிந்திப்பவனும் நலன் என்றே**
**ஞானியை வந்திப்பவனுமே நல்வினை**
**யான கொடு வினை தீர்வார் அவன் வயம்**
**போன பொழுதே புகும் சிவ போகமே"**

யோகர் சுவாமியே செல்லப்பா சுவாமியுடைய ஞான வரம்பையுணர்ந்து அத்யந்த சீடரானார். யோகரின் ஞான நிலையைக்கண்டு, தான்பெற்ற அனுபூதியை மகா வாக்கியங்க ளாகவும், போதனையாகவும் கூறினார். தனது சற்குருவின் அருளுரைகளைத் தனது நற்சிந்தனை என்ற நூலில் எடுத்தியம்பினார்.

"ஒரு பொல்லாப்புமில்லை" என்பதில் இயற்கைப் பேரழிவு, புயல், பூகம்பம், வெள்ளம், தோல்வி, இகழ்ச்சி, நல்குரவு, பிணிகள் முதலிய துன்பகரமான செயல்கள் நடந்தே தீரும். எமக்கு விதிக்கப்பட்ட செயல்கள் எந்த ரூபத்திலும் வந்தே தீரும். உலகில் ஒரு பகுதியினர் நல்ல நிலையிலுள்ளபோது வேறு சிலர் வேதனையில் ஆழ்வதற்கு திருவள்ளுவரின் " இலர் பலர் ஆகிய காரணம், நோற்பார் சிலர் நோவாதார் பலர்" என்ற குறளில் தெட்டத் தெளிவாகிறது.

"முழுதும் உண்மை" உணர்த்துவது சர்வம் பிரம்ம மயம் எல்லா உயிர்களிடத்தும் ஆண்டவன் சர்வ வியாபியாக உள்ளான். ஒரு விதமான ஏற்றத் தாழ்வுமின்றி எங்கும், எதிலும் வியாபித்துள்ளார். அண்டத்திலுள்ளது அனைத்தும் பிண்டத்தில் உள்ளது.

"எப்பவோ முடிந்த காரியம்" அதாவது எப்பவோ தீர்மானித்த ஒழுங்கின்படி மக்களின் பிறப்பு, வாழ்க்கை. இறப்பு, இறப்பின் பிந்தைய நிலை அமையும். அவரவர் கர்மாவிற்கேற்ப வினைகளை அனுபவித்து முடிக்க வேண்டும்.

"யாம் அறியோம்" யாரால் அறிய முடியும்? தேடிப் போனாலும் கண்ணுக்குப் புலப்படாது மறைந்து நிற்கும். ஞானிகளால் அறியமுடியும். சாதாரண மக்களாகிய எம்மால் பரம்பொருளை அறிய முடியுமா?

திருமூலரின் இப்பாடல் இதை விளக்குகிறது.

**"ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை**
**யார் அறிவார் இந்த அகலமும் நீளமும்**
**பேர் அறியாத பெருஞ் சுடர் ஒன்று அதன்**
**வேர் அறியாமை விளம்புகின்றேனே"**

எல்லாம் செப்படி வித்தை என்பது ஞாலமே மாயமானது நிலையில்லா வாழ்க்கையை நிலையென்று எண்ணும் மானுடரின் பேதமை தான் என்னே. அழியக் கூடிய தூல உடல், அதனுள்ளே இயங்கும் உயிர், ஐம்புலன்கள் ஈற்றில் மறைந்து போகும். அருணகிரிநாதர் கந்தர் அலங்காரத்தில் நீர்க்குமிழிக்கு நிகரென்பர்" யாக்கை நில்லாது செல்வம் பார்க்குமிடமெங்கும் மின்போலு மென்பர் என்ற பாடலில் அழகாகச் சொல்லியிருக்கிறார்.

"ஒருவருக்கும் தெரியாது அதாவது வாழ்க்கையில் எது எது எப்போ, எங்கே, என்ன மாதிரி நிகழப்போவதென்று தெரிவதில்லை. இறைவன் சித்தப்படியே ஒழுங்குமுறையில் நடக்கும். செல்லப்பா சுவாமிகள் 1915 இல் பங்குனி மாதம் சமாதியானார். அவரது சமாதி நல்லூர் கந்தசுவாமி கோவில் தெற்கு வீதியில் உள்ளது. ஒவ்வோர் ஆண்டும் குரு பூசை நாளில் கூட்டுப் பிரார்த்தனை, பஜனை அன்னதானமும் சிறப்பாக நடைபெறுகிறது.

யோகர் சுவாமிகள் 1872 ஆம் ஆண்டு மாவிட்டபுரத்தில் பிறந்தார். சிறுவயதிலேயே பெற்றோரை இழந்து மாமியாரால் வளர்க்கப்பட்டார். சம்பத்திரிசியார் கல்லூரியில் கல்வி கற்று கிளிநொச்சியில் பண்டகப் பொறுப்பாளராகக் கடமை புரிந்தவர். சிறுவயதிலேயே ஆன்மீக நாட்டம் கொண்டு திருமுறைகள் புராணங்களை ஓதியுணர்ந்தார். சதாசிவன் அவரது பிள்ளைத் திருநாமம் செல்லப்பா சுவாமிகளிடம் தீட்சை பெற்று அவரையே தன் குருவாக ஏற்று, உத்தியோகம், உற்றார், உறவினரைத் துறந்து, அல்லும் பகலும் பிரியாது இருந்து பரிபக்குவநிலை அடைந்தார். குருவின் சோதனைகளை வென்று ஞானநிலை எய்தினார். குருவின் மகாவாக்கியங்களையும், உபதேசங்களையும் நற்சிந்தனை என்ற நூலில் வெளியிட்டார். சிவதொண்டன் நிலையத்தையும், சிவதொண்டன் மாத இதழையும் தொடக்கி வைத்தார்.

நல்லூர் தேரடியில் யோகர் சுவாமிகளைக் கண்ட செல்லப்பா சுவாமிகள் 4 மகா வாக்கியங் களைக் கூறியதுடன் "யாரடா நீ, தேரடா உள், தீரடா பற்று" எனக் கேட்டு அவரைப் புடம் போட்டார்.

கொழும்புத்துறையில் ஓர் ஓலைக் குடிசையில் சாணம் மெழுகிய தரையில், மிகவும் எளிய வாழ்க்கை வாழ்ந்து தன்னைத் தரிசிக்க வருவோரை "உன்னை நீ யாரென்று அறிக" எனக்கேட்டு, உன்னுள் நான் இருக்கிறேன். என்னுள் நீ இருக்கிறாய் என்று பக்குவப் படுத்தினார். எமக்கு அருமையாகக் கிடைத்த மானுடப் பிறவியை வீண் பகட்டிலும், கொண் டாட்டங்களிலும் செலவிடுவதை பின்வரும் பாடலில் யாழ் மக்களின் போக்கைப் படம் பிடித்துள்ளார்.

**"வித்தாரமாய்க் கதை பேசிக் கொள்வோம்.**
**வீணருடன் கூடி விளையாடிக் கொள்வோம்.**
**சக்தி, சிவம் ஒன்றான தன்மையைக் காண்கிலேறாம்.**
**சாதனையால் வேதனையைத் தீர்க்கின்றோ மில்லை.**
**அலங்காரமாக ஆடை அணிந்து கொள்வோம்.**
**அங்கு மிங்கு மெங்கும் கோயிலைத்**
**தேடிஅலைந்து திரிவோம்.**
**கலங்காத நன்னெறியிற் செல்கின்றோ மில்லை.**
**கந்தா, முருகா வென்று கத்திக் கொள்வோம்."**

அன்னாரது சமாதி கொழும்புத் துறையிலுள்ளது. அவர் 1964 பங்குனி ஆயிலிய நட்சத்திரத்தன்று வீடு பேறடைந்தார். யோகர் சுவாமிகள் சற்குரு சிவாய சுப்பிரமண்ய சுவாமிக்கு 22 வயதில் சந்நியாச தீட்சை வழங்கினார். இவர் ஹவாயில் சைவ ஆதினத்தை வழி நடத்தியவர். சோல்பெரியின் மகனும் சீடரானார். முன்னாள் நிர்வாக சேவை அதிகாரி மு. வைரமுத்து இவரது கொள்கையைப் பின்பற்றியவர். இன்றும் கூட சைவ மக்கள் பலர் அவரை மனதார ஏற்றுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருஞ்சித்தர் திருமூலர்

## "உணர்த்துகிறார் உணர்வோம்"

சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர் நமசிவாயம் கல்யாணி
M.Phil (Tamil) ஓய்வுநிலை ஆசிரியர்

தமிழிலக்கிய வரலாற்றில் சங்கமருவிய காலம் களப்பிரர் என்னும் கன்னடர் மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியரை வென்று தம் ஆட்சியைத் தமிழ்நாட்டில் சிறிதுகாலம் நாட்டினர். இக் களப்பிரரை தமிழர் தம் நாட்டினின்றும் கலைத்து தமது ஆட்சியை நிறுவினர். இக் குழப்பம் கி.பி 5ம் நூற்றாண்டிலோ 6ம் நூற்றாண்டிலோ நடந்ததென்பது வரலாற்று வல்லோருடைய துணிபு. தமிழரசு மறுபடியும் தழைத்தோங்கியதால் தமிழ்க் கல்வியும், வைதீக சமயமும் புத்துயிர் பெற்றன. திருநாவுக்கரசரும், திருஞான சம்பந்தரும் ஏனையோரும் சைவசமய நூல்களைக் கற்று பௌத்தரோடும், சமணரோடும் வாதாடிச் சைவத்தை நிலைநாட்டினர்.

திருமூல நாயனார் சைவர்கள் தொழும் 63 நாயன்மார்களுள் ஒருவர். அவரைத் தொண்டருள் ஒருவரெனச் சுந்தரமூர்த்தி நாயனார் பாடியுள்ளார். சுந்தரமூர்த்தி நாயனார் பல்லவ வேந்தன் கழற்சிங்கனுடைய காலத்தினர் எனவும், அவர் கி.பி 9ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்தனரெனவும் ஆராய்ச்சி வல்லோர் செப்புகின்றனர். உலகத்தாரின் அருள் வேட்கையைத் தீர்க்கும் அருட்கடலாகத் திகழும் திருமந்திரத்தைப் படைத்ததாலே தான் திருமூலரை வணங்கிப் போற்றும் நம்பியாரூரர்

"நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்" என்று உளம் கனிந்து பாடினார். திருமூலநாயனார் காவிரிக் கரையிலுள்ள சாத்தனூரில் இடையர் குலத்தில் பிறந்தார் என்பது யாவர்க்கும் ஒப்ப முடிந்தது. இக் கொள்கைக்கு ஆதாரம் நம்பியாண்டார் நம்பி இயம்பிய திருத்தொண்டர் திருவந்தாதியே.

**"குடிமன்னு சாத்தனூர்க் கோக்குல மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன் தன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டெனுச்சி
அடிமன்ன வைத்தபி ரான்மூல னாகின்ற அங்கணனே"**

- நம்பி: திருவந்தாதி -

"கோக்குல மேய்ப்போன் குரம்பைக்கு" என்பதன் கருத்து இடையன் இறந்தபின் அவ்வுடலில் புக்கு என்பதன்றி இடையர் குலத்தில் பிறந்த நான் என்பதே பொருத்தமாகும். நம்பிக்குப்பின் இருந்த சேக்கிழாரும், உமாபதி சிவாச்சாரியாரும் இறந்த உடலில் ஒரு சித்தர் புகுந்தார் என இனிது புனைந்துரைத்தனர். 13ம் நூற்றாண்டில் வாழ்ந்த உமாபதி சிவாச்சாரியார் ஒரு சித்தர் இடையனுடைய உடலில் புகுந்தனர் எனக் கூறினார்.

**"கைலாயத் தொருசித்தர் பொதியிற் சேர் வார் காவிரி சூழ்
சாத்தனூர் கருது மூலன்
பயிலா நோயுடன்வீயத் துயர நீடும் பசுக்களைக்
கண்டவனுடலிற் பாய்ந்து போத
அயலாகப் பண்டையுடல் அருளான் மேவி ஆவடுதண்
டுறையாண்டுக் கொருபா வாகக்
குயிலாரும் அரசமுயி லிருந்து கூறிக் கோதிலா வடகயிலை
குறுகி னாரே"**

இடையன் ஒருவன் யோகப் பயிற்சியாலும், துறவாலும் உயர்நிலை அடைந்தானாகலின் கைலாயத்து சித்தர் எனப் புகழப்பட்டான். "திருமூலநாயனார் மூவாயிரம் ஆண்டு திருவாவடுதுறைக் கோயிலிலுள்ள ஓர் அரசமரத்து நிழலில் அமர்ந்து ஆண்டுக்கு ஒரு செய்யுளாகத் தமிழ் மூவாயிரம் இயம்பினர் என உரைத்தார் உமாபதி சிவாச்சாரியார்". திருமூலநாயனார் தான் ஆண்டுக்கு ஒரு செய்யுள் பாடினார் எனச் சொல்லவில்லை. அவர் எல்லையில்லாக் காலம் இறைவனோடு இருந்தேன் என மொழிந்தனர்.

**"ஞானத் தலைவிதன் நந்தி நகர்புக்கு
ஊனமில் ஒன்பது கோடி யுகந்தனுள்
ஞானப் பாலாட்டி நாதனை அர்ச்சித்து
நானும் இருந்தேன் நற்போதியின் கீழே"**

**திருமந்திரம்: 82**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாகரிகம் தோன்றி முதிர்ச்சியடைந்த நிலையிலே ஒப்புயர்வற்ற தமிழாகமம் நாயனாரால் ஓதப்பட்டது. தமிழ் நாகரிகம் கி.மு 2000 ஆண்டுகளுக்கு முன் தோன்றி கி.பி 1500 ஆண்டளவில் சீர்குலையத் தொடங்கியது எனலாம். திருமூலநாயனார் கி.மு 3ம் நூற்றாண்டுக்கும், கி.பி 9ம் நூற்றாண்டுக்கும் இடையில் இருந்தனர் என ஆராய்ச்சி வல்லோர் துணிகின்றனர். நாயனார் சுந்தரமூர்த்திகளுக்கு முன் இருந்தவர் என்பது பொருத்தமே. திருமூலநாயனார் சைவசமயம் குன்றியிருந்து புத்துயிர் பெற்ற காலமாகிய கி.பி 7ம் நூற்றாண்டில் இருந்தவராதல் வேண்டும்.

தமிழ் மூவாயிரம் மிகச் சிறந்த நூலாகும். பல்லாண்டு தியானத்திலிருந்து தெளிந்த உண்மைகளை ஓதினார் என்பதே பொருந்தும். அது மட்டுமல்ல திருமூலநாயனர் ஆரிய மொழியிலுள்ள நான்மறைகள், உபநிடதங்கள் முதலியவற்றோடு தமிழ் மொழியிலுள்ள திருக்குறள் முதலிய வற்றையும் தேர்ந்து தெளிந்து திகழ்ந்தனர். இத்தகைய அறிஞர் தமிழ் மொழியில் தாமறிந்த சமய உண்மைகளைச் சொல்வதற்கு பேராசை கொண்டவரானார்.

தத்துவ நூல்களைத் தோந்து தெளிந்து திருக்கூத்தின் இயல்பைக் கூறுவதே நம் வாழ்க்கையின் நோக்கம் என நம்மனார்க்கு அழகுற விளம்பினார் நாயனார். தமிழ் மொழியில் மெய்ப்பொருளைச் செப்புவதற்கே நம்மை இறைவன் படைத்தனன் என எண்ணினார் நாயனார்.

**"பின்னைநின்று என்னே பிறவி பெறுவது?**
**முன்னைநன் றாக முயல்தவம் செய்கிலர்ஆூ**
**என்னைநன் றாக இறைவன் படைத்தனன்**
**தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே."**

திருமந்திரம்: 81

முழுமுதற் கடவுளின் சொரூபத்தை தமிழில் கூறத் தாம் பிறந்தார் என மொழிந்தார் நாயனார். இறைவன் அருள் ஆணையிட்டான். நானும் அவ்வாறே நன்றாகத் திருமந்திர நூலைப் படைத்தேன்.

திருமந்திரம் மெய்ப்பொருள் கூறுவதாக இருந்தாலும், மனிதன் இவ்வுலகில் வாழும் முறைமையையும் கூறுகின்றது. திருமந்திரம் பகுத்தறிவு நூலுக்கு பகுத்தறிவு நூலாகும். ஆன்மீக நூலுக்கு ஆன்மீக நூலாகும். முதலாந்தந்திரத்தில் யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, உயிர் நிலையாமை என்பவற்றை எடுத்துக்கூறி மனித சிந்தனையைத் தூண்டியவர் மனிதன் வாழும் முறைமையைச் சுட்டிக்காட்டுகின்றார். அன்பு, பக்தி, இன்சொல், சமூக சமரசம், தானச்சிறப்பு, கல்வி, நடுவு நிலைமை முதலிய சமய விழுமியப் பண்புகளைப் பலபடக் கூறுகின்றார்.

ஐம்பூதப் பொருளால் உருவானதே உடம்பாகும். ஐந்தும் ஒவ்வொன்றாக ஒழியவே உயிரும் உடலை விட்டுப் பிரிகின்றது. இந்த நிலையைப் பின்வரும் பாடல் எடுத்துக்காட்டுகின்றது.

**"மத்தளி ஒன்றுளஊ தாளம் இரண்டுள**
**அத்துள்ளே வாமும் அரசனும் அங்குளன்**
**அத்துளே வாமும் அரசன் புறப்பட்டால்**
**மத்தளி மண்ணாய் மயங்கிய வாறே."**

திருமந்திரம்: 189

மண்ணால் கட்டப்பட்ட கோயிலே உடம்பாகும். இதிலே மூச்சுக் காற்றை வெளிவிடுவதற்கும், உள்ளே இழுப்பதற்குமான இரண்டு வழித்தடங்கள் உண்டு. இந்த உடம்பைப் பற்றோடு ஆளுகின்ற உயிராகிய மன்னனும் இங்கே ஆட்சி புரிகின்றான். இத்தகைய மன்னன் ஆட்சி புரியாமல் உடலை விட்டுப் புறப்பட்டுவிட்டால் கோயிலாகப் போற்றப்பட்ட இந்த உடம்பு மீண்டும் மண்ணோடு மண்ணாக கலந்துவிடும் தன்மையதேயாகும். ஆனால் உடம்பு அழியும். உயிர் ஒருபோதும் அழிவதில்லை.

அன்பு என்பது உள்ளத்தில் முகிழ்ந்தெழும் பண்பு. அதாவது அன்பு என்பது மன நெகிழ்ச்சியாகும். இது துன்பப்படுவோரைக் கண்டபோதும், இறைவனை நினைக்கும் போதும் ஏற்படும். அன்பால் உருகியவரே இறைவனை அடைய முடியும். இதைத் திருமந்திரம்

**"என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்**
**பொன்போல் கனலில் பொரிய வறுப்பினும்**
**அன்போடு உருகி அகம்குழை வார்க்கன்றி**
**என்போல் மணியினை எய்தஓண் ணாதே"**

திருமந்திரம்: 272

வாழ்வு என்னும் அடுப்பிலே அன்பு என்னும் தீயை மூட்டி அந்த பொன்போன்ற நெருப்பிலே எலும்பு என்னும் விறகை அடுக்கி, தசையாகிய நெய்யை ஊற்றி உடலையே எரித்தாலும் போதாது அந்த அன்புக் கனலாலே இறைவனை நினைந்து உள்ளமானது நெகிழ்ந்து நெகிழ்ந்து உருகி கண்ணீர் மல்க வேண்டும். அப்படி உருகியவரே மாணிக்கம் போன்ற சிவத்தை அடைய இயலும். அதாவது அன்பால் உருகியவரே இறைவனை அடைய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் மிகச் சிறந்த ஆற்றலுடைய பண்பு அன்பேயாகும். எனவேதான் அன்பை இறைவனுக்கு நிகராகப் போற்றினர். அன்பு வேறு கடவுள் வேறு என்று கருதுதல் அறியாமை. அன்பே சிவம் என்று கூறினார் திருமூலர். அன்பின் உயர்நிலை பக்தி எனப்படும். பக்தி என்னும் இறையன்பு காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்குவதாகும். இந்த கசிவும், கண்ணீரும் இல்லாதவர் பக்தராக மாட்டார். அருளைப் பெறவும் மாட்டார். இதனை

**"ஆன்கன்று தேட அழைக்கும் அதுபோல**
**நான்கன்றாய் நாடி அழைத்தேன்என் நாதனை**
**வான்கன்றுக்கு அப்பாலாய் நின்ற மறைப்பொருள்**
**ஊன்கன்றாய் நாடிவந்து உள்புகுந் தானே"**

*திருமந்திரம்: 2627*

கன்றைப் போல் அழைத்தால் கனிந்து வருவான் கடவுள். அன்பினை உணர்ந்து, அன்போடு வாழும் போது என் உள்ளத்திலே புகுந்து கொண்டான். என்னே அவனது அருள்மாட்சி.

காக்கையானது உணவு கிடைக்கும் காலத்தில் தான் மட்டும் உண்ணாமல் தனது கூட்டத்தையே கரைந்து அழைத்து வைத்துக் கொண்டு உண்ணுகின்ற காட்சி எத்துணைச் சிறந்தது. மனிதனும் தன்னையும் பிற உயிர்களையும் அறிந்து பிற உயிர்களுக்கு அறஞ்செய்ய வேண்டும் என்பதனைத் திருமந்திரம் எடுத்துக் கூறுகிறது.

**"யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை**
**யாவர்க்கு மாம்பசு வுக்கு ஒரு வாயுறை**
**யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி**
**யாவர்க்கு மாம்பிறர்க்கு இன்னுரை தானே."**

*திருமந்திரம்: 252*

இறைவனுக்கு ஒரு பச்சிலையிட்டு வழிபாடு செய்யும் ஒழுக்கம் எல்லோர்க்கும் வேண்டும். அதைப் போல ஆருயிராம் ஆவுக்கு ஒரு வாயளவு புல் முதலிய இரையளித்தல் யாரும் செய்யக்கூடிய பணியே ஆகும். உணவு உண்கின்ற பொழுது வருகின்றவர்க்கு ஒரு கைப்பிடி அளவேனும் உணவளித்தல் யாவர்க்கும் உரிய அறப்பண்பாகும். அதுபோல் பிறரிடம் பேசும் போது மகிழுமாறு இனியவுரையை வழங்குதல் எல்லோருக்கும் வேண்டிய நற்பழக்கமாகும். இன்சொல் பேசுதலின் சிறப்பினை திருக்குறள் பின்வருமாறு கூறுகின்றது.

**"அகனமர்ந் தீதலின் நன்றே முகனமர்ந்து**
**இன்சொலன் ஆகப் பெறின்"**

திருக்குறள், நாலடியார், திருமந்திரம் போன்றன கல்விக்கு முக்கியத்தும் கொடுக்கின்றன. மனிதர் உலக அறிவைப் பெறுவதோடு தன்னை அறியும் அறிவையும் பெறவேண்டும். இவ்வறிவைப் பெறவே கற்க வேண்டும். "கண்ணுடையர் என்போர் கற்றோர்" என திருக்குறளும், "நெஞ்சத்து நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால் கல்வி அழகே அழகு" என்று நாலடியாரும், "துணையது வாய்வரும் தூயநற்கல்வியே" எனக் கூறியவர் நடுவுநிலைமை பற்றிக் கூறுகின்றார்.

**"நடுவுநின் றார்சிலர் ஞானிகள் ஆவர்**
**நடுவுநின் றார் சிலர் தேவரும் ஆவர்**
**நடுவுநின் றார் சிலர் நம்பனும் ஆவர்**
**நடுவுநின் றாரொடு நானும் நின்றேனே."**

*திருமந்திரம்: 322*

இங்கு தலைநடுவில் மனமொன்றியதால் உயர்நிலை அடைவர் எனக் கூறப்படுகின்றது. ஆயிரம் இதழ் தாமரை (சகசிரதள) என்னும் தலைமலரின் நடுவிலே ஒளிரும் இறையொளியில் அறிவும், மனமும் ஒன்றி ஒருமை கொள்ளும் நிலையே நடுவுநிலைமையாகும்.

படைக்கப்பட்ட உயிர்க்கூட்டமெல்லாம் ஓரறிவு முதல் ஆறறிவுவரை ஒரே தன்மையுடையனவாம் ஆதலின் உயிர் ஒன்றே. அவற்றை எல்லாம் படைத்த தேவனாகிய இறைவனும் ஒருவனே அவன் இயற்கை உண்மை விளக்கம் ஆவான். ஆதலால் அவனை அன்புடன் முழுமையாக நினைந்து அருள் பெறுங்கள். பெறுவதால் உங்களை கூற்றுவன் அணுகமாட்டான். நீங்கள் நாணப்படாமல் சேரும் அருள் வாழ்வு ஒன்றே ஒன்று தான் வேறு வாழ்வெல்லாம் நாணப்படக்கூடியவையாம். ஆகவே, உங்கள் உள்ளத்தில் இறைவனின் எண்ணம் நிலைபெறுமாறு அவனையே நினைந்து வணங்கி வாழுங்கள் என்பதை

**"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்**
**நன்றே நினைமின் நமனில்லை நாணாமே**
**சென்றே புகும்கதி யில்லைநும் சித்தத்து**
**நின்றே நிலைபெற நீர் நினைந்து உய்மினே"**

*திருமந்திரம்: 2104*

என்றவாறாக எடுத்துக்கூறி வாழும் முறையினைக் கூறுகின்றார்.

உயிர் உடம்பினுள் உள்ளது. உயிர் இருந்தால் தான் நாம் மனிதர். உயிர் போய்விட்டால் நாம் பிணம். அந்த உயிர் இருப்பதற்குக் காரணம் உடல் தான். இந்நிலையை

**"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்."**

*திருமந்திரம்: 724*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் அமரவும், அறிவு சேரவும் உடம்பைக் காக்க வேண்டும் என்று உணர்ந்து உணர்த்துகிறார். மனிதரின் உடம்பு முறையோடு காக்கப் பெறாமல் அழியுமானால் நின்ற உயிரும் அதைவிட்டு ஓடிவிடும். அதுவன்றி உயிரிலே சேரவேண்டிய உறுதியான மெய்யறிவும் சேராமல் போய்விடும். உடம்பினைக் காக்க வேண்டிய இன்றியமை யாமையை பின்வருமாறு எடுத்துக் காட்டுகின்றார்.

**"உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்**
**உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில்கொண்டானென்று**
**உடம்பினை யானிருந்து ஓம்புகின் றேனே"**

*திருமந்திரம்: 725*

இந்த உடம்புக்குள் இருக்கும் உயிரிலே செம்பொருளான இறைவன் கோயில் கொண்டு விளங்குகின்றான் என்பதை உணர்ந்தேன். அதனால் உடம்பினை தவமிருந்து பேணிவருகின்றேன்.

மெய்கண்டதேவர் 12ம் நூற்றாண்டில் சிவஞானபோதத்தில் "மாயாதனு விளக்கே" எனக் கூறிய உண்மையை திருமூலநாயனார் 7ம் நூற்றாண்டிலேயே வற்புறுத்திக் கூறியிருந்தமை மனங்கொள்ளத்தக்கது. இம்மை வாழ்க்கையில் உடம்பை ஓம்பி வளர்த்து ஐம்புலங்களை நல்லாற்றுப்படுத்தி ஞானத்தை பெறுதலே வீடடைதற்கு வழியென நாயனார்அறிவுறுத்தினார்.

**"அஞ்சு மடக்கடக் கென்பர் அறிவிலார்**
**அஞ்சு மடக்கின் அமரரும் அங்கில்லை**
**அஞ்சு மடக்கில் அசேதனமா மென்றிட்டு**
**அஞ்சு மடக்கா தறிவறிந் தேனே"**

*திருமந்திரம்: 2033*

எடுத்த உடம்பை இகழாமல் அதனைக் கருவியாகக் கொண்டே நன்னெறி அடைய முயல வேண்டும். இம்மை வாழ்க்கையைப் பயன்படுத்தி மெய்ஞ்ஞானம் பெறுதலே மக்களின் நோக்கமாதல் வேண்டும்.

வானையும் இடமாகக் கொண்ட மெய்ப் பொருளான இறைவனைப் பற்றி ஆழமாகச் சொல்லும் பொழுது அந்த சொற்கள் ஊனையும், உயிரையும் பற்றிக் கொள்ளும் உணர்வு மயமான மந்திரச் சொற்களாகும். அத்தகைய மந்திரத்தை ஒவ்வொருவரும் உள்ளத்தில் ஓதி உயிரிலே பற்றிக் கொள்ள இறைவன் தோன்றி அகத்திலே இன்பம் தருவான்.

**"நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்**
**வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்**
**ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்**
**தான்பற்றப் பற்றத் தலைப்படும் தானே"**

*திருமந்திரம்: 85*

இந்த இன்பத்தை நான் பெற்றது போல இந்த உலக உயிர்களும் பெறவேண்டும். இதுவே எனது அவா! எனக் கூறுகின்றார்.

மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ் இறைநூல். இவை அனைத்தும் கலிவிருத்தத்தால் ஆனவை. பெரும்பாலான பாடல்கள் எதுகைகளைக் கொண்ட செய்யுள்களேயாகும். சிவயோகப் பெருநூலான இத்தீந் தமிழ்ப் பனுவலைக் கற்றுத் தெளிவோம். திருமூலநாயனார் கற்றுத் தெளிந்து உணர்த்தியிருக்கிறார். நாமும் உணர்த்தியதை உணர முயற்சிப்போமாக.


உசாத்துணை நூல்கள்

திருமந்திரம் மூலமும் எளிய உரையும்
- சாரதா பதிப்பகம்

சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள்
- தருமையாதீனம்

திருக்குறள் பரிமேலழகர் உரை
- கழக வெளியீடு

இலக்கிய விலக்கண ஆய்வுகள்
திருத்தொண்டர் திருவந்தாதி
- தருமபுர ஆதீனம்

சிவஞான போதம்
- மெய்கண்டதேவர்
- தருமபுர ஆதீனம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்வைத, சைவசித்தாந்த பார்வையில் மாயை

## - ஓர் ஒப்பியல் நோக்கு -

அத்வைதம் வேதாந்த தத்துவப் போக்குகளில் ஒன்றாகும். "வேதாந்தம்" என்ற சொல் வேதங்களின் அந்தம் அல்லது முடிவு என்று பொருள்படும். உபநிடத சாரமாக விளங்கும் வேதாந்த சூத்திரத்திற்கு உத்திர மீமாம்சம், சாரீரக மீமாம்சம், சாரீரக சூத்திரம் என்ற பெயர்களும் வழங்குவர். இதனை தொகுத்து அளித்தவர் "பாதராயணர்" என்பவராவார். சூத்திர வடிவில் அமைந்த வேதாந்தத்திற்கு பலர் உரையெழுதத் தலைப்பட்டனர். அவர்களுள் சங்கரர், இராமானுஜர், மத்துவர், நீலகண்டர், வல்லபர், நிம்பார்க்கர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுள் சங்கரர், இராமானுஜர், மத்துவர் ஆகிய மூன்று தத்துவ ஞானிகளும் எழுதிய உரைகள் சிறப்பாக போற்றப்படுகின்றன. சங்கரர் அத்வைதத்தினையும், இராமானுஜர் விசிட்டாத் வைதத்தினையும், மத்துவர் துவைதத்தினையும் தோற்றுவித்தனர். இவை முறையே அபேதவாதம், பேதாபேதவாதம், பேதவாதம் என்றவாறாக அழைக்கப்படுகின்றன.

மேற்குறித்த விடயம் குறித்து பேராசிரியர். நா.ஞானகுமாரன் அவர்கள் தனது "சைவசித்தாந்தத் தெளிவு" எனும் நூலில் "அத்துவிதமும் சைவசித்தாந்தமும்" எனும் அத்தியாயத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "இந்திய தத்துவப் பரப்பில் பல்வேறுபட்ட தரிசனங்கள் அத்வைதம் அல்லது அத்துவிதம் எனும் சொல்லாட்சியை பயன்படுத்தி உள்ளமையைக் காணலாம். ஒவ்வொரு தத்துவக் குழுவினரும் தத்தம் தத்துவ சிந்தனைகளுக்கு ஏற்ப அத்வைதம் பற்றிய எண்ணக்கருத்தை வேறுபட்ட வகைகளில் எடுத்து விளக்கினர். சங்கரர், இராமானுஜர், மத்துவாச் சாரியார், சைவசித்தாந்திகள், ஸ்ரீகண்டர் போன்ற பலரும் அத்வைத எண்ணக்கருத்தை தத்தமது தத்துவங்களில் எடுத்தாண்டவர்களாக விளங்கினர். இவ்வகையில் கேவலாத்வைதம், விசிட்டாத் வைதம், துவைதம், சிவாத்துவிதம், சுத்தாத்வைதம் போன்ற பல தத்துவக் கோட்பாடுகள் அத்வைதக் கருத்தை தமது அடிப்படைக் கோட்பாட்டு சிந்தனைக்கு ஏற்ற வகையில் விளக்குதல் காணலாம்."

இவ்வாறாக பல்வேறுபட்ட தரிசனங்களாலும் எடுத்தாளப்படுகின்ற அத்வைதமானது "அ" என்னும் எதிர்மறை முன்னொட்டுச் சேர்ந்த "துவைதம்" என்னும் சொல்லின் (அதுவைதம்) வெளிப்பாடாகும். இங்கு துவைதம் என்பது இருபொருள் தன்மையினைக் குறிப்பிடுகின்றது. அ என்னும் எதிர்மறை முன்னொட்டுடன் இணைந்து அத்வைதம் இரண்டு இன்மை அல்லது இரண்டு இல்லை எனும் பொருளைத் தருகின்றது. இங்கு இரண்டு என எடுத்தாளப்படுவது பிரம்மமும் உயிருமே ஆகும். அந்த வகையில் சங்கரர் கூறும் அத்வைதத்தின் அடிப்படைக் கருத்து "ஆத்மனுக்கும், பரமாத் மனுக்கும் (Individual soul & Absolute soul) பேதமில்லை இரண்டும் ஒன்றே என்று ஒருபொருள் உண்மையினைப் பேசுவது", "பரமாத்மா ஆகிய ஒரு பொருளைத் தவிர வேறு எதுவுமே இல்லை நமது பார்வைக்குப் புலப்படும் இந்த உலகமும், எல்லா உயிர்களும் உண்மையில் இல்லை. இவை யாவும் பரம்பொருளின் தோற்றமே ஆகும்" என்றவாறாக எடுத்தாளப் படுகின்றது. அதாவது பொன்னும் அதிலிருந்து உருவாகும் அணிகளும் வேறாகாமை போலும் கடலும் அதிலிருந்து தோன்றும் அலைகளும் வேறாகாமை போலும் இறைவனும் ஆன்மாவும் ஒன்றே என்கிறது அத்வைதம். இவ்வாறு ஒரு பொருள் பற்றிப் பேசும் அத்வைதம் ஒருமைவாதம் (Monism) என வழங்கப்படுகின்றது.

மேலும் ஆத்மாவும், பிரம்மும், உலகும் வேறுவேறு எனினும் ஆத்மாவையும், பிரபஞ்சத்தையும் தனக்கு உடம்பாகக் கொண்டு பிரம்மம் அவற்றை இயக்கி வருவதால் ஒன்றாகவும் கருதலாம் என்கிறது இராமானுஜரின் பேதாபேதவாதமாகிய விசிட்டாத்துவைதம். சங்கரரது கருத்திற்கு முற்றிலும் மாறான வகையில் ஆத்மாவும் பிரம்மமும் வேறுவேறு என்கின்றது மத்துவரின் பேதவாதமாகிய துவைதம்.

சைவசித்தாந்தத்தை எடுத்து நோக்கின் தென்னாட்டு சைவமரபாக போற்றப்படுவது சைவசித்தாந்தம் எனும் கொள்கையாகும். இது வேத, உபநிடதங்களைப் பொது நூலாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாகமங்களைச் சிறப்பு நூலாகவும் கொண்டமைந்தது. சங்கரரைப் போலல்லாது, எவ்வாறு இறைவன் என்பது உண்மையானதோ அதுபோல உலகமும், உயிரும் உண்மையானது. ஆனால் இவை இரண்டையும்விட மேலான பொருள் பதியாகிய இறைவன் என்று சைவசித்தாந்தம் எடுத்தியம்புகின்றது.

மேற்குறித்த சங்கரர், இராமானுஜர், மத்துவர் மூவரது கருத்தையும் சைவசித்தாந்திகள் ஒருவகையில் உடன்படுவர். இறைவன் உயிர்களுடன் கலந்திருப்பதால் ஒன்றாக உள்ளான் (அபேதம்), பொருள் தன்மையால் வேறாக உள்ளான் (உயிரின் தன்மையும், இறைவனின் தன்மையும் வேறுபாடுடையன ஆதலினால் பேதம்) இறைவன் உயிருக்கு உயிராய் இருத்தல் பற்றி உடனாய் விளங்குகின்றான் (பேதாபேதம்). இவ்வாறாக மூவகைக் கருத்தையும் எடுத்தாள்வதாய் சைவசித்தாந்தம் அமைகின்றது.

இந்த அடிப்படையில்தான் அத்வைதம் (சங்கர வேதாந்தம்), சைவசித்தாந்தம் ஆகிய இவ்விரு தத்துவப் போக்குகளும் சுட்டுகின்ற மாயை எனும் எண்ணக்கரு வேறுபட்டமை கின்றது. மாயை என்ற சொல் வேதாந்த சித்தாந்த மெய்ப்பொருளியல்களில் மிகுதியாக பயன் படுத்தப்பட்டிருந்தாலும் அது உபநிடதங்களில் உட்கிடையாக இருந்தது.

உதாரணமாக சுவேதாசுவரத உபநிடதம் "மாயையை முதற்காரணமாக அறிந்து கொள்க முடிவில் அனைத்து மாயையும் நீக்கப்படும்" என்று குறிப்பிடுகின்றது. பௌத்த சமயமும் மாயைக் கோட்பாடுபற்றிப் பேசுகின்றது. அது தோற்றவியலானவற்றைத் தவிர்த்து உள்பொருள் என்று எதுவும் கிடையாது என்கின்றது. இக் கோட்பாடு சூனியவாதம் எனப்படுகின்றது. அத்வைதக் கோட்பாட்டினை அளித்த ஆதிசங்கரரே மாயைக் கொள்கையினை முதன் முதலில் பரந்த அளவில் விளக்கியவராவார். சங்கரரைப் பொறுத்தவரை மாயை உண்மையுமல்லாத, பொய்யுமல்லாத ஒன்றாகும். அதாவது சொல்லொணாத அல்லது சொல்லமுடியாத ஒன்றாகும். சில சிந்தனைப் பள்ளிகள் மாயை என்பதனை அறியாமை என்றவாறாக எடுத்தாள்கின்றன. ஆனால் சைவசித்தாந்தம் கடவுள் மற்றும் ஆன்மா என்பன போன்று உண்மையான ஒன்றாக எடுத்தாள்கின்றது. *("Maya is not an illusion. It is considered as an illusion by some schools of thought, but not by Saiva siddhanta, it is real, like God or soul")*

அந்த வகையில், முதலில் சங்கரர் மாயை எனும் எண்ணக்கருவினை எடுத்தாள்கின்ற தன்மையினை நுணுகி ஆராய்வோமேயானால் அதனூடே அவரது தர்க்கச் சிறப்பு புலப்படுவ தாகின்றது. ஒரே பரம்பொருளான பிரம்மம் மட்டுமே உண்மை இவ்வுலகும் உயிர்களும் தோற்ற நிலையானவை என எடுத்தாள்கின்ற போது அத்தகைய தோற்றத்திற்கு காரணமாக மாயையை எடுத்தாள்கின்ற தன்மையினைக் காணலாம். அதாவது பிரம்மம் பூரணமானதும், மாறாததும், அழியாததும், தூயதும், சுதந்திரமானதும், ஆனந்த மானதும், எல்லையற்றதும், என்றுமுள்ளதும், ஒன்றானதும், குணங்களற்றதும், புத்தியுடையதும் எனப் பலவாறாக எடுத்தாளப்படு கின்றது. மாறாக உலகானது சடத்தன்மையானது, மாற்றத்திற் குரியது, புத்தியற்றது, பந்தத்திற்கு உட்பட்டது, தூய்மையற்றது, அழிவிற்குரியது, பகுப்பிற்குரியது, எல்லையுடையது என பலவாறாக விளக்கப் படுகின்றது. இந்நிலையில் அத்வைதக் கருத்தின்படி உள்பொருள் பிரம்மம் ஒன்றே எனின் அதிலிருந்து முற்றிலும் மாறுபட்ட இவ்வுலகம் எவ்வாறு தோன்றியிருக்க முடியும்? ஒருமைத் தன்மையான பிரம்மத்திலிருந்து பன்மைத் தன்மையான இவ்வுலகு எவ்வாறு தோன்றியிருக்க முடியும்? அழியாத பிரம்மத்திலிருந்து அழிவுள்ள இவ்வுலகம் எவ்வாறு தோன்றியிருக்க முடியும்? சித்துப் பொருளான பிரம்மத்திலிருந்து சடப்பொருளான உலகு எவ்வாறு தோன்றியிருக்க முடியும்? இத்தகைய வினாக்களுக்கு விடையளிக்கும் வகையிலேயே சங்கரர் மாயைக் கோட்பாட்டை எடுத்தாள்கின்றார். வரம்பற்ற பிரம்மத்தை வரம்புக்கு உட்படுத்துவதும், உண்மையான உள்பொருளை தோற்றவியலான உலகாக ஆக்குவதும் ஆகிய ஆற்றலே மாயை என சங்கரர் கூறுகின்றார்.

சங்கரர் தனது அத்வைதத்திலே அவித்தை, விவர்த்தம், அத்தியாசம், அஞ்ஞானம், அநிர்வசனீயம், பிரம்மை, அவியக்கத்தம், நாமரூபம் போன்றவற்றையும் மாயை என்பதற்கு இணையாக பயன்படுத்துகின்றார்.

இவற்றை விட நிலையற்ற இவ்வுலகம் நிலையான முழுமுதல் பொருளில் இருந்து உருவாகின்றது. அழியாத ஒன்றிலிருந்து அழியும் உலகப் பொருட்கள் உருவாகின்றன. அந்த மூலப்பொருள் இவ்வாறு மாறுவதன் மூலம் தன்னை மாற்றிக் கொள்வதோ குறைபடுவதோ இல்லை. ஏன் அது இத்தோற்றம் கொள்கின்றது? எப்படித் தோற்றம் கொள்கின்றது? என்பது நம் அறிவுக்கு அப்பாற்பட்டது. நாம் பார்ப்பது அதன் தோற்ற நிலைகளை மட்டுமே. அதாவது முழுமுதற்பொருளை பிரபஞ்சமாக மயங்கிப் பார்க்கும் நிலை.

இப்பிரபஞ்சத்தின் சாரமாக உள்ள முதல் முழுமை அறிவின் எந்த எல்லைக்குள்ளும் வராத ஒன்று. அதை அறிவின் எல்லைக்குள்ளே கொண்டுவரும் செயலே மாயை ஆகும். அதாவது முழுமுதல் பொருளை அதன் முழுமுதல் தன்மையை குறைத்து அணுகும் நிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமுதல் சக்தியானது தன்னை பலவாறாக பிரித்தும், வளர்த்தும் தான் நிகழ்த்திக் கொள்ள முடியும். ஆகவே பிரபஞ்சம் அது தன்னை நிகழ்த்திக் கொள்ளும் முறை அதாவது மாயை என்பது முழுமுதன்மையின் வல்லமை அல்லது விளையாட்டு. இந்த தளத்தில் இது இரண்டு முறையில் செயற்படுகின்றது. ஒன்று திரைமாயை (ஆவரணம்), இன்னொன்று உருமாயை (விஷேபம்). முதல் வகை மாயை உள்ளதை மறைக்கின்றது. இரண்டாம் வகை மாயை இல்லாததை உருவாக்கிக் காட்டுகின்றது.

இயற்கை என்ற வடிவில் நம்முன் முக்குணம் கொண்டு நிற்பதை அத்வைதிகள் மாயை என்கிறார்கள்.

உயிர்குலங்கள் சிக்கிக் கொண்டிருக்கும் உணர்ச்சிகள் மற்றும் செயல்களிலான வலை மாயை எனப்படுகின்றது.

எனும் நிலைப்பாடுகளிலும் மாயை எடுத்தாளப்பட்டிருப்பதனைக் அத்வைத சிந்தனை களில் காணலாம். மேலும் ஒரு கயிறு பாம்பு போல் தோன்றுகின்றது என்பதனால் பாம்பின் குணங்கள் கயிற்றில் அமைந்துவிட முடியாது. அதனை நாம் பாம்பாகக் காணும் பொழுது கூட கயிறு கயிறாகத் தான் இருக்கின்றது. பிரதிவிம்பத்தில் காணப்படும் தவறுகளும் குறைகளும் மூலப்பிரதியை கெடுத்துவிடா. பொய்மை வெளிப்பாடாக பிரமத்திலிருந்து தோன்றும் இந்த உலகத்துக்குப் பேரின்பமயமாக அமைந்திருக்கும் நம் ஆன்மாவில் துன்பத்தையும், முரண்பாட்டையும் உண்டுபண்ணும் ஆற்றல் கிடையாது.

மேலும் மாயை உலகின் பொருட் காரணமாகவும், பிரம்மம் உலகின் அறிவுக் காரணமாகவும் அமைகின்றது. பிரம்மமும் மாயையும் தனித்தனி நிலையில் இவ்வுலகின் பருமைக் காரணமாக விளங்க முடியாது. பிரம்மமும் மாயையும் கலந்த ஒன்றுதான் பருமைக் காரணமாக முடியும். இந்தக் கலப்பு மூவகையாக எடுத்தாளப்படுகின்றது. இரண்டு இழைகளைத் தம்முள் முறுக்கும் பொழுது அது கயிறாக மாறுகின்றது. அதே போன்று பிரம்மமும், மாயையையும் ஒரே அளவில் விரவி நிற்கின்றன என்பதுதான் முதற் கூற்று. இங்கு உண்மை நிலைக்கும், வெளிப்பாட்டு நிலைக்கும் பிரம்மம் காரணமாகவும், மந்த நிலைக்கும் மாறுபாடு களுக்கும் மாயை காரணமாகவும் விளங்குகின்றது. இதுவே இரண்டாவது கூற்று. மாயையின் ஆற்றலையே பருமைக் காரணமாக கொள்ள வேண்டும். ஆற்றல் தனியாக நிற்க முடியாது. எனவே எதையாவது சாந்துதான் நிற்க வேண்டும். மாயையின் ஆற்றல் பிரம்மத்தை அண்டி நிற்கின்றது. இதனால் பிரம்மத்தையும் கூட பருமைக் காரணமாக கொள்ளவேண்டி வருகின்றது. இதுவே மூன்றாவது கூற்று.

ஜீவர்களின் இருப்பிடமாக உள்ள உடல்கள் மட்டுமல்ல, உயிர்வகையல்லாத இயற்கை அனைத்துமே மாயையினின்றும் உண்டாகின்றது. மாயையிலிருந்து உண்டாபவற்றை நாம் பொதுவாக உண்மையாக கருதுகின்றோம். ஆனால் சரியானபடி அவற்றை ஸத் என்றோ அஸத் என்றோ கூறமுடியாது. அவை அறியப்படுகின்றன. எனவே அந்தளவிற்காவது அவை உண்மையாக இருத்தல் வேண்டும். முயற்கொம்பு போல முழுவதும் உண்மையல்லாதது அல்ல. வெறும் சொற்களே என்றாலும் அவை புறவயமானவை. தமது இருப்பிற்காக ஆத்மாவை முற்றும் சார்ந்திருக்க வேண்டியதால் தாமாகவே அவை மெய்யானவையு மல்ல. இறுதியாக உள்ள தென்றோ, இல்லாத தென்றோ வகைப்படுத்த முடியாத இத்தன்மை "சதசத் இலக்கணம்" எனப்படும். எனவே இத்தன்மை அவற்றின் காரணமாகிய மாயையிலும் இருக்க வேண்டியது இயற்கையே. அவை யாதாயினும் ஒன்றாகவோ, ஒன்றுமில்லாத தாகவோ இல்லையாதலின் "மித்யா" (Mithya) என வழங்கப்படும்.

மாயையின் இருப்பு நிலைத் தன்மையை கருதும் பொழுது அது உண்மையன்று ஏனெனில் உண்மை எக்காலத்தும், எவ்விடத்தும் உள்ளதாகும். ஆனால் மாயை பிரம்ம ஞானத்தால் ஒரு சமயத்தில் நீங்குவதாகும். அது இன்மையுமன்று ஏனெனில் இன்மை எக்காலத்தும், எவ்விடத்தும் இல்லாத தாகும். ஆனால் மாயை ஒரு காலத்தில் தோன்றி யுள்ளது. மாயை உண்மையும், இன்மையும் அன்று. ஏனெனில் முரண்நிலைகள் ஒரே பொருளில் தங்கியிரா. ஆதலால் மாயை உண்மை, இன்மை முதலிய இலக்கணங்களற்றது என்றும், சொற்களால் விளக்க முடியாத தன்மை உடையது (அநிர்வசனீயம்) என்றும் குறிப்பிடப்படுகின்றது.

பிரம்மம் மட்டுமே உள்பொருள் என்ற சங்கரரது கருத்துப்படி மாயை அதனிடத்தில் உள்ளதாகவே கருதப்பட வேண்டும். பிரம்மத்தில் மாயை முழுவதுமாக உள்ளதெனில், முற்றறிவாகிய பிரம்மத்தில் அறியாமைக் கோட்பாடான மாயை உள்ளதென்பது ஏற்புடையதன்று. பிரம்மத்தின் ஒரு பகுதியில் மாயை உள்ளதெனின், பிரம்மம் பகுதிகள் கொண்டதாகும். பகுதியுடையது அழிவுடையது என்பதனால் பிரம்மத்தின் பகுதியில் மாயை உள்ளதென்பதனையும் ஏற்க முடியாது. உயிரையும் மாயையின் இருப்பிடமாகக் கொள்வதற்கில்லை. ஏனெனில் வரம்பற்ற பிரம்மம் மாயையினால் வரம்புக்குட்பட்டு உயிராக மாறுவதால் உயிர் மாயையின் படைப்பாகின்றது. தானே படைத்த ஒன்றில் அது தங்கியிருக்கின்றது என்பதும் இயலாத ஒன்று. இந்நிலையில் மாயையின் இருப்பிடம் குறித்து விளக்கும் போது சங்கரர் பிரம்மத்தின் இரு நிலைகள் குறித்துக் குறிப்பிடுகின்றார்.

பூரண நிலையான பிரம்மம்.
மாயையுடன் கூடிய பிரம்மம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைபாடுடைய ஈஸ்வரனில் இருந்து மாயை, மாயையிலிருந்து ஆன்மாவும், உலகமும் தோன்றிய தாக மாயை பற்றி சங்கரர் குறிப்பிடுகின்றார்.

மேலும் சங்கரரது மாயை குறித்து நோக்கும் பொழுது "அவித்தை" எனும் எண்ணக்கருவும் முதன்மை பெறுவதாகின்றது. அவித்தை என்றால் அறியாமை என்று பொருள். ஈஸ்வரனிடத்தில் தொகுதியாக இருந்த மாயை எனும் தத்துவம் பலவாகப் பிரிந்து ஒவ்வொரு உயிரையும் பாதிக்கும் பொழுது அவித்தை எனப் பெயர் பெறுகின்றது எனலாம். அதாவது பிரம்மத்தை ஈஸ்வரனாகச் செய்வது மாயை ஆத்மாக்களாக்குவது அவித்தை. இந்த இரண்டுமே பிரம்மத்திற்கு அப்பாற்பட்ட தல்ல என்பதோடு, அதிலேயே தோன்றி அதனையே மறைக்கும் தத்துவமும் ஆகும். அவித்தை சாத்வீகம், இராஜசம், தாமசம் எனும் முக்குணங்களும் சேர்ந்தது ஆகும். மாயை ஈஸ்வரனைப் பாதிப்பதில்லை. ஆனால் அவித்தை உயிர்களைப் பாதிக்கின்றது.

சங்கரரது வீடுபேறு குறித்த கருத்தாக்கமும் மாயைக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. அவித்தையினால் பாதிக்கப்பட்ட ஆன்மா ஞானத்தினைப் பெற்று அறியாமை நீங்கும் பொழுது தன்னையும் பிரம்மத்தையும் ஒன்றாகக் காணும். அதுவே வீடுபேறு என சங்கரர் எடுத்தாள்கின்றார். இவ்வாறாக சங்கரரது அத்வைதக் கோட்பாடு முழுவதுமே மாயையினால் கட்டியமைக்கப்பட்டது. இவ்வாறாக சங்கரர் கூறும் மாயை பற்றிய கருத்தாக்கத்தினை நோக்க முடிகின்றது. இனி சைவசித்தாந்தம் கூறும் மாயை பற்றி நோக்குகையில் அது எவ்வாறு சங்கரர் கூறும் மாயையில் இருந்து வேறுபட்டமைகின்றது என்பதனை கண்டு கொள்வது இயலுமானதே.

சங்கரரது அத்வைதம் போல் சைவசித்தாந்தம் பெரிய அளவில் மாயை எனும் எண்ணக்கருவினை எடுத்தாள்கின்றது என ஏலவே கண்டோம். அது மாத்திரமன்றி சைவசித்தாந்தம் இறைவன், ஆன்மா, உலகு எனும் மூன்று உண்மைகளினையும் ஏற்றுக் கொள்கின்ற ஓர் தத்துவப்போக்கு ஆகும். எனவே சங்கரர் மாயையை எடுத்தாண்டது போன்றதொரு அடிப்படை சைவசித்தாந்தத்தில் அமையவில்லை.

சைவசித்தாந்தம் ஏற்றுக் கொண்ட மூன்று உள்பொருட்களாக பதி (இறைவன்), பசு (உயிர்), பாசம் (தளைகள்) என்பன காணப்படுகின்றன. இவற்றினுள் தளைகள் ஆணவம், கன்மம், மாயை என மூவகைப்படும். இவை மும்மலங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. அந்த வகையில் மாயையினை மும்மலங்களில் ஒன்றாக சைவசித்தாந்தம் எடுத்தியம்புகின்றது. மாயை என்ற சொல்லானது மாயா , மா-யா என்று பகுப்புப் பெறுகின்றது. மா என்பது ஒடுக்கத்தையும் யா என்பது விரிதலையும் குறிக்கின்றது. எம் மூலப்பொருளில் இருந்து உலகங்களும், பொருட்களும் தோன்றுகின்றனவோ, எம் மூலப்பொருளில் ஈற்றில் ஒடுங்குகின்றனவோ அம் மூலப்பொருள் மாயை எனப்படும். இம்மூலப்பொருள் வெறுமையன்று சூனியமன்று உள்பொருளாகும். அதாவது மாயை என்பதனை சைவசித்தாந்தம் உண்மைப் பொருளாக எடுத்தாள்கின்றது. *(According to the Saiva siddhanta, it is real, like God or soul)* ஆனால் சங்கரர் மாயையை உண்மையுமல்லாத பொய்யுமல்லாத ஒன்றாகவே விளக்கினார்.

மேற்குறித்த வகையில் மாயை படைப்பு முழுமையின் அடிப்படை உள்பொருளாகும். படைப்பு முழுமையானது உணர்வற்றது என்பதனால் அதன் அடிப்படைப் பொருளும் உணர்வற்றதாகவே இருக்க வேண்டும் என சைவசித்தாந்திகள் குறிப்பிடுகின்றனர். மேலும் படைப்பு முழுமை தோன்றும் பொழுது அதன் அடிப்படைப் பொருளான மாயை பலவிதமான மாற்றங்களுக்கு உள்ளாகின்றது. இறைவன் அடிப்படைப் பொருளாக இருப்பின் இறைவனும் மாற்றங்களுக்கு உட்பட்டவனாகிவிடுவான். ஆனால் இறைவன் எக்காலத்திலும், எந்தவித மாற்றமும் அடையாதவன். எனவே சங்கரரைப் போன்று படைப்பு முழுமைக்கும் உணர்வுப் பொருளை அடிப்படையாகக் கொள்ளாது சைவசித்தாந்திகள் மாயையே அடிப்படையாகக் கொள்வர்.

மாயை அறிவற்ற பொருளாதலால் அது தானாகவே நானாவித உலகமாகவும், உடலாகவும் மாற முடியாது. இறைவன் உதவியால் தான் அதிலிருந்து உலகையும், உடலையும் உண்டாக்கியிருக்க வேண்டும். மாயை அறிவற்றது. இறைவனிடமிருந்து அறிவற்ற பொருள் உண்டாகியிருக்க முடியாது. அப்படியானால் மாயையும் இறைவனைப் போல, ஆன்மாவைப் போல என்றுமுள்ள பொருளாக இருக்க வேண்டும். ஆணவ மலம் இருளுடைய பொருள். ஆதலால் இருள் பொருளாகிய ஆணவமல வயப்பட்ட ஆன்மா மாயாமலம் மூலமாக உடலைப் பெற்றதும் சிறிது அறிவு விளக்கம் பெறுகின்றது. ஆன்மாவை விடுவிப்பதற்காகவே தான் இறைவன் மாயையி லிருந்து உலகையும், உயிருக்கு உடலையும் படைத்தளித்திருக்கின்றான்.

சைவசித்தாந்த கருத்தின்படி மாயை அதன் அடிப்படை நிலையில் வடிவமற்று இருப்பதால் புலப்படாதது ஆகும். பகுதிகளற்ற, வடிவமற்ற மாயை ஒன்றுதான். அது அழிக்க முடியாதது நிலைபேறுடையது எவ்விடத்தும் பரவி நிற்பது உண்மையானது புறவயமானது. இக்கருத்தாக்கம் சங்கரரது கருத்திற்கு மாறானது. ஏனெனில் சங்கரர் மாயை பிரம்ம ஞானத்தால் நீங்குவதாகும் என்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நள்ளிரவில் நடக்கின்ற ஒருவன் ஒரு கைவிளக்கை எடுத்துக் கொண்டு செல்கின்றான். முன்பில்லாத வெளிச்சம் அப்போது அவனுக்கு சற்றே கிடைக்கின்றது. எனினும் அவ்வெளிச்சம் பகற் பொழுதின் வெளிச்சத்தை ஒத்ததன்று, மங்கலானது. எனவே மயக்கமும் தருவது. இதுவே சைவசித்தாந்தம் காட்டும் மாயை. திருவருட் பயனில் "விடிவாம் அளவும் விளக்கு அனைய மாயை" என இது விளக்கப்படுகின்றது. மேலும் மாயை பற்றி சிவஞான சித்தியார் பின்வருமாறு கூறுகின்றது.

**"நித்தமாய் அருவாய் ஏக**
**நிலையதாய் உலகத் திற்குஅர்**
**வித்துமாய் அசித்தாய் எங்கும்**
**வியாபியாம் விமல னுக்குஅர்**
**சக்தியாய் புவன போகம்**
**தனு காரணமும் உயிர்க்காய்**
**வைத்ததோர் மலமாய் மாயை**
**மயக்கமும் செய்யும் அன்றே"**

ஒரு பொருளின் தோற்றத்திற்கு முதற் காரணம், நிமித்த காரணம், துணைக் காரணம் என மூன்று காரணங்கள் வேண்டும் என்பர். இவை ஆங்கிலத்தில் ஆயவநசயைட உயரளநஇ நுககைஉநைவெ உயரளநஇ ஐளெவசரஅநவெயட உயரளந எனப்பெறும். சைவசித்தாந்தம் மாயையை முதற் காரணமாகவும் இறைவனை நிமித்த காரணமாகவும் இறைவனுடைய சக்தியை துணைக் காரணமாகவும் கொள்கின்றது.

உயிர் தனது அறிதல், எண்ணுதல், உணர்தல் ஆகிய செயல்களைச் செய்வதற்குரிய ஆற்றலை மாயையே தருகின்றது. மேலும் மாயையில் இருந்து உயிர் தனது ஆற்றல்களைச் செயற்படுத்து வதற்குரிய உடல் (தனு), புலன் தொழில் உறுப்புக்கள் (கரணம்), அவ்வுடல் தங்குவதற்குரிய இவ்வுலகம் (புவனம்), உயிர் நுகர்வதற்குரிய பொருட்கள் (போகம்) ஆகிய அனைத்தையும் பெறுகின்றது.

மேலும் சைவசித்தாந்த கருத்துப்படி மாயை மூன்று நிலைகளை உடையது. அவையாவன சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயை என்பனவாகும். சுத்தமாயை என்பது மாயையின் தொடக்கநிலை. அசுத்த மாயை என்பது ஆணவத்துடனும் கன்மத்துடனும் இணைந்த நிலை. இது இன்ப, துன்பங்களை உயிர்களுக்கு அளித்து இறையறிவு ஏற்படுவதற்குரிய நிகழ்வுகளை அளிக்கும். பருமை நிலையில மாயை பிரகிருதி மாயை எனப்படும். அதிலிருந்தே இவ்வுலகம் தோன்றுகின்றது.

எனவே சுருங்கக் கூறின் அத்வைத மாயை சொல்லொணாதது சைவசித்தாந்த மாயை உள்பொருளானது. இவ்வாறாக அத்வைதமும், சைவசித்தாந்தமும் மாயைக்கு இருவேறு நோக்கு நிலைகளில் விளக்கமளித்து நிற்கின்றன.

உசாத்துணைகள்


1. இ.எஸ்.டி, ஞானன்.செ (1999) தத்துவ தரிசனங்கள், சென்னை மணிவாசகர் பதிப்பகம்.
2. கணேசன்.பி.சி (2006) இந்திய தத்துவஞானம் வளர்ந்த கதை, சென்னை புதிய புத்தக உலகம்.
3. கந்தசாமி.ந (2003) இந்திய தத்துவக் களஞ்சியம் ஐஐ, சென்னை மெய்யப்பன் பதிப்பகம்.
4. கந்தையா.மு (2005) சித்தாந்த செழும் புதையல்கள், கனடா சைவசித்தாந்த மன்றம்.
5. குமாரசுவாமிக் குருக்கள்.ச (2005) முப்பொருள் விளக்கம், பருத்தித்துறை கலாநிதி யந்திரசாலை.
6. சங்கரப்பிள்ளை.பொ (1985) சைவசித்தாந்தம், சென்னை குமரன் பதிப்பகம்.
7. சஜிந்தா.யோ (2008) "அத்வைதமும் சித்தாந்தமும் ஒப்பீடு", சைவநெறி, யாழ் பல்கலைக்கழகம் இந்துமன்றம்.
8. சுப்ரமணியன்.நா, கௌசல்யா சுப்ரமணியன் (1993) இந்திய சிந்தனை மரபு, சென்னை சவுத் ஏசியன் புக்ஸ்.
9. ஞானகுமாரன்.நா (1993) "சங்கரரின் உலகு பற்றிய நோக்கு", சிந்தனை, யாழ்ப்பாணம்ஞு யாழ் பல்கலைக்கழகம்.
10. ................................. (     ) சைவசித்தாந்தத் தெளிவு.
11. தேவிபிரசாத் சட்டோபாத்யாயா (2007) இந்திய தத்துவ இயல் ஓர் எளிய அறிமுகம், சென்னை அலைகள் வெளியீட்டகம்.
12. நாகப்பச் செட்டியார், இராம.சி (2007) சைவசித்தாந்தம் இரத்தின விளக்கம், மதுரை மீனாட்சி புத்தக நிலையம்.
13. பாலுசாமி.நா (2001) வாழ்வியற்களஞ்சியம் தொகுதி தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம்.
14. ........................ (2001) வாழ்வியற்களஞ்சியம் தொகுதி தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம்.
15. மகாதேவன்.டி.எம்.பி, இராதாகிருஷ்ணன்.எஸ் (1966) அத்துவித தத்துவம், தமிழ்நாடு தமிழ் வெளியீட்டுக் கழகம்.
16. ஹிரியண்ணா.எம் (2008) இந்திய மெய்யியல், கொழும்பு குமரன் புத்தக இல்லம்.
17. ஜெயகௌரி.நா (2000) "சங்கரரது தர்க்கச் சிறப்பு". தர்சனம், யாழ்பல்கலைக்கழகம் மெய்யியற்கழகம்.
18. ஜெயமோகன் சங்கரமதம், அத்வைதம், மாயவதம் - www.jeyamohan.in/?p=7712
19. ta.wikipedia.org mj;itjk; - http://ta.wikipedia.org/wiki/%EO%AE%85


• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரடிச் செல்லப்பா சுவாமிகளைத் தரிசிப்போம் வாரீர்

இராசையா ஸ்ரீதரன்
தெய்வத்தமிழ்ச் சுடர்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமானுடைய திருக்குமாரர் ஸ்ரீ முருகன் தம்மை வழிபாடு செய்கின்ற அடியார் பெருமக்களுடைய நல்வாழ்வின் பொருட்டு எழுந்தருளி வீற்றிருந்து வழிபடும் அடியார் வினை தீர்க்க அருள் புரிகின்ற இடம்தான் நல்லூர் கந்தசாமி கோயில்.

இந்த நல்லூரில் இருக்கின்ற முருகனின் அடியவர்தான் தேரடிச் செல்லப்பா சுவாமிகள். இந்தத் தேரடிச் செல்லப்பா சுவாமிகள் சித்தத்தைச் சிவன்பால் வைத்த ஒரு சிறந்த சித்தராவார். வாழ்த்தவாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவராகிய முருகப் பெருமான் இந்த நல்லூரிலே அடியார்க்கருளும் பெருமானாக வும் அலங்காரக் கந்தனாகவும் அருள்புரியும் வெற்றிவேல் குமரனாகவும் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றான்.

முருகன் என்றால் அழகன். அந்த அழகன் வேற்பெருமானாக எழுந்தருளி கைதொழுது மெய்யுருகி விழிநீர் சொரிந்து அழுது அரற்றி நிற்கும் பக்தர்களுக்கு திருவருள் கொடுத்து நல்வாழ்வு வாழ திருவுளமிரங்கி அருள்புரியும் நல்லூர்த் தேரடி ஒரு தலைசிறந்த புண்ணியப் பதியாகும்.

இந்தப் புண்ணியப் பதியாம் நல்லூர்த் தேரடியிலே வாழ்ந்த மகான்தான் செல்லப்பா சுவாமிகள் . இந்தச் செல்லப்பா சுவாமிகள் ஒவ்வொருநாளும் தேரடியிலே இருந்து தியானத்திலே அமர்ந்திருந்து முருகனோடு சிரித்துப்பேசி உரையாடிக்கொண்டு ஆனந்த சாகரத்திலே மூழ்கியிருப்பார். இதன் காரணமாக இவருக்கு, " விசர்ச் செல்லப்பா " என்று ஒரு பெயரும் உண்டு.

இவர் முருகன் மீது இடையறாத பக்திகொண்டு எந்நேரமும் சதாசர்வகாலமும் இறை சிந்தனையுடன் முருகநாமத்தை உச்சரித்துக் கொண்டே இருக்கலானார். நல்லூர்த் தேரடிதான் இவருடைய வசிப்பிடம். பார்ப்பதற்கு முழு விசர் போலக் காட்சிதரும் இவரின் அருமையும் பெருமையும் சொல்லில் அடங்காது 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலே வட்டுக் கோட்டையில் வாழ்ந்த வல்லிபுரம் - பொன்னம்மா தம்பதியினருக்கு பிள்ளையாக அவதரித்தார் சிறு வயது பராயத்திலேயே ஞானம் கைவரப் பெற்று சிவானுபூதிச் செல்வராகக் காணப்பட்டார். இவரது ஞானம் உள்ளே ஊறிவந்த ஒரு ஞான ஊற்றாக வெளிவரவே நல்ல தெய்வீக தேஜஸ் உண்டாகியது.

அந்தத் தெய்வீக ஞானம் ஞான ஒளியாக இவரது முகத்திலே பிரகாசித்தது. ஒரு அருள்ஞானம் பெற்ற மாகானாக காணப்பட்ட செல்லப்பா சுவாமிகள் குழந்தை போன்று அழகே உருவாகத் தோற்றமளித்தார். முருகநாமத்தை விரும்பி உச்சரிக்கும் இவர் அழுக்கு வேட்டியுடன் கிழிந்த சால்வையுடனும் இருந்ததைக் கண்ட ஓர் அடியவர் செல்லப்பா சுவாமிகள் மீது இரக்கங்கொண்டு,

"சுவாமிகளே! நான் உங்களுக்குப் புது வேட்டியும் சால்வையும் வாங்கித் தருகின்றேன். அணிந்து கொள்வீர்களா? " என்று கேட்டாராம். அதற்கு சுவாமிகள் எதுவும் சொல்லாது மௌனமாக இருக்கவே, "மௌனம் சம்மதத்துக்கு அறிகுறி" என்று கருதிய அந்த அடியவர் கடைக்குச் சென்று புதிய வேட்டி சால்வை வாங்கிக் கொண்டுவந்து செல்லப்பா சுவாமிகளிடம் கொடுத்து அவரை வீழ்ந்து வணங்கி நின்றாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர் கொடுத்த புதிய ஆடைகளை வாங்கி அணிந்துகொண்டுவந்த செல்லப்பா சுவாமிகள், "எப்படி நல்லாயிருக்கா?" என்று கேட்டுச் சிரித்துக்கொண்டு நின்றாராம்.

சில நிமிட நேரங் கழித்து "சாம்பராய்ப் போற உனக்கு ஏன் புது வேட்டி?" என்று கட்டியிருந்த வேட்டியையும் சால்வையையும் தாறுமாறாகக் கிழித்து எறிந்து விட்டு "சரி நீ போகலாம்!" என்றாராம்.

சுவாமிகளின் இந்தச் செய்கை அந்த அடியவருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. "நீர்க்குமிழிக்கு நிகரானது யாக்கை" என்பதை சொல்லாமல் சொல்லி உணர்த்தியமையை வியந்து உணர்ந்து அறிந்து கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் சொரிய நின்றாராம்.

இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகள்.

ஒருநாள் செல்லப்பா சுவாமிகள் நல்லூர்த் தேரடியிலே அமைதியாக உட்கார்ந்திருந்தாராம். திடீரென்று என்ன நினைத்துக்கொண்டாரோ தெரியவில்லை, உடனே எழுந்துநின்று மூன்று கல் எடுத்து வைத்து அடுப்பாக்கி ஒரு சிறுபானையிலே கொஞ்சம் அரிசியைப் போட்டுச் சோறாக்கினார். ஒரு சிறிய சட்டியிலே கறியும் சமைத்தார். பின்பு அதன்பக்கத்திலே தென்னோலையால் பின்னப்பட்ட கிடுகுகளை எடுத்து அழகாக அடுக்கி ஆசனம் போட்டு ஐந்து வாழையிலைகளைப் போட்டு சோறும் கறியும் பரிமாறினார்.

அவ்வேளை அந்தப் பக்கமாக நாலுபேர் வந்தனர். உடனே செல்லப்பா சுவாமிகள் "அடடே! வந்துவிட்டீர்களா? உங்களை எதிர்பார்த்துத்தான் சோறு கறி சமைத்தேன் உட்காருங்கள் சாப்பிடலாம்" என்றாராம். வந்தவர்கள் பசியோடு வந்தமையால் மறுபேச்சின்றி அமர்ந்து கொண்டார்கள். உடனே செல்லப்ப சுவாமிகள் தானும் அவர்களோடு சேர்ந்தமர்ந்து வயிறாரச் சாப்பிட்டார்கள். ஐந்து பேருக்கும் சோறுங் கறியும் அள்ள அள்ள வந்துகொண்டேயிருந்ததாம். அவர் போட்டுச் சமைத்த கொஞ்ச அரிசி ஐந்துபேருக்கும் போதுமானதாக சோறாக வெளிப்பட்ட அதிசய அற்புதத்தை என்னவென்பது?

இவ்வாறு சித்துக்கள் செய்து தேரடியிலே வாழ்ந்திருந்த செல்லப்பா சுவாமிகள் ஞான ஒளி வீசியபடியே முருகப்பெருமானுடைய பாத கமலங்களைச் சென்றடைந்தாராம். அவருடைய குருபூசைத்தினம் பங்குனித் திங்கள் துதியையாகும்.

இத்தனை புனிதமும் விஷேசமும் புதுமையும் சித்தும்கொண்ட செல்லப்பா சுவாமிகளின் சீடர்தான் கொழும்புத்துறை யோகர் சுவாமிகள். இவரும் தமது குருவைப்போலவே யாவற்றையும் துறந்து துறவியாக வாழ்ந்து முத்தியடைந்தவராவார். ஆனால் யோகருடைய தத்துவத்தின் முத்துக்களான "எப்பவோ முடிந்த காரியம்", "ஒரு பொல்லாப்புமில்லை", "முழுவதும் உண்மை", "விதியை வெல்லமுடியாது" என்ற மகாவாக்கியங்கள் விசேஷமான தனித்துவ மானவையாகும்.

ஆகவே, மனிதப்பபிறவியாகிய புனிதப் பிறவி எடுத் திருப்பவர்கள் இறை தொண்டாற்றி, சிவதொண்டின் பக்குவத்தை உயர்ந்து எல்லோரும் இன்புற்று வாழவேண்டும் என்ற உயரிய நோக்கோடு பூவுலகில் வாழ்ந்து நற்கதியடைய செல்லப்பா சுவாமிகளுடைய திருவடித் தாமரைகளைச் சிந்தித்துச் சேவித்து நிற்பதோடு எல்லாம்வல்ல நல்லைக் கந்தப் பெருமானுடைய பொற்கமல பாதம் பணிந்து அவனருளாலே அவன்தாள் வணங்கி நற்கதி அடைய நம்மை நாமே தயார்படுத்திக் கொள்வோமாக!

"வேலுண்டு வினை இல்லை!
மயிலுண்டு இனிப் பயமில்லை"

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# சித்தம் மகிழும் செல்லப்பர்

"என்றும் சிவ சேவையில்"
செல்வி க. சிவயோகராணி
அறநெறி, பண்ணிசை ஆசிரியை
அ.இ. சமாதான நீதிவான், கந்தரோடை.

**யா**ழ்ப்பாணத்து நல்லை நகரில் அவதரித்த சித்தர் பெருமானே செல்லப்பா சுவாமிகள் ஆவார். நல்லூர் கந்தப்பெருமானின் திவ்யமான திருவருள் கடாச்சத்தினை முழுதாகப் பெற்றவரும் இவரேயாகும். நல்லூரான் பெருமை புகழ் செல்லப்பா வாயிலாகவே மென்மேலும் போற்றப் பட்டுள்ளமை கண்கூடு. தேரடி "வில்வமரத்தடியே" இவருக்கு மெய்ஞானம் கைவரப்பெற்ற இடமாகும்.

முருகனாலய கருவறையை வழிபட்டு கிடைக்கின்ற அருள் தேரடி வில்வ மரத்தடி யினையும் வழிபட்டு சுற்றி வலம் வந்து நின்றால் கிடைக்கப்பெறும் என்பது திண்ணம்.

முருகனும் செல்லப்பா சுவாமி களும் ஒருவரை ஒருவர் பின்னிப் பிணைந்தவராவர். சுவாமிகள் தேர்முட்டியிலும் வில்வமரத்தடியிலும் இருந்தே முருகனுடன் நேரடியாகக் கதைத்து தனது முதற் சீடனாகிய தவத்திரு சிவயோக சுவாமிகளை கண்டறிந்தார்.

இவர் கூறிவைத்த வாக்கியமானது

"ஒரு பொல்லாப்புமில்லை"
"எப்பவோ முடிந்த காரியம்"
"நாமறியோம்"
"முழுதும் உண்மை" என்பதாகும்.

செல்லப்பா சுவாமிகள் மானிடர்களுக்கு சாதாரண மனிதராகவே காட்சியளித்தார். அவரது செயல்கள் யாவும் சித்துக்கள் நிரம்பியதாகவே காணப்பட்டனவாகும். எண்ணிலடங்கா சித்துக்களை அவர் ஆற்றியுள்ளார். அவற்றில் சில மட்டுவில் கண்ணகை அம்மன் ஆலயத்தில் அருகாமையில் இருந்த கத்தரித் தோட்டத்தில் செழிப்பற்று இருந்தமை கண்டு யோகரிடம் ஒரு கத்தரிக்காயைப் பிடிங்கி கொடுத்து "சிவாய நம" என்று ஐந்தெழுத்தை ஓதியவுடன் தோட்டம் நன்றாக செழித்து காய்த்தன என்பதுவும்,

கீரிமலை நகுலேச்சரம் சென்று வழிபாடு செய்துவிட்டு தண்ணி தாகம் எடுக்கும்போது யோகரிடம் தண்ணீர் கேட்க அவர் குருநாதரே நீங்கள்தான் ஒரு வழிகாட்டவேண்டும் என்று கூற ஒரு கையளவு கிணறு தோண்ட உடனடியாகவே நல்ல தண்ணி வர சுவாமிகள் இரு கைகளாலும் அள்ளிப் பருகி தாகம் தீர்த்தார். இன்றுவரை கீரிமலையில் ஆலய அருகாமையில் இக்கிணறு உள்ளது. பலரும் சென்று இவரது அற்புதத்தினைப் பாராட்டிச் செல்கின்றனர்.

ஆலய முன்றலில் உள்ள மணலை வாரி அள்ளி போவோர் வருவோருக்கு வீசும்பொழுது அது திருநீறாக அவர்கட்கு மேனியில் விழுந்ததாக வும் உள்ளன. உண்மை பக்தன் நினைத்தவுடன் முன்னால் தோன்றுவதும் சித்துக்கள் செய்வதுமாக வாழ்ந்துள்ளார். நல்லூரில் வாழ்ந்த செல்லப்பருக் கும் மாவிட்டபுரத்தில் பிறந்த யோகருக்கும் முற்பிறப்பு தொடர்பு இருந்தமையால்தான் இப் பிறவியில் குரு, சிஷ்யனாக வாழ்ந்து காட்டியிருக் கின்றனர். யோகராலேயே செல்லப்பருடைய பெருமை புகழ் உலகறியச் செய்யப்பட்டுள்ளது. நல்லூர் தேரடியில் இருந்தபொழுது முருகனை யோகர் வழிபடுவதற்காக வந்தபோது ஞானியாகிய செல்லப்பரினால் ஆட்கொள்ளப்பட்டார். கர்த்தா செல்லப்பா என்றால், கருவி யோகராவார். சித்தர்கள், யோகிகள், வாழ்ந்து வழிபாடாற்றிய நல்லைக்கந்தனும் பெருமைக்குரியவனாகின்றார். மானிடர் உய்ய அழகுத் தெய்வமாக வேலனாக வீற்றிருந்து திருவருளைப் பாலித்தவண்ணம் உள்ளார்.

"வேலை வணங்குவது எமக்கு வேலை வேண்டும் வரம் தருவது வேலனுக்கு வேலை" ஆகும்.

இந்நன்னாளாகிய பொன்னாளில் அவரை நினைவுகூர்ந்து நூற்றாண்டு விழா கொண்டாடுவது சாலவும் பொருந்தும். அனைவருக்கும் செல்லப்பா சுவாமிகளின் அன்பும், அருளும் கிட்டவேண்டி நிற்கும்.

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரானும் செல்லப்பா சுவாமிகளும்

T.நாகராசா
*1160/14 அருளம்பலம் லேன் பருத்தித்துறை வீதி,
நல்லூர்.*

பாரத புண்ணிய பூமியிலே பல சித்தர்கள் தோன்றி தமது சித்தினால் பல்வேறு அற்புதங்களை நிகழ்த்தி மக்களின் வாழ்வினை வளம் பெறச் செய்துள்ளனர். குறிப்பாக தமிழ் நாட்டில் பதினெண் சித்தர்கள் அவதரித்து, தமது சித்தின் பெருமையினை வெளிக் காட்டியுள்ளனர். இவ்வாறே ஈழத்திலும் பல்வேறு சித்தர்கள் தோன்றி தமது சித்தின் பெருமையினை வெளிப்படுத்தி மக்களுக்கான பல்வேறு அரிய கருத்துக்கள் வழங்கி மக்களின் வாழ்வினை வளம் பெறச்செய்துள்ளனர். குறிப்பாக கடையிற் சுவாமிகள் யோகர் சுவாமிகள் போன்றவர்களைக் குறிப்பிட்டாலும் செல்லப்பா சுவாமிகள் தான் நல்லூரானிடம் மிகுந்த பக்தியினைச் செலுத்தி நல்லூரின் புகழை உலகறியச் செய்துள்ளார்.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நல்லூர் கந்தன் ஆலயம், செல்வச்சந்நிதி ஆலயம், கதிர்காமம் போன்றவை மடாலயங்களாகும். இவை கும்ப அபிஷேகம் செய்யாத கோயில்களாகும். எத்தனைமுறையாயினும் (நல்லூர் கந்தன், சந்நிதி முருகன்) அபிஷேடங்களைச் செய்யலாம். இதனால் இத்திருத்தலங்கள் மகிமை பெற்றுத் திகழ்கின்றன. இம் மகிமை பெற்ற திருத்தலங்கள் ஈழத்து சித்தர்கள் இங்கே வரவழைத்து, பல்வேறு அற்புதங்களைச் செய்து வைத்துள்ளது. இதில் வயப்பட்டவர்களுள் முதன்மையானவர் செல்லப்பா சுவாமிகளாகும். இவர் தான் தனக்குப்பின் வந்த ஏனைய சித்தர்களுக்கு வழிகாட்டி வைத்தார். சித்தர்கள் அட்டமா சித்தி பெற்றவர்கள் பல்வேறு அற்புதங்களையும் செய்ய வல்லவர்கள். குறிப்பாக செல்லப்பர் மங்களகரமான வார்த்தைகளை வழங்கியமை, தேரடியை தமது உறைவிடமாகக் கொண்டமை சிறப்புமிகு அம்சங்களாகும். தேரடியை உறைவிடமாகக் கொண்டு வாழ்ந்ததால் தேரடிச் செல்லப்பா என்னும் நாமம் பூண்டார். இறைவனே மானிட வேடம் தாங்கி குருந்த மரநிழலில் மணி வாசகருக்கு ஞான உபதேசம் செய்தது போல இறைவனாக செல்லப்பர் ரூபத்தில் வந்து நல்லூரில் பல்வேறு உபதேசங்களை மக்களுக்கு வழங்கியுள்ளனர்.

வட்டுகோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லப்பா சுவாமிகள் *1860*ல் பிறந்தார். இளமையில் அதிகம் கல்வி கற்காவிடினும் அன்று ஆட்சி செய்த ஆங்கிலேயர் காலத்தில் "ஆராட்சி" என்ற பெயருடன் அரசாங்க அதிபர்களுக்கும் ஏனைய ஊழியர்களுக்கும் காரியாலய வேலையைக் கவனித்து வந்தவர். இதனால் அக்கால அரச அதிபரினதும், ஏனைய ஊழியரினதும் நன்மதிப்பைப் பெற்றவர் கடையிற் சுவாமியின் சீடராகிய இவர் அவரிடம் சென்று ஞான உபதேசத்தைப் பெற்றவர். நிதமும் தேரடியில் நிஷ்டையும், இரவில் முருகனுடன் உரையாடலையும் கொண்டு வாழ்ந்தவர். தான் உண்ணும் உணவை தான் உண்ணாமலே காகங்களுக்கு அள்ளி எறிவார். எல்லா உயிர்களிடத்தும் அன்பு கொண்டு வாழ்ந்தவர். ஒருமுறை பொங்கலொன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவ்வேளையில் பசித்து வந்த ஒரு சிலர் அவரிடம் பசிக்குதென்று கேட்டபொழுது பொங்கிய அமுதினை காலால் சிதறடித்தார். இதன் காரணம் என்னவென்றால் தன்னிடம் வந்தவர் களின் பரிபக்குவ நிலையை அறிவதற்கேயாகும்.

இவர் மக்களுக்காக வழங்கிய வாசகம் பின்வருமாறு:

**ஒரு பொல்லாப்புமில்லை**
**இது எப்பவோ முடிந்த காரியம்**
**சொல்வதெல்லாம் உண்மை**
**யாம் அறிவோம்**

போன்ற வாசகங்கள் இவரின் சித்தின் பெருமையை மக்களுக்கு அறிய வைத்தார். இவர் தேரடியில் நிஷ்டையில் இருப்பதும் சில சமயங்களில் முருகனின் வாயிலில் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகனுடன் கதைத்துக் கொண்டிருப்பதும் இவரது வழக்கமாயிருந்தது. இவரின் போக்கை பார்த்த சிலர் இவரை விசர்ச் செல்லப்பா என்று கூறினார்கள். சில சிறார்கள் கல்லால் எறிந்து வேடிக்கை பார்ப்பதுமுண்டு. இவர் எல்லோரையும் அழைத்து கதைப்பதில்லை. பக்குவ நிலை அடைந்தவர்களை மட்டும் அழைத்து உரையாடுவார். ஒருமுறை சாராயப்போத்தலுடன் கடையிற் சாமியாரிடம் சென்றார். கடையிற் சாமியாரோ அதைப்பெற்று சாதாரணமாக தண்ணீர் குடிப்பதுபோல குடித்துவிட்டார். அப்பொழுது இவரின் பக்குவநிலையைக் கண்ணுற்று செல்லப்பர் கடையிற்சுவாமிகளிடம் வைத்த பக்தி நிலையை கூட்டிக் கொண்டார்.

செல்லப்பா சுவாமியாருக்கும் யோக சுவாமிகளுக்குமிடையில் உள்ள தொடர்பு அளவிடற் கரியது. செல்லப்பரையே தனது குருவாகக் கொண்டு வாழ்ந்தவர் யோக சுவாமிகள். செல்லப்பர்

1915ல் அச்சுவினி நட்சத்திலன்று சமாதியடைந்தார். பல்வேறு சோதனையின் பின்பே தனது சீடராக யோகரை ஏற்றுக் கொண்டார். ஒருமுறை யோகரைப் பார்த்து

ஆரடா நீ
தேரடா உள்
தீரடா பற்று

என்று கூறினார். இவரது தத்துவச் சொற்களே யோகரை செல்லப்பரால், வயப்பட வைத்தது. செல்லப்பரின் கட்டளைப்படி கொழும்பத்துறை இலுப்பமரத்தின் கீழ் ஞான நிலையில் இருந்து, பின்பு கொழும்புத்துறையில் ஆச்சிரமம் அமைத்து, நிரந்தரமாக அங்கு வாழ்ந்தார். இன்றும் கொழும்புத்துறையில் அவரது ஆச்சிரமத்தைக் காணலாம். அங்கிருந்து கொண்டே நற்போதனைகளை மக்களுக்கு போதித்தார். இவற்றிற்கெல்லாம் காரணகர்த்தாவாக விளங்கியவர் செல்லப்பா சுவாமிகளின் சமாதி நல்லூரின் தெற்கு மூலையில் அமைந்திருப்பதை இன்றும் காணலாம். இவர் சமாதியடைந்த 1915 அச்சுவினி நட்சத்திலன்று இவருக்கு பூசையும் அன்னதான நிகழ்வுகளும் வருடாவருடம் நடைபெற்று வருகின்றது. இத்தினத்தில் பல அடியார்கள் சமூகமளித்து அவருக்காக பிரார்த்தனை செய்வார்கள். இத்தொண்டினை அவரின் பேரன்முறையான ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் கனக சபாபதி அவர்களும் அவரது குடும்பமும் அவரது தமையனார் கனகரெட்ணம் அவர்களும் மிகுந்த அக்கறைகாட்டி இதனை நடாத்தி வருகின்றார்கள்.

எனவே ஆத்மீகத் துறையில் செல்லப்பா சுவாமிகள் விதைத்துவிட்டுச் சென்ற பொன்மொழிகள் மக்களின் வாழ்வு வளம்பெற காரணமாயுள்ளது. எனவே அவரின் பணிதொடர நல்லூரானின் பாதார விந்தங்களை பணிவோமாக. “பரம் பொருளின் பெரும்புகழை பாடிப் பணிதலனறி வேறொன்றும் அறியோம் பராபரமே” என்றுரைத்த தாயுமான சுவாமிகளின் வாசகத்தை முன்வைத்து பரம்பொருளாகிய நல்லூர்க் கந்தனின் அருளைப் பெற்ற செல்லப்பா சுவாமிகளின் புகழைப்பாடிப் பணிவோமாக.

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் சிவமுருகன் சிவ"

# நல்லூர் ஆறுமுகசிவவேலவன் தெய்வ சிவஞானிசிவசித்தர் செல்லப்பா குருவாழி!


**நல்லூர் சிவமுருகன். என். தமிழ் மகன் ,குருக்கள் பீ.ஏ**

(சிவத்தபுருச சிவாச்சாரியார் நல்லூர் சிவமுருகன் தமிழ்மகன் நந்தகுமார் )

அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடம்

பிள்ளையார் கோவில் குருக்கள்.

நல்லூர் கந்தசுவாமி கோவில் வடகிழக்கு வீதி,

நல்லூர், யாழ்ப்பாணம்.


**நல்லூர்முருகன் ஆட்கொண்ட செல்லப்பாகுருசித்தர்**

யாழ்ப்பாணம்புகழ் ஓங்கு நல்லூரில் யுகம்கலியுகமாம் காலத்தின்போது
யாவரும்வணங்கும் நல்லூர்சிவமுருகன் யுகக்கடவுளாம் உருத்திரமுகூர்த்தம்
வாழ்கின்றவேலவன் கோவில் அமைந்த வேல்கந்தனருள் குருக்கள்வளவில்
வான்மழைவெள்ளம் வருநிறைகுளமாம் வாவிபிராமணாள் கட்டுக்குளம்சூழ
வாழ்விக்கும்வயல் நிலம் நிறைந்து விளங்கிய நல்லூர் இராசதானிநல்லூராம்
வான்புகழ்கொண்ட நல்லைஊரெனும் வளம்நிறைந்த தெய்வ நல்லூரில்
சூழ்ஒளிசிவஞானம் மிக்கஅருள்ஒளிச் சிவசுடர்பரப்பும் ஆறுமுகவேல்சிவன்
சிவமுருகதெய்வம் ஆட்கொண்டதனால் சிவஞானசித்தரான செல்லப்பாகுரு வாழி

**பிறப்பும் – இளமையும்**

ஆயிரத்தெண்ணூற்று அறுபதாம்ஆண்டு ஆதிமுருகனால் செல்லப்பாபிறப்பு
அரவணைத்துவாழ சகோதரிசெல்லாச்சி ஆறுமுகனருளால் பிறந்துவாழ்ந்தார்
வாயினால்முருகனை வாழ்த்தும் தந்தை வட்டுக்கோட்டை வல்லிபுரம் பெயரே
வயிற்றில்தாங்கி பெற்றதாயார் வேல்கோவில் நல்லூர் பொன்னம்மாபெயராம்
தாயின் வேண்டுதலால் இருகல்லூரிகளில் தரமான கல்வியை கற்றுத்தகுதியானார்
திறன்மிகுகச்சேரி யாழ்ப்பாணத்தில் தொழில்ஆராய்ச்சிப்பதவிபெற்றார்
கோயில் நல்லூர் முருகதெய்வத்திற்கு கர்மாவால்உரிய செல்லப்பாசுவாமி அவரே
கந்தன்தெய்வம் காலம்கனிய அவராகி கடவுளருட்ச்சித்தர் செல்லப்பாசுவாமியானார்.

**கடையிற்சுவாமி சித்தர் குரு செல்லப்பாசுவாமி குருவின்குரு.**

*(காலம்: ஏறத்தாழ 1810 - 1891 இல் சமாதி. 80 அல்லது 90 வயது வரை வாழ்ந்தார் என்பது பரம்பரைச் செய்தி)*

பரதன்தேசபாரத நாட்டுக்கேரளத்து பரசிவதெய்வீக சிவஅருட்சித்தர்
பார்புகழும்நீதி பதியாய்நீதிசொல் பேரறிவு நீதிமன்றில் சேவைசெய்தசித்தர்
பரசிவநீதிவிட்டு அடிமையாட்சியில் பாவம்பழிசெய்ய விரும்பாமல்விலகி
புண்ணியம்செய்ய யாழ்ப்பாணம்வந்த புனிதர் பெயராம் நித்தியானந்தர்குரு
பித்தரெனக்கால் கைகட்டியநிலையில் புனிதநல்லூரில் சிவ செல்லப்பாவை
பரவசமாய்பார்த்த கடையிற்சுவாமிகள் பரஞானம் முத்திய து அதைஅவிழ்என்றார்
பார்வையால்நயன தீட்சைகொடுக்க பாசகர்மா அவிழ செல்லப்பாஞானகுரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செல்லப்பாசுவாமி ஞானசித்தர்குருவின் தலையாயநற்சீடர் சிவயோகசுவாமி சித்தர்குரு (காலம்: 1872-1964)**

செல்லப்பாசுவாமி சிவஞானசித்தருக்கு சிவமுருகனருள் சீடர்சிலரேஇருந்தார்
செல்லப்பாசித்தரின் தலையாய நற்சீடராம் சிவயோகசுவாமி சிவஞான சித்தரே
செல்லப்பாகுருவை விசரனென்றோரை சிவஞானகுருவென அழைக்கவைத்தார்
செல்லப்பாகுருவை நற்சிந்தனை அருள் மொழிநூல்கள் மூலம் சிவஞானிஎன்றார்
செல்லப்பாகுருவைச் சிவஞானசித்தராக சிவஞானசொரூபமாக ஏற்றயோகர்வழி
சென்றதனால்அம் மக்கள்யாவரும் செல்லப்பாகுருவைஞான சித்தரென ஏற்றனர்
செல்லப்பாகுருவின் சிவஞானஉபதேசம் சிவசிந்தனைகளை உலகிற்குக் கொடுத்தார்
சிவயோகசுவாமிசித்தர் தன்நற்சீடர்களால் செகம்புகழவே எங்கும் பரப்பினார்

**செல்லப்பாஞானசித்தர்குரு தத்துவஅருள்வாக்கு**

மெய்ஞானிசிவஞான செல்லப்பாசித்தர் மௌனதியான அருள் வாக்குத்தத்துவமே
மேதினியில்வாழும் அனைவருக்கும் மேன்மை பலதரும் பேரறிவுவாழ்வாமே
பொய்யில்லாதது முழுதும் உண்மை பாரிலே எப்பவோ முடிந்தகாரியம
பொல்லாப்புஒன்றும் இல்லையாமறியோம் பரபிரபஞ்சத்தில் ஆரறிவார் சிவனை
மெய்ஞானசிவமகா வாக்கியங்கள் மூடஅறியாமைபோக்கி வாழ்வு தருவனவே
மெய்ஞானியாகிட கேளடா யாரடாநீ மலம்நீங்கிட தேரடா உள்ளே நீ
வாய்மை பேசியேநீ தீரடா உன்பற்று வல்லமையாவேநீ தன்னையறியடா
வையகத்தில்தன்னை தானறிந்தவன்சிவ மகாஞானியென்றார் செல்லப்பாசித்தர்

**செல்லப்பாசுவாமிசித்தரின் சிவஞானமொழிவாக்கு**

சீவன்சிவன்சிவயநம ஐந்தெழுத்துஓதுக சிவனின் முச்சந்திக் குப்பையிலே முடங்கிக்கிட
சிவஓங்காரம்வழி நாசிநுனிநோக்கு சிவநடனம்தெரியும் சோதிமயம் அதுவேநீ
தேவனைத்தேடாமல்தேடு நாடாமல்நாடுஎங்கும் தேகம் அல்ல நீ ஆத்மா மோகத்தை நீ முனி
தத்துவாதீதன்சகல சம்பத்தும்தந்தான் தச்சன்கட்டாவீட்டிலே தாவுபரிகட்டு நீயே நான்
பாவவினைபோம்போம் முத்திக்குவித்துஅறி புலன்இரு வழியை அடை மனம்கட்டுப்படும்
பதியைவிடாமல்வழிபடு வையகத்தில்வாழ் பக்தரினஞ்சேர் சிவ நல்வழிதோன்றும்
ஆவலாய் ஊமையெழுத்து அறிஆதிஅந்தம் இல்லைஎல்லாம்விளங்கும் நீநிர்மலனாயிரு
உன்னையேநீஅறிவாய் ஆதிநித்தியன்நீசிவன் அனாதிசிவஞானசித்தர் செல்லப்பாசுவாமி வாக்கு

**செல்லப்பாஞானசித்தரை தடுத்தாட்கொண்ட நல்லூர் சிவமுருகன் தெய்வம்**

நல்லூரான்சிவ முருகதெய்வக்கலை நற்சிவஒளி அலையென ஆத்மாவில் வெளியாகி
நல்லூரான் சிவமுருக தெய்வஎழுச்சி ஆட்சியாகி குருவாகி உயிர்சாட்சியாக
வெல்லும்சிவ இறை செயல்படும்போது வகையறியாதுஉயிர் சும்மா இருக்கும்
வல்லமைச்சிவனின் சிவமுருகசெயலால் வாழ்ந்தநிலையே செல்லப்பாசித்தர்
பொல்லாதவினையை பாசகர்மாவைநீக்கி பரசிவமுருகன் தனதாக்கினார்
பதிசிவ அருளால் சிவப்பேரறிவால் பந்தஅறியாமை விலகிச்சிவனார்
எல்லாலோகயத சடவாழ்வும்விட்டே எங்கும்தன்னைத் தானேஅறிந்தஞானி
எதையும்சிவனாகப் பார்த்தசெல்லப்பா எங்கும்சிவனானார் தன்னைமறந்தார்.

**தெய்வநல்லூர்குருசெல்லப்பா சுவாமி சித்தர் சமாதியும் நூற்றாண்டு விழாவும் (காலம்:1915-2015)**

செல்லப்பாசித்தரின் சகோதரிசெல்லாச்சி சடையர்கணவரின் ஓரேஒருமகனாம்
சபாரத்தினம் வயலின்வித்தகர் சங்கீதகலைஞர் செல்லப்பாமருமகன்
செல்லப்பாசுவாமி சிவஞானசித்தர் சமாதிச்சிதைக்குச் சிவகடமைசெய்தார்
சபாரத்தினத்தின் சிவமுருகசேவையால் செல்லப்பாசித்தரின் தொண்டுச்சீடரானார்
பொல்லாப்பில்லாத சபாரத்தினத்திற்கு பாசஇல்லான்இருவர் நல்மனைவியராம்
புதல்வர்கள் இருவர் கனகசபாபதியும் பரமுருக சேவையாளர் கனகரத்தினமும்
செல்லப்பாசித்தரின் அஸ்திஇடத்திலும் சித்தர்நினைவாலயச் சொரூபம் அமைத்தும்
செல்லப்பாசித்தர் நூற்றாண்டிலும் சிவமுருகசேவையாய் செய்துவாழ்வோர்வாழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசான் அருளால் ஆசான் ஆயினேன்.

திருமதி. பிராணேஸ்வரி சிதம்பரப்பிள்ளை.
(ஊரிக்காடு)

"ஆறாக விழிபெருக அலமந்து வாடித் தஞ்சம் என எளியனேனை அஞ்சல் என்று காத்த தவஞானக் குருவடிவம் காட்டி" வைத்தவர் என்று செல்லப்பா ஸ்வாமிகளின் மேன்மையை எங்கள் குருநாதனான யோகர் ஸ்வாமிகள் பாடி வைத்துள்ளார். நல்லூர் பதி தன்னில், ஆசான் அருந்தவம் செய்த இடம் என்றும், அதுவாதாலாலே அதிசயம் நிரம்ப உண்டு என்றும் நற்சிந்தனைப் பாடலில் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து செல்லப்பா ஸ்வாமிகளின் தெய்வீகத் தன்மையை அறியக் கூடியதாய் உள்ளது.

"அடியேனைக் கைவிடுதல்" ஆகுமோ? இது தகுமோ? அன்பில்லா திருப்பது அடிகளுக்கு அழகாமோ! "அரசே நல்லூரில் வாசா ஆரறிவார் என்று சொன்ன" "அருந்தவனே ஒப்பில்லாானே அப்பனே செல்லப்பனே" என்றும் உனது திருவடியைத் தேடி செல்வம் என நாடி வந்தேன் என்று எங்கள் குருநாதன் போற்றுவதில் இருந்து செல்லப்பா ஸ்வாமிகளின் ஆன்மீக சக்தியின் சிறப்பை நாம் காணக் கூடியதாக அமைந்துள்ளது.

எங்கள் குருநாதன் அருளிய

**"அந்த வாக்கும் பொய்த்துப் போமோ**
**ஆசான் நல்லூர் வீதியில் அருளிய"**

என்ற பாடலில் "இந்த ஆன்மா நித்தியம் என்ற செந்தமிழின் நாவலன் செல்லப்பன் சொன்ன" அந்த வாக்கும் பொய்த்துப் போமோ என்ற பாடலின் அடிகள் செல்லப்பா ஸ்வாமிகளின் அழியா வாக்கினைப் புலப்படுத்திப் பாடுவதாக அமைந்துள்ளது.

**ஆசான் அருளால் அகந்தை அழிந்தது**
**ஆசான் அருளால் அருள் மழை பொழிந்தது**
**ஆசான் அருளால் ஆனந்தம் விளைந்தது**
**ஆசான் அருளால் ஆசான் ஆயினேன்.**

என்ற பாடலில் செல்லப்பா ஸ்வாமிகளைக் குருவாகக் கொண்டதால் இவ்வளவு அருள் வாசகங்களைப் பெற்று நல்ல மார்க்கம் உருவாக ஏதுவாயிருந்தது என்று அழகாகக் குருநாதன் பாடல்களினால் அடியார்களுக்கு அவரின் போதனைகளால் நாம் சாதனை படைத்து நல்ல உள்ளம் உடையவர்களாக வாழ்வோம்.

ஒரு தடவை அடியேன் எங்கள் குரு நாதனிடன் சென்றபோது, அடியேனைப் பாடக் கேட்டார். நான் உடனே ஆனந்த நடனம் ஆடினான்" அல்லும் பகலும் நல்லூர் வீதியிற் செல்லப்பன்" என்ற பாடலைப் பாட ஸ்வாமிகள் கேட்டுத் தலையில் கைகூப்பி "நீ பாடு" செல்லப்பன் ஆடுகின்றான் என்று கூறி அடியேனையும் வாழ்த்தினார்.

மேன்மை பொருந்திய செல்லப்பா ஸ்வாமிகளை நாம் எல்லோரும் நினைவுகூர்ந்து அவர் வழிகளைப் பின்பற்றி இறை, அன்பு உடையவர்களாக விளங்குவோமாக!

குரு வாழ்க குருவே துணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லப்பா நூற்றாண்டு விழா கவிதை

சி.பிரதீபன்
ஹாட்லி விடுதி வீதி,
புலோலி மத்தி பருத்தித்துறை

நாற்புறம் கடல் சூழ் நன்னகராம்
யாழ்ப்பாணம் வீரராகவன் என்னும்
அந்தகன் பரிசாய் பெற்ற எம் நகரே
நன்நகராம் யாழ்ப்பாணமதில்
கோன்முறையரசு செய்த
செங்கோலான் சிறப்புறு மன்னன்
புவனம் தனை ஆளும் புவனேகபாகு
திருப்பணி செய்து திருவருள் புரியும் கோயிலாம்
நல்லூர் கந்தவேள் வாழ்பதியே

இருபதாம் நூற்றாண்டு அதனில்
இலங்கும் திருக்கோயில்
தேவலோகம் என சமைத்தான்
தற்போதை அறந் காவலன்
மன்னவனாம் மயன் சமைத்த யோயிலாக
மேவிய சிறப்புற விளங்குகிறதே

பிரம்மோற்சவம் என்னும் திருவிழா
சிறப்புற இருபத்தைந்து நாள்
நடக்கும் திருக்கோவில்
தேரோடும் தேர்முட்டி சமீபம்
சீரான வீதியில் வாழ்ந்தான்
செல்வனாம் செல்லப்பா சுவாமி கற்றோன்

சிறப்புறு கல்வியாம் வேதம் ஆகமம் உபநிடதம்
நாடோறும் கந்தனை வணங்கி திருவருள் பெற்றோன்
இல்லறம் துறந்து துறவறம் பூண்டானே
நாட்டின் நல்லறம் காக்க
ஞானம் பெற்ற செல்லப்பன்
நலமுறு நூற்றாண்டை

பங்குனி மாத திங்களில் பக்த கோடிகளில்
யாவரும் விழா எடுத்து மகிழ்வோமாக
சித்துக்கள் பலபுரியும் சிந்தனைச் செம்மல்
வாழும் யாழ்ப்பாணத்தில் ஓர் சித்தனாம் செல்லப்பா

இந்தியாவின் நீதிபதி யாம் கடையிற் சுவாமி
இடர் மிகு பதவி நீங்கி துறவறம் பூண்டோன்
இவர் சீடராம் செல்லப்பா சுவாமி
இரதம் ஓடும் நல்லூரில் தேரடி வாழ்ந்தான்.

மதுபானம் மணத்தறியான்
மாமிசம் உண்டறியான்
மாதாவை மனையாளை மறந்தான்
மஞ்சள் நிற உடை தரித்து தவவேடம் பூண்டான்
மாதா மேல் ஆடை வெறுத்தான்
மன்மதனை வென்றான்
மயில் வாகன் மீது ஆசை கொண்டான்
மாய உலகத்தை வெறுத்தான்.

மங்களம் மங்களம் மங்களம் மங்களம்
செல்லப்பனுக்கும் மங்களம்
யோகர் சுவாமிக்கும் மங்களம்
கடையிற் சுவாமிக்கும் மங்களம்
இவர்கட்கு அருள் புரிந்து நல்லூா
கந்தவேளுக்கும் மங்களம்
விழா வெடுக்கும் சபைக்கும் மங்களம்

முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து ஆலயங்களின் இன்றைய நிலை

**S.Pirasath**
*Visiting Lecturer, Open University of Srilanka*

உலகப் பெருஞ் சமயங்களுக்குள் மிகவும் தொன்மையையும் மிக நீண்டகால வரலாற்றையும், பரிணாம வளர்ச்சியையும் கொண்டு விளங்குவது இந்து மதம் ஆகும். தனியொருவரால் தோற்றுவிக் கப்படாததாக இயற்கை வழிபாட்டிலிருந்து பரிணமித்து வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள், பல்வகைத்தரிசன சாத்திரங்கள், புராண இதிகாசங்கள், தோத்திரங்கள், தத்துவநூல்கள் என எண்ணற்ற பல கலை இலக்கிய செல்வங்களையும் தத்துவ நோக்குகளையும், சமய நெறிமுறைகளை யும் சிந்தனைக் கருவூலங்களையும் பல்வகை வழிபாட்டு முறைகளையும் தன்னகத்தே கொண்டு உயிர் துடிப்புடன் மிளிர்கின்றது.

இந்து மதமானது வரலாற்றில் காலத்துக்கு காலம் பல நெருக்கடிகளையும் சவால்களையும் சந்தித்துள்ளது. காலத்துக்கு காலம் வெவ்வேறு பெயர்களையும், முதன்மையான தெய்வங்களையும் கொண்ட பல்வேறு சமய பிரிவுகளையும் கொண்டுள்ளன. இந்திரன், அக்கினி, வருணன், மித்திரன், பிராஜாதிபதி, சிவன், விஷ்ணு, பிரம்மா, முருகன், விநாயகர், சக்தி போன்ற தெய்வங்களை குறிப்பிட முடியும். உலகில் ஏனைய மதத்தினருடன் ஒப்பிடுகையில் இந்து மதத்தினருக்குச் சுதந்திரம் அதிகம் எனலாம். தமக்கு பிடித்த இந்து கடவுளை தெரிவுசெய்தல், வழிபாட்டு முறைகளை தேர்ந்தெடுத்தல், மத அனுட்டானங்களை கடைப்பிடித்தல் முதலிய விடயங்களில் இந்துக்களுக்கு சுதந்திரம் அதிகம் எனலாம்.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்", "ஆலயம் தொழுவது சாலமும் நன்று", "திருக்கோயில் இல்லா ஊரில் அடவிக்காடு", "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என பல ஆன்றோர்களும், நாயன்மார்களும் ஆலயத்தின் அவசியத்தினை வலியுறுத்தியுள்ளனர். மானுட சரீரத்தினுள்ளும், அண்டமெங்கிலும் குடிகொண்டிருக்கும் இறைவனுக்கு மக்கள் ஆலயங்களை அமைத்து ஆகமத்தின் அடிப்படையில் கிரிஜை நெறிகள் இடம்பெற்று வருகின்றன.

ஆலயம் என்றால் ஆன்மா லயிக்கும் இடம் எனப்பொருள் கொள்வர். அதாவது எது எதில் லயிப்பது என்பது சிந்தனைக்குரியது அல்ல. ஆன்மா ஆண்டவனோடு லயிக்க வேண்டும். இறைவன் இருக்கும் இடத்தை ஆலயம் என்பர். மக்கள் வாழ்வில் இருந்து பிரிக்க முடியாத அங்கமாக ஆலயங்கள் விளங்குகின்றது.

இந்த வகையில் ஆலயங்கள் மக்களின் ஆன்மீக பணியினை மட்டுமன்றி சமூக, உள, சமய பணிகளை ஆற்றி வருகின்றது. பேராசிரியர் K.A. நீலகண்டசாஸ்திரியின் கருத்தின்படி "ஆலயங்கள் வழிபாட்டு தலங்களாக மட்டுமன்றி சமூகத்தின் முன்னேற்றத்துக்கு ஏணியாகவும், அறிவு மற்றும் ஆற்றல் விருத்திக்குரிய இடமாகவும், மருத்துவ நிலையமாகவும், கலை வெளிப்பாட்டு இடமாகவும், வேலை தரும் இடமாகவும் விளங்குவதால் ஆலயங்கள் சமூக சேவை நிலையங்களாக விளங்குகின்றன.

உலகில் மானிடப்பிறவி எடுத்த மாந்தர் அனைவருக்கும் அவர்களது ஆன்மா ஈடேற்றத்துக் கும் நோயற்ற சுகவாழ்க்கை வாழ்வதற்கும் அவசியம் வேண்டப்படுவது இறைவழிபாடாகும். கடவுள் வழிபாடு செய்வதற்கு இரு இடங்கள் முக்கியமாக அமைந்துள்ளன. அவற்றுள் ஒன்று "அகம்" மற்றது "புறம்". அகமாவது உள் அல்லது மனம் எனப் பொருள்படும். மனத்திலே கடவுளை வழிபடும் போது அப்பெருமான் உயிரை இடமாகக் கொண்டு அவ்வழிபாட்டை ஏற்று அருள்புரிவர். மனத்தினாலே கோயில்கட்டி வழிபாடு செய்தவர் பூசலார் நாயனார். அகவழிபாட்டின் சிறப்பைத் திருநாவுக்கரசு நாயனார் பின்வரும் தேவாரத்தில் அழகாக விபரிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணிலிங்கமாக
நேயமே நெய்யும் பாலாய் நிறைநீரமைய - யாட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே"

அடுத்து புறம் அதாவது மனத்திற்குப் புறம்பாகவுள்ள திருக்கோயில்களையும், சிவனடியார்களையும் குறிக்கின்றது.

இந்த இந்து ஆலயங்கள் மக்களுக்கு பல சேவைகளை ஆற்றும் நிறுவனமாகவும் விளங்கியுள்ளன. கல்லூரிகள் நிறுவப்பட்டு தேவைப்பட்ட வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு அறக்கட்டளைகள் நிறுவப்பட்டன. மற்றும் அன்னதானங்களாகவும், நூல் நிலையங்களாகவும் விளங்கியிருந்ததோடு வேதங்கள், வேதாந்தங்கள், திருப்பதிகங்களான தேவாரம் முதலியன ஓதுவதற்கும் கற்றுக்கொடுப்பதற்குமான ஆரியர்களையும் நியமித்திருந்தன. 13ம் நூற்றாண்டில் பரசேகரிவர்மனன் முதல் இராஜராஜசோழன் வரைக்கும் ஆலயங்கள் சமூக, சமய, பொருளாதாரப் பணிகள் ஆற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாயன்மார்களும், ஆழ்வார்களும் பக்தி வைராக்கியம் கொண்டு சமய நெறிமுறைகளை அன்றுதொட்டு இன்றுவரை போற்றி பாதுகாத்தனர். இந்து மதத்திலும், இந்துக்கள் மத்தியிலும் காலம் காலமாக இடம்பெற்றுவந்த குறைபாடுகள் பல தடையாக காணப்பட்டன. சமண, பௌத்த, இஸ்லாம், கிறிஸ்தவ பரம்பலுக்கு சாதகமாகவும் விளங்கியிருந்தன. குறிப்பாக இந்துமதத்தில் காணப்பட்ட மூடக்கொள்கை, உயிர்கொலை, சாதி ஏற்றத்தாழ்வு போன்றன ஏனைய மதங்கள் வளர்ச்சி பெறுவதற்கு அடித்தளமிட்டன.

இத்தகைய பின்னணியில் ஆரியசமாஜம் பிரம்மசமாஜம், இராமகிருஷ்ண சங்கம் முதலிய நிறுவகங்களினதும், ஆறுமுகநாவலர் முதலியவர்களின் தனிப்பட்ட முயற்சி காரணமாக பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்து, கிறிஸ்த முரண்பாட்டில் இருந்து இந்து சமயத்தின் கொள்கையினை நிலை நிறுத்தப்பட்டன எனலாம். இந்தவகையில் நிலைபெற்ற இந்துசமய ஆலயங்கள் இன்று எவ்வாறு செய்படுகின்றன என்பதை நோக்கும்போது ஆன்மா லயிக்கின்ற இடம் ஆலயம் என்பார்கள். ஆனால் இன்று ஆன்மாவை வயிக்கச் செய்ய வேண்டிய ஆலயங்களில் "கவனக் கலைப்பான்களான" பல விடயங்கள் இடம்பெறுகின்றன. அனைத்து ஆன்மாக்களும் சமன் எனும் உணர்வு ஏற்படவேண்டிய இடத்தில் இவ்வுணர்வுடன் செயற்பட "நான்" எனும் உணர்வு பெருந்தடையாகவுள்ளது. "நான் அடுத்த முறை ஆலய தர்மகர்த்தா ஆகவேண்டும்" நான் தலைமை ஏற்கின்ற ஆலய உற்சவம் இவ்வூரிலுள்ள எவரும் நிகழத்தாத அளவிற்கு இருக்க வேண்டும் என்று தன்னை மாத்திரம் முன்னிலைப்படுத்த கோடிக்கணக்கிலே பணம் செலவழிக்கின்றனர். ஆலயத்தை பல மின்விளக்குகளால் அலங்கரித்து, காது செவிடாகும் வண்ணம் ஒலிபெருக்கியை அலறவிட்டு அருகிலுள்ள கற்கின்ற மாணவர்களின் அமைதியான மனநிலையை குழப்பி, நோயாளர்களை அல்லலுற செய்து ஒலியை மாசுபடுத்தி பல ஆடம்பரங்களை செய்கின்றனர். உறவுகளை கூப்பிட்டு "அன்னதானம்" வழங்கி, கழுத்து வலிக்க நகைகளை அணிந்து, மற்ற அடியவர்கள் தூபம் பார்க்காவிட்டாலும் தான் மட்டும் உற்சவ மூர்த்தியின் முன் நின்று அபிடேகம் செய்து, உறவுகளை அனுப்பி சுவாமி காவுவர். ஆனால் கோவில் சுற்றாடலில் பசியால் வாடிய குடும்பங்கள், பாலின்றி அழும் குழந்தைகள், உடுதுணிக்கு கூட வசதியற்றோர் என இருட்டு வாழ்க்கை வாழும் குடும்பங்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் ஏக்கங்களோடு பார்த்துக்கொண்டே இருப்பர்.

"மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" என்பர் ஆனால் "தன் மக்களின் மதத்தை" கண்டபடி பிரபஞ்சம் ஆளும் பரம்பொருள் பூட்டிய அறையினுள் இருப்பான். ஒற்றுமையை வளர்க்க வேண்டிய ஆலயங்களே சாதியின் பெயரால் பிளவுபட்டு தனித்தனி ஆலயங்களாக அமைக்கப்பட்டிருப்பதை காண்கிறோம்.

இவ்வாறு குறைகளை மட்டுமே சுட்டிக்காட்டுவது எமது நோக்கமல்ல, இன்றும் கூட சில ஆலயங்களில் அமைதியாக பூஜை நடைபெற்று, ஆலயங்களின் துணையுடன் அனாதை குழந்தைகளை தத்தெடுத்தல், முதியோர் பராமரிப்பு, கல்விக்கு உதவி என இறை சிந்தனையோடு கூடிய சமூகப் பொறுப்புணர்வொடு இயங்குவதை காண்கிறோம். எனவே ஆலயங்கள் "இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க" என்ற இந்து மத்தின் நோக்கத்தினை நிறைவு செய்யும் முகமாக செயற்படும்போது தான் இறை உணர்வும், அன்பு, பக்தி ஏற்பட்டு ஆனந்தத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லப்பா சுவாமிகள்

சி.துர்க்கா
ஹாட்லி கல்லூரி விடுதி வீதி, புலோலி மத்தி
பருத்தித்துறை

வடமாகாணத்தின் தலைப்பட்டினம் என விளங்கும் யாழ்ப்பாணத்தின் மத்தியில் விளங்குவது நல்லூர் ஆகும். இங்கே இந்துக்களின் புனித ஸ்தலமாக இருப்பது நல்லூர் கந்தசாமி கோயிலாகும். இங்கு இருக்கும் முருகப் பெருமான் எல்லாருக்கும் திருவருள் பாலிக்கின்றார். அப்பேற்பட்ட புனித ஸ்தலத்தின் தேர்முட்டிக்கு சமீபமாக தெற்குப் புறத்திலே ஓர் இடத்தில் செல்லப்பா சுவாமிகள் இருந்தார். இவரை தேரடிச் செல்லப்பா என அழைப்பார்கள். சிலர் இவரை விசர் செல்லப்பா என்றும் அழைப்பர். இவர் ஓர் சித்து நிறைந்த பெரியார். ஞானி யோகர் சுவாமி இவரின் சிடர் ஆகும். தற்பொழுது செல்லப்பா சுவாமியையும் ஈழத்துச் சித்தர்களில் ஒருவராக கணிக்கப்படுகிறது. செல்லப்பா சுவாமிகளின் குரு கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமி, கதிரவேலு சுவாமி, யோகர் சுவாமி மூவரும் ஒன்றாக வாழ்ந்தவர்கள். மூவரும் ஒன்று சேர்ந்து சமைத்து சாப்பிடுவார்கள். சில நேரங்களில் சமையல் முடியும் தறுவாயில் சட்டி பானைகளை உடைப்பார்கள்.

கொழும்புத்துறையில் நன்னியர் என்பவர் கடை வைத்திருந்தார். செல்லப்பா சுவாமிகள் மீது நன்னியர் மிகுந்த பற்று உடையவர் ஒரு நாள் பக்கத்தில் இருந்த இலுப்பை மரத்தின் செல்லப்பா சுவாமியை கட்டிவைத்தார் இதனால் கோபங் கொண்ட ஊரவர்கள் சுவாமியை கட்டிலிருந்து அவிட்டு விட்டனர். இவ்விடத்தில் பிற்காலத்தில் திருநாவுக்கரசு என்பவர் யோகர் சுவாமி தங்குவதற்கு சிறு குடிசை அமைத்துக் கொடுத்தார். யோகர் சுவாமிகள் இங்கேயே வாழ்ந்து வந்தார். செல்லப்பா சுவாமிகள் கூறும் நான்கு மகாவாக்கியங்கள்.

**ஒரு பொல்லாப்பும் மில்லை**
**எப்பவோ முடிந்த காரியம்**
**நாம் அறிவோம்**
**முழுவதும் உண்மை.**

கடையிற்சுவாமி மது அருந்துவார். இதைக் கேள்வியுற்ற செல்லப்பர் மதுபோத்தலை வாங்கி ஒரு துணியினால் மறைத்துக் கொண்டு கடையிற் சுவாமிகளிடம் காட்டி மூவரும் அருந்துவோம் என்றனர். போத்தலின் மூடியை திறந்தவுடன் சாராயம் ஆவியாக மாறியது என்பார்கள்.2015ஆம் ஆண்டு பங்குனி மாதம் தமிழ் திகதி 8ஆம் திகதியும் ஆங்கிலத்திகதிக்கு 22ம் திகதியும் உள்ள காலத்தில் அவரின் குருபூசைத்தினமாகும். இத்தினம் ரேவதி நட்சத்திரத்தில் அமைந்துள்ளது. இத்தினத்தை இந்துக்களாகிய நாம் சிறப்புடனும் அன்பு பக்தியுடன் திரிகரண சுத்தியுடன் கொண்டாடு வோமாக.

கட்டுரை முற்றிற்று

ஓம் சாந்தி சாந்தி, சாந்தி
ஜெய மங்கலம் சுப மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Nallur Theradi Chellappar Swamigal

Dr.(Mrs.) Vimala Krishnapillai

This land Ellankai is an abode of Lord Shiva, said Saint Tirumoolar in his Thirumantiram. There were many Eeswaran temples dedicated to Lord Shiva in this land and many Siddhars lived and roamed this land. The traditions of the Siddha Paramparai - lineage of Siddars are deep rooted here. The greatness of these Siddhars, who immersed their minds at the feet of Lord Shiva, is indeed great. Nallur Theradi Chellappar Swamigal is incomparable and unique among them.

A great number of the samadhi temples of these great Siddhars are plenty in the Jaffna peninsula. Many Jnanis and Siddhars left their sacred footprints in many places there. The Guru Puja mandapams halls constructed near such temples were not only centres of charity but also the seats of cultural and religious activities.

**The splendour of Nallur :**

Nallur in Jaffna peninsula was where Chellappar Swami spent all his life. His samadhi shrine lies just opposite the Nallur Kandaswami temple Theradi. Nalur which is an ancient city in Jaffna, was a great city of fame, it was the capital city of Emperor Ariya Chakravarti whose sovereignty was widespread. It was in Nallur that pure refined Tamil and Saivaneri - the Saiva path flourished. Situated very close to the king's ancient palace, was centred the kandaswami Kovil of Lord Murugan. Around this temple, in the four directions were built the sentinel temples for protection; Veyilukanda Pillaiyar Kovil in the east, Kailasa Natha Sivan Kovil in the west, Veeramakali Amman Kovil in the north and Sattanatha Kovil in the north. In mid seventeenth century, the Portuguese erased the temples to ground level and brought down the glory and greatness of Nallur, they destroyed the Nallur Kandaswami Kovil and even uprooted the foundation. Nevertheless during the Dutch rule, around 1734 there was again a peroid of Saiva revival.With time the Saiva revival dawned and arose like the morning star.During this period there lived several bards and poets, who composed great religious hymns. In the madam situated situated in Nallur East, Siva Thiru Gangadhara kurukkal expounded the Kanta Puranam and propagated the path of devotion. The rows and rows of camphor light, kavadis and the devotees chanting hymns transformed this plase to a devaloka, a heavenly area. Nallur bloomed once again during Satguru Chellappar Swami's life time and was immersed in the sacred flood of Jnanam - spiritual wisdom. The eastern side, the theradi where the ther - temple chariot was parked, had a special significance. For it was there that Nallur Theradi Che llappar Swamigal spent most of his lifetime. The splendour of Nallur grew day by day and its fame spread far and wide.

**Sadguru Chellappar Swami**

To the south of the Theradi, there was a large area of farmland. Towards the middle of the 19 th century, a farmer named Vallipuram of



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Vattukottai, married to Ponnamma of Nallur built his house on the edge of the farmland and cultivated the land. They had two daughters and two sons. One of the sons was named Chellapper and one of the daughters named Chellachi. They lived happily in their flourshing farmland at Nallur. Chellappar had his early education at the Sivaprakasa Vidyasalai at Kandarmadam and later on joined Jaffna Central College where he was educated in the English medium. Chellappar discontinued his studies after some years and commenced his employment as an arachi - officer, at the Jaffna Kachcheri. Being a sturdy, efficient worker, he received the admiration and the confidence of the authorities and was many a time entrusted, to be in charge of the treasury. Though Chellapper enjoyed the high prestige of a privileged post, praised and trusted by his British superiors, he was enamoured by it. Outwardly he carried in his normal work without giving any room for others to complain about it. But his strange behaviour was an enigma to many Englishmen.

Inwardly he was engaged in mystic communion with lord Murugan of Nallur, during midnight when others were all fast asleep, he was seen at Nallur Theradi. He waited till all the people had left the temple after the mid - night puja, arose from his seat and walked slowly to the entrance of the temple calling "Enthaiyae! Enthaiyae! - vd; je;ijNa! vd; je;ijNa! - My Father! My Father." Most of the time after midnight, standing at the closed door of Nallur Kandasamy temple shaking his head with vigour and waving his raised right hand high, he would bellow loudly. He would speak to himself, immersed in bliss, chanting "Om, Om," this most sacred sound would reverberate. No one knew whether he had any reciprocal response or not, but he continued to converse with the Lord. Divine bhakti love and Jnam wisdom surged within submerging him totally.

A point came when the spark of spirituality was blazing bright and he could no more carry on his profession. when ascetic inclination overwhelmed his mind, Chellapper renou nced the world totally. He neglected his job and finally kept himself away from the Kachcheri. He then sat all day in the corner of his hut immersed in the thought of the Lord of Nallur. The radiant grace of Lord Nallur Murugan drew him closer out from the dark corner. It made him sit beside the ther in the open space, so that many had the opportunity to have his darshan. He was ever dwelling on the inner kindling of his being and irresistibly drawn towards jnam spirituality.

Drawn by sisterly affection for her brother, Chellachi used to bring his meals at the proper time, but he used to shout at her angrily, "Go! Go! Take it away! You have brought me poisoned food" and chase her away. He would wallk a long distance away, come back and sit down again. Whenever he felt like eating, he would eat a little, but leave a major portion of the food for crows, fowls and stray dogs and enjoy watching them eat. He maintained a compassionate relationship with birds and animals.

His face poised on a dark, thin body protruding was radiant with large brilliant penetrating eyes. There appeared changes in his habits, dress and movements, this intrigued many. Indeed he behaved more and more erratically to conform himself to the label given by most of the Jaffna people as 'Visar Chellappar', visar meaning mad. He did not care about his own body, his hay like hair was let loose, he bathed very seldom and wore discoloured unwashed tattered cloth wrapped as a verti around his waist. He was also clumsy, he raised his hands high in an awkward manner and laughed; his teeth jutted out; but his narrow face on the frame of his thin body bloomed like a bright flower. Though in his outward appearance, Chellappar looked like a mad man, inwardly he was composed and



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

inclined towards jnam. There is reason to believe that during this period Kadai Swami a Siddhar who was seen wandering around Nallur temple encountered Chellappar and they were mutually drawn to each other.

Chellappar was a Jnani who cloaked his greaness in the outward guise of a madman. Being in unmatha avastha cd;kj;j mt];ij he appeared like one possessed by the sprits or like a chid of innocence. He would not let anyone get close to him; he chased them away as they approached him. To the general public, judging by their human standards, he appeared to be mad but to the great men wished to redeem their souls by their human standards, he appeared to be mad but to the great men who wished to redeem their souls he was an avadutha.

Avaduthas - mtJ}jh; are like the birds that soar on to great heights above the sky, leaving no tracks behind them. Very rare indeed is that, birds akin to them attempt to follow their track. Generally those in this state do not visibly guide anybody on the spiritual path. Only very rarely a chosen few seekers were able to recognize their spiritual stature and honour them as a great Jnani and follow them.

During the latter part of 18 th century and early 19 th century Sathasivam the future Yogaswami, Vidhane Thirujanasampanther, Kadirithamby Vettivelu, Ponnaaih upadiyayar, Sivagurunather, Thuraiappa and Thiagar Ponniah all of Columbuthurai to visit Chellappar Swami frequently at theradi. There were also a few other blessed individuals who were drawn to him closely, my maternal grandfather Chelliah was one among them. Chellappar Swami when roaming about in the Jaffna town used to visit the humble home of my grandparents at Chapel Street guiet often and partake of tea and short eats offered to him with devotion. One day when Chellappar Swami was seated down on a bench in the porth, my grandfather fell prostrate at his feet. Holding his feet in a very tight grip, he implored, "Swami! I am a father of four daughters, even to perform my last rites I don't have a son, unless you grant me this boon I will not let your feet" Swami, yelled out, "let go! let go your grip you have a son," he got up abruptly and walked away. The next year a son was born to him. Like him there were few others who approached him with faith and got their pressing needs fulfilled by his grace. But the one and only disciple chosen by Chellappar Swami and uniquely blessed to arise to such spiritual heights was Yogaswami.

**Chellappar Swami and his disciple Yogaswami**

Chellappar Swami was a Jivan Mukta, totally established in the Atman- the Self. The supreme Sat Guru Chellapper Swami and his disciple Sathasivam - the future Yogaswami, - clearly illustrate the Guru Tattwa principle. Their exemplary Guru- Disciple relationship was par excellence. Yogaswami tenaciously trod the Tattwa priciple. Their exemplary Guru - Disciple relationship was par excellence. Yogaswami tenaciously trod the Guru - neri the track demarked by his Satguru Chellapper Swami. It is impossible to write about him Yogaswami said of Satguru Chellapper Swami. To Yogaswami, his Guru Chellapper Swami was verily the supreme in human form. Yogaswami in his Natchintanai adulatory hymns to his Guru sang

"The Allmighty Siva and Guru art One.
No more birth and no more death!" - Natchintanai

To Yogaswami his Guru's holy feet thiruvadi was the sole object of adoration and worship. Yogaswami treasured the Thiruvadi of his God - Gru Chellapper Swami in a niche in his humble welling and worshipfully offered flowers to it daily. He saw to that Thiruvadi puja was performed monthly on the first Monday of the Tamil month of Panguni (Marth - April). May be it was being observed by him as his dioksha day. Where ever the Sivthondon Nillayams were established with the blessing of Yogaswami, Thiruvadi was installed in the sanctorum of the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

prayer hall as the sole object of workship and puja performed daily to it.

Sathasivam who came to be addressed later as Yoganathan and finally as Yogaswami was born in 1872 May 29 th Mavidapuram. Having lost his early childhood he grew up with his Aunt at Culumbuthurai and had schooling there. In his early youth itself, he was drawn ardently to the famous Nallur Kandaswami temple. There later on he came firmly under the influence of Chellappar Swami, who lived in the precincts of the Nallur Kandasamy Kovil theradi. Sathasivam arrested by the striking personality of the Guru felt a powerfull magnetic pull. The merciful Satguru seeing him laughed aloud and roared with immense joy exclaiming to the overwhelmed disciple. " I have been waiting for you for so long, come! come! You alone are worthy to crowned by me"

For nine Years Sathasivam was employed as a storekeeper in the Iranumadu tank project at Kilinochchi. Even From there almost every weekend he would vigorously walk all the full sixty three kilometres from kilinochchi to Nallur temple to be with his Guru there and again walk back to work the following Monday. The jungle environment of Kilinochchi became an apt ashram hermitage for him. By deep meditation and contemplation there he soared high in spiritural realms. He always remembered kilinochchi as his training ground and predicted an imminent future for it in years to come. In the sport he lived and meditated maintained garden and a mango tree which is in army occupation today.

During his visits in the year 1901, one glorious day Sathasivam beheld Chellappaswami seated in his favourite spor on the steps of Nallur Lord Murugan's shrine, theradi. This was indeed the, a moment of revelation, a turning point in his life. Recollecting, this soul stirriing moment Yogaswami said, I saw him, "when I had the darshan of the Master, the crest jewel of Guru there at there at theradi; Hey! he shouted; யாரடா நீ? Aaradaa Nee? -Who are you? Just whom, do think you are?
தேரடா உள் Therrada Ull! - Dive deep within and realize
தீரடா பற்று Theeraada Pattru -Give up attachment."

These seemingly are common phrases, but their impact penetrated his heart, it went deeper. Later on reminiscing about this profound experience, giving expression to his Guru's grade, and the profuse blessing that he received that moment he said, "I grasped well the meaning of his words. By the grade of the grade Sadguru, the endless anxieties of endless birds and all delusions ended and my mind became one with God in Samadhi: I saw darkness all - surrounding and could not comprehend the meaning. As I stood perplexed, he looked at me with compassion. He pointed above the crown of my head and I lost all consciouness of the body and stood rooted there in amazement. By the grade of my Satguru, maya the illusion tormenting me vanished for ever my mind became still. He made me his own and showed me the path to bliss."

After this incidence Sathasivam, the chosen disciple gave up his job and everything else and revolved in the orbit of his Sadguru. Like a calf following its mother, he trailed behing his Satguru. The Guru subjected the disciple to many a fiery ordeal and severe teats which brought about in him a great transformation. One such tapas during the middle of the year 1910 was with another disciple Kathirvelswami. Ordered by the Gru they were made to sit in deep contemplation at the theradi. Almost after a continuous meditation of about forty days the Guru put them up and chased them away. Yoganathan's feet propelled him in the eastern direction and it only when he reached Navatkuli he came to realize that he was set on a long solitary padayatra to Kathigamam. To this day it is not known where Kathirvelswami went.

Once again on his return, Yoganathan presented himself before his Guru. His life



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

became one of intense spiritual discipline, severe tapas and stern trails. The Satguru after having put him under severe training for a few years shooed the disciple off. He was sent way so that he can stand on his own feet and digest what had been transmitted. Yoganathan was strictly forbidden by his Guru not to demonstrate the siddies - occult or psychic powers that had come spontaneously to him. Yogaswami later on expressed this as " Chellappar was great, he never gave in to self - deluding activity such as attracting people to himself and said he will be known as a mad to the world and quilt away without revealing himself; Chellappar, will not exhibit any shiddies." By intence sadana - self effort and the grade of his Guru the disciple experienced the reality of the Guru as the Self within him.

Thaigar Ponniah, father - in -law of Somasundera Udayar a devotee of Chellappar Swami lived in the neighboured of Yoganathan at Culumbuthurai. He related that one day Ponniah Upadiyayar witnessed Sadguru Chellappar Swami greeting Yoganathan under the shade of the Vilva tree at nallur Theradi blessing him profusely with significant prophetic words:

"இந்தா இந்தா இலங்காபுரி தந்தேன் தந்தேன்
இராசமுடி தந்தேன் தந்தேன்
பார் உள்ளவும் கடல் நீர் உள்ளவும்"

'Come Come ! Thine be Lankapuri. I give, I give,
The crown of Kingship to Thee, To thee
As long as the universe endures
And the waters of the ocean perish not,"

Yoganathan roamed about and soon, on the suggestion of his Satguru, took his seat under a lllupai tree at the school Junction in Columbuturai. He sat in long hours of meditative silence, in deep communion, meditating for months on end, sun, rain, floods or whatever came he was deeply rooted there, immersed in bliss.

After the Mahasmadhi of his Satguru, it was only in 1923, that Yoganathan condescended to the earnest appeal, of a loving plea of an elderly lady, Thirunavukarasu's, mother inviting him to reside in her compound near the illupai tree under which he had been living. This is being venerated as a holy ashram today. From then on Yogaswami entered the more approachable state. Once Swami related amidst peals of laughter the on Yogaswami entered the more approachable state. Once Swami relered amidst peals of laughter the bewidering action of Nanni a pious devotee of Chellappar Swami, "He had a boutique in the very compound on which his ashram hut was to be located later. One day when Chellappar passed that way Nanni managed to get hold of him forcibly, and tied him to a pole in front of his boutique, in a frenzy of devotion got his hair shaved and with burning zeal offered lighted camphor imploring his grace. Chellappar yelled to be set free and fled from that place." This is not just a coincidence, as later on Yogaswami choose to abide here, may be the holy psychic vibration impelled Yogaswami to settle there for in a simple coconut - thatched mud
mud hut there until his Samadhi.

It is reported that during swami Vivekananda's visit to Jaffna in February 1897 he was ceremoniously taken in a carriage by the leading citizens of Jaffna to Culmbuthurai along the colombuthurai Rd, before passing this hut location, he got down from it and walked, saying that he was impelled to get down as the was treading on hallowed soil and prophetically called it an oasis in the desert.

Yogaswami heard of Chellappaswami's impending death in 1915 and went to Nallur to visit the dying Guru. Chellappaswami was then in the hut of a relative. As the quietly approached the gate of the compound, Yogaswami heard a roarig voice, "ahulh gliyapy;?" - yaar adda padalai yil? - Who is at the gate? "ghluh ntspapy; epd;W!" Par adda veli yil ninru - Stand outside and withness! Typically this was not a rebuff but rather the Guru's final blessing to a beloved disciple. "ntsp" while colloquially meaning "outside", also means open space, void - akasha, shunya, to ever abide in the ultimate state of realisation; - truly a great parting benediction . The farewell on the external plane pulled him more deeply than ever within to the heart.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Chellappa Swami, aged about seventy, attained mahasamadhi in 1995, on the midnight of Friday in the month of March - Panguni, when the ancending star the nakshatram of waxing lunarasterism was Aswini. In accordance to his disciples wish he was cremated. His ashes are interned in Nallur near the Kandasamy temple, a Samadhi shrine stands there today.

Yogaswami remained in this hut till his Mahasawadi in 1964 on, March 24th, his body was cremated and the sacred ash enshrined at the Columbuthurai Ashram. His Grupuja, tithi falls on in the month of Panguni Ailiya naksathram and is being celebrated in many parts of the world. Yogaswami recalling his Guru's grace and profuse blessing on the eve of his mahsamadhi said "If served my Sadguru Chellappa Swamigal as a slave for ever and ever, I should not have given in return even a thousandth part of the thousands of what I owe him"

There were four fundamental sayings, enigmatic uttearances of Chellappaswami treasured by his disciple and passed on to us which holds a depth of meaning. They contain the essence of the teachings of Satguru, whose utterances points the way to everlasting bliss. These came to be known as the, Makavakiams, or maxims when contemplated are capable of banishing birth.

"ஒரு பொல்லாப்புமில்லை" Orupollapumillai. Intrinsic evil there is none.
"எப்பவோ முடிந்த காரியம்" Eeppaavo mudinta karium It was all accomplished long ago.
"முழுதும் உண்மை" Muluthum unmai All that is, is absolute truth.
" நாம் அறியோம்" Nam ariyom. We know not.

"It is bliss to adore the Feet of the Guru. Hail to the true guru, who took me beneath his rule and gave himself to me, saying - do not suffer by regarding me as separate from you!"

- Natchintanai - translation.

Thiruvadi Thunai

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Chellappar Swamigal

Dr.Ms.Veermankai Stalina Yoharatnam
Senior Lecturer,
Department of Linguistics & English,
University of Jaffna.

*Chellappan, a mystery of the mysteries,*
*Looked with grace at me dismayed*
*To remove the agitating illusion of mine*
*He pointed to the primary place*
*I stood ecstatic and wondering*

- **Yogaswami**

Chellappah swami was born at Nallur in Jaffna. His ancestors were from Vaddukkoddai and later settled as agriculturist in the lush and fertile fields of Nallur. His father's name was Vallipuram and His mother's name Ponnamma. She is deemed to have been freed from all suffering attaining bliss for the merit of having given birth and nurtured this sagely son. Chellappah worked in the Jaffna Kachcheri as an Aarachi officer for some years. But very soon, his relationship with parents, friends, relatives and all else became meaningless and nothingness to him and he assumed the guise of a madman. In the eyes of the world he appeared to be an insane person.

***Do not probe the genesis, of the Rishi nor that of the river*** is famous saying in Tamil. So no one axes thought of probing much into the early life of Chellappah the Sat Guru of Yogaswami. There are people who refer to Kadayit Swami Chellappah's spiritual father referring to that statement someone has recorded that Kadayit Swami obtained a rupee from a gram seller, folded it in a betel leaf and gave it to Chellappah, he then placed umbrella on Chellappah's head shook it and ordered him to run away. They said this was the initiation for Chellappah which helped to awaken his spirituality.

These incidents point to us that Chellappah Swami treated Kadyit Swami with great respect and he in turn recognized the young Chellappah Swami's divine madness and treated him with full of love and affection. But there is a great difference between treating a venerable Seer with respect and in accepting him as one's Guru and adoring his golden feet. Similarly there is a difference in a great sage treating a devotee with affection a Guru guiding his dear disciple to ***self realization***.

Chellappah Swami a great sage immersed in virtual realms behaved as if he was mad. Those who were deluded by this, believed that he was really insane. He wore no saffron ochre robes, *rudraksha* beads nor did He smear Holy Ash and adorn a *Pottu* on his forehead to distinguish him from others as a holy teacher. He never followed any rules or taboos or traditions related to caste or creed. He would wander and roam here and there like a gypsy.

He never argued about Vedanta nor did he practice Yoga. If anyone desirous of obtaining knowledge approached him, He would laugh saying "We do not know" he would intimidate them saying "who knows?" These were all taken as forms of Chellappah's craziness. With these



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

inscrutable disguises He wandered along hiding His real nature so that no one realized his true nature. But the spiritual aspirants knew his true stature as a sage of deep wisdom. Chellappah acted as a role of a lunatic which he had taken on himself perfectly well. Yogaswami once said "For forty years, He successfully acted the role he took on without anyone suspecting and passed away."

Siva Yogaswami saw him as the right great sage who as a Guru redeemed and served him. Chellappah was a lone soul he had unique qualities that distinguished him from Kadaiyit Swami. Siva Yogaswami stated the following words:
*The subjugation of others is also an illusion. Kadaiyit Swami also got trapped in it. But Chellappah Swami was a great soul. He was not deluded by this. He would wander around saying* ***who knows? Everything was all over long ago****. If anyone to fall at his feet and worship him. He would walk way fast to places which were decorated with dirt and excreta.*

There were a few who through long years of association with Chellappah Desikar realized his real nature and cultivated the habit of visiting him regularly. As a youth one day Yogaswami accompanied them to visit Chellappah Swami he looked at Yoga Swami who worshipped him and roared in a thundering and threatening voice ***Yaaradaa nee? (who are you?).***
These words had the power to remove the false notion that we are the body along with various other related illusions. The answer to this is, "We are the Atma, the Self, the Soul", this emphasizes and establishes the truth, that we are not the truth, that we are not the body but the Atma (Soul). This axiom 'Who are you?' removes the inner impurities of the devotees. Chellappah Desikar remained as the mystery of all mysteries. He would not even raise his eyes to look at devotee Yogaswami who had come all the way to follow Him. To stay at the Guru's feet and serve him gives great happiness but Chellappah would not allow anyone to serve nor stay near him. During the latter part of his life Yogaswami remarked to one of his devotee, "If it had been you, you would not have tolerated and stuck on even for one day with Chellappah".

The unquenchable love for the benevolent Guru Chellappah Swami who was full of grace grew day by day. The Guru showed to Him visions that were apparently paranormal. He came to be astounded at the great Guru Chellappah's wisdom by which he had realized and experienced the Vedas (the Hindu Scriptures) without even studying them.

The form of Guru Chellappah became the form that was to be meditated upon His ***Thiruvadi*** divine feet were the object of his worship. The words he uttered were to him the scriptures and mantras. He realized that the company of sages was more valuable than those of parents, siblings, relatives and cut off all relationships. He went to ***theradi*** surrendered himself totally and remained at His Guru's sacred feet.
***"The Gurunathan, he melted my strong heart fully by uttering degrading words".***
***"He would not repeat what was said. He would utter contradictory statements"***

\- Natchintanai, English Translation.

Yogaswami was established in the form of his Guru Chellappah and drank the ***amirtha*** (celestial nectar) over flowing within during this state of



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ecstasy. Yohaswami having endured hunger patiently comprehended the nature of *Atma* as trained by the Guru Chellappah.

***See his roseate foot this He trod!***
***See He is none other than Sivan.***

## References :


1. Ratnavel, K.N., 1988 , *The message of Yogaswamy of Sri Lanka,* Madurai: Kathirols Achagam.

2. Swami. Markandu., Sandaswami. 1972, *Words of our Master*, Sri Lanka: The Jaffna Co-operative Tamil Books Publication.

3. *Yogaswami : Life and Spiritual Guidance* - 2010, The Sivathondan Society, Sri Lanka.

4. *Yogaswami :Treasured Memories* 2014, The Sivathondan Society, Sri Lanka.

5. யோகசுவாமிகள் வாழ்க்கையும் வழிகாட்டுதலும், 2014, சிவதொண்டன் சபை, யாழ்ப்பாணம்.


6. **Genealogy of Siddhars of Eelam**

**Mottaichi Ammaiyar**

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் செல்லப்ப சுவாமிகள்

ம. சிவயோகசுந்தரம் (நல்லூரான் சிவா)
பொஸ்ரன், அமெரிக்கா

நல்லூர் ஒரு புனித பூமி. நல்லூர்க் கந்தனை மையமாக வைத்து எல்லாத் திசைகளிலும் திருக்கோயில்களும், சித்தர் ஆச்சிரமங்களும், இராசதானிகளும் அமையப்பெற்றுள்ளன. ஒரு புறம் நல்லூர் சட்டநாதர். மற்றத்திசையில் வெயிலுகந்தப் பிள்ளையார், கைலாச நாத பிள்ளையார், வீரகாளி அம்மன், சிவன், செல்லப்பர் ஆச்சிரமம், சமயக்குரவர் ஆறுமுக நாவலர் நினைவு மண்டபம், கடையிற் சுவாமி சமாதி என்பன முக்கியமாக குறிப்பிடத்தக்கன. இலங்கையில் ஒரே ஒரு ஆதீனமான திரு ஞான சம்பந்தர் ஆதீனமும் அமைந்தது நல்லை நகரில் எனும் பெருமையும் உடையது.

இவ்வாறு புகழ்பூத்த நல்லையம்பதியில் வட்டுக்கோட்டையிலிருந்து விவசாயம் செய்வதற்காக நல்லூர் தேரடிக்கு மறு பக்கத்தில் உள்ள வளவில் வல்லிபுரம் என்னும் பெரியார் தன் குடும்பத்தினருடன் குடியிருந்தார். வல்லிபுரத்திற்கும் சின்னம்மா அம்மையாருக்கும் சற்புத்திரராக அமைந்தவரே செல்லப்பர் ஆவார். இவர் சைவப்பிரகாச வித்தி யாசாலை, மத்திய கல்லூரி ஆகியவற்றில் தமது கல்வியைக் கற்று சில காலம் ஆராய்ச்சியாக பணி புரிந்தார் என அறிய முடிகிறது.

"நல்லூர் மண் எல்லாம் சிவலிங்கம்" என அடிக்கடி யோகர் சுவாமிகள் கூறுவார். அந்த மண்ணிலே புரண்டு உருண்ட செல்லப்பருக்கு ஞான முறுக்கு ஏறிவிட்டது. உத்தியோகத்தை துறந்து ஊரறிய விசரனானார். நல்லூர் பிரபல வைத்தியர் சின்னத்துரை செல்லப்பரின் மைத்துனராவார். அவர் செல்லப்பருக்கு ஏற்பட்ட நோய் உலகியலுக்கு அப்பாற்பட்டது என உணர்ந்து அவரது ஞான தாகத்திற்கு ஏற்ப உதவிகளைச் செய்தார்.

செல்லப்பர் பெரும்பாலும் நல்லூர் வீதியிலே சஞ்சாரம் செய்வார். ஊர் உலகம் துயில் கொண்ட வேளையில் பின் சாமத்தில் நல்லூர் மூலஸ்தானத்தைப் பார்த்து " பரம பிதாவே, பரமபிதாவே " என கண்ணீர் மல்க கத்துவார். பகல் வேளையில் இரண்டு கை களையும் உயர்த்தி " ஓம் ஓம்" என்று அடிக்கடி சொல்லிக்கொண்டு தமக்கு ள்ளே சிரித்து மகிழ்வார்.

அவருடன் கூடித்திரிந்த கொழும்புத் துறை விதானையர் திருஞான சம்பந்தர், துரையப்பா போன் றோருடன் கொழும்புத் துறை, திருநெல்வேலி, கைதடி, போன்ற இடங்களுக்கு பிச்சையேற்கச் செல்வார். இப்போது கைதடியில் மார்க்கண்டு சுவாமிகள் ஆச்சிரமம் அமைந்தவளவுக்கு (இது யோகர் சுவாமிகள் மார்க்கண்டு சுவாமி களை அமர்த்திய இடம் ) செல்லப்ப சுவாமிகள் பல தடவைகள் சென்று தமது திருப்பாதத்தைப் பதித்துள்ளார். அப்போது விசரனாக நடித்து பிச்சையேற்ற செல்லப்ப சுவாமிகளை அவ் வீட்டுக்காரர்களால் அறியமுடியாமல் போய் விட்டது. இவரின் சகோதரி செல்லம்மா பாசமிகுதியால் இவருக்கு பக்குவமாக உணவுசமைத்துக் கொண்டு போக "நீ நஞ்சு போட்டு கொண்டு வந்து விட்டாய் " என செம்மணி வயல் வெளியில் எறிந்து விட்டு வருவார்.

செல்லப்பரின் உண்மை நிலையை அறியாத அயலவர்கள் அவருக்கு கை விலங்கை மாட்டி விட்டனர். ஒருநாள் அவ்வீதியால் வந்த கடையிற்சுவாமிகளின் கடைக்கண் பார்வை செல்லப்பருக்கு கிட்டியது செல்லப்பரை உற்று நோக்கிய கடையிற் சுவாமிகள் "இவனுக்கு பைத்தியம் முற்றி விட்டது . அவிழ்த்து விடுங்கள்" என்று கூறி, பக்கத்திலிருந்த கடலைக்காரியிடம் ஒரு ரூபா குற்றி வாங்கிவெற்றிலையில் வைத்து தலைக்கு மேல் குடையைப்பிடித்து "ஓடெடா" எனக் கூற அதுவே அவருக்கு ஞானோதயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படக் காரணமானது.

செல்லப்பருக்கு யோகர் சுவாமிகளே ஒரே ஒரு சீடர். வேறொருவாலும் செல்லப்பரை அறிந்துணர முடியவில்லை. அவரை அண்டப்போனவருக்கு தூசணத்தால் ஏச்சு விழும் அல்லது செல்லப்பர் சலம் மலம் கழிக்கும் இடத்தில் போய்நிற்பார். இவரது தோற்றத் தினை தன் மனதுள் சிறு வயதில் பதித்த அந்தணப் பெருமகன் ஒருவர் இவர் நல்லூர் சிவன் கோவிலுக்கு முன்னுள்ள வீட்டில் அச்சுக் கூடம் நடத்தியவர் ஓவியம் வரைவதில் வல்லுனர். அவர் தனது வீட்டுச்சுவரில் செல்லப்ப சுவாமிகளின் திருவுருவத்தை வரைந் தார். அதுவே படமாக எடுக்கப்பட்டு இப்போது செல்லப்ப சுவாமிகளின் படமாக மிளிர்கிறது.

யோகர்சுவாமிகளின் படமும் கஸ்தூரியர் முத்துக்குமாரு வளவு டாக்டர் பசுபதியின் மகன் முத்துக்குமார சுவாமி என்பவரால் சுவாமி தியானத்தில் இருக்கும் போது எடுக்கப்பட்டது. சுவாமியின் தியானம் கலைந்த பின் சுவாமிக்கு தெரியாமல் எடுத்ததற்கு மன்னிப்பு கோரி என்னொரு படம் எடுக்க அனுமதிக்குமாறு பணிந்து நின்றார். சுவாமியின் சம்மதத்துடன் படம் எடுக்கப்பட்டது. ஆனால் சுவாமிகளின் படம் அணுகத் தொண்டர் சிலரிடமே சுவாமிகள் வாழ்ந்த காலத்தில் இருந்தது. ஆத்மஜோதி முத்தையா அவர்கள் தமது 10ஆவது இதழில் சுவாமியின் படத்தை வெளியிட விரும்பி சுவாமியின் அன்பர்களை அணுகி படத்தை தந்து தவுமாறு கேட்டார். ஆனால் சுவாமிக்குப் பயந்து ஒருவரும் கொடுக்க முன்வரவில்லை மனமுடைந்த முத்தையா அவர்கள் கொழும்பில் நின்றபோது பத்திரிகைகளுக்கு கார்ட்டூன் வரையும் கனகலிங்கத்தை அணுகி எனக்கு யோகர் சுவாமியின் படத்தை வரைந்து தர முடியுமா என வினவினார்.

அதற்கு கனகலிங்கம் நான் யோகர் சுவாமியை பலதடவை தரிசித்துள்ளேன். நேற்றிரவும் கனவில் தோன்றி கனகலிங்கம் என்ர படத்தை கீறித் தருவியோ? எனக்கேட்டார். அது உங்களுக்காகத்தானிருக்கும் எப்படிப் படம் கீற வேண்டும் எனக் கேட்டார். அதற்கு முத்தையா அவர்கள் சுவாமி இலுப்பை மரத்தின் கீழ் தியானம் செய்யும் நிலையில் வேண்டுமெனக் கூறினார். அப்படமே 10 ஆவது ஆத்ம ஜோதி மலரை அலங்கரித்தது அந்தப்படம் இப்போது பலரின் சுவாமி அறையில் வீற்றிருக்கிறது. இப்படம் கொண்ட புத்தகம் பூபாலசிங்கம் புத்தகசாலையில் விற்பனைக்கு இருந்ததை கண்ட சுவாமகளின் நெருங்கிய தொண்டர் ஒருவர் அதை எடுத்து நேரே கொழும்புத்துறை போய் சுவாமிகளிடம் முறையிட்டார் சுவாமிக்கு அவ்வன்பர் மேல் கோபம் பொங்க "முத்தையன், விரும்பினான் அவன் போட்டான். நீ என்ன என்னை வழக்கு வைக்கச் சொல்லுகிறாயா ? உனக்கு விருப்பமில்லா விட்டால் அந்தப் புத்தகத்தை இங்கே எறிந்து விட்டு போ" என ஏசித் துரத்தினார்.

மேலும் ஸ்ரீலங்கா அச்சகத்திற்குப் போன சுவாமிகளிடம் தெய்வேந்திரம் அந்த மலரைக் காட்டினார். உடனே சுவாமிகள் " தெய் வேந்திரம் இந்தப்படம் உனக்குப் பிடித்ததா? என வினவ அவர் " சுவாமி இது எனக்கு நன்றாகப் பிடித்து இருக்கிறது. இதைப் பிறேம் போட்டு சுவாமியறையில் வைக்கப்போகிறேன்" என் றார். உடனே சுவாமிகள் முத்தையனுக்கு உடனடியாக நாவலப்பிட்டி விலாசத்திற்கு நூறு ரூபாய் அனுப்பு எனக் கட்டளையிட்டார்.

மனம் வாக்கு காயம் என்பவற்றால் எண்ணவியலாத மோன தவத்தராக இருந்த செல்லப்பா தேசிகரின் கடைக்கண் பார்வை பெற்றவர்கள் புண்ணியவான்கள் ஆவார். சேர் பொன்னம்பலம் இராமநாதன் , இராமநாதன் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டிய வேளை விசிறி கட்டுதல் போன்ற கைப்பணிகளில் விற் பன்னராகத் திகழ்ந்த செல்லப்பர் தாமே மருதனார்மடம் சென்று இராமநாதனுக்கு ஒரு விசிறியைக் கொடுத்து நான்கு மகா வாக்கியங் களையும் உபதேசித்து விட்டு திரும்ப நல்லூருக்கு வந்தார்.

நல்லூரைச் சேர்ந்த அன்பரொருவருக்கு தமது சந்ததிக்கு ஆண்வாரிசு இல்லை என்ற கவலை வாட்டியது. ஒரு நாள் நல்லூர்த் தேரடியில் செல்லப்பர் நிற்கக்கண்டு கீழே விழுந்து செல்லப்ப சுவாமிகளின் இரண்டு கால்களையும் பற்றியபடி அழுது கொண்டு இருந்தார். அப்போது செல்லப்ப சுவாமிகள் "விடடா விடடா உனக்கு ஆண் குழந்தை பிறக்கும் " என திருவாய் மலர்ந்தார். அடுத்த ஆண்டு அவ்வன்பர்க்கு குழந்தைப்பாக்கியம் கிடைத்தது. கொழும்புத்துறை வல்லிபுரம் செல்லப்பரின் பக்தர். அவரது பிள்ளைக்குக் கடும் சுகவீனம் கண்டு வைத்தியர்கள் கை விரித்து விட்டனர். அப்பொழுது அவர் தமது பிள்ளையை செல்லப்பரிடம் கொண்டு செல்ல அவரது மாமியார் "அந்த விசரன் என்ன சாதியோ தெரியாது " என்று மறுக்க , வல்லிபுரத்தார் பிள்ளையை செல்லப்பரிடம் கொண்டு சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைளை தொட்ட செல்லப்ப சுவாமிகள் "வல்லிபுரம் நாம் வந்தார் வரத்தாரில்லை. சந்திர சூரியரறிய வட்டுக் கோட்டை வெள்ளாளர் " என்று கூறி பிள்ளைக்கு ஒரு மாதுளம் பழத்தை உண்ணக் கொடுத்தார். அப்பழத்தை உண்ட பிள்ளை சாவிலிருந்து பிழைத்துக் கொண்டது.

திருநெல் வேலி சிவன் கோவில் குருக்கள் செல்லப்ப சுவாமிகளிடம் அன்பு பூண்டவர். அவர் மாலை வேளைகளில் செல்லப்பருக்கு கோயில் பிரசாதத்ததை நல்லூர் வீதியில் வைத்து வழங்குவார் வழமை போல் ஒரு நாள் கொண்டு சென்ற குருக்களைப் பார்த்து செல்லப்பர் "இது தீட்டுக் கொண்டு போ" என ஏசித் துரத்தினார். வீடு சென்ற குருக்கள் அவரது பிள்ளை செல்லப்பருக்கு கொடுக்கமுன் அந்த பிரசாதத்தை கை வைத்து உண்டதை அறிந்தார்.

தாந்திரீக ஒழுக்கமுடைய கடையிற் சுவாமியை கண்ணியப்படுத்த செல்லப்பர் ஒருநாள் சாராயப் போத்தலை தமது சால்வையில் மறைத்து வைத்துக் காத்திருக்க , எதிரே வந்த கடையிற் சுவாமிகள் "அது எப்போதோ முடிந்து விட்டது"எனக்கூற சாராயப் போத்தல் வெறுமனே இருந்ததைக் கண்டார் செல்லப்பர்.

இளைஞரான யோகநாதன் ஒரு நாள் கொழும்புத்துறை கூட்டாளிகளுடன் தேரடியை நோக்கி வந்து கொண்டிருந்தார். முட்டாளைப் போல் சிங்காரமாக தேரடிப் படியில் வீற்றிருந்த செல்லப்பர் யோகரை நோக்கி " யாரடா ? நீ பாரடா உள்" என உறுமினார் . அதுவே யோகநாதரின் திருப்பு முனையாக அமைந்தது. தேகமே மெய் யென்று திரிந்த யோகநாதனை சின்னத்தனமான வார்த்தைகளை பேசி அவரின் கல் மனதை கரைத்தார். யோகரை பல வித சோதனைக்குட் படுத்தினார் செல்லப்ப தேசிகர். உடல் வேறு ஆன்மா வேறு என உணர்ந்த இருவரும் சேர்ந்த உணவு சமைத்து உணவுண்ண தயாராகும் வேளை செல்லப்பர் வயிற்றைப்பார்த்து "உனக்கென்ன சாப்பாடு இப்ப ?" எனக்கூறி சட்டி பானையை உடைத்து காகம் குருவிக்கு அவ்வுணவைப் போடுவார் பட்டினியாக இருக்கும் யோகநாதனைப் பார்த்து "வா ஐயரிடம் உணவு வாங்கி உட்கொள்வோம் " என தேரடியிலிருந்து கோயில் முன் பக்கம் செல்வர். அந்தக் காலத்தில் பூசை ஒழுங்காக நடைபெறு வதில்லை ஐயர் வந்த நேரம்தான் பூசை. அங்கும் ஏதாவது வாங்கி உண்ண முடியவில்லை செல்லப்பர் முன்னுக்கு பின் முரணாகப்பேசுவார். ஒருமுறை காண்ப தெல்லாம் வீண் பாவனை " என்பார். பின்னர் "பார்ப்பதெல்லாம் பரன் என்பார் ." இறுதியில் யாரறிவார் நாமறியோம்" எனப் புகட்டுவார். கூறியதை கூறாமல் மாறுபாடாய் பேசி யோகநாதனை ஆட்கொண்டார்.

ஒரு முறை விதானையார் திருஞான சம்பந்தர் "செல்லப்பர் உங்களிடம் எல்லா வற்றையும் கொட்டி விட்டுச் சென்றுள்ளார் " என்றார் யோகர் சுவாமி களிடம் அதற்கு யோகர் சுவாமிகள் "சும்மாவா பெற்றேன் மலையைப் பிளந்தல்லவா பெற்றேன் " எனக் கூறினார். மேலும் செல்லப் பரிடம் கேட்டறிந்தாரில்லை நான் பின்னால் நிற்கும் போது இடைக் கிடையே அரிய மந்திரங்கள் வரும் " என்று சொன்னார். இவற்றில் சிலவே இன்று மகா வாக்கியம் என்று உலகத்தோரால் போற்றப் படும் "ஒரு பொல்லாப்புமில்லை : எல்லாம் எப்பவோ முடிந்த காரியம் , முழுதுமுண்மை, நாமறியோம்" இம் மந்திரங்கள் எட்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் டெல்லி மாநகரத்தில் பொற்றகடுகளால் எழுதி வைக்கப்பட்டுள்ளன என யோகர் சுவாமிகளுக்கு கூறியுள்ளார் செல்லப்ப தேசிகர்.

செல்லப்பர் யோக குருநாதனையும் கதிரவேலு என்பவரையும் தேரடியில் 40 நாட்கள் தவம் செய்யுமாறு பணித்து 40ம் நாள் "இரு யானைகளை ஒரு தறியில் கட்டக்கூடாது " எனக் கூறி இருவரையும் ஒவ்வொரு திசையிலும் துரத்தினார். கதிரவேலு அவர்கட்கு என்ன நடந்தது என்று ஒருவரும் அறியார். யோகர் சுவாமிகள் கால் நடையாக கதிர்காமம் சென்றார் .பல நாள் யோகரை காணாத உறவினர்கள் செல்லப்பரிடம் சென்று யோகரைப் பற்றி விசாரித்தனர். அதற்கு செல்லப்ப தேசிகர் "யோகன் செத்துப் போய்விட்டான் " எனக் கூறினார். மனக் கவலையடைந்த உறவினர்கள் யோகர் சுவாமிகளுக்கு ஆற்ற வேண்டிய இறுதிக் கிரியைகள் செய்தனர். சில காலத்தின் பின் திரும்பி வரக்கண்ட உறவினர்கள் மகிழ்ச்சியடைந்தனர் உடனே செல்லப்பரிடம் சென்று "ஏன் பொய் சொன்னீர்கள் " என வினவ அதற்கு செல்லப்ப சுவாமிகள் " நாங்கள் பொய் பேசுவதில்லை : இப்பவும் சத்தியமாக சொல்லுகிறேன். யோகன் எப்பவோ செத்துப்போய்விட்டான் ". என்றார் அதற்கு அவர்கள் " இந்த விசரனிடம் எமக்கென்ன பேச்சு " என்று கூறியபடி அவ்விடத்தை விட்டகன்றனர். செல்லப்பர் தாம் பூண்ட விசர்க் கோலத்தை செம்மையாக நடித்தார். இதை யோகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகள் " செல்லப்பர் தாம் கொண்ட கோலத்தை 40 வருடகாலமாக எவரும் சந்தேகப்படாமல் நடித்துக் காட்டி விட்டுச் சென்றார்" என்பர். மேலும் யோகர் சுவாமிகளை நோக்கி " யாழ்ப்பாணத்தானுக்கு சாமி காட்டாதே, சாமி காட்டினால் தலை மேல் ஏறி சலத்தை கழித்து விட்டு செல்வான்" என்றும் எச்சரித்தார். எனினும் யாழ்ப்பாணத் தவர் செய்த புண்ணியத்தால் யோகர் சுவாமிகள் பல பக்குவப்பட்ட ஆன்மாக்களை ஆசீர்வதித்து ஆண்டி முதல் அரசர் வரை தம்மை அண்டியோருக்கு அருள் புரிந்தார். யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைப்பா இல்லையேல் நாம் நல்லூரானை நன்குணராமல் போயிருப்போம். யோகர் சுவாமிகள் செல்லப்ப தேசிகரின் தோற்றம் குணாதிசயத் தை பின் வருமாறு கூறுகிறார்.

**சிரித்து நல்லூர் வீதியில் திரிபவர்**
**வெறித்த பார்வையர் வேடம் விரும்பிலர்**
**கறுத்த மேனியர் கந்தை துணியினர்**

**பாதிச்சாமத்தின் பின் பள்ளி கொள்பவர்**
**உல்லாசமான நடையுடையோன்**
**பித்தரென்று பிறர் பேசும் திறந்தான்**
**ஆரறிவாரென அடிக்கடி சொல்வான்**
**நீறுமணியான் நெற்றியில் பொட்டுமணியான்**
**தேரடிப் படியிலே சிங்காரமாக கிடப்பான்.**

இப்படியாக பலபல நற்சிந்தனைப் பாக்களில் நாம்செல்லப்ப மூர்த்தத்தை உணரமுடிகிறது. செல்லப்பருக்கு குருவுமில்லை சீடருமில்லை என யோகர் சுவாமிகள் அடிக்கடி தமது அன்பர்களுக்குக் கூறுவர். ஆனால் யோகர் சுவாமிகள் செல்லப்பரின் குருவாகச் சிலர் கூறுவர். ஆனால் யோகர் சுவாமிகள் செல்லப்பர் எல்லாம் வல்ல சிவபெருமானே என பின்வரும்பாடலால் எமக்குணர்த்துகிறார்.

காட்டினிலே காளியுடன் கூத்தாடும் கண்ணுதலோன்
**நாட்டினிலே ஞானகுருவாய் நயந்து வந்து**
**மீட்டானவன்றன் விரையார் மலரடியை**
**மாட்சிமை சேர் நல்லைநகர் தேரடியில் கண்டேன்**
என்றும்
**மாலயனும் தேடியறியா மலரடிகள்**
**கோல வருட்குருவாய்க் குவலயத்தில் போந்து**
**சாலப் பெரும்பகையைத் தானீக்கி யாண்டானை**
**ஞாலம் புகழு நல்லை நகர்தேரடியில் கண்டேனே**
எனப் பாடுகிறார்.

மேலும் செல்லப்பர் தம்மை தடுத்தாட்கொண்ட முறையையும் அதனால் தான் பெற்ற இன்ப நிலையையும மிகத்தெளிவாக பின்வருமாறு எடுத்துக்காட்டியுள்ளார்.

**இருவரும் தேடிக் காணா இறைவன் என்போல் உருத் தாங்கி இணங்கி யெவரும் வணங்கும் நல்லையிலே இன்னான் இவனென**
**ஒருவரு மறியா தேரடி யுலாவி உவகை பூத்த முகத்தி னராய்**
**ஒரு நாள் என்றனை உற்று நோக்கி ஒரு பொல்லாப் புமில்லை யென்று**
**அருவமும் காட்டி உருவமும் காட்டி அப்பாற்கப்பாலாம்**
**அருள்நிலை காட்டிக் காட்டி அந்த மாதி யில்லாச்**
**சொரூபமுங் காட்டிச்சும்மாவிருக்கும் சூட்சுமத்தில் மாட்டிவிட்டான்**
**துன்பம் இறந்தன இன்பம் இறந்தன சோதி சோதி சிவசோதி.**

ஆசான் அருளால் ஆசானான யோகர் சுவாமிகள் ஒருநாள் "எங்கேயாவது வேர் விராயைப்பார்" என செல்லப்பர் ஏசித் துரத்தினர். யோகர் சுவாமிகள் கொழும்புத் துறைப் பிள்ளையார் கோவில் முன் இருந்த இலுப்பை மரத்தை தமது இருப் பிடமாகக் கொண்டார். இவ்விடம் மிகவும் புனிதமானது. நன்னியர் என்ற முரட்டுப் பக்தர் ஒருவர் செல்லப்பா சுவாமி களை ஒருநாள் இந்த இலுப்பை மரத்தில் கட்டி வைத்து பால் பழம் பஞ்சாமிர்தம் வைத்து செல்லப்பரை குளிப்பாட்டினார் செல்லப்பரும் நல்லூ ரானுக்கு அபிசேகம் செய்தது காணும் : விடடா விடடா என்று சொல்லி நன்னியர் வழங்கிய புத்தாடை பூண்டு அவ்விடத் திலி ருந்து அகன்றார். மேலும் சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாண வருகையின் போது குதிரை வண்டியில் இவ்வழியால் செல்லும் போது" இது ஒரு பாலைவனத்து பசுந்தரை" என அவ் விடத்திலே நின்று கூறினார்.

ஒரு நாள் நல்லூரான் திருவிழா உற் சவத்தில் முருகன் மயில்வாகனத்தில் வெளி வீதியுலா வர வெளியே வரும்போது யோகர் சுவாமிகள் " நல்லூரான் இன்று நன்றாக நனையப் போகிறார்" எனக் கூறினார் . அப் போது செல்லப்பரும் பின்னால் நின்று கொண்டிருந்தார் . ஆனால் யோகர் சுவாமிகள் தம் குரு செல்லப்பரை காணவில்லை . உடனே செல்லப்ப தேசிகர் " உப்பிடி நல்லூரிலை பண்ணினவை பலபேர்" எனக் கூறினார். ஆனால் வடக்கு வீதியில் நல்லூரான் வரும் போது நன்றாக நனைந்து தான் உள்ளே சென்றார்.

ரமண மகரிஷிக்கு அண்ணாமலையான் குருவாயமைந்தது போல செல்லப்ப தேசிகருக்கு நல்லூரானே குருவாயமர்ந்தார் எனக்கூறலாம். தேரடிச் சித்தரென பலர் போற்றும் செல்லப்பர் தமது 55 ஆவது வயதில் தமது வேடத்தைக் கலைக்க முடிவெடுத்தார். சுகவீனமென கட்டிலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்திருந்தார். யோகர் சுவாமிகளும் மற்றையோர் போல் செல்லப்பரை பார்க்கச் சென்று படலையைத் திறந்தார். "யாரடா நீ படலையிலே கர்ச்சித்த செல்லப்பர்" பாரடா வெளியில் நின்று " என்று அதட்டினார். யோகர் சுவாமிகள் படலையைச் சாத்திவிட்டு அவ் விடத்தை விட்டகன்றார்.

செல்லப்பருடன் இரவில் தங்கும் அயலவரிடம் " இன்று இங்கு ஒரு புதினம் நடக்கும் நீ வருவாயோ" என செல்லப்பர் கேட்டார். ஆனால் அந்த அயலவர் அன்றிரவு செல்ல முடியவில்லை அடுத்தநாள் காலை அவர் சென்று பார்த்த போது செல்லப்ப தேசிகர் சிறு குழந்தையை போல் விரலொன்றை வாயில் வைத்து காலொன்றை மடித்து நடராச பாவத்தில் இருக்கக் காணப்பட்டார் . செல்லப்பர் சமாதி வைக்கும் முறையிலும் அகப்படாமல் இருந்தார். அவர் திருவுடல் அக்கினியிலேயே சங்கமித்தது.

சுவாமிகளின் நினைவாலயம் அவரது உறவினர்களான திரு. கனகரத்தினம், கனக சபாபதி ஆகியோரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. செல்லப்ரின் குரு பூசை பங்குனி அச்சுவினியிலும் மாதப் பூசைகள்அச்சுவினி நட்சத்திரத்திலும் சிறப்பாக நடைபெறு கின்றன. தேரடியிலும் அவ்வேளை, அடி யார்களால் நற்சிந்தனை ஓதல், பூசைஎன்பன நடத்தப் படுகின்றன.

**"குரு பக்தியே பெரும் பேறு அதை கொண்டாடி கொண்டாடி நீயாறு"**

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# இலங்கை சிவபூமி

ஆக்கம்: கா.சி. குலரெத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை சிவபூமி

உலகத்தின் மையத்தில் இந்து சமுத்திரத்தால் சூழப் பெற்றுப் பொன்போல் இலங்குவது எங்கள் நாடு. இது பொன் என்னும் பொருளில் ஈழம் எனவும் வழங்கும். இலங்கை ஒரு சிவபூமி என்பது திருமூலர் வாக்கு. சிவனுக்குரிய ஈஸ்வரங்கள் மலிந்த நாடு. சித்தர்கள் உலாவிய சிறப்புடைய நாடு. சிவபக்தன் இராவணன் ஆண்ட இலங்கை திருநாடு. சித்தத்தையைச் சிவன்பால் வைத்த சித்தர்களின் பாரம்பரியம் பெரிது. முத்தியானந்தர் என்னும் கடையிற் சுவாமிகள் முதல் யோகசுவாமிகள் வரை யோகியர், ஞானிகள், துறவியர், சித்தர்கள் யாழ்ப்பாண மெங்கும் தங்கள் ஞானச் சுவடுகளை விட்டுப் போயிருக்கிறார்கள். சித்தர்களின் சமாதிக் கோயில்கள் இலங்கையின் நாற் புறங்களிலும் அமைந்த அளவிற்பார்க்க, வட பிரதேசமாய யாழ்ப்பாணத்திலேயே அதிகமாக அமைந்து ள்ளன. சித்தர்களின் சமாதிகளை மையமாகக் கொண்டமைந்த மடங்கள் யாழ்ப் பாணத்தில் பல பாகங்களிலும் பண் பாட்டிடங்களாக மலர்ந்துள்ளன. அவை குரு பூசை மடங்கள் என்னும் பெயரில் அன்னம் பாலிப் பனவாகவும் உள்ளன. ஞான வொடு க்கத்துக்குரிய நல்ல சூழலமைந்த இடங் களாகவும் உள்ளன.

### நல்லூரை நனைந்த ஞானவெள்ளம்

யாழ்ப்பாணத்து நல்லூர் தமிழ்நாட்டு திருவெண்ணெய் நல்லூர்.ஆதித்த நல்லூர் போன்ற அரும்பெரும் சிறப்பு வாய்ந்த பழைய நகர். நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆரிய சக்கரவர்த்திகள் அகன்ற பெரு நிலப்பரப்பை அரசு செய்தபோது, தமிழ்நாட்டு இராமேஸ்வரத்தையும் பரிபாலித்து, சேதுகாவலர் என்னும் சிறப்புப் பட்டமும் பெற்றிருந்தார்கள். செந்தமிழும் சைவ நெறியும் தலையெடுத்த நல்லூரின் பழைய அரசிருக்கைக்கு அருகிலமைந்த நல்லூர்க் கந்தனாலயத்தைச் சூழ நாற்றிசைகளிலும் காவற் கோயில்கள் அமைந்திருந்தன. கிழக்கில் வெயிலுகந்தபிள்ளையார் கோயில், தெற்கில் கைலாசநாத சிவன் கோயில், மேற்கில் வீரமாகாளி அம்மன் கோயில், வடக்கில் சட்டநாதர் சிவன் கோயில் அமைந்திருந்தன. அரசர்கள் நந்திக் கொடியும் நந்தி முத்திரையுங் கொண்டவர்களாய்ப் பரிபாலனஞ் செய்தனர். இத்தகைய புகழ் பூத்த நல்லூரின் அருமை பெருமைகள் யாவற்றையும் பதினேழாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் போர்த்துக்கேயர் என்னும் பறங்கியர் பாழ்படுத்தி தரைமட்டமாக்கி விட்டனர். பின்னர் ஒல்லாந்தர் என்னும் உலாந்தாக்கள் அரசாட்சி செய்த காலத்தில் சைவ மறுமலர்ச்சி விடிவெள்ளிபோல மெதுவாக ஒளிவீசியது. புலவர்கள் பலர் பக்திப் பிரபந்தங்கள் பாடுந் தகைமையுடையவர்களாய்த் தலையெடுத் தார்கள். நல்லூரை ஞானவெள்ளம் நனைத்தது.

### இன்றைய நல்லூர்

பண்டைய நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைப் பறங்கியர் பாழ்படுத்தி, அத்திபாரத்தையும் கிளறிவிட்டபின், மறு மலர்ச்சிக் காலத்திலே *1734* ஆம் ஆண்டளவில் ஒல்லாந்தர் ஆட்சியின்போது, யாழ்ப்பாணக் கச்சேரியில் உயர்ந்த உத்தியோகம் வகித்த ஸ்ரீமத் இரகுநாத மாப்பாண முதலியார் என்னும் பெரியார், அதிகாரிகளிடம் உத்தரவு பெற்று ஒரு வேற் கோட்டம் அமைத்து, வேல் வைத்து வழிபடுவதற்கான முறையை ஆரம்பித்தார். மக்கள் வழிபாட்டுய்யும் வகையில் சிவத்திரு சுப்பையாக்குருக்கள் என்னும் செம்மனச் செல்வர் பரார்த்த பூசையை முட்டின்றிச் செய்து வந்தார். நல்லூருக்குக் கிழக்கிலிருந்த மடத்தில் சிவத்திரு கங்காதரக் குருக்கள் கந்தபுராண படனஞ் செய்து பக்தி நெறியைத் தூய்மைப்படுத்தி வந்தார்.

### நல்லூர்த் தேரடி

நாள்தோறும் வளர்ந்து வந்து நல்லூரின் சிறப்பு வனப்பு புகழ்பெற்றனவாயின. கிழக்குப் புறத்தில் அமைந்த தேரடிக்குத் தனிச் சிறப்பு உண்டாகியது. அங்கே காவல் தெய்வமாய் வைரவக் கடவுளின் ஆனந்த கோலாகல அருள் வீச்சும், அதனால் கவரப்பெற்ற அடியார் கூட்டமும் கருங்கல் மனத்தையும் கரையப் பண்ணின. கற்பூர வரிசையும், காவடிகள் வரிசையும், கந்தன் மீது பக்திப்பாடல் வரிசையும் தேரடியைத் தெய்வலோகமாக்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேரடிக்குத் தென்புறம்

நல்லூர்த் தேரடிக்குத் தென்புறத்தில் வயல் நிலங்கள் இருந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வல்லிபுரம் என்னும் வேளாளன், நல்லூரரைச் சேர்ந்த பொன்னம்மா என்னும் பொன்னாரை மணந்து, வயலோரத்தில் சிறு வீடு அமைத்து, வேளாண்மை செய்து நல்ல முறையாக வாழ்ந்து வந்தார். அவர்களுக்கு ஆண்கள் இருவரும், பெண்கள் இருவருமாகப் பிள்ளைகள் நால்வர் பிறந்தனர். ஆண்களுள் ஒருவரின் பெயர் செல்லப்பா. பெண்களுள் ஒருத்தியின் பெயர் செல்லாச்சி, செல்லப்பா இளமையில் கந்தமடத்துச் சைவப் பிரகாச வித்தியா சாலையில் ஆரம்பக்கல்வி கற்றபின், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்குச் சென்று ஆங்கிலம் கற்று வந்தார்.

## பூர்வாச்சிரமப் புதினம்

ஓரளவு கல்வி கற்றபின் உண்டான சூழ்நிலை காரணமாகப் படிப்பை நிறுத்தி, உத்தியோகம் பார்க்க வேண்டியவரானார். யாழ்ப்பாணக் கச்சேரியில் ஆராய்ச்சி உத்தியோகம் பெற்று, வெகு திறமையாகக் கடமையாற்றிய காலத்தில், அதிகாரிகளின் அபிமானத்துக்காளாகிப்பல முறை களஞ்சியப் பொறுப்பதிகாரியாகவும் பதிற்கடமை பார்த்து வந்தார். வெள்ளைக் காரர்கள் பாராட்ட மதிப்புடன் உத்தியோகம் வகிக்க செல்லப்பரின் போக்கு, எல்லோருக்கம் ஒரு புதிராகவே இருந்து வந்தது.

## அகத்திலும் புறத்திலும் உண்டான மாற்றங்கள்

செல்லப்பா தமது உத்தியோகங்களை நேர்மையாகவும் திறமையாகவும் ஒழுங்காகவும் அதிகாரிகள் மெச்சும் வகையில் பார்த்து வந்த காலத்தில், அரசவுத்தியோகம் ஆதிக்கம் செல்வாக்கு முதலியசிறப்புக்களில் மனங்கொள்ளாது, உள்ளத்தில் ஊற்றெடுத்து வந்த ஒரு வேகத்தின்பால் சென்ற வண்ணம் வாழ்ந்து வந்தார். ஞான நாட்டங் கொண்ட செல்லப்பரின் நடையுடை பாவனைகளில் நாளிலும் பொழுதிலும் மாற்றங்கள் உண்டாயின. அவரின் போக்குபெரிய புதிராகவே இருந்தது. எவருக்கும் பிடிகொடாமல், தாமும் தம் கடமையுமாக வெளியே நடந்த வண்ணம், தம் அக நாட்டத்தில் கருத்துன்றிக் கந்தசுவாமி யாரும் தாமும் அர்த்த சாமத்தின் பின் அந்தரங்கத் தொடர்பு கொண்டு வந்தார். "பிதாவே பிதாவே" என்று பிதற்றியும் வந்தார். உள்ளே ஊறிவந்த ஒருவகை ஞானப் பெருக்கு, வெளியே வழியத் தொடங்கிய வேளையில் அவரின் போக்கு பித்தர் போலவும், பிசாசு பிடித்தவர் போலவும், குழந்தை போலவும் இருந்தது. தமக்குள்ளேயே பேசிக் கொள்ளுதல், "ஓமோம்" என்று தலை அசைத்தல், வலக்கையை மேலே உயர்த்தி விசுக்கி உரத்துப்பேசி, வருவோர் போவோரைத் தம்மை அண்டவிடாது துரத்தி வந்தார். அவர் தமக்கு அண்மையிற் சென்றோரைத் துரத்தத் தொடங்கிய காலத்திலேயே தமது உத்தியோகத்தையும் உதாசீனம் செய்து கச்சேரித் தொடர்பையும் துண்டித்துக் கொட்டிலின் மூலையில் குந்தியிருக்கத் தொடங்கினார்.

## மூலையிலிருந்து முற்றம் வரை

செல்லப்பா சுவாமிகள் வெளியே உலகத் துறவில் விசர்க்கோலமும், உள்ளத்திலே ஒடுக்கமும் ஞான நாட்டமும் சிந்தனையுங் கொண்டு, நல்லூரான் திருவருள் வெள்ளத்தில் நாளும் நனைந்து மூழ்கியிருந்த காலத்திலே, நல்லூரை வட்டமிட்ட கடையிற் சுவாமிகளின் கடைக்கண் பார்வையும் தீட்சையும் உபதேசமும் கிடைத்தன என்று நம்புதற்கு இடமுண்டு.

குருவருள் பெற்ற பேற்றினாலே புறக்கோலம் நீங்காமலே அந்தக்கரணசுத்தி பெற்று, பசுகரணங்கள் பதிகரணங்களாக மலரப் பெற்றார். முன்னர் மூலையில் முடங்கிக்கிடந்தவர், குருவருட் பிரகாசத்தாலே முச்சந்திக்கு வந்தாற்போலத் தேரடியில் வந்து குந்தியிருந்து யாவருந் தரிசிக்கக் கூடியவரா யிருந்தார்.

"மூலையிலிருந்தாரை முற்றத்தே விட்டவர் சாலப் பெரியார் என்றுந் தீபற தவத்திற் தலைவர் என்றுந் தீபற" என்பது பதினான்கு சித்தாந்த சாத்திரங்களுள் ஒன்றான திருவுந்தியார். தேரடியிற் குந்தியிருந்து சிந்திக்கத் தொடங்கிய காலத்திலேயே அடியார்கள் பலர் அவரிடம் ஏதோ அற்புத சக்தியுண்டென்று அனுமானித்து, அவரைச் சூழ்ந்து மொய்க்கத் தொடங்கினார்கள். அதேவேளையில் அவர் தமக்குள்ளே சிந்தனைப் பேச்சுக்களை முணுமுணுக்கக் கண்ட சிறுவர்கள், விசரன் என்று கூறிக் கல்லெறியவுந் தொடங்கினர். அதனால் உறவினர் அவரை விலங்கில் மாட்டி வைத்ததும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகத் துறவும் உன்மத்தர் போக்கும்

உள்ளத்தில் எழுந்த துறவு மனப் பான்மையால் உலகத்தை அறவே துறந்த செல்லப்பா சுவாமிகள், வெளியுலகத்தவருக்கு விசரனாகவும், ஆன்ம ஈடேற்றங் கருதிய பெரியவர்களுக்கு ஞானியாகவும் காட்சியளித்தார். அவர் பொது மக்களிடம் வாங்கிய பட்டத்துக்கமையமேலும் பைத்தியக் கோலத்தை மிகைப்படுத்தி வந்தார். தலைமயிரைப் பரட்டையாகத் தொங்கவிட்டு, நீராடுதலை வெகுவாகக் குறைத்து, தண்ணீர் படாத கந்தைத் துணிகளை அழுக்கோடு அலங்கோலமாக அணிந்து, கண்டபடி கையுயர்த்திச் சிரித்து, ஒட்டியுலர்ந்த உடம்பின் மெலிந்த முகம் மலர, உதட்டை விட்டு வெளியே மிதந்துதோன்றிய பற்கள் புறந்தெரிய செல்லப்பா சுவாமிகள் காட்சியளித்தார். இவ்வாறாக உடன்பிறந்த சகோதரி செல்லாச்சி சகோதரபாசத்தால் ஈர்க்கப் பெற்று உரிய வேளைகளில் ஆகாரங்கொண்டு சென்று, கூவியழைத்தால், “போ!, போ! கொண்டுபோ, நீ நஞ்சுபோட்டுக் கொண்டு வந்தாய்” என்று அதட்டிக் கலைத்துவிட்டு, எழுந்து எட்டி எட்டி நடந்து நெடுந்தூரம் சென்று, மீண்டும் வந்து குந்தியிருப்பார். தமக்கு விருப்பமுள்ள போது ஏதாவது உண்டு, பெரும் பகுதியைக் காகம், கோழி,நாய் உண்ணுமாறு வைத்து வேடிக்கை பார்ப்பார். உயிரினங்களோடு உறவு கொண்டாடியும் வந்தார்.

## முத்துப்போன்ற சிந்தனைத் துளிகள்

பகல் முழுவதும் விசர்க்கோலம் கொண்டிருக்கும் செல்லப்பா சுவாமிகள், இரவில் அர்த்தசாமப் பூசை நிறைவுற்று எல்லோரும் அகன்றபின், மெதுவாக இருக்கைவிட்டெழுந்து கோபுர வாசற் பக்கம் சென்று, முருகனைத் தேடுவார் போல், பிதாவே! பிதாவே!! என்று கூவியழைத்து, அவருடன் சொல்லெதிர் பெற்றும் பெறாமலும் உரையாடிவந்தார். அவரின் உள்ளத்தில் முத்துப்போன்ற சிந்தனை வாக்கியங்கள் உருண்டு திரண்டு வெளிவரக் காத்திருந்தன. பக்குவமுள்ள சீடன் ஒருவன் வருவான், அவன் காதில் இந்த மகா வாக்கியங்களை வார்த்துவிடலாம்,
அவன் மூலம் இவ் வாக்கியங்கள் சுருதியென எல்லோருக்கும் கேட்கும்,எங்கும் கேட்கும் எனக் கருதிச் சற்பாத்திரரான சீடன் வரவுக்குக் காந்திருந்தார்.

## புத்தாடை புனைந்த வண்ணம்

சுவாமிகளின் முகத்தில் ஒளிவட்டம் வீசுவதையும், அவரின் அழுக்கேறிய உடம்பில் கந்தையாடை அலங்கோலமாகக் கிடந்ததையும் கண்டு, மெய்யடியார் ஒருவர் தாம் புதிதாக வாங்கி வந்த வேட்டியையும் சால்வையையும் எடுத்துச் சென்று, சுவாமிகளைத் தொழுது, பணிந்து மன்றாடி ஏற்றருள் செய்தல் வேண்டும் என்று இரந்தார். சுவாமிகள் அவர்மீது இரங்கி அவற்றை வாங்கிக் கிழித்து, அழுக்குப்படுத்தி, அலங்கோலமாக அணிந்து, “சரி நீ போகலாம்” என்று விடை கொடுத்தனுப்பினார்.

## சித்துக்கள் வரத்தொடங்கின

சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர்கள் சித்தர்கள். அவர்கள் அட்டாங்க யோகம் முதலிய அரும்பெரும் சாதனைகளாலும் இறையருளாலும் மனித சக்திக்கு அப்பாற்பட்ட மாண்புடைய சக்திகளைப் பெற்றுச் சித்து விளையாட்டுக் காட்டுவதும் உண்டு. அத்தகைய சித்துக்கள் சுவாமியிடம் வந்ததும் அவர் வெளி வெளியாக, “செல்லப்பன் சாமி காட்டமாட்டான், விசரன் என்று பெயர் வாங்கிப் போவான்” என்று கூறியதும் உண்டு. எப்படிப்பட்ட சித்தர்களுக்கும் சில சமயம் அவர்களை யறியாமலே சித்துக்கள் தலைகாட்டிப் போவதுமுண்டு. செல்லப்பா சுவாமிகளிடம் அன்புகொண்டிருந்த குருக்கள் ஒருவர், திருநெல்வேலியிலிருந்து இறைவனின் தேவாமிர்தமனைய பிரசாதத்தைப் பக்குவமாகக் கொண்டு வந்து நீட்டிய போது, அவரின் பக்தியை மெச்சியபோதிலும், அதனை வாங்கியுண்ண விரும்பாமல், உண்மையைக் கூறினார். “கொண்டு போங்கள் உது எச்சிற்படுத்தப்பட்ட பிரசாதம் எனக்கு வேண்டாம்”.

குருக்கள் ஏமாற்றமும் வியப்பும் அடைந்து வெட்கித் தலை குனிந்தவாறு வீடு சென்று, பிரசாதம் எச்சிற்படுத்தப்பட்டதோ என விசாரித்தபோது, அங்கே குழந்தைகள் அதை அசுசிப்படுத்தியதாக அறிந்து பிரமித்துப் போனார். சுவாமிகள் நல்லூருக்கு மேற்கில் உள்ள வைமன் வீதிவழியாகக் கால் போக்கில் போனபோது, எதிர்ப்பக்கமாக இளைஞன் ஒருவன் நன்றாக முறுகி வளர்ந்த காளை மாட்டுக்கு நடை பழக்கியவாறு மிடுக்காக வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளையின் போக்கைக் கவனித்த சுவாமிகள் "குத்த வல்லவோ போகிறது. மெத்தக் கவனம்" என்றார். இளைஞன் விசரன் பேச்சு என்று உதா சீனமாகப் போன போது, காளை மிரண்டு திரும்பி எதிர்த்து அவனைத் தாக்கி வீழ்த்தியது.

சுவாமிகளின் சகோதரியார் குடும்பத்தில் குழந்தை யொன்றுக்குக் கடும் சுகவீனமானபோது, அயலில் பெயர் பெற்றிருந்த வைத்திய நிபுணரிடம் காட்டி, உயர்ந்த மருந்து எடுத்துப் பருக்க முயன்ற போது, குழந்தை மருந்து ண்ண மறுத்து, ஓடிச் சென்று சுவாமிகளின் மடியில் வீழ்ந்து கிடந்தது. சுவாமிகள் குழந்தையைத் தேற்றித் தமது கொட்டிலின் முற்றத்தில் வளர்த்த தோடையில் கனி பறித்துக் கரைத்துப் பருக்கியதும், குழந்தையின் கடுமையான நோய் உடனடியாகத் தணிந்து, அடுத்த நாள் பூரணமாகக் குணமாயிற்று.

செல்லப்பா சுவாமிகள் உண்பதற்கு உணவை எடுத்துக்கொண்டுநடந்தபோது, நாய்க்குட்டியொன்று அவரின் காலடியை நக்கியவாறு பின்தொடர்ந்தது. அதன் கர்மபலனை உடனடியாக உணர்ந்த சுவாமிகள், தாம் கொண்டு சென்ற உணவில் ஒரு பகுதியை எடுத்து நாய்க்குட்டிக்கு குனிந்து வைத்து விட்டு, "நீ உண்டபின் உன் வழியே போ" என்று விடைகொடுத்தார். நாய்க்குட்டி உண்டபின் நடந்து போன வழியில், கார் நெரித்து உடனடியாக இறந்து போயிற்று.

கொழும்புத்துறையில் வாழ்ந்த இராமலிங்கரின் பிள்ளை யொன்றுக்குக் கடுஞ் சுகவீனம், அதைச் சுவாமிகளிடம் காட்டுவதற்கு தகப்பனுக்கும், தாய்க்கும் அதிக விருப்பம். ஆனால் இராமலிங்கரின் மனைவியின் தாய், அந்த விசரன் என்ன சாதியோ தெரியாது. எங்கள் பிள்ளையை அங்கே கொண்டு போகாதே என்று எச்சரிக்கை செய்தார். இராமலிங்கர் கிழவி சொல்லை அலட்சியம் செய்துவிட்டு மனைவியுடன் குழந்தையைக் கொண்டு செல்லப்பா சுவாமிகளிடம் வந்தார். அவர்கள் வரவைக் கண்டதும் சுவாமிகள் "கனகம்மா! பிள்ளையை இங்கேகொண்டு வா. தமிழ்ப் பரிகாரியிடம் காட்டி இன்ன மருந்து வாங்கிக்கொடு. உன்னுடைய கொம்மா சாதி பேசுகிறார். நாங்கள் சந்திர சூரியரறிய வட்டுக்கோட்டை வேளாளர். வந்தார் வரத்தார் அல்லோம்" என்றார்.

சுவாமிகள் குழந்தையைத் தொட்டதும் காய்ச்சல் குறைந்தது. தமிழ்வைத்தியஞ் செய்ததும் முற்றாகக் குணமானது.

செல்லையாப்பிள்ளை என்பவர் ஐந்து பெண் பிள்ளைகளுக்குத் தந்தை. தனக்கு இறுதிக்கடன் செய்வதற்கு ஆண்பிள்ளை இல்லையே என்ற கவலையால் வருந்தி, செல்லப்பா சுவாமிகளிடம் வந்து, அவரை இறுகக் கட்டிப்பிடித்து, "சுவாமி! எனக்கு ஆண் குழந்தையொன்று வேண்டும். அருள் செய்த பின்னரே இந்தப் பிடியை விடுவேன்" என்றுகூறினார். "செல்லையா உனக்கு ஆண் குழந்தை கட்டாயம் பிறக்கும். விடு விடு" என்று விடுவித்துக்கொண்டார். செல்லையருக்கு அடுத்த ஆண்டு ஆண் குழந்தை பிறந்தது.

சுவாமிகள் ஒருநாள் அவசரம் அவசர மாக உலை வைத்துக் காற்படி அரிசி கொண்டு சோறாக்கி, ஒரு கறியும் காச்சிய பின், தென்னங் கிடுகுகளை அடுக்கி ஐந்து வாழை யிலைகளை பரப்பி, அவற்றில் உணவு படைத்து நிமிர்ந்த வேளையில் நால்வர் வந்தார்கள். "உங்களை எதிர்பார்த்துத்தான் உணவு படைத் தேன்" என்று கூறி ஐவருமாகக் காற்படியரிசிச் சோற்றை வயிறு நிரம்ப உண்டு மகிழ்ந்தார்கள்.

நன்னியர் என்பார் சுவாமிகள் மீது கொண்ட பக்தி மிகுதியால் அவரை இறுகப் பிடித்து மரத்திற் கட்டி வைத்து நல்ல முறையில் நீராட்டினார். "எட எட நீ நல்லூரானுக்கு அபிஷேகஞ் செய்தது போதும் போதும் அவிழ்த்துவிடு" என்று மன்றாடி விடுவித்துக் கொண்டு ஓடினார்.

## அண்டி வந்த அடியவர் கூட்டம்

செல்லப்பன் சாமி காட்டமாட்டான் என்று அவர் வெளிவெளியாகக்கூறியதையும் பொருட்படுத்தாமல் அடியவர்கள் கூட்டம் அவரை மொய்த்துச் சூழத் தொடங்கியது. நெடுந் தூரத்திலிருந்தும் அடியவர்கள் ஆராமையோடு என்னப்பன் செல்லப்பன் எனக்கருளும் நல்லப்பன் நல்லூரின் பொன்னப்பன் என்று நம்பிவரத் தலைப்ப ட்டனர்.

கொழும்புத்துறை திருஞானசம்பந்தர், இராமலிங்கர், துரையப்பர், பொன்னையர், கந்தர்மடத்து ஆறுமுகம், இளையதம்பி, தாமோதரம்பிள்ளை, கம்பந்தறை முருகேசு முதலானோர் சுவாமிகளை மொய்க்கத் தொடங்கினர். தமது அன்பர்கள் எனவுணர்ந்து அவர்களோடுஅன்பாகப் பேசிய அவர், சீடருள் சிலர் உலகத்தைத் துறந்து சந்நியாசியாகப் போவதாகக் கூறினால், "உனக்கும் அதற்கும் வெகுதூரம் ஓடிப்போய் கலியாணம் முடி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

என்று துரத்துவார். சிலர் சுவாமி என்னைக் கலியாணம் முடிக்குமாறு உறவினர் நெருக்குகிளார்கள் என்று அநுமதி கேட்டாற்போல விண்ணப்பித்தால், "ஏன் என்னைக் கேட்டே நீ கலியாணம் முடிக்க வேண்டும். ஓடு ஓடு" என்று துரத்துவார். யாரேனும் கலியாணக் கதை பேசினால், "கேட்டியே கவுண்மென்ட் ஏசண்டுத் துரை என்னைத் தன் மகளைக் கலியாணம் முடிக்கட்டாம். பண்ணட்டாம் பண்ண ட்டோ?" என்று பச்சையாகக் கேட்பார்.

### முல்லைத்தீவுச் சீடன் முத்திபெற்றமை

முல்லைத்தீவில் வாழ்ந்த பெரும் கமக்காரன் ஒருவர், செல்லப்பா சுவாமிகளின் சிறந்த சீடர்களில் ஒருவராக ஒழுகியவர். அவர் சுவாமிகளிடம் சோறு பெற்றுண்பதைப் பெரும் பிரசாதமாகக் கருதி வருபவர். ஒரு முறை அவர் சுவாமிகளுக்கு அருகிலமர்ந்து உண்ணும் பாக்கியம் பெற்றபோது, இடையிடை சுவாமிகள் உண்ட இலையை உற்று நோக்கினார். சுவாமிகள் உண்டபின் இலையை வழித்து உச்சிட்டதை உண்ணவேண்டும் என்று உள்ளத்தெழுந்த உணர்ச்சிவயப்பட்டிருந்தார்.

அவரின் கருத்தைக் குறிப்பாலுணர்ந்த சுவாமிகள், தாம் உண்டபின் இலையை மடித்து எடுத்துக்கொண்டு கிழக்கு நோக்கி, செம்மணிவரை நடந்து அங்கே ஒரு பாழ்ங்கிணற்றில் இலையை எறிந்தார். சுவாமிகள் கண்ணிற்படாமல் அவரைப் பின்தொடர்ந்த சீடர், கிணற்றில் குதித்து இலையை வழித்துத் தாம் நக்கிய பின், கைகால் கழுவி, விபூதி பூசி, ஒரு பூவரச மரத்தின்கீழ் தியானஞ் செய்ய பத்மாசனத்தில் இருந்தார். அவர் இருந்தவாறே அங்கே சமாதியான செய்தி ஊர்ப் பிரசித்தம். அவரின் சமாதி இன்றும் வயல் வெளியில் மிகச் சிறிதாகக் கட்டப் பெற்றுள்ளது.

### ஆளுமைவாய்ந்த அருமையான சீடர்

கொழும்புத்துறையில் வாழ்ந்த மஸ்கேலியாவில் வியாபாரஞ் செய்த அம்பலவாணர் என்பவர், மாவிட்டபுரத்தில் சின்னாச்சி அம்மையாரைத் திருமணஞ் செய்து 1871ஆம் ஆண்டில் பெற்ற மைந்தன் சதாசிவம். சிலகாலஞ் செல்ல அம்பலவாணர் இறந்து போனதும், அவரின் தம்பியார் சின்னையா என்பவர் சதாசிவத்தை சென்பற்றிக்ஸ் கல்லூரியில் சேர்த்து நல்லமுறையில் கல்வி கற்பித்து வந்தார். சின்னையர் கிறிஸ்தவ சமயச் சூழலில் யோசேப் என்னும் பெயர்பெற்று வாழ்ந்தவர். அந்தவகையில் சதாசிவத்துக்கும் யோகநாதன் என்னும் பெயர் வழங்கியது.

சென்பற்றிக்ஸ் கல்லூரியில் யோகநாதன் பயின்ற காலத்திலேயே விவேகியாய்த் தாம் பயின்றவற்றை ஏனைய மாணாக்கர்களுக்கு விளக்கிக், குட்டிப் பிரசங்கியாராயும் இருந்தார். தாம் சுயமாக உழைத்து வாழ்தல் வேண்டும் எனக் கருதிப் படிப்பை நிறுத்திவிட்டு, கிளிநொச்சியில் இரணைமடுக் குளத்துத் திருத்த வேலைகள் பிரவுண் என்னும் வெள்ளைக்காரன் தலைமையில் நடைபெற்ற காலத்தில் பண்டசாலையில் வேலை கிடைக்கப்பெற்றார்.

உத்தியோகத்தில் ஈடுபட்ட காலத்திலேயே அகநோக்கில் ஆழமான பயிற்சியில் ஈடுபட்டிருந்த யோகநாதனின் பார்வை காந்த சக்திவாய்ந்ததாக வளர்ந்தது. அதை அநுபவத்தில் உணர்ந்திருந்த மேலதிகாரி பிரவுண் தமது பிரதம எழுத்தாளரிடம் யோகநாதன் தன்னைப் பார்க்கும் போது, தனக்கு என்னமோ செய்வதாகக் கூறி, அவர் தம்மைப் பார்க்காதிருக்குமாறு சொல்லுமாறு எச்சரிக்கை செய்திருந்தார் என்பர். இவ்வாறாகக் கொழும்புத்துறை திருஞானசம்பந்தர், இராமலிங்கம் முதலானோர் செல்லப்பா சுவாமிகளின் பெருமையைக் கூறக்கேட்ட யோகநாதன், ஒருநாள் அவர்களோடு சேர்ந்து, செல்லப்பா சுவாமிகளைத் தரிசிப்பதற்காக நல்லூருக்குச் சென்றார். குருநாதனைக் கண்ட யோகநாதன் கொண்ட மனநிலை எப்படியானதென வெறுஞ் சொற்களால் கூறமுடியாது. யோகநாதன் தமது மன நிலையைத் தாமே குருவணக்கமாகப் பாடிக் குவித்த நற்சிந்தனைப் பாடல்களில் நன்கு விளக்கியுள்ளார்.

## நேரிசை வெண்பா

**ஆசானைக் கண்டேன் அருந்தவர்வாழ் நல்லூரிற்
பேசா தனவெல்லாம் பேசினான் – கூசாமல்
நின்றேன் நீ யாரடா வென்றே யதட்டினான்
அன்றேயான் பெற்றே னருள்.**

**மலைத்து நின்ற வென்னை மனமகிழ நோக்கி
அலைத்து நின்ற மாயை யகலத் – தலைத்தலத்திற்
கைகாட்டிச் சொல்லலுற்றான் கந்தன் திருமுன்றில்
மெய்மறந்து நின்றேன் வியந்து.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரடியில் யோகநாதனின் செவியில் ஒலித்தவை "ஆரடா நீ? தேரடாவுள்! தீரடா பற்று!" ஆரென்றாராய்வதற்கு உள்ளே தேடவேண்டும். உள்ளே தேடுமுன் பற்றுக்கள் பாசங்களை நீக்குதல் வேண்டும்.

மலைத்து நின்ற சீடனைச் சூழ நின்றவர்கள் வியப்பெய்த மனமகிழ்ச்சியோடும் பெரும் கருணையோடும் நோக்கிய குருநாதன்" உன்னைத்தான் பார்த்திருந்தேன், உனக்கே பட்டஞ் சூட்டப்போகிறேன், வா வா" என்று அருகிலழைத்து அன்போடுஅருள்கலந்த அறிவுரைகளை அகம்மலரவும் புறம் புளகாங்கிதமெய்தவுங்கூறியருளினார்.

செல்லப்பா சுவாமிகள் சிரித்துச் சிரித்துச் சொன்னவையெல்லாம் சீடனுள்ளத்தில் தொகுதி தொகுதியாய்ச் சென்று படிந்தன. அவர் மனதிற் படிந்து பதிந்தவை யாவும் பிற்காலத்தில் பாடல்களாக வெளியே வந்து பல்லாயிரவர் கருத்தைக் கவர்ந்தன.

**வெண்பா**

**தன்னை யறியத் தவமுஞற்றும் மாதவரை**
**அன்னையைப்போ லாததிக்கு மாறுமுகன் – சந்நிதியில்**
**தேரடியிற் தேசிகனைக் கண்டு தெரிசித்தேன்**
**தேரடாவுள் ளென்றான் சிரித்து.**
**வண்டு பண்செய்யும் வளம்பெருகு நல்லூரில்**
**மிண்டு மனத்தவரை மேனிலைக்குக் – கொண்டுவரும்**
**தேரடியிற் தேசிகனைக் கண்டுதெரித்தேன்**
**தீரடாபற் றென்றான் சிரித்து.**

**கலிவிருத்தம்**

**சிரித்து நல்லூர்த் தெருவிற் றிரிபவர்**
**வெறித்த பார்வையர் வேடம் விரும்பிலர்**
**கறுத்த மேனியர் கந்தைத் துணியினர்**
**எரித்த னர்பவ மினியெனக் கில்லையே.**
**முன்னரே அறிந்த திருமுகம்**

செல்லப்பா சுவாமிகளை யோக சுவாமிகள் முன்னரே கண்டிருந்தார். ஒருசமயம் அவருடைய கால் விரலில் காயம் ஏற்பட்டிருந்த போது அவர் மருந்து கட்டுவதற்கு நொண்டியவாறு நடந்து போன வழியிற் கண்டு, "உதற்கு மருந்து வேண்டாம். அந்த இலையைத் துவைத்து வைத்துக்கட்டு" என்று கூறி அதனாற் குணமடைந்ததும் உண்டு.

கொழும்புத்துறை நன்னியர் கட்டி வைத்த போது செல்லப்பா சுவாமிகள் கூக்குரல் போட்டபோது ஓடிச்சென்ற அயலவர்களுள் யோகநாதனும் ஒருவர்.

**ஞானமுறுக்கேற்றியமை**

செல்லப்பா சுவாமிகளைக் கண்ட மாத்திரத்தே தம்வயமிழந்த யோகநாதன் நாளடைவில் ஞானமுறுக்கேறி யோக சுவாமி களானார். ஞானம் கைவந்த பின்பும் குருநாதனை விடாது பின் தொடர்ந்து அவரின் கடைக் கண் பார்வையிற்பட்டு இரும்பு பொன்னாகியதுபோல மாறியமைந்ததோடு, அவரிடம் கேட்ட ஏச்சிலும் பேச்சிலும் நல்லுபதேசங்கள் மலிந்துகிடந்த விந்தையை யுணர்ந்து சிந்தையிற் கொண்டு செம்மாந்திருந்தார்.

**சோதனைக்குமேற் சோதனை**

யோக சுவாமிகளின் பரிபக்குவத்தை உலகத்தவர் அறிந்துணரும் வண்ணஞ் செய்வதற்குச் செல்லப்பா சுவாமிகள் கையாண்ட சூழ்ச்சிகள் சோதனைகள் மிகப்பல. தம்மருமைச் சீடரை அன்புடன் விழித்து, "யோகா! வா! இன்றைக்குக் கீரிமலைக்குச் சென்று நீராடி, மடத்திற் சோறுண்டுவருவோம்" என்பார். இருவரும் ஒருவர் பின் ஒருவராக விரைவாக விரைந்து நடந்து கீரிமலைக் கடற்கரையை அடைந்ததும், செல்லப்பா சுவாமிகள் சீடரைப் பார்த்து, "யோகா! நீராடி விட்டோம் வா போவோம்" என்று சென்றவேகத்தில் திரும்புவார். சீடர் வேறொன்றும் பேசாது மௌனமாகக் குருநாதன் திருவடிகளைப் பின் தொடர்ந்து மீண்டுவருவார்.

"யோகா! இன்று பங்குனித் திங்கள். வா நாங்கள் பன்றித்தலைச்சிக்குச் சென்று, பொங்கிச் சாப்பிட்டு மீள்வோம்" என்று கூறிச் செல்லப்பா சுவாமிகள் எட்டி நடப்பார். சீடரும் நிழல்போல் அவரைப்பின்தொடர்ந்து போவார்.

"யோகா! வா! இன்றைக்குப் பிச்சை எடுத்து வருவோம்" என்று கூறி அழைத்துச் சென்று நாட்டுக் கோட்டைச் செட்டிமார் கடை வாசல் ஒன்றில் கால் நோவையும் கவனிக்காது, தூரத்தில் நிற்பார். குருவின் நிலை கண்ட சீடரும் ஒதுங்கிக் கைகட்டியவாறு நிற்பார். ஒரு நாள் கடையில் கணக்குப்பிள்ளை நீண்ட நேரத்தின் பின் அவர்களைக்கண்டு ஆளுக்கொரு செம்புக் காசு கொடுத்தார். காசைக் கையேற்ற செல்லப்பா சுவாமிகள் அதனைக் கண்களில் ஒற்றி "இன்று நல்ல உழைப்பு" என்று மகிழ்ச்சி தெரிவித்தார். யோகா! வா! இன்று ஒரு சோறும் ஒரு கறியும் சமைத்து உண்போம்" என்று கூறிக் குந்தியிருந்து பெரிய அடுக்குகள் எடுத்து விசித்திரமாகச் சுவைபடச் சமைத்து இருவரும் உண்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொன்னவண்ணம் செய்த பணிவு

யோகசுவாமிகள் குருவாக்கைத் தட்டாது, தேவ வாக்காகக் கொண்டு ஆசான் சொன்னவண்ணம் பணிவோடு கீழ்ப்படிந்து வந்தார். முன்னர் திருவண்ணாமலையில் குகை நமச்சிவாய தேவர் என்னும்முனிவர், குகையில் தங்கியிருந்து தவஞ்செய்து, அருணாசல ஈஸ்வரனோடு அடிக்கடி உரையாடி வந்தார். "அருணசலா! சுகமா?" என்று முனிவர் கேட்க, இறைவன் "சுகம் சுகம்" என்று விடைபகர்வது வழக்கம். ஒரு சமையம் குகை நமச்சிவாயரிடம் நமச்சிவாயர் என்னும் பெயருடைய சீடர் ஒருவர் வந்தார். வந்தவரின் பக்குவத்தை அறிவதற்குக் குரு அவரை ஓரிடத்தில் நிற்கச் சொன்னார். குரு சொன்னவண்ணம் சீடர் ஆடாது அசையாது இரவு பகலாக நின்றபோது மழை பெய்தது. சீடர் அசையவில்லை. பெய்த மழை அவரை நனைக்காது விலகிப் பெய்தது. சீடரின் பக்குவ மறிந்த குரு சீடருக்கு குரு நமச்சிவாயர் எனப் பட்டங்கட்டி இரு யானைகளை ஒரு தறியிற் கட்டமுடியாது எனக் கூறி வேறிடத்துக்கு அனுப்பிவிட்டார்.

இங்ஙனமே செல்லப்பா சுவாமிகள் தம் சீடரைப் பார்த்து "யோகா! இங்கே இரு" எனப் பணித்துப்போனார். யோகசுவாமிகள் இருந்தார்கள். செல்லப்பா சுவாமிகள் மூன்று நாள்கள் கழித்து வந்து அவரை தட்டி எழுப்பினார்.

## நாற்பது நாள் நற்றவம்

அன்றொரு நாள் 1910ஆம் ஆண்டில் செல்லப்பா சுவாமிகள் யோகசுவாமிகளையும், கதிரவேலுச் சுவாமிகளையும் அழைத்து, அருகருகே அமரச்செய்து தவஞ் செய்யுமாறு பணித்தார். அவர்களுக்கு வேண்டிய பணி விடைகளையும் பாதுகாப்பையும் கொழும்புத் துறை திரு ஞானசம்பந்தர் கவனித்து வந்தார்.

தியானத்தமர்ந்த சீடர்கள் இருவரும் இரவு பகல் தெரியாமல் நாற்பது நாள்கள் தவத்தில் இருந்தார்கள். நாற்பதாம் நாள் முடிவில் செல்லப்பா சுவாமிகள் அவர்களைத் தட்டியெழுப்பி, "ஓடுங்கள்" என்றார். இருவரும் கிழக்கு நோக்கி விரைந்து நடந்தபோது, யோகசுவாமிகள் தாம் கதிர்காமம் போவதாகக் குறிப்பால் உணர்த்தி உத்தரவு பெற்று நடந்தார். அந்த இரகசியம் எவருக்கும் தெரியாது போகவே பல நாள்களாக யோகசுவாமிகளைத் தேடியும் காணமுடியாது கலங்கிய உறவினர்கள் செல்லப்பா சுவாமிகளிடம் சென்று கேட்டார்கள்.

## யோகன் செத்துப்போனான்

உறவினர்கள் செல்லப்பா சுவாமிகளிடம் யோக சுவாமிகளின் இருப்பிடத்தைக் கேட்டபோது, சுவாமிகள் திடீரென "யோகன் செத்துப்போனான்" என்று அழுத்தமாக அறைந்தாற்போல் அறிவித்தார். அதனைக்கேட்ட உறவினர்கள் அழுது புலம்பி, கொழும்புத்துறைக்கு மீண்டு, யோகசுவாமிகளுக்கான அபர கிரியைகள் அத்தனையையும் செய்து கவலையோடு இருந்தார்கள்.

## கதிர்காம யாத்திரை

கால்நடையாகக் கதிர்காம யாத்திரை செய்த யோகசுவாமிகள் திருக்கோணமலையில் வணங்கிக்கொண்டு மட்டக்களப்புக்குச் சென்றார். அங்கே மந்திரவாதியாகிய சந்நியாசியொருவர் தாமும் கதிர்காமம் வருவதாகக் கூறி இருவருடன் காட்டு வழியாகச் சென்றனர்.

வழியில் பொத்துவில் பிரதேசத்தில் பற்றைக் காட்டிலிருந்து வேகமாக வந்த எருமைக் கடாக்கள் இவர்களைத் தாக்க வந்தன. மந்திரவாதி தன்னாலானவரை தமது மந்திர உச்சாடனத்தை உதடசையக் கடுமையாகச் செய்தார். மந்திரங்கள் பலிக்காது போகவே அவர் விரைவாக ஓடிச்சென று பெரிய மரத்தில் தாவியேறிக் கொண்டார்.

யோகசுவாமிகள் தாம் நின்ற நிலை விட்டு ஆடாமல் அசையாமல் தன்னைத் தாக்கவந்த எருமையை இமை வெட்டாமல் பார்த்தார். இவர் பார்வையைக் கண்ட எருமை, மூர்க்கந் தெளிந்து, சாந்தமாகத் தன்போக்கில் செல்லவே, ஏனைய எருமைகளும் அதனைப் பின் தொடர்ந்து மறைந்தன. மரத்திலிருந்த மந்திரவாதி மெதுவாகக் கீழே இறங்கியதும் யோக சுவாமிகளின் தவவலிமையை வெகுவாக மெச்சினார்.

கதிர்காமத்தில் சில வாரங்கள் தங்கி வழிபாடாற்றிய பின், யோகசுவாமிகள் மாத்தறை, காலி வழியாகக் கொழும்பு சென்று, அங்கிருந்து கண்டி, மாத்தளை முதலான மலைநாடுகளையும் கண்டார். அவர் மாத்தளையை அடைந்தபோது ஆறுமாதகாலம் நீராடாமல், மாற்றுடை அணியாமல் இருந்தார். அவரை மேலும் அந்நிலையில் திரிவதற்கு இறையருள் இடங்கொடுக்கவில்லை.

சிவ பக்தியுள்ள ஓவசியர் ஒருவர் ஒரு நாளிரவு அற்புதமான கனவுகண்டார். கனவில் "என்னன்பன் கதிர்காமஞ் சென்று கடுந்தவத்தனாகி மிகவும் கஷ்டப்பட்டு மாத்தளையில் வந்து தங்கி ஒதுங்கி இருக்கிறான். அவனை அணுகித் தெய்வ சித்தம் இது என்பதை விளங்கி நீராடச் செய்து, புத்தாடையுடுத்தி, உணவூட்டி யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைத்தல் உன்கடன்" எனப் பிறந்த அருளாணையை உணர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழித்தெழுந்த ஓவசியர் தமது அயலிலேயே யோகசுவாமிகளைக் கண்டு கண்ணீர் வழிய வணங்கிக் கனாத்திறனை உரைத்தார். அதைக் கேட்ட யோகசுவாமிகள், தெய்வ சித்தம் இதுவாயின் என்னாலானதினியொன்றும் இல்லை" எனக் கூறி உபசரிப்புகளுக்கு உடன்பட்டார். யாழ்ப்பாணத்துக்குப் புகையிரதச் சீட்டைப் பெற்று மீண்டும் வந்து குருவை வணங்கித் தம் உறைவிடஞ் சென்றார்.

## மீட்சியில் உவகையும் உற்றுதறிந்து தெளிந்ததும்

யோகசுவாமிகளின் வரவைக் கண்டு மகிழ்ந்த உறவினர் செத்தவர் மீண்டார் என உவந்து, செல்லப்பா சுவாமிகள் சொன்னதற்காக வருந்தி, அவர் செய்த வம்புத்தனத்துக்கு அவரைக் கண்டு வருவதற்காகச் சிலர் அங்கே சென றார்கள். அவர்களைக் கண்டதும் செல்லப்பா சுவாமிகள் ஒன்றும் அறியாதவர்போல் அவர்களை நோக்கி, "நான் பொய் பேசமாட்டேன். உண்மையைத்தான் சொன்னேன், இப்போதும் சொல்லுகிறேன், யோகன்செத்தே போனான்" என்றார். அவர் ஓமோம் என்று தலையசைத்தவாறு உறுதியாகக் கூறியதைக் கேட்ட உறவினர் சிரிந்து, "விசரனைவிட்டு வாருங்கள்" என்று கூறித் தம்வழியே போனார்கள்.

சீவாத்மாக்கள் பற்றோடும் பாசத் தோடும் வாழும் நிலை பெத்தநிலை. சீவத்துவம் போனால் உண்டாகும் பேரின்ப நிலை முத்திநிலை. அது சிவத்துவநிலை, நித்தியானந்த நிலை முத்தி நெறியறிந்த முத்தர்கள் தங்கள் சஞ்சிதவினை குருவருளால் சாம்பராகிப்போக, ஆகாமியம் என்னும் புதுவினை ஏறாமல், கொண்டுவந்த பிராரத்துவ வினை புசித்து முடியும்வரை சீவன் முத்தராய், அணைந்தோர் தன்மையில் வாழ்வர். அவர்கள் தான் செத்தவர்கள். யோகசுவாமிகளிடம் நான் என்னும் அகங்காரம் செத்துப் போனது. அவருக்கு சித்தமலம் அறுத்து அவரைச் சிவமாக்கியவர் செல்லப்பா சுவாமிகள்.

**திருச்சிற்றம்பலம்**

**வான்கெட்டு மாருத மாய்ந்தழல்நீர் மண்கெடினுந்**
**தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்(கு)**
**ஊன்கெட்டுயிர் கெட்டுணர்வு கெட்டேன் உள்ளமும்போய்**
**நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.**

**திருச்சிற்றம்பலம்**

ஆகாயம் ஒடுங்கி, காற்று ஒடுங்கி, தீயும் நீரும் மண்ணும் ஒடுங்கினாலும், தான் ஒடுங்குதலின்றி, தளர்வறியாமல் இருக்கும் சிவபெருமான் பொருட்டு, உடம்பு அழிந்து, ஆவியடங்கி, அறிவு ஒடுங்கி, என்மனமும் அழிந்து, தற்போதம் இறந்த விதத்தைப் பாடி தெள்ளேணங் கொட்டுவோம். சிவனிடத்தில் அடைந்து நிற்கும் பெரும் பேறாகிய உயர் நிலையை யோகசுவாமிகள் பெற்றிருந்தார் என்பதைக் குறிப்பால் உணர்த்துவதற்குக் குருவான செல்லப்பாசுவாமிகள் கூறிய வாசகத்தை ஞான நாட்டம் கொண்டவர்கள் உணர்ந்திருந்தனர். அஃதில்லாதவர்கள் அவர் சொன்னவற்றைப் பைத்தியக்காரன் பேச்சு எனக் கருதியிருந்தனர்.

## இது ஒரு பாலைவனப் பசுந்தரை

சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் அகிலவுலக சமய மாநாட்டில் இந்து சமயம் சார்பாக பேசிவிட்டு மீண்டபோது, இலங்கையில் இறங்கி கொழும்பு, கண்டி, மாத்தளை, அநுராதபுரம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் பேசினார். அவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்திற் பேசியபின், பெரியவர்கள் அவரைக் குதிரை வண்டியிலேற்றி வடங் கட்டித்தாமே இழுத்துச் சென்றனர். அவர் கொழும்புத்துறை முச்சந்தியை அணுகியதும், வண்டியை விட்டு இறங்கி நாற்றிசையும் நோக்கி, "ஆகா இது ஒரு பாலைவனப் பசுந்தரை" என்னும் பொருளில் "மூா வாளை ளை யமெயளளை" என்று ஆங்கிலத்திற்கு கூறி உவகை கொண்டார். அக்காலத்தில் அவ்விடத்தில் எவ்வித புதுமையோ மகிமையோ உண்டாகவில்லை. வெறும் இலுப்பை மரத்தடியாயிருந்தது. அந்த இடத்துச் சூழல் வெகுவிரைவில் புனிதமாகப் போகிறது என்பதே விவேகானந்தரின் தீர்க்க தரிசனம்.

## இலுப்பை மரத்தடியைப் பார்

செல்லப்பா சுவாமிகள் யோக சுவாமிகளைச் சோதனைக்கு மேற் சோதனைக்குட்படுத்திப் புடம் போட்ட பொன்னாக்கி பசுகரணங்களை நீக்கி பதிகரணங்கள் பதியச் செய்து பக்குவப் படுத்தியபின், யோகசுவாமிகளைப் பார்த்துக் கூறினார். யோகா! இரண்டு யானைகளை ஒரு முளையிற் கட்டமுடியாது. நீ ஓடிப்போய் வேறிடம் பார்" என்றார். "சுவாமி! நான் எங்கே போவது? எனக்குப் புகலிடம் எது?" என்று ஆவலாகக் கேட்டார். "யோகா! நீ கொழும்புத்துறைச் சந்தியில் இலுப்பை மரவேரைப் பார்" என்றார் குருநாதன் சொன்ன வண்ணம் கொழும்புத்துறை இலுப்பை மரத்தடியைப் பார்த்துக் குந்துவதற்கு முன், குருநாதனின் கையில் இருந்த பிச்சைப் பாத்திரத்தை யோகசுவாமிகள் ஆசையோடு பார்த்தார். "எட இது பெரிய பந்தம்" என்று கூறி அதனை யோகசுவாமிகளின் தலையில் அடித்து நொருக்கினார். யோகசுவாமிகள் அவ்விடத்தை விட்டுப் பெயர்ந்தபோது, "யோகா! அங்காலை கொட்டிலையும் பார்"என்று கூறி வழிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நல்லூரான் நனையப் போகிறார்

நல்லூர்க் கந்தசுவாமியார் வெளி வீதியுலா வந்த வேளையொன்றில் பார்த்து நின்ற யோகசுவாமிகள், "இன்றைக்கு நல்லூரான் நனையப் போகிறார்" என்று சொன்னார். அதைத் தூரத்தே நின்ற செல்லப்பா சுவாமிகள் கேட்டு, "உப்படிப் பலர் சொன்னவர்கள்" என்று சிரித்தார். அன்று சுவாமி வடகிழக்கு மூலையில் எழுந்தருளியபோது, மழைபெய்தது. இந்த அடிப்படையிலேதான் செல்லப்பா சுவாமிகள் யோக சுவாமிகளிடம் "செல்லப்பன் சாமி காட்டமாட்டான். சாமி காட்டினால் யாழ்ப்பாணத்தான் விடமாட்டான். செல்லப்பன் விசரன் என்னும் பெயரோடு சாவான்" என்று கூறினார் எனக் கருத இடமுண்டு.

### கைத்திறன் வாய்ந்த கலைஞன்

யாழ்ப்பாணத்தார் கடின உழைப்புக்கும் கமத் தொழிலுக்கும் கைத்திறனுக்கும் பெயர் பெற்றவர்கள். பனையோடு பழகிய பண்பாட்டில் யாழ்ப்பாணத்தாருக்குப் பன்ன வேலை பன் முகப் பழக்கம், ஓலைகொண்டு.விசிறி செய்தல், தட்டுவம், பட்டை, குடை, கூடை, பெட்டி, கடகம், பாய், உறி, திருகணி, உமல் முதலியன இழைப்பதிலும், பொத்துவதிலும் தமிழர் இணையில்லாதவர்கள். பனையாலே வந்த நாகரிகம் தமிழர் நாகரிகம். கழுத்துக்குத் தாலியும், காதுக்கு ஓலையும் தந்த பனை, ஐந்து வயதுப் பிள்ளைக்கு அரிவரி ஏடும், அதிகம் படிப்பவர்களுக்கு ஏட்டுருவிலமைந்த நூல்களும் தந்தது பனை. பனையோலையில் அன்று எழுதிப் பாதுகாக்காவிட்டால் தமிழரின் பாரம்பரிய நூல்கள் எங்கள் சந்ததியினருக்குக் கிடைத்திரா.

செல்லப்பா சுவாமிகள் தட்டுவங் கோலுதல், பட்டை இழைத்தல், பொத்துதல், தென்னோலை கொண்டும் பலா விலை கொண்டும் கல்லை செய்தல், வாழையிலை கொண்டு தொன்னை செய்தல், பனையோலை விசிறி செய்தல், ஒடியல் மாவிற் கூழ் காய்ச்சுதல் முதலியவற்றில் திறமைவாய்ந்தவர். பனையோடு தொடர்புடைய பலவகையான கை வேலை களைவிட அவரின் கைப்பணித் திறமை அரியது. சுவாமிகள் செய்த கைவேலைகள் பல. அவர் அழகாகப் பூமாலை கட்டவும் அறிந்திருந்தார்.

### சேர் இராமநாதன் தலைவணங்கியமை

செல்லப்பா சுவாமிகள் சேர் இராம நாதனிடம் அன்பு பூண்டவர். அவர் இலங்கை வாழ் மக்களின் ஏகப் பிரதிநிதியாக 1910ஆம் ஆண்டில் தெரியப் பெற்றபோது பெரிதும் மகிழ்ந்து பாராட்டியவர். ஒரு சமயம் தூரத்தில் கூடிநின்ற ஒரு சிறு கூட்டத்தவர் வெகு இரகசியமாக இராமநாதனின் போக்கைக் கண்டித்துப் பேசினார். அதனை உணர்ந்த சுவாமிகள் "இல்லை இல்லை அவர் நல்லவர், நல்லவர்" என்று உரத்துக் கூறினார். அதைக் கேட்ட கூட்டத்தவர் நாணிக்கோணித் தம் கொள்கையை மாற்றிக் கொண்டனர்.

சேர் இராமநாதன் 1913ஆம் ஆண்டில் தமது இராமநாதன் கல்லூரியை ஆரம்பித்த வேளையில், சுவாமிகள் தாம் திறமையாகச் செய்த பனையோலை விசிறியொன்றைக் கொண்டு சென்று அவரிடம் அன்பளிப்பாகக் கொடுத்து கல்லூரியையும் அவரையும் வாழ்த்தினார். இராமநாதன் நன்றியுள்ளத்தோடு தலைதாழ்த்தி வணங்கியதும் சுவாமிகள் விரைந்து மீண்டு வந்தார்.

### நோயுறுவது உடம்பா? உயிரா?

பகவான் இராமகிருஷ்ண பரமஹம்சர் நோயுற்றிருந்த வேளையில் சீடர்களுக்குக் கூறிய ஆறுதல் வாக்கியம் "இந்த நோயும், இது பீடித்த உடம்பும் ஒன்றோடொன்று மோதிக் கொள்ளட்டும். இந்த மோதுதலால எனக் கொன்றும் இல்லை" என்பதாகும்.

செல்லப்பா சுவாமிகள் தமக்குச் சில சமயம் உடம்பு நன்றாகவில்லை என்று கண்டவுடன் தமக்குப் பணிவிடை புரிந்து வந்த உறவினர் சபாரத்தினம் அவர்களைஅழைத்து, கீரிமலைக் கடற்கரைக்குச் சென்று நீர்முள்ளி பிடுங்கி வந்து, நல்லூர்க் கோபுரவாசற் கிணற்று நீரள்ளி அவித்துத் தரும்படி கூறினார். அவர் சொன்ன வண்ணம் அவித்துக்கொண்டு வந்தபோது "உதற்குள் நஞ்சு போட்டுள்ளாய், வெளியே ஊற்று" என்று கட்டளையிட்டார்.

இதன் பின் பணிவிடை செய்யும் சபாரத்தினம் அவர்களைக் கூவி நாவற்குழியில் ஆமணக்கு இலைகளும் செம்மணியில் பூவரசம் பழுத்தலும் பறித்து வந்து நல்லூர்க் குருபூசை மடத்துக் கிணற்று நீரில் அவித்துத் தரும்படி கூறினார். அங்ஙனம் செய்து கொடுத்ததற்குள்ளும் நஞ்சு கலந்ததாகக் குற்றஞ்சாட்டி வெளியே ஊற்றச் செய்தார்.

இவ்வாறெல்லாம் தம்முடைய வேகத்தைத் தணித்தும், பணிவிடை செய்தவரின் பக்குவத்தைச் சோதனை செய்தும் கொண்டபின், வைரவ கோயிலடி வேம்பின் இலை பறித்துத் தம்முடைய வளவுக்கிணற்று நீரில் அவித்துத் தரும்படி செய்து உடம்பைக் கழுவினார் என்பர்.

### வேகங்கெடுத்தாண்ட வேந்தன்

மனித மனம் வாயுவேகத்திலும் கூடியதாகையால் மனோவேகம் என்று அதனை உயர்த்திக் கூறுவர். வாயு வேகத்தை அளந்தறிய விஞ்ஞானக் கருவிகள் உள்ளன. மனோவேகத்தை மட்டுப்படுத்த மெய்ஞ்ஞானம் உண்டு. ஞானம் கைவரப் பெற்ற ஞானிகள் மனோவேகத்தைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுக்கவும் தணிக்கவும் வல்லவர்கள்.

செல்லப்பா சுவாமிகள் தமது வேகத்தைத் தாமே தடுத்ததும் உண்டு. சில வேளைகளில் அவர் தாமே ஒரு சோறும் கறியும் சமைத்து உண்பதும் வழக்கம். ஒரு சமயம் அவர் மட்டுவிலுக்கு நடந்து சென்று ஒரேயொரு கத்தரிக்காய் வாங்கி, நுனிக்காம்பில் இரண்டு விரல்களால் பிடித்தவாறு விரைந்து மீண்டு, வந்த வழியில் முத்திரைச் சந்தையில் காற்படி அரிசி வாங்கித் தம் கந்தையான சால்வை நுனியில் முடிந்தபின், ஒரு சதம் குறைத்துக் கொடுத்து, வியாபாரம் செய்த பெண்ணிடம் ஏச்சு வாங்கி மகிழ்ந்தவாறு கொட்டிலுக்கு மீண்டு, பக்குவமாகச் சமைத்தார். சமையல் முடிந்ததும் அங்கும் இங்குந் தேடி ஒரு தடியெடுத்துச் சட்டி பானைகளை அடித்து நொருக்கி எல்லாவற்றையும் அள்ளிக்கொண்டு சென்று காகம், கோழி தின்ன வீசி விட்டுச்சிரித்தவாறு குந்தியிருந்தார்.

**உண்மை முழுதுமென் றோயா துரைப்பவன்**
**நன்மை தீமையைக் கடந்த நாதன்**
**என்னையுந் தன்னையு மொன்றாய்க் காண்பவன்**
**சென்னியில் சேவடி சூட்டினன் அன்பால்**

**ஆரறி வாரென அடிக்கடி ஓதும்**
**பேரறி வாளன் போர்செல் லப்பன்**
**பாரறி யாத பயித்தியக் காரன்**
**தேரடிப் படியில் தினமு மிருப்பான்.**

பின்னர் மனமே அவசரப்படாதே. வயிறே உனக்கு நல்லபசி என்று கூறியவாறு எழுந்து மூலையிற் கிடந்த கமுகம் மடலை எடுத்துக் கொண்டு பெரியவர் ஒருவர் வீட்டுப் படலையில் நின்று, "எசமாட்டி அம்மா பசிக்கிறது" என்று கேட்டார். எசமாட்டியம்மா அந்தரங்க பக்தியோடு சுத்தமாக சோறு கறி கொடுக்க அவற்றைப் பெற்றுக் கொண்டு கொட்டிலுக்கு மீண்டு, சிறிதளவு உண்டு எஞ்சியவற்றை வெளியே வீசியவாறு "நஞ்சு நஞ்சு" என்று கூறி நகைத்தார்.

## கூழ்ப்பானை பட்டபாடு

செல்லப்பாசுவாமிகள் பனையன்பர் என்று பெயர் பெற்றவர். அவர் ஒடியல்மாகொண்டு அருமையாகக் கூழ் காய்ச்சுவதில் நிபுணர். அவரிடம் கூழ் பருகிச் சுவை கண்ட சீடர் சிலர் கூடியிருந்து கூழை நினைத்தார்கள். அவர்கள் நினைப்பு வேகத்தை உணர்ந்த சுவாமிகள் அவர்களை ஒவ்வொருவராக அழைத்துச் சில்லறைக் காசு கொடுத்து, நீ அரிசி வாங்கி வா, நீ பயிற்றங்காய், நீ மிளகாய், நீ புளி, நீ உப்பு என்று அவர்களுக்கு வேலை கொடுத்து விட்டுப் பானை கழுவி அடுப்பேற்றினார். சீடர்கள் கொண்டு வந்த பொருள்களைக் கொண்டு வெகு திறமையாகக் கூழ் காய்ச்சினார். கூழ் கொதித்து வந்தபோது கமகம என நன்றாக மணம் வீசியது. சீடர்கள் நாவில் நீரூறியது. அவர்கள் பலாவிலை கோலுவது பருகுவது முதலாகப் பாவனை பண்ணத் தொடங்கினார்கள். சுவாமிகள் அவர்கள் வேகத்தை உணர்ந்து மூலையில் இருந்து பெரிய தடியை எடுத்தார். கூழ்ப்பானை பொடிப்பொடியாக நொருங்கியது. சீடர்களின் வேகமுந் தணிந்து கெட்டது.

## வெளியே நின்று பார்

செல்லப்பா சுவாமிகளிடம் ஞான முறுக்கேறிய யோகசுவாமிகள், தமது குருநாதன் நோயுற்றிருந்த போது, அவருக்குப் பணிவிடை புரிவதற்கு விரைந்து சென்றார். விரைந்து சென்றவரின் வருகையை உணர்ந்து, அவர் உள்ளே செல்வதன் முன், அவருக்குக் கேட்கும்படியாக உரத்த குரலில், "வெளியே நின்று பார்" என்றார். யோகசுவாமிகளும் குருநாதன் சொற்கேட்டு, உள்ளே போகாமல் வெளியில் நின்று, அகக் கண்ணால் அவரைக் கண்டு வணங்கினார்.

## ஐந்து ஆண்டு காலப் பயிற்சி

செல்லப்பா சுவாமிகளின் செல்வப் பெருக்கான ஞானவூற்றை நன்கறிந்து நனைந்து தோய்ந்து உருமாறி உய்தி பெறுவதற்கு ஐந்தாண்டு காலம் யோகசுவாமிகள் அவரைப் பின் தொடர்ந்து திரிந்தார்கள். இந்தநீண்டகாலத் தொடர்பினால் யோகசுவாமிகள் முற்றிப் பழுத்த ஞானியாராகி விட்டார். மகா சமாதிப் பேறு செல்லப்பா சுவாமிகள் சீவன் முத்தராய், அணைந்தோர் தன்மையில் வாழ்ந்து நல்லூர்த் தேரடியில் அடியார் பலருக்கு ஆத்ம போதமூட்டி, அரும்பெரும் சீடராகக் கொழும்புத்துறை யோகசுவாமிகளை உருவாக்கி, அவர் தம் அருமை பெருமை களையெல்லாம், உற்றுக்கவனித்து, அவரால் யாழ்ப்பாணத்திலிருந்து உலகெங்கும் ஒளிக்கதிர்கள் விரிந்து விசாலித்து வியாபித்து உலகத்தை உய்விக்கும், "ஒரு பொல்லாப்பும் இல்லை" என்பது முதலான ஆப்தவாக்கியங்கள் உல கெல்லாம் ஒலிக்கும் என்று தேறியிருந்து தமது தேகத்தை விடுத்துச் செல்லும் நாளையுணர்ந்து, தமது அணுக்கத் தொண்டராயிருந்து கடமையாற்றி வந்த வீணைவித்தகர் சபாரத்தினம் அவர்களைத் தமது இறுதிக்கிரியைகள் செய்து தகன காரியஞ் செய்யுமாறு பணித்து, மூன்று நாள்கள் லீவு எடுத்துச் சுவாமிகளைப் பார்க்க வந்திருந்து மகிழ்ந்த இராமலிங்கரிடம், இன்னும் இரண்டு நாள் லீவு எடுத்தாலல்லவோ விழா முடிவையும் பார்க்கலாம்". என்று கூறி மற்றொரு சீடரான சாமி ஆறுமுகம் என்பவரிடம் இன்றைக்கு இராத்திரி வேளையில் விளையாட்டுக் காட்டப்போகிறேன் என்று கூறி, அன்று 1915ஆம் ஆண்டு பங்குனி மாதத்து அச்சுவினி கூடிய வெள்ளிக்கிழமை இராவேளையில் நீட்டி நிமிர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தவாறு ஒரு காலை மடித்து மறுகாலின் தொடைமீது வைத்து, வலக்கையின் பெருவிரலை வாயில் வைத்து ஓம் என்னும் ஒலியெழுப்பியவாறு கண்களை மூடிக்கிடந்தார்.

"உண்மை முழுது மென்றுரை செய்யும் ஒருவன் கழல் வாழ்க"

குருநாதன் செல்லப்பன் சீர்

செல்லப்பா சுவாமிகளின் இயல்பு, போக்கு, பெருமை, மகிமை,சீர் எல்லாவற்றையும் அவர் தம் சீடர் யோகசுவாமிகள் பல கோணங்களில் அவதானித்து நற்சிந்தனைப் பாடல்களில் தந்துள்ளார்கள்.

ஓதாமல் வேதம் உணர்ந்த குருநாதன், நீறணியான், காவியுடையணியான், தேரடியில் வீற்றிருப்பான், சிரிப்பான், சினந்திடுவான், ஆசையுடன் கொடுக்க வந்த அடியவரைச் சீர்கேடாய்ப் பேசுவான்,மாறாட்டமாகவே வந்தபடி பிதற்றுவான், மகிழ்ச்சியும் இகழ்ச்சியும் ஒன்றாகக்காண்பவன். சிங்கார நடையொடு சிரிப்பினையுடையான், ஆரறிவார் என்று அடிக்கடி சொல்லுவான். தேரடிப் பாதையில் சிங்காரமாய்க் கிடப்பான், சாதி சமயமென னும் சங்கடத்துக்குள்ளாகான். என்னை எனக்கறிவித்த எங்கள் குருநாதன், பாதிச் சாமத்தின்மேற் படுக்கைக்குப் போபவர்,வீதியிற்செல்லும் வீணரைப் பேதிக்கும்படி பேசுவார்.

## முனி சொன் மொழி

வடமொழியில் உள்ள வேதங்கள் தோறும் அமைந்த பிரிவுகளானசாகைகளின் முடிவில் உபநிடத வக்கியங்கள் உள்ளன. அவற்றை வேதசிரசு, வேதாந்தம், வேதமுடிவு என்றெல்லாம் வழங்குவர். உபநிடதம் என்றால் குருவுக்கு அண்மையில் பணிவாயிருந்து கேட்ட உபதேசம் என்பது பொருள். அவை மகாவாக்கியங்களாக அமைந்துள்ளன. அவற்றுள் ஒன்று "சத்தியமேவ ஜயதே"என்பது. அஃதாவது உண்மை யொன்றுதான் வெல்லும் என்பது. இது இந்திய அரசின் இருதய மூச்சாக, லட்சியவாசமாக நிலவுகிறது.

வேதாந்த விளக்கமாக, அதன் உச்சியாக, முடிபாக,சாரமாகவுள்ளது சைவசித்தாந்தம். சைவசித்தாந்தத் திறனுரைக்கும் நூல்கள் பல. அவற்றுள் ஒரு தொகுதியாக மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கு நூல்கள் உள்ளன. அவற்றின் முடிமணியாகவுள்ளது மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம். சிவஞானபோதம் மிகச்சிறிய சூத்திரங்கள் பன்னிரண்டு கொண்ட ஒரு கை நூல்.

சிவஞானபோதம் உரைத்த முப்பொருள் உண்மையை விரித்து விளக்குவன. ஏனைய சைவசித்தாந்த நூல்கள். மெய்கண்டாரின் ஞான பரம்பரையில் வந்த சீடர்கள் இந்த நூல்களை விரிவாக எழுதியுள்ளார்கள். முப்பொருளை விளக்குவதற்கு ஒரு நூல் போதாதோ, இத்தனை நூல்கள் வேண்டுமோ என்னும் ஒரு கேள்வியை எவருமே கேளாதிருக்கவும்,உமாபதிசிவாசாரியார் அதற்கு விடை கூறியுள்ளார். தாமே எட்டு நூல்களைச் சித்தாந்த அட்டகம் எனச் செய்துள்ளார்.

பொன் என்னும் பொருளுக்கு ஆடகம், காஞ்சனம், தங்கம், இரணியம், தனம், கனகம், ஈழம், தமனியம், பீதம், சாம்புனதம் முதலிய பெயர்கள் விழங்கினாற்போல ஒரு பொருளை விளக்கப் பல நூல்கள் எழுந்தன என்பர்.

இவ்வாறாகச் செல்லப்பா சுவாமிகள் நல்லூரில் தவஞ்செய்து கண்டுணர்ந்த வாக்கியங்கள் நான்கும் உபநிடதங்கள் போன்றவை,திருமூலர், தாயுமானவர் வழியில் வந்த அத்துவித உண்மைகள். இந்த உண்மைகள் அடங்கிய உயர்ந்த வாக்கியங்களைச் செல்லப்பா சுவாமிகள் தமது உத்தம சீடராய யோகசுவாமிகள் செவியில் உபதேசித்தருளினார்.

**ஒரு பொல்லாப்பும் இல்லை**
**முழுதும் உண்மை**
**நாமறியோம் ஆரறிவார்**
**எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்.**

இந்த மகாவாக்கியங்களைச் சீடரின் செவியிற் கொட்டியபின்,செல்லப்பா சுவாமிகள் வெறும் கோதாயினார். இராமகிருஷ்ணர் விவேகானந்தரிடம் கொடுத்தபின் வறியவரானார். இது கொடுப்பதிலும் கொள்வதிலும் உண்டாகும் ஒருவித நிலை.

## நற்சிந்தனை

யோகசுவாமிகள் அப்பர் அடிகளைப் போல நீண்ட காலம் வாழ்ந்து நமக்கு தந்த நற்சிந்தனைப் பாடல்கள் எங்களுக்கும் நாட்டவருக்கும் உலகத்தவருக்கும் பெருவிருந்தாயுள்ளன. இவற்றை ஐரோப்பியர், ஆங்கிலேயர், அமெரிக்கர் தங்கள் மொழிகளில் அரிதில் மொழிபெயர்த்துப் பயன்படுத்திப் பக்குவமடைந்துள்ளார்கள். இவற்றை முதலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைப்படி கேட்டுணர்ந்த யோகசுவாமிகள் தாம் என்னவானார், இவை தம்மை என்ன செய்தன என்பனவற்றை விளக்கமாகப் பாடியருளியுள்ளார். தாம் உய்திபெற்று உயர்ந்தமையைக் கூறியருளியுள்ளார்.

**"சிந்தனையில் வெந்துயர் தீரவெனக் கொரு**
**மந்திரந் தந்தா னென்றுந்தீ பற**
**மாயை யறுந்த பென்றுந்தீ பற"**

மகாவாக்கியங்களை நன்கு விளக்குவதற்குப் பலவகையான பிரபந்தப் பாடல்களைப் பாடியருளி யுள்ளார். மயிலையும் குயிலையும் கூவியழைத்துத் தூது விடுத்து மகிழ்ந்தாடவும் கூவவும் வைத்துள்ளார். குருபரனை மறப்பேனோ குதம்பாய் என்று கும்மி கோலாட்டங்கள் அடித்து மகிழ்ந்துள்ளார். இணையடி வாழ்க என்று ஆசிரியப்பாவில் இனிமையாக விளக்கி இன்புற்றுள்ளார். செல்லப்பா சுவாமிகளின் திருவடி கண்டு மகிழ்ந்தாடும் மயிலுக்கு ஒரு பொல்லாப்பும் இல்லையென்றருளினார். குருநாதன் திருவடி காண்பதற்கு ஆற்றுப்படுத்தியதோடு, கிளிக்கண்ணி மூலம் வழி நடைச் சிந்து பாடியருளியுள்ளார். வழிகாட்டி அழைத்த வண்ணம் கிளிமொழியாயுள்ளது.

**"தேர் முட்டிப் படிமேலே – கிளியே**
**செல்லப்பன் என்ற சீமான்**
**அர்வமுடன் இருக்கிறான் – கிளியே**
**அங்கு போவோம் வந்திடடி"**

"நாமறியோம் என்று சொல்லி நகை செய்வான் நாணாதே, ஆரறிவார், என்று சொல்லி அதட்டுவான்" என்றெல்லாம் முன் எச்சரிக்கை செய்வார்.

செல்லப்பா சுவாமிகள் சொன்ன மகாவாக்கி யங்களையோகசுவாமிகள் திருக்குறள் போன்ற இரண்டடிகளில் திறமையாக விளக்கியுள்ளார்.

**செல்லப்பன் என்னுந் திருவுடையான் தேரடியில்**
**பொல்லாப்பில்லை யென்றான் போற்று.**

**முழுது முண்மை என்று முனிவனவன் சொன்னான்**
**எழுத முடியா திதை.**

**நாமறியோம் என்னும் நறிய திருவாக்குச்**
**சேமமுறச் சொன்னான் தெரி.**

**முடிந்த முடிபென்று முன்னாளிற் சொன்னான்**
**அடியார்கள் முன்னர் அவன்.**

### முனி சொன் மொழி

கலி விருத்தம்

**ஒருபொல் லாப்பு மில்லையென் றுரைத்தவன்**
**திரவ டிதனைச் சிந்தை மறுக்குமோ?**
**ஒருவடி வன்றி யுள்ள முவக்குமோ?**
**கருவ ழியினிற் வென்று கலங்குமோ?**
**நாம றியோமெ னச்சொலு நன்மொழி**
**தாம றிந்தவர் சஞ்சலங் கொள்வரோ?**
**சாம ளவுமத் தண்ணருள் வாசகம்**
**சேம நன்னிதி செப்புந் தகையதோ?**
**ஆர றிபவ ரென்ன வடிக்கடி**
**வீர மாக நகைத்து விளம்புவார்**
**ஈரகத்தொடு நின்று வணங்கினும்**
**வார மற்றவர் போல இகழ்வரோ.**
**எப்பவோமுடி வானதென் றெங்கட்குச்**
**செப்பு வாரவர் சிந்தை தெளிந்திட**
**ஒப்பில் லாதபல் வார்த்தைக ளோதுவார்**
**அப்பில் உப்பென வானதென் சீவனே.**
**முழுது முண்மை யெனமுனி சொன்னவை**
**எழுதிக் காட்டிட என்னா லிசையுமோ?**
**அழுது வாழ்த்தியு மேத்தியு மன்பர்காள்**
**தொழுது கொள்வதல் லாலென்ன சொல்லுகேன்.**

### ஆசான் அருள்

**ஆசா னருளால் அகந்தை யுழிந்தது**
**ஆசா னருளால் அருண்மழை பொழிந்தது**
**ஆசா னருளால் ஆனந்தம் விளைந்தது**
**ஆசா னருளால் ஆசா னாயினேன**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *My Master*

(The following English Versions are from SONGS AND SAYINGS of Yogaswami translated by members of the Sivathondan Society.)

The exalted seer, my Master who by the name of

## Chellappa

is called the madman

I saw my guru at Nallur
"Hey who are you? he cried!
"Dive deep within and realize"
"Give up attachment"
All is well my son"

As the Divine Guru
to bestow true life upon me
He appeared and showed to me
His feet and made me His man.

If sufferings crowd in on you in hordes
If your short comings seek you out and drown you
Think of the feet of Chellappan
they will take to their heels and fly

## Wisdom in Couplets

Near the house of the car,
holy Chellappan would teach:
"There is not one wrong thing"
That sage the saying has declared:
"All that is truth"
This no one can describe.
Know that for our benefit
he gave the sweet and sacred word:
"Nothing do we know"

Before his Devotees
he formerly would say
"This all perfected and complete"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Come, Oh! My Mind!

Come, offer worship, Oh my mind,
To Gurunathan's holy feet,
Who said: "There is not one wrong thing"
And comforted my heart.

Come swiftly, swiftly Oh my mind
That I may adore the lord,
Who on me certainly bestowed,
By saying "All is truth"

Let us with confidence, Oh my mind,
Hasten to visit him,
Who at Nallur upon that day,
"We do not know" declared

Come soon and quickly Oh my mind
Chellappan to see;
Who ever and anon repeats
"It is as it is"

Come Oh my mind, to sing of him,
Who near the car proclaimed
"Who knows?" with glad and joyful heart
For all the world to know.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Chellappan, The Sivaguru

He who is devoid of form,
As the Guru at Nallur
Came and bestowed on me
His grace.

The Lord Supreme,
Who has become the universe entire,
Came Himself to great Nallur
and said "We do not know"

He, Who in writing
cannot be described
As a Guru came to this world
In nothing we are lacking

## Mahavakyas

"All is truth"
This word devoid of defect
will paradise reveal to you
Give praise and worship
and in joy abide!

"It is so" - this matchless saying
that the Guru told
Will impart to you right understanding
Live, ever strewing flowers in reverence.
"Who knows"? - this utterance of the Master
The highest knowledge will bestow.
Live guarding it
Wth honour in your heart!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"We do not know"
these words in virtue shining
Will grant prosperity and bless devine vouchafe
Rely on them Without delay and live!
"All finished" this statement of the sage
Will to a settled mind
the supreme state disclose
Live, offering flowers with love at the dawn of day!

These words will banish birth,
Which in Tamil pure are sung
By the devotee, Who ne'er
forgets his Master's lotus feet.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லப்பா சுவாமிகள்

உலகத்தின் மையத்தில் இந்து சமுத்திரத்தால் சூழப் பெற்று பொன் போல் இலங்குவது எங்கள் நாடு. இலங்கை ஒரு சிவபூமி என்பது திருமூலர் வாக்கு. சித்தர்கள் உலாவிய சிறப்புடைய நாடு. இப்படிப்பட்ட சித்தர் வரிசையில் செல்லப்பா சுவாமிகளும் ஒருவராவார். நல்லூர் தேரடியில் தென்புறத்தில் வசித்த பொன்னம்மாவை வட்டுக் கோட்டையைச் சேர்ந்த வல்லிபுரம் எனும் வேளாளன் திருமணம் செய்து நல்லமுறையாக வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு ஆண்கள் இருவரும், பெண்கள் இருவருமாக பிள்ளைகள் நால்வர் பிறந்தனர். ஆண்களுள் ஒருவர் செல்லப்பா, பெண்களில் ஒருவர் செல்லாச்சி.

செல்லப்பா இளமைக் கல்வியை கந்தர்மடத்து சைவப்பிரகாச வித்தியா சாலையில் கற்றார். யாழ் மத்திய கல்லூரியில் ஆங்கிலம் கற்றார். பின் யாழ் கச்சேரியில் ஆராய்ச்சி உத்தியோகத்தராகவும், பின்னர் களஞ்சியப் பொறுப்பதிகாரியாகவும் உத்தியோகம் பார்த்து வந்தார். இதன் பின் ஞான நாட்டம் செல்லப்பரை கடையிற் சுவாமிகளின் பால் ஈர்த்தது. சீடனின் மோட்க்ஷ நாட்டத்தையும், பக்குவத்தையும் உணர்ந்த குரு அவருக்கு ஞான உபதேசமும், தீட்சையும் அளித்தார். செல்லப்பா சுவாமிகள் உலக இச்சையற்று தன் நேரத்தை பெரும்பாலும் தனிமையில் நல்லூர் தேரடியில்தியானத்தில் களித்தார். அவரது தோற்றமும், செயற் பாடுகளும் இறை விளக்கமற்ற உலகியல் மக்களுக்கு "இது என்ன விசர்க்கோலமோ" என்று எண்ண தோன்றியது.

இவருடைய மருமகனான வயலின் வித்தகர் சபாரத்தினம்செல்லப்பருக்கு பணிவிடைகள் செய்து வந்தார். இவர் நல்லூர் முருகனுக்கு திருவிழாக் காலங்களில் கந்தர்மடத்தில் இருந்து வந்துமண்டகப்படி வைப்பது வழக்கம். இந்த தொண்டை முருகனுக்கு அருகில் இருந்து செய்யவேண்டும் என்பது அவருடைய நீண்டநாள் ஆசை. அந்த ஆசை முருகன் அருளால் முருகனுக்கு அருகில் காணி கிடைத்து நிறைவேறியது.

இப்படி இருக்கும் நாளில் செல்லப்பா சுவாமிகள் நீதான்எனது இறுதிக் கிரிகைகளைச் செய்யவேண்டும் என்று மருமகனிடம் கேட்டிருந்தார். அதன்படி 1915ம் ஆண்டு பங்குனி மாதம் அச்சுவினி நட்சத்திரத்தில் செல்லப்பாச் சுவாமிகள் இறைவனடி சேர்ந்தார். அவர் உத்தரவுப்படி மருமகனார் சபாரத்தினம் சுவாமிகளின் இறுதிக் கிரியைகளை செய்தார். சபாரத்தினத்திற்கு இரு ஆண் பிள்ளைகள். அவர்கள் தற்போதும் சுவாமிகளுடைய பணிகளை செய்து வருகின்றனர்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இப்படிக்கு,
க. லோகானந்தம்
(சுவாமிகளின் பூட்டன்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்லப்பா சுவாமியினது பேரன் சபாரத்தினம் கனகரத்தினம்




நல்லூர் முகப்பு தோற்றமும் செல்லப்பா சுவாமி குடும்பத்தினர்



நல்லூர் மண்டடப்படி தினத்தில் செல்லப்பா சுவாமிகளது
பேரப்பிள்ளைகளும், பூட்டப் பிள்ளைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முத்தியடைந்த செல்லப்பா சுவாமிகள் தோற்றம்



செல்லப்பா சுவாமியினது மருமகன் சடையர் சபாரத்தினம்
சுவாமிகளது ஈமக்கிரிகைகள் செய்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வராகி என்பது அம்மையின் திரு நாமங்களுள் ஒன்று. இத்திரு நாமத்துக்குரிய திருக்கோலம் பன்றித்தலையினையுடைய அம்மை உருவமெனச் சாக்த நூல்கள் கூறும். (வராகம்-பன்றி) பன்றித்தலை என்பது தாயை இழந்து வருந்திய பன்றிக் குட்டிக்காகத் தாய்ப்பன்றியாகக் கிடந்து பாலூட்டிய பெருமானது பேரருட் பெருக்கின் அடையாள மெனவே கொள்ளத் தக்கது.

பன்றித்தலைச்சியம்மன் எனப் போற்றப்படும் மட்டுவில் கோயில் கொண்டிருக்கும் அம்மை வராகி அம்மையாவர். செல்லப்பர் பங்குனித் தலைத்திங்களில் பன்றித்தலைச்சியம்மன் கோயிலுக்குச் சென்று பொங்கலிட்டு வந்தனர். அவரை வராகி வாலயக்காரர் என அறிந்தோர் கூறுவர். அவர் வராகிமாலையைத் தம்முள் ஓதிவந்ததாகவும் கூறுவர். இஃது தெய்வமால் கொள்ளச் செய்யும் திருமந்திரமேயாகும்.

இத்திருமந்திரத்தை மேற்போக்காக ஓதுவோர்க்கு வராகி ஓர் "அகோரி"யாகவும் சண்டப் பிரசண்டியாகவுமே தோற்றுவார். ஆழ்ந்து உள்ளே நோக்குவார்க்கு அவர் அழகுக்கு இலக்கியமான அபிராமியம்மை (பா.30)யாகவே தோன்றுவார். அவர் பெருமானது சிவசக்தி (பா.11) ஆனந்தி (பா.25) இன்னுஞ் சொல்லில் நிர்க்குணி (பா.13,28) பாடல்கள் பல மாரணம் எனும் தலைப்பிலுள்ளன. அம்மை சத்துருமாரணஞ் செய்பவர். பச்சை ரத்தம் குடிப்பது: இரத்தத்திலக மிடுவது ஆதிய வன்கண்வீரச் செய்கைகள் அவர்தம் "தொழில்" ஆக வருணிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் நமது சத்துரு யார்? நம்மவரைச் சத்துருவாகக் கொள்வது நமது பழக்க தோஷமேயாம். சத்துரு, மித்துரு எல்லாம் நமக்குள்ளேயாம். நமது உண்மைச்சத்துரு தீமைப்பவமே (பா.20)யாம். இப்பவப்பிணி தீர்த்தலே உண்மையான சத்துரு மாரணம். அம்மை அகோரியாகக் கோலம் கொள்வதும் எம்மை வாட்டும் பிறவிப்பெரும் பகையிற் கொண்ட கோபமிகுதியாலேயாம்.

வராகி அம்மை பிறவிக்கொடும்பகையை மாரணஞ் செய்து "கொன்றை வேணியான் சீரார் மகுடத்து அடியினை சேர்க்கும்" சிவகாம சுந்தரியேயாவர். அவர் ஞானவராகி (பா.2) அகோரியான வெளிக் கோலத்துள் உறைபவர் நவமான சிவஞான போதகி (பா.32) யேயாம்.

**வசியம்**

இருகுழை கோமளம்,தாள்புட்பராகம்,இரண்டு கண்ணும்
குருமணி நீலம், கைகோமேதகம், நகம் கூர்வயிரம்,
திருநகை முத்து, கனிவாய் பவளம், சிறந்தவல்லி,
மரகதநாமம், திருமேனியும் பச்சை மாணிக்கமே.

**தரிசனம்**

தோராத வட்டம் முக்கோண சட்கோணத் துலங்கு வட்டத்து
ஈராறு இதழிட்டு ரீங்காரம் உள்ளிட்டு இது நடுவே
ஆராதனை செய்து அருச்சித்துப் பூசித்து அடிபணிந்தால்
வாராதிராள் அல்லளே வாலை ஞானவராகியுமே.

**தம்பனம்**

மெய்ச்சிரற் பணியார் மனம் காயம் மிகவெகுண்டு
கைச்சிரத்தேந்தி புலால் நிணம் நாறக்கடித்து உதவி
வச்சிரத்தந்தம் உகப் பணியாற் குத்தி வாய் கடித்துப்
பச்சிரத்தம் குடிப்பாளே வராகி பகைஞரையே.

**மோகனம்**

படிக்கும் பெரும்புகழ்ப் பஞ்சமி அன்பர் பகைஞர் தமை
அடிக்கும் இருப்புத் தடிகொண்டு பேய்கள் அவர் குருதி
குடிக்கும் குடர்கொண்டு தோள்மாலையிட்டுக் குலாவிமன்றில்
நடிக்கும் வராகி பதினாலுலகு நடுங்கிடவே

**ஆக்ரூடணம்**

நடுங்கா வகைஅன்பர் நெஞ்சினிற் புக்கு அவர் நண்ணலரைக்
கொடுங்காளி உண்ணக் கொடுக்கும் குருதிகள் கொப்புளித்திட்டு
இடும்பாரக் கொங்கையின் மீதே இரத்தத் திலகமிடும்
தொடுங்கார் மனோன்மணி வராகி நீலி தொழிலிதுவே

**உச்சாடணம்**

வேய்க்குலம் அன்ன திண்தோளாள் வராகி தன்மெய்யன்பரை
நோய்க்குலம் என்ன இடும்புசெய்வார் தலை
நொய்தழிக்குப்பேக்குலம் உண்ணப்பலிகொண்டு போட்டுப்பிணக்குடரை
நாய்க்குலம் கௌவக் கொடுப்பாள் வராகி என் ஆரணியே.

**பேதமாரணம்**

நாசப்படுவர்: நடுங்கப்படுவர்: நமன்கயிற்றால்
வீசப்படுவர்: வினையும்படுவர்: இம்மேதினியோர்
ஏசப்படுவர், இழுக்கப்படுவர், என் ஏழை நெஞ்சே
வாசப்புதுமலர்த்தோளாள் வாராகியை
வாழ்த்திலரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வசியம்**
வாலை புவனை திரிபுரை மூன்றும்
இவ்வையகத்தில்
காலையும் மாலையும் உச்சியுமாகக் காலத்துமே
ஆலயமெய்தி வராகிதன் பாதத்தை அன்பில்
உன்னி
மாலயன் தேவர் முதலான பேர்களும் வாழ்துவரே

**வித்துவேடணம்**
வருத்திப் பகைத்திர் என்னோடு அறியாமல் முனம்
வானவர்க்காய்ச்
சிரித்துப் புரமெரித் தோன்வாம பாகத்துத்தேவி
எங்கள்
கருத்திற் பயிலும் வராகி என் பஞ்சமி கண்
சிவந்தால்
பருத்திப் பொதிக்கிட்ட தீப்பொறிகாணும்
பகைத்தவர்க்கே

**மாரணம்**
பாப்பட்ட செந்தமிழ்ப பாவானர் நின்மலர் பாதந்
தன்னில்
பூப்பட்டதுவும் பொறிபட்டதோ நின்னையே
புகழ்ந்து
கூப்பிட்டது உன்செவி கேட்கிலையோ
அண்டகோளமட்டும்
தீப்பட்டதோ நிந்தையாளர் தெருவெங்குமே

**சிலை மாரணம்**
எங்கும் எரியக் கிரிகள் பொடிபட எம் பகைஞர்
அங்கம் பிளந்திட விண்மண் கிழிந்திட
ஆர்த்தெழுந்து
பொங்கும் கடல்கள் சுவறிடச் சூலத்தைப்
போகவிட்டுச்
சிங்கத்தின் மீது வருவாள் வராகி சிவசக்தியே.

**சத்துரு மாரணம்**
சக்தி கவுரி மகமாயி ஆயி என் சத்துருவைக்
குத்தி இரணக் குடரைப் பிடுங்கிக் குலாவி நின்றே
இத்திசை எங்கும் நடுங்கிக் கிரிகள் இடிபடவே
நித்தம் நடித்து வருவாள் வராகி என் நெஞ்சகத்தே.

**பூத மாரணம்**
நெஞ்சகம் தன்னில் நிறைந்திருக்கின்றவள்
நிர்க்குணத்தி
றஞ்சனி கண்டத்தி நாராயணி தனை நம்பும் எற்கு
வஞ்சனை பண்ணி மதியாதபேரை வாணாளை
உண்ணக்
கொஞ்சி நடந்து வருவாள் வராகி குலதெய்வமே.

**எதிரி மாரணம்**
மதுமாமிசந் தனைத் தின்பாளிவள் என்று
மாமறையோர்
அதுவே உதாசினம் செய்திடுவார் அந்த
அற்பார்கள்தம்
கதிர்வாய் அடைத்திட உள்ளம் கலங்கிக்
கடிதடித்து
விதிர்வாளில் வெட்டி எறிவாள் வராகி
என்மெய்த்தவமே.

**தேவி அக்ருஷணம்**
ஐங்கிலியும் எனத்தொண்டர் போற்ற அரிய பச்சை
மெய்யும் கருணை வழிந்தோடுகின்ற விழியும்
மலர்க்
கையும் பிரம்பும் கபாலமுஞ் சூலமும்
கண்ணெதிரே
வையம் துதிக்க வருவாள் வராகி மலர்க்கொடியே

**சத்துரு மாரணம்**
மாளு மனமும் தலையும் குலையத் தரியலர்கள்
மாளும் படிக்கும் வரந்தருவாய் உன்னை
வாழ்த்தும் அன்பர்
கோளும் பகையும் குறியார்கள் வெற்றி
குறித்தசங்கும்
வாளும் கடகமும் சூலமும் ஏந்தி வரும் துணையே

**லோக மாரணம்**
வருந்துணையென்று வராகியென்று அன்னையை
வாழ்த்தி நிதம்
பொருந்தும் தகைமையைப் பூணாதவர் தம்
புலாலுடலைப்
பருந்தும் கழுகும் வெம்பூதமும் வெய்ய
பசாசுகளும்
விருந்துண்ணப்பட்டுக் கிடப்பர் கண்டாய்
உடல்வேறுபட்டே.

**ஏவல் சத்துருமாரணம்**
வேறாக்கும் நெஞ்சும் வினையும் வெவ்வேறு
வெகுண்டு உடலம்
கூறாக்கும் நெஞ்சகத்தில் செந்நிறமான குருதி
பொங்கச்சேறாக்கும் குங்குமக் கொங்கையில் பூசும்
திலதமிடும்
மாறாக்கும் நேமிப் படையாள் தனை
வணங்காதவர்க்கே.

**மிருகமாரணம்**
பாடகச் சீறடிப்பஞ்சமி அன்பர் பகைஞர்தம்மை
ஓடவிட்டேகை உலக்கை கொண்டு ஏற்றி
உதிரமெல்லாம்
கோடகத்திட்டு வடித்தெடுத்து ஊற்றிக் குடிக்கும்
எங்கள்
ஆடகக்கும்ப இணைக்கொங்கையாள் எங்கள்
அம்பிகையே.

**பாவமாரணம்**
தாமக்குழலும் குழையும் பொன்னோலையும்
தாமரைப்பூம்
சேமக்கழலும் துதிக்க வந்தேற்குச் செகமதனில்
வாமக் கரள களத்தம்மை ஆதிவராகி வந்து
தீமைப்பவத்தைக் கெடுத்தாண்டு கொள்வள்
சிவசக்தியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சத்துருமாரணம்**
ஆராகிலும் நமக்கே வினைசெயின் அவருடலம்
கூராகும் வாளிக்கு இரையிடுவாள்
கொன்றைவேணியரன்
சீரார் மகுடத்து அடியிணைசேர்க்கும்
திரிபுரையாள்
வராராகி வந்து குடியிருந்தாள் என்னை
வாழ்விக்கவே

**எதிரி மாரணம்**
ஊராகிலும் உடன் நாடாகிலும் உற்றவரோடு
ஆராகிலும் நமக்கு ஆற்றுவரே அடலாழியுண்டு
காரார் கனத்த உலக்கையுமுண்டு கலப்பையுண்டு
வராகி என்னும் சண்டப்ரசண்ட வடிவியுண்டே

**சேனை மாரணம்**
உலக்கை கலப்பை ஒளிவிடுவாள் கடகாழி சங்கம்
வலக்கை இடக்கையில் வைத்த வராகி என்
மாற்றலர்கள்
இலக்கமில்லாத எழில்பெருஞ்சேனை எதிர்வரினும்
விலக்க வல்லாள் ஒரு மெல்லிதன் பாதம்
விரும்புகவே

**சத்துரு மாரணம்**
தஞ்சம் உன்பாதம் சரணாகதியென்று
சார்ந்தவர்மேல்
வஞ்சனை பில்லி கொடிதேவல் சூனியம்
வைத்தவரை
நெஞ்சம் பிளந்து நிணக்குடல் வாங்கி
நெருப்பினிலிட்டு
அஞ்சக் கரங்கொண்டு அறுப்பாள் திரிபுரை
ஆனந்தியே

அலைபட்டு நெஞ்சம் அலைந்து உயிர்சோர
அலகை கையால்
கொலைபட்டு உடலம் கழுகுகள் சூழக் குருதி
பொங்கித்
தலைகெட்டு அவயவம் வேறாய்ப் பதைப்புற்றுச்
சாவர்கண்டீர்
நிலைபெற்ற நேமிப் படையாள்தனை
நினையாதவரே.

**பகைவர் மாரணம்**
சிந்தை தெளிந்துனை வாழ்த்திப் பணிந்து தினந்
துதித்தே
அந்தி பகலுன்னை அருச்சித்தபேரை அசங்கிதமா
நிந்தனை பண்ணி மதியாத லுத்தர் நினமருந்திப்
புந்தி மகிழ்ந்து வருவாய் வராகி
நற்பொற்கொடியே

**படைமாரணம்**
பொருப்புக்கு மாறுசெய்யாழியும் தோடும்
பொருப்பை வென்ற
மருப்புக்கு நேர்சொலும் கொங்கையும் மேனியும்
வாழ்த்தும் என்னை
இருப்புக் கடியமனத்திற் குடிகொண்டு
எதிர்த்தவர்க்கு
நெருப்புக் குவாலெனக்கொல்வாய் வராகி என்
நிர்க்குணியே.

**மோகன மாரணம்**
தேறிட்ட நின்மலர்ப் பாதாரவிந்தத்தைச்
சிந்தைசெய்து
நீ றிட்டவர்க்கு வினைவருமோ நின் அடியவர்பால்
மாறிட்டவர் தமை வாளாயுதம் கொண்டு
வாட்டிஇரு
கூறிட்டு எறிய வருவாய் வராகி குலதெய்வமே.

**உச்சாடனம்**
நரிபரியாக்கிய சம்புவின் பாகத்தை நண்ணியமான்
அரிஅயன் போற்றும் அபிராமி தன்னடியார்க்கு
முன்னே
சரியாக நின்று தருக்கம் செய்மூடர்
தலையைவெட்டி
எரியாய் எரித்து விடுவாள் வராகி
எனும்தெய்வமே.

வீற்றிருப்பாள் நவகோணத்திலே நம்மை
வேண்டுமென்று
காத்திருப்பாள் கலிவந்தனுகாமலென்
கண்கலக்கம்
பார்த்திருப்பாளல்லள் எங்கேயென்று
அங்குசபாசம் கையில்
கோத்திருப்பாள் இவளே என்னை ஆளும்
குலதெய்வமே

சிவஞானபோதகி செங்கைக்கபாலி. திகம்பரி நல்
தவமாரும் மெய்யன் பார்க்கே இடர்சூழும்
தரியவரை
அவமானஞ் செய்யக் கணங்களை ஏவும் அகோரி
இங்கு
நவமாக வந்து எனைக் காக்கும் திரிபுரம்
நாயகியே.

நன்றி

சிவதொண்டன் 2003 மாசி -பங்குனி மாத இதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லப்பா சுவாமிகள் நினைவாலயம்

திரு. வேலுப்பிள்ளை சிவகுருநாதன் (J.P)
காரைநகர்

**குரு பண் அடியினை ஏத்துதல் இன்பம்**
**குருபரன் அருட்பணி ஆற்றுதல் இன்பம்**
**குருபரன் அருள் வாக் காக்கிடும் இன்பம்**
**குரு பரன் சரண் புகக் கூடுடும் இன்பம்**
**(நற்சிந்தனை)**

நல்லூரை இராசதானியாகக் கொண்டு ஆட்சி செய்த தமிழ் மன்னர்களிற்கும் நல்லூர் கந்தசுவாமி தல வரலாற்றிற்கு நெருங்கிய தொடர்புள்ளது. 1248 ஆம் ஆண்டு இப்போது இருக்கும் இடத்தில் ஆலயம் கட்டப்பட்ட தென்றும் . இதனை அழித்து பின்னர் முத்திரைச் சந்தை அருகில் ஆலயம் கட்டப்பட்டதென்றும் பின்னர் இப்போது இருக்கும் இடத்தில் 1749 ஆண்டு ஆலயம் கட்டப்பட்டது. இப்போது கோவில் இருக்கின்ற இடம் ஒரு பெரியவரின் சமாதி உள்ள இடத்தில் அமைந்துள்ளது. புனித தலங்கள் எல்லாம் அருளாளர் ஒருவரின் சமாதியிலேய ஆலயமாக அமைக்கப்பட்டுள்ளது என்று ஆலய வரலாறு சொல்கிறது. முருகன் அருளால் தன்போல் மற்றவர்களும் முருகன் அருள் பெற்று ஆன்மீக சுகத்தை பெறலாம் என்பதை விளக்குமாற்போல் செல்லப்பா சுவாமிகள் நினைவாலயமும் அவர் பிறந்த இடத்தில் அமைந்து சுவாமிகளின் நெருங்கிய உறவினர்களால் நினைவு ஆலயம் நூறு ஆண்டுகளாக பரிபாலித்து வருகின்றதும் ஒரு சாலச்சிறந்த விடயமாகும்.

ஒரு ஞானி தன்னைக்காட்டிக் கொள்ளாமல் வாழ்ந்து சீடன் மூலம் தன்னை உலகிற்கு எடுத்து காட்டுவது போல செல்லப்பா சுவாமிகள் யோகர் சுவாமிகள் மூலம் தன்னையும் நல்லூரான் பெருமையினையும் உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளார். ஆன்மாக்களின் ஈடேற்றத்தின் பொருட்டு சிவபெருமானே செல்லப்ப மூர்த்தமாக நல்லூரில் வந்து நடனமாடினான் . இதனை நற்சிந்தனை பாடல்கள் மூலம் யோகர் சுவாமிகள் எடுத்துக் காட்டியுள்ளார்.

நற்சிந்தனையில்

**நல்லூரைக்கும்பிட்டு நீபாடு**
**நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்**
**சொல்லாதே வெறுங்கையாய் செல்லப்பன் வாழ்ந்த நாடு**
**தேங்காய் உடன் பழம் கொண்டு செல்லு என்றும்**
**வாடி உன் மனம் ஓடினாலும்**
**வருத்தங்கள் கோடி கோடியாகக் கூடினாலும்**
**குறைகள் வந்து உன்னைத்தேடி மூடினாலும்**
**செல்லப்பன் பாதம் சிந்தித்தால் இல்லாமல் போமே.**
**பெண்டு பிள்ளைகள் என்று நீ பேதமை கொண்டு**
**கண்ட கண்ட இடம் கலங்கி நீ திரியாதே**

என்று நல்லூரான் பெருமையையும் செல்லப்பரின் மகிமையையும் காட்டியுள்ளார். இதன் பெருமையை விளக்க வேறு எதனைச் சொல்ல இருக்கிறது.

செல்லப்ப சுவாமிகள் பல அற்புதங்கள் செய்து காட்டாமல் காட்டியுள்ளார். அவற்றில் சிலதை கூறுவோம் நல்லூர் வீதியில் கண் தெரியாத பிள்ளை ஒன்று தாயாரின் உதவியுடன் வீதியில் அங்கப்பிரதட்சணம் செய்து கொண்டு வந்தது, கிழக்கு வெளிவீதியில் வரும்பொழுது செல்லப்ப சுவாமிகளும் அதே நேரத்தில் அவ்விடத்தில் வந்தார். இந்நிகழ்வை கண்ட சுவாமிகள் எடே ஆறுமுத்தா இந்தப் பிள்ளைக்குதான் கண் தெரியவில்லை என்றால் உனக்கும் கண் தெரியவில்லையா என்றார். அப்பிள்ளைக்கு உடன் கண் பார்வை கிடைத்தது.

சேர் பொன். இராமநாதன் நல்லூர் கந்தசுவாமியர் கோவிலுக்கு 1910ம் ஆண்டளவில் முருகனை தரிசிப்பதற்காக குதிரையில் நாலு, ஐந்து ஆட்களுடன் வந்தார் அக்காலத்தில் அவருக்கு அரசியல் செல்வாக்கு இருந்த காலம். தேரடியில் இருந்த செல்லப்பர் அவரை குதிரையில் இருந்து இறங்க விடாது பேசிக்கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமநாதன் அவர்களும் இந்தியாவில் ஞானி ஒருவரின் அருள் பெற்ற ஒருவர் ஆகையால் அவர் இறங்காது தமது சொந்த இடமான மானிப்பாய்க்கு போய்விட்டார். இரவு செல்லப்பர் பேசியதை யோசித்து விடியப்புறம் கால் நடையில் செல்லப் சுவாமிகள் இருந்த தேர்முட்டி இடத்திற்கு வந்தார் . சுவாமிகளிடம் தன்னை மன்னிக்கும்படி கேட்டார். சீறி எழுந்தார் செல்லப்பர். "மடியில் உள்ளதை அவிழடா , கொட்டடா " என்று திரும்பத் திரும்ப முழக்கமிட்டார். அதனை உணர்ந்த சேர் பொன். இராமநாதன் அவர்கள் யாழ்ப்பாண பிள்ளைகளின் கல்விக்கு செல்லப்பர் அருளால் வித்திட்டார். மருதனார் மடத்தில் பெண்பிள்ளைகளின் கல்வி கற்பதற்காக ஒரு பாடசாலையை நிறுவ எண்ணினார் பாடசாலைக்கான கால்கோள் விழா சிறப்பாக நடக்க ஏற்பாடு செய்தார். அந்நிகழ்விற்கு வெளிநாட்டு பிரமுகர்களும் வந்திருந்தார்கள் . அக்காலம் ஆங்கிலேயர் ஆட்சிக்காலமாக இருந்தது. அந்நேரத்தில் செல்லப்பா சுவாமிகள் தாழ் இழைத்த கிழிந்த நிலையில் உள்ள விசிறியுடன் அவ்விடத்திற்கு சென்றார். அவரைக் கண்ட இராமநாதன் அவர்கள் அவரை வாழ்த்தி வரவேற்றார் எல்லோருக்கும் வியப்பாக இருந்தது. பிச்சைக்கார கோலத்தில் உள்ளவரை இராமநாதன் இவ்வாறு செய்கிறாரே என நினைத்தார்கள் . சுவாமிகள் அத்திவாரம் இடப்பட இருக்கும் இடத்திற்குச் சென்றார் அவ்விடத்தில் தாம் கொண்டு வந்த விசிறியால் விசிக்கி விட்டு இராமநாதனிடம் தமது மகா வாக்கியங்களான

**எப்பவோ முடிந்த காரியம்**
**ஒரு பொல்லாப்பும் இல்லை**
**யாமறியோம்**
**முழுவதும் உண்மை**

என இராமநாதனிடம் கூறிவிட்டு தாம் கொண்டு வந்த விசிறியை கையளித்து விட்டு அவ்விடத்தை விட்டு மறைந்து விட்டார். அந்த விசிறி இன்றும் இராமநாதன் கல்லூரி ஆலயத்தில் இருக்கின்றது.

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயத்திற்கு அடிக்கடி செல்லப்பரும் யோகரும் போய் வருவார்கள். மடடுவில் கத்தரிக்காய் தோட்டத்தில் இறங்கி செல்லப்பர் தோட்டக்காரரிடம் ஒரு கத்தரிக்காய் தரும்படி கேட்பாராம் . அவர் ஒரு கத்தரிக்காயை பிடுங்கிக் கொடுக்க விலை என்ன? என்று கேடடாராம். பெரியவர் தேவையில்லை என்று சொன்னாராம் . அவ்வேளையில் இந்தா பிடி என்று ஒரு சரையை தோட்டக்காரனிடம் கொடுத்துவிட்டு சுவாமிகள் அவ்விடத்தை விட்டு அகன்று விட்டார். அடுத்த வருடம் தோட்டக்காரனுக்கு தோட்டத்தில் கத்தரி மரத்தில் இலை தெரியாது காய் கூடுதலாக காய்த்து தோட்டக்காரன் பெரும் செல்வந்தன் ஆனாராம் என்பது உண்மையாக நடந்த சம்பவம்.

செல்லப்பனின் சகோதரி செல்லாச்சி அப்பம் சுட்டு அக்காலத்தில் வியாபாரம் செய்கின்ற ஒரு ஆளாம் . விடியற் காலையில் செல்லப்பர் அவ்விடத்திற்கு சென்று அப்பத்தை எடுத்துக்கொண்டு சென்று விடுவாராம் . தமக்கை இவன் விசரனாலை இருக்கமுடியாது. வியாபாரம் செய்ய முன்னுக்கு அப்பத்தை எடுத்துக்கொண்டு போய்விட்டான் என ஏசுவாராம் அன்றைய தினம் வாடிக்கையாளர் கூடி விற்பதற்கு அப்பம் இல்லாமல் போய்விடுமாம். அடுத்த நாள் இன்று கூட ஆட்கள் வந்தவை என்று மாவை கூட போட்டால் இ, அடுத்த நாள் ஆட்கள் அவ்வளவிற்கு வரமாட்டார்களாம் அப்பம் தேங்கி இருக்குமாம்.

இவ்வறாக அற்புதங்கள் செய்த செல்லப்பர் இருந்த பழைய கொட்டில் நினைவாலயமாக அவர்பாவித்த சங்குகள் அடங்கன் முறை, புத்தகங்கள் என்பவற்றை வைத்து வைத்து பங்குனி மாத அச்சுவினி நட்சத்திரத்தில் அவரது குரு பூசை, சிறப்பாக பக்திபூர்வமாக நடத்தப்படுகிறது. அன்றைய தினம் தேரடியிலும் பூசைகள் நடைபெற்று வருகின்றது. எண்பது காலங்களில் ஹவாய் சிவசுப்பிரமணிய சுவாமிகளின் விருப்பத்தின் பேரில் அவருடைய உபயத்திலும் சபாரத்தினம் கனகரத்தினம் இளைப்பாறிய தொழில் நுட்பவியலாளரான அவரது தம்பியார் சபாரத்தினம் கனகசபாபதி அவர்களின் உபயத்திலும் சீமேந்தினாலான மண்டபம் கட்டப்பெற்றது. அந்நேரத்தில் செல்லப்பாசுவாமி காலத்தில் சிறுவர்களாக இருந்தபோது செல்லப்பரை கண்டு பழகிய ஒருவர் மூலம் திருவுருவப்படம் வரையப்பட்டு பூசை வழிபாட்டில் 2015 வரை இருந்து வந்தது.

இந்த வருடம் 100வது குரு பூசை தினமான 22-03-2015 அச்சுவினி தினத்தில் அவரது திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டு மிகுந்த அருட் பொலிவுடன் விளங்குகின்றது. அவ்வாலயத்திற்கு அடியேன் பதினைந்து வருடங்களிற்கு மேலாகக் காலையிலும் மாலையிலும் சென்று வருகிறேன். பல வித அற்புதங்கள் சுவாமிகளின் திருவருளால் நடைபெறுகின்றன. நாம் அனைவரும் அவ்வாலயத்தில் அவரை வணங்கி அருள் பெறுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரடிச்சித்தர்

# செல்லப்பா சுவாமி

அவர்களின்

# பாமாலைத் தொகுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் குருநாதன்

என்னையெனக் கறிவித்தா னெங்கள்குரு நாதன்
இணையடியென் தலைவைத்தா னெங்கள்குரு நாதன்
அன்னைபிதாக் குருவான னெங்கள்குரு நாதன்
அவனியெல்லா மாளவைத்தா னெங்கள்குரு நாதன்
முன்னைவினை நீக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
மூவருக்கு மறியவொண்ணா னெங்கள்குரு நாதன்
நன்மை தீமை யறியாதா னெங்கள்குரு நாதன்
நான்தானாய் விளங்குகின்றா னெங்கள் குரு நாதன். 1

தேகம்நீ யல்லவென்றா னெங்கள்குரு நாதன்
சித்தத்திற் றிகழுகின்றா னெங்கள்குரு நாதன்
மோகத்தை முனியென்றா னெங்கள்குரு நாதன்
முத்திக்கு வித்ததென்றா னெங்கள்குரு நாதன்
வேகத்தைக் கெடுத்தாண்ட னெங்கள்குரு நாதன்
விண்ணும் மண்ணும் மாகிநின்றா னெங்கள்குரு நாதன்
தாகத்தை யாக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
சத்தியத்தைக் காண வைத்தா னெங்கள்குரு நாதன். 2

வாசியோகந் தேரென்றா னெங்கள் குரு நாதன்
வகார நிலை அறியென்றா னெங்கள்குரு நாதன்
காசிதேசம் போவென்றா னெங்கள்குரு நாதன்
கங்குல்பக வில்லையென்றா னெங்கள்குரு நாதன்
நாசிநுனி நோக்கென்றா னெங்கள் குரு நாதன்
நடனந்தெ ரியுமென்றான் னெங்கள்குரு நாதன்
மாசிலோசை கேட்குமென்றால் னெங்கள்குரு நாதன்
மற்றுப்பற்றை நீக்கென்றா னெங்கள்குரு நாதன் 3

இருவழியை அடையென்றா னெங்கள்குரு நாதன்
எல்லாம் விளங்குமென்றா னெங்கள்குரு நாதன்
கருவழியைக் கூடவென்றா னெங்கள்குரு நாதன்
கட்டுப்படும் மனமென்றா னெங்கள்குரு நாதன்
ஒருவருமறியாரென்றா னெங்கள்குரு நாதன்
ஓங்கார வழியென்றா னெங்கள்குரு நாதன்
நிருமலனா யிருவென்றா னெங்கள்குரு நாதன்
நீயேநா னென்றுசொன்னா னெங்கள்குரு நாதன் 4

திக்குத் திகாந்தமெல்லா மெங்கள்குரு நாதன்
சித்தத்துள் நிற்கவைத்தா னெங்கள் குருநாதன்
பக்குவமாய்ப் பேணென்றா னெங்கள்குரு நாதன்
பார்ப்பதெல்லாம் நீயென்ற னெங்கள்குரு நாதன்
அக்குமணி யணியென்றா னெங்கள்குரு நாதன்
அஞ்செழுத்தை ஓ தென்றா னெங்கள்குரு நாதன்
நெக்குநெக் குருகென்றா னெங்கள்குரு நாதன்
நித்தியன் நீ யென்று சொன்னான் னெங்கள்குரு நாதன். 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடாமல் தேடென்றா னெங்கள்குரு நாதன்
சீவன் சிவனென்றா னெங்கள்குரு நாதன்
நாடமல் நாடென்றா னெங்கள்குரு நாதன்
நல்வழி தோன்றுமென்றா னெங்கள்குரு நாதன்
பாடமற் பாடென்றா னெங்கள்குரு நாதன்
பத்தரினஞ் சேரென்றா னெங்கள்குரு நாதன்
வாடாமல் வழிபடென்றா னெங்கள்குரு நாதன்
வையகத்தில் வாழென்றா னெங்கள்குரு நாதன் 6

தித்திக்கு மொருமொழியா லெங்கள் குரு நாதன்
சின்மயத்தைக் காணவைத்தா னெங்கள்குரு நாதன்
எத்திக்கு மாகிநின்றா னெங்கள்குரு நாதன்
எல்லாம்நீ யென்றுரைத்த னெங்கள்குரு நாதன்
வித்தின்றி நாறுசெய்வா னெங்கள்குரு நாதன்
விண்ணுருவ மறியவொண்ணா னெங்கள்குரு நாதன்
தத்துவா தீதனானா னெங்கள்குரு நாதன்
சகலசம் பத்துந்தா னெங்கள்குரு நாதன் 7

ஆதியந்த மில்லையென்றா னெங்கள்குரு நாதன்
அதுவேநீ யென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
சோதிமய மென்றுசொன்னா னெங்கள்குரு நாதன்
சுட்டிறந்து நில்லென்றா னெங்கள்குரு நாதன்
சாதி சமயமில்லா னெங்கள்குரு நாதன்
தானாய் விளங்குகின்றா னெங்கள்குரு நாதன்
வாதியருங் காணவொண்ணா னெங்கள்குரு நாதன்
வாக்கிறந்த இன்பந்தந்தா னெங்கள்குரு நாதன் 8

முச்சந்திக் குப்பையிலே எங்கள் குரு நாதன்
முடக்கி கிடந்திடென்றா னெங்கள்குரு நாதன்
அச்சமொடு கோபமில்லா னெங்கள்குரு நாதன்
ஆணவத்தை நீக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
பச்சைப் புரவியிலே எங்கள்குரு நாதன்
பாங்காக ஏறென்றா னெங்கள்குரு நாதன்
தச்சன்கட்டா வீட்டிலே எங்கள்குரு நாதன்
தாவுபரி கட்டென்றா னெங்கள்குரு நாதன் 9

நாமேநா மொன்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
நமக்குக்குறை வில்லையென்றா னெங்கள்குரு நாதன்
பொமேபோம் வினையென்றா னெங்கள்குரு நாதன்
போக்குவர வில்லையென்றா னெங்கள்குரு நாதன்
தாமேதா மென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
சங்கற்ப மில்லையென்றா னெங்கள்குரு நாதன்
ஒமேன் றுறுதிதந்தா னெங்கள்குரு நாதன்
ஊமையெழுத் தறியென்றா னெங்கள்குரு நாதன் 10

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழில் நல்லைவாசன்

**இராகம் – இந்தோளம்   தாளம் – ஆதி**

**பல்லவி**

எங்கள் குருநாதன் எழில் நல்லை வாசன்
இங்கும் அங்கும் எங்கும் பிரகாசன்

**அனுபல்லவி**

மங்களகரமானவாக்யப்ரசாதன்
மாறாத மௌனதியானப்ரவேசன் (எங்)

**சரணம்**

அன்பர்கள் சகாயன் ஆனந்த சாகரன்
அல்லும் பகலும்நல்லை வீதியிற் சேகரன்
என்பிழை யாவும் பொறுத்தெனை யாண்டவன்
இரவும் பகலுமெந்தன் மனத்தினில் தாண்டவன் (எங்)

வஞ்சம் பொறாமைகோபம் வைத்திடும் மாந்தர்க்கும்
அஞ்சாதே யென்றருளை யீந்திடுஞ் சுதந்திரன்
கஞ்சமலர்ப்பதத்தைக் கனவிலும் மறவோர்க்குப்
பஞ்சாமிர்தம்போனெஞ்சிற் பண்புடனினிப்பவன் (எங்)

# ஞானதேசிகன்

**பல்லவி**

ஞான தேசிகனே சரணம்
நற்றவனே நல்லூர் வித்தகனே வருக

**அனுபல்லவி**

ஈனப் பிறவி நீக்குமெழிலது கண்டேன்
என்னை யென்னாலறிந் தானந்தங் கொண்டேன் (ஞான)

**சரணம்**

காமக் குரோதமோகக் கடலைக் கடந்தேன்
கங்குல் பகலற்ற காட்சியைக் கண்டேன்
கருதுஞ் சுவாமியோக நாதனுன் தொண்டன்
தருமொரு வரமுண்டு அதுவெங்கும் மங்களம்
தங்கும்படி யருள்தந்து இரட்சி (ஞான)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருவமு முருவமு மானான்

ஒரு பொல்லாப்பு மில்லையெனவே - முன்னாள்
ஓதினான் உண்மை முழுது மெனவே 1

பருவத்தில் மழைபெய்தாற் போல - ஐயன்
பந்தத்தை நீக்கி வளர்த்தா னன்பாலே 2

அருவமு முருவமு மானான் - என்னை
ஆட்கொள்ள வந்தான் நல்லூரிற் றானாய் 3

கருவிக ரணங்க ளெல்லாந் - தத்தம்
கருமத்தை விட்டுக் காவலுக் குள்ளாய் 4

வருவதும் போவது மின்றித் - தூய
மௌன நிலையில் நிலைத்தது தானே 5

ஆரு மறியா ரெனவே - அப்பன்
அப்படி யுள்ளதென் றானறி வாயே 6

## எங்களை யாள் குருநாதா

**இராகம் – சஹானா தாளம் – ஆதி**

**பல்லவி**

எங்களை யாள்குரு நாதா - நின்
இணையடி பணிந் திடவரந் தாதா

**சரணம்**

செந்நெலும் கன்னலும் செறியும் நல் லூராய்
செல்லப்ப னென்னுந் திருப்பெயர்க் குடையாய்
அன்னைபி தாக்குரு தெய்வமு மானாய்
அண்டிவந் தேனெனை யனுதினங் காப்பாய் (எங்)

உல்லாச மான நடை யுடை யோனே
உன்போ லொருவர் உலகினிற் கிடையார்
எல்லாம் வல்லவர் செயலையா ரறிவார்
ஏத்தி யேத்தித் தொழவெனைக் குறியாய் (எங்)

பித்த னென்றுபலர் பேசிய திறத்தாய்
பெற்றி பிறரா லறியொணாத் தரத்தாய்
அத்தனே யுனக்கே யபய மபயம்
ஆருக்கு மினிமே லென்கென்ன பயம் (எங்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானகுரவன்

## கலிவிருத்தம்

ஆரகத்தினுஞ் சென்றவருண்கிலர்
ஏரகத்தமரேந்தலையொப்பவர்
தாரகப்பொருள் தந்ததலைவனார்
நீரகத்தினர் நெஞ்சங்குடிகொண்டார் 1

சிரித்து நல்லூர்த் தெருவிற் றிரிபவர்
வெறித்தபார்வையர் வேடம் விரும்பிலர்
கறுத்தமேனியர் கந்தைத் துணியினர்
எரித்தனர்பவமினியெனக் கில்லையே. 2

மூண்டவல்வினை முற்றுந் துறந்தவர்
ஆண்டவர்க்கன்பு பூண்டவகத்தினர்
தூண்டு சோதிச் சுடர்விடு தூய்மையர்
ஆண்டு கொண்டனரன்றெனை நல்லையில் 3

பாதிச்சாமத்தின் பின்பள்ளி கொள்பவர்
வீதியிற்செல்லும் வீணர்கள் தங்களைப்
பேதிக்கும்படி வேண்டியே பேசுவார்
சோதித் தேயெனைச் சும்மாவிருத்தினார் 4

எந்த வேளையுமென்னவோமெத்தெனச்
சிந்தைதன்னிலே செப்பிக்கொண்டேயவர்
வந்தபேருக்கு வாழ்வையளிப்பவர்
எந்தன் சிந்தையைக் கோயிலாக் கொண்டவர் 5

கோலமொன்றும் விரும்பிலன் கும்பிடச்
சாலவன்புடன் தான்வரும் பத்தரைக்
காலனென்னக் கறுத்துடன் சீறுவான்
சாலஞ் செய்தெனைத் தன்வயமாக்கினான் 6

ஆக்கினானெனை அண்மையிற் சென்றிடின்
தாக்குவானெனைத் தாக்கறமில்லென
நோக்குவானெனெ நோக்கிப் பலசொல்வான்
நோக்கமொன்றற நோக்கிய நோக்கமே 7

பானையொன்று பண்ணவும் விட்டிலன்
சேவனையொன்று செய்யவும் விட்டிலன்
ஆவதொன்றுமறியவும் விட்டிலன்
தேவன் செய்திட்ட சித்திரமிட்டமே 8

இட்டமிட்டமிவன்பணி விட்டிலன்
இட்டமென்ன அறியவும் விட்டிலன்
இட்டசித்திகளெய்தவும் விட்டிலன்
இட்டமாக்கினனென்ன வியப்பிதே 9

வியக்கவொன்றுமிலையென விட்டனன்
வியக்கும்மாந்தரைச் சேரவும் விட்டிலன்
தயக்கவிட்டனன் தன்னடியார்களை
ஞயக்கவிட்டனன் ஞானகுரவனே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வக் குருநாதா!

செல்வக் குருநாதா! செல்வக் குருநாதா! 1
சிந்தைதடு மாறுதெடா! திருவருளைத் தந்திடெடா.

அல்லலெல்லாம் நீக்கியாளக்க வேண்டுமடா
எல்லையில்லாவின்பத்திலே யெனையிருத்தி வைத்திடெடா 2

கல்லை நிகர்த்தமனங் கரையவரந் தந்திடெடா
தொல்லலைவினை நீக்கிச் சுகமெனக்கே யீந்திடெடா 3

நீயோநானென்னும் நிச்சயத்தை காட்டிடெடா
பேயேபோல் நானிருந்து பிரமை கொள்ள வைத்திடெடா 4

அங்குமிங்கு மோடியலைந்து திரிகிறேன்டா
எங்குமுனைக் காண வெனக்குவர தந்திடெடா. 5

வலைப்பட்ட மான்போல் மயக்கமிகவாகுதெடா
சிலைப்பட்ட பாண்டம்போற் சித்தஞ் சிதறுதெடா. 6

எனக்குள்ளே நீயிருக்கும் எழிலைத்தான் காட்டிடெடா
உனக்குள்ளே நானிருக்கு முண்மையிலே மாட்டிடெடா. 7

பேசாத மந்திரத்தின் பெருமைநீ தந்திடெடா
ஆசாபிசாசை யகற்றவழி காட்டிடெடா. 8

என்னோடுடன்பிறந்தாரெல்லோரும் மாண்டார்கள்
உன்னுறவே யல்லாமலோருறவு மில்லையெடா. 9

சிவமேநா மாமென்று சிந்திக்கச் சீரார்
சிவமேநா மென்று தெளிவோம் - அவமே
மனமே யுடன்போகும் மற்றுமோர் தெய்வம்
கனவிலும் எண்ணாது காண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# தேடி நின் திருவடியே

**இராகம் – உசேனி**
**தாளம் – ஆதி**

**பல்லவி**

தேடி நின் திருவடியே செல்வமென நாடிவந்தேன்
திருவருள் தந்தாளும் தேவா - சற்குருநாதா.

**அநுபல்லவி**

பாடி மகிழுஞ்சிவ பாக்யம்பா ரினில்தேட
மூடிய மாய இருள் ஓட அருள் குருவே. (தேடி)

**சரணம்**

அடியேனைக் கைவிடுதல் ஆகுமோ இது தகுமோ
அன்பிலா திருப்பது அடிகளுக் கழகாமோ
அரசேநல் லூரில்லாச ஆரறிவா ரென்றுசொன்ன
அருந்தவனே ஒப்பிலானே அப்பனே செல்லப்பனே (தேடி)

சாதலும் பிறந்தலுந் தவிர்த்தெம்மை யாண்ட
போத குருவைப் புண்ணிய மூர்த்தியை
நாதங் கடந்த ஞான வெளியிடை
பேத மின்றிக் கண்டுபிறப் பற்றோம்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்த் தேரடியில் நான் கண்டேன்

## நேரிசை வெண்பா

பழம்பாக்கு வெற்றிலை பச்சரிசி தேங்காய்
இளநீர்தே னேந்தி யெழிலார் - அளவிலா
மங்கையரு மாடவரு மல்கு நல்லூர்த் தேரடியில்
எங்குருவைக் கண்டே னினிது.

காரர் குயில்பாடக் கார்வண்டு பண்பாட
ஆராத காத லடியரெலாஞ் - சீராகச்
சென்னியிலே கைகுவித்தார் தேரடியிற் றேசிகனை
என்னையவன் பார்த்தா னினிது.

இன்றைக்கோ நாளைக்கோ இன்னுநாட் சென்றிடுமோ
என்றடியா ரேத்து மினியவொலி - நன்றுடைய
நல்லூரிற் றேரடியில் நான்கண்டு போற்றினேன்
சொல்லுந் தரமோ சுகம்

காலன் வலிதொலையக் காலெடுத்தான் தந்தருளும்
பாலன்வாழ் நல்லைப் பழம்பதியிற் - கோலமுடன்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
ஆரென் றறிவா யடா.

உவமை கடந்தவின்ப மெல்லார்க்கு முண்டு
தவஞ்செய்வார் தாமறிவர் தப்பார் - சிவனருளை
நோக்கென்றான் நோக்க நொடியளவி லேயின்பம்
தேக்கிற்றென் சிந்தை தெளிந்து.

ஊற்றார் பெற்றா ருடன்பிறந் தாரினும்
நற்றவத் தோரே நந்துணை யாகுங்
குற்றங் கடிந்து குணத்தை மேற்கொண்டு
செத்தவர் போலத் திரிவோம் நாமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதரிசனம்

## வெண்பா

கருத்தில் நினைந்துருகிக் கைகூப்புந் தொண்டர்
வருத்த மெலாந்தீர்க்கும் வடிவேல் - திருத்தலத்தில்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
ஆரடா நீ யென்றான் அவன் 1

தன்னை யறியத் தவமுஞற்றும் மாதவரை
அன்னையைப்போ லாதரிக்கு மாறுமுகன் - சந்நிதியில்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
தேரடா வுள்ளென்றான் சிரித்து. 2

வண்டுபண் செய்யும் வளம் பெருகு நல்லூரில்
மிண்டு மனத்தவரை மேனிலைக்கு - கொண்டுவரும்
தேரடியிற் றேசிகனை கண்டு தெரிசித்தேன்
தீரடாபற் றென்றான் சிரித்து. 3

கன்னலொடு செந்நெல் கதலிபலா மாவர்க்கந்
துன்னுநல்லூர்ச் சாமி திருமுன்றில் - மன்னு சீர்த்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
சீரடியார் சூழ்ந்து நின்றார் தேர். 4

அயலறியா வந்தணர்க ளான்றநல் லூர்ப்பதியிற்
கயற்கணார் காமவலை சேரா - இயல்புடைய
செல்லப்ப னெனுஞ் சிவகுருவை நான் கண்டேன்
நல்லதப்பா வென்றான் நயந்து. 5

ஒன்றோ விரண்டோ வொரு மூன்றோ வென்றெவரும்
அன்றுதொட் டின்று வரை யாராய - ஒன்றுக்கும்
எட்டாமல் நின்றா னெழிற் குருவாய் நல்லூரிற்
பட்டமளித் தானெனக்குப் பார். 6

நீராய் நெருப்பாய் நெடுநிலனாய்க் காற்றாகி
ஆராலுங் காணா வமலனங்கே - நேராகச்
சற்குருவாய் வந்தேயென் சந்தேகந் தீர்த்தாண்டான்
நிர்க்குணம் பூண்டேன் நினை. 7

புனலொழுகப் புள்ளிரியும் பொன்னீழ நாட்டில்
அனலேந்து வான்றன் புதல்வன் - மனமார
வாழ் நல்லை யம்பதியில் வாழ்வளிக்கச் சற்குருவாய்த்
தாள்காட்டி யாண்டான் தனி. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்த நடனம் ஆடினான்

பல்லவி

ஆனந்த நடனம் அடினான்
அல்லும் பகலும்நல்லூர் வீதியிற் செல்லப்பன்.

அநுபல்லவி

மோனந் திகழுஞ்சிவ யோகியர்தா மறியார்
முழுவது முண்மையென முகமலர்ந் தோதுவான். (ஆனந்த)

சரணம்

ஈனந் தரும்பிறவி யெடுத்தெடுத் துழலாமல்
என்னைவந் தாண்டுகொண்டான் இன்பத்தில் மாண்டு கொண்டேன்

தானந் தவமிரண்டுஞ் சரியை கிரியையிண்டும்
சதுர்வித வுபாயத்தாலே தானாக என்னைச்செய்தான்
(ஆனந்த) 1

முன்னிலை யில்லையென்றும் முழுவது முண்மையென்றும்
மூடிய மாயவிருள் ஓட வருள்புரிந்தான்
அந்நிலை யேயுட லாவியன் வசமாச்சு
ஆகா அதையறிவார் ஆர்தானிவ் வையகத்தில். (ஆனந்த) 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் வெளியில்

நல்லூர் வெளியிலே பொதுநடம் புரிகிறான்
நங்கள்குரு நாதன் எங்கும் பிரகாசன்
எல்லாரை யுந்தன் னிடத்திலே காண்பவன்
இயம நியமங்களில் எவ்வளவு மோபிசகான்

பொல்லாப்பிங் கில்லையென்று போதனை செய்வான்
புகழ்ச்சியு மிகழ்ச்சியு மொன்றாகக் காண்பவன்
செல்லப்ப னென்னுந் திருப்பெய ருடையான்
சிங்கார நடையோடு சிரிப்பினை யுடையான்

ஆரறி வாரென அடிக்கடி சொல்லுவான்
தேரடிப் படியிலே சிங்கார மாய்க்கிடப்பான்
பேரறி வாளனெனப் பிறரெவரு மோவாறியார்
பித்தனென் றுலகோர் பேசுவா ரேசுவர்.

## கூத்தாடுதே மனமென்ன கொடுமை

பல்லவி

கூத்தாடுதே மனமென்ன கொடுமை
கும்பிட்டேன் குருநாத உன் அடிமை.

அநுபல்லவி

தீர்த்தங்க ளாடினேன் யாத்திரை செய்தேன்
சித்தந் தெளியவில்லை என்ன நான் செய்வேன். (கூத்தாடுதே)

சரணம்

பார்த்த விடமெங்கும் நீயல்லா தில்லை
பாராமல் நானும் பட்டேன் தொல்லை
காத்தெனை யாள்வ துன்றன் கடமை
கருணைக் கடலே நான் உன் உடமை. (கூத்தாடுதே) 1

பக்திசெய் யோக சுவாமி பாட்டைப்
பாடிப் படிப்பவர் பல்லூழி காலம்
உத்தம ராக உலகினில் வாழ்ந்து
வித்தகன் சேவடி விரவிநிற் பாரே. (கூத்தாடுதே) 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசானைக் கண்டேன்

ஆசானைக் கண்டேன் அருந்தவர்வாழ் நல்லூரிற்
பேசா தனவெல்லாம் பேசினான் - கூசாமல்
நின்றேன்நீ யாரடா வென்றே அதட்டினான்
அன்றேயான் பெற்றேன் அருள். 1

அருளொளிக்குள் ளேபுகுந்து சென்றேன்யான் ஆங்கே
இருள்சூழ்ந் திருப்பதைக் கண்டேன் - பொருளறியேன்
ஓர்பொல்லாப் பில்லையென வோதினான் கேட்டுநின்றேன்
மர்மந்தே ராது மலைத்து. 2

மலைத்துநின்ற என்னை மனமகிழ நோக்கி
அலைத்துநின்ற மாயை அகலத் - தலைத்தலத்திற்
கைகாட்டிச் சொல்லலுற்றான் கந்தன் திருமுன்றில்
மெய்மறந்து நின்றேன் வியந்து. 3

வியந்துநின்ற என்றனக்கு வேதாந்த உண்மை
பயந்தீரும் வண்ணமவன் பண்பாய் - நயந்துகொள்
அப்படியே உள்ளதுகாண் ஆரறிவார் என்றானால்
ஒப்பில்லா மாதவத்தோன் உற்று. 4

உற்றாரும் போனார் உடன்பிறந்தார் தாம்போனார்
பெற்றாரும் போனார்கள் பேருலகில் - மற்றாரும்
தன்னொப்பர் இல்லாத் தலைவன் திருவருளால்
என்னொப்பார் இன்றியிருந் தேன். 5

காலை யெழுந்திருந்து
கைகால் முகங்கழுவி
கோல மலரெடுத்து - கிளியே!
குருபதத்தைக் கும்பிடுவோம்
கோபக்ரோத மோகமாகிய
கூடாதகூட்டங் கூடாதே
நாடாதேயென்றுந் தேடாதே
நாமதுவெடி நாமதுவெடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூராசான்

### கலிவிருத்தம்

உலகமும் உயிரும் உம்பர் பிரானும்
கலகஞ் செய்யும் நடனங் கண்டால்
உலகில் பிறந்திறந் துழலா ரென்று
நலஞ்சேர் நல்லூ ராசன் நவின்றான். 1

மலர்மிசை யோனும் மாலுங் காணா
அலகிலா ஆட லுடைய அப்பன்
மலர்தலை உலகத்து மானிடன் போல
நலமிகு நல்லூரில் நாடியாட் கொண்டான். 2

குலநலம் பாராக் கொள்கை யுடையான்
சலன மில்லாத் தத்துவா தீதன்
பலரும் பைத்திய காரனென் றேச
நலமிகு நல்லூரில் நாடக மளித்தான். 3

கற்றவர் விழுங்குங் கருணை யாளன்.
மற்றவ ரறியா மாணிக்க மாமலை
சிற்றி வுடையோர் தேறாகச் செல்வன்
நற்றவர் வணங்கும் நல்லூ ரானே. 4

விருப்பு வெறுப்பை வேரறப் பறித்தோன்
திருவடி மறவாச் சீருடை யாளன்
ஒரு பொல்லாப்பு மில்லையென் றுரைத்ததான்
குருவடி வாகக் கோலங்கொண் டானே. 5

உண்மை முழுதமென் றோயா துரைப்பவன்
நன்மை தீமையைக் கடந்த நாதன்
என்னையுந் தன்னையுமொன்றாய்க் காண்பவன்
சென்னியில் சேவடி சூட்டினன் அன்பால். 6

ஆரறி வாரென அடிக்கடி ஓதும்
பேரறி வாளன் பேர்செல் லப்பன்
பாரறி யாத பயித்திய காரன்
தேரடிப் படியில் தினமுமிருப்பான். 7

கார்நிற வண்ணன் கைதலை யணையாய்ப்
பார்மிசை உறங்கும் பண்பை உடையான்
நீர்வளம் நிலவளங் குறையா நல்லூர்
சீர்பெற வாழ்ந்த தேசிக மூர்த்தி. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமறி யோமெனும் நல்ல மந்திரம்
சேமமுண் டாகச் செப்புந் திறந்தோன்
காமங் குரோத மோகங் கழிந்தவன்
நாமமோ செல்லப்பன் நல்லூ ரானே. 9

எப்பவோ முடிந்ததென் றெடுத்தெடுத் துரைக்கும்
ஒப்பிலா மாமணி உன்மத்த னெவரும்
இப்படி யென்று இயம்பவொண் ணாதவன்
எப்போதும் முருகன் சந்நிதியில் வாழ்பவன். 10

பாவலர் நாவலர் பணியும்நல் லூரில்
சாவதும் பிறப்பதுந் தவிர்த்தெனை யாண்ட
காலவன் நல்லூர் கந்தன் பதியில்
சேவகஞ் செய்யுஞ் செல்லப்ப மூர்த்திகாண். 11

சுந்தரற்குப் பெண்கொடுத்த சோதிலிங்கம்
துரைசுவாமி தனையீன்ற சொக்கலிங்கம்
கந்தரத்தில் கடுநஞ்சை வைத்தலிங்கம்
கருதுவார் தங்கருத்தில் வாழும்லிங்கம்
அந்தரத்தில் மால்விடைமேல் வந்த லிங்கம்
அழுதபிள்ளை தனக்குப்பால் அளித்தலிங்கம்
இந்தவளஞ் சேரிலங்கை வந்தலிங்கம்
எனையாண்ட குருலிங்கம் என்றுங்காப்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்ச் செல்வன்

ஒரு பொல்லாப்பு மில்லையென்று சொல்வான் - செல்வன்
உல்லாச மாகவே நல்லூரரிற் செல்வான் 1

குருசீடம் முறையொன்றுங் கொள்ளான் - செல்வன்
குணாதீத னொருவரையும் கும்பிட்டு நில்லான் 2

அருவென்றும் உருவென்றும் சொல்லான் - செல்வன்
ஆரறி வாரென் றதட்டியே வெல்வான் 3

வருவாரைப் போவோரைத் தெருவில் - செல்வன்
வைவான் சிரிப்பான் மகிழ்ச்சி தருவான். 4

மருமத்தில் மருமமா யிருப்பான் - செல்வன்
மாதவ ருமறி யாதம கத்தான். 5

# நல்ல மருந்து

இராகம் – மோகனம் தாளம் – ரூபகம்

("அருமருந்தொரு" என்ற மெட்டு)

நல்ல மருந்தொரு குருமருந்தை நான்
நல்லூரரிற் கண்டேனே. (நல்ல)

எல்லையில் லாப்பிணி தீர்க்கு மருந்து
இம்மை மறுமைக்கு மேற்ற மருந்து
இல்லை யெனாது கொடுக்கும் மருந்து
ஏழை யடியார்க்கிரங்கு மருந்து (நல்ல)

வல்லவன் செல்லப்பன் தந்த மருந்து
வாழ்த்தும் கணபதிக்கு குவந்த மருந்து
புல்லர்கள் கண்டு புசியா மருந்து
புண்ணிய யோகர் புசிக்கு மருந்து (நல்ல)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாலாட்டு

அன்னைபிதாக் குருவாகி அடியேனை ஆட்கொண்ட
தன்னிகரில் லாதசற் குருவே நீ கண்வளராய். 1

என்னையினிப் பிறவாமல் ஈடேற்றி வைத்தவனே
உண்மை முழுதுமென்ற உத்தமனே கண்வளராய். 2

நாமறியோ மென்று நல்லூரிற் சொன்னவனே
சேமமுட னென்னகத்தின் சீமானே கண் வளராய். 3

அப்படியே உள்ளதென அடிக்கடியே சொல்லியென்னை
இப்படியில் வாழவைத்த எந்தையே கண்வளராய். 4

காணுங் கண்ணிற் கலந்தவனே கார்வண்ணா
நானும்நீயு மென்றுரைக்க நாணுவேன் கண்வளராய். 5

சீராரும் நல்லூரில் தேரடியி லேயிருந்து
ஆரறிவா ரென்றுசொன்ன அப்பனே கண்வளராய். 6

எப்பவோ முடிந்ததென எனக்குப தேசம் செய்த
ஒப்பிலா மாமணியே உறவோனே கண்வளராய். 7

ஒருபிடி சோற்றுக்காய் ஊரூராய் நானலையத்
திருவருள் தந்தவனே செல்லப்பனே கண்வளராய். 8

எட்டாத கொப்பில் இருக்குமுனை யாரறிவார்
மட்டில்லா மாமணியே மாதவனே கண்வளராய். 9

கண்ணே உறங்குறங்கு கார்வண்ணா நீயுறங்கு
எண்ணேன் பிற தெய்வம் என் னிதயத்தே நீயுறங்கு 10

ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமிலான் நல்லூர்க்
குருவாக வந்து குறைதீர்த்தான் - வருவாரை
வையாமல் வைது வரந்தருவான் நாமெல்லாம்
உய்யாமல் உய்வோம்உவந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பொல்லாப்புமில்லை

## (தெம்மாங்கு மெட்டு)

ஒரு பொல்லாப்பு மில்லையென்பான் உண்மை முழுதுமென்பான்
ஒருவருக்குந் தெரியாதென்பான் - சின்னத்தங்கம்
ஓவியம்போல் இருந்தானடி. 1

அப்படியே உள்ளதென்பான் ஆரறிவா ரென்றுசொல்வான்
செப்படி வித்தையென்பான் - சின்னத்தங்கம்
செல்லப்பன் என்னுஞ்சீமான். 2

கந்தைத்துணியணிவான் கந்தன் திரு முன்றில்நிற்பான்
வந்தாரைப்போ வாரைவாயில் - சின்னத்தங்கம்
வந்தபடி ஏசிடுவான். 3

அப்படியே உள்ளதென்பான் அங்குமிங்கு மாயலைவான்
செப்படி வித்தையென்பான்- சின்னத்தங்கம்
தேரடியில் இருப்பானடி. 4

சாதி சமயமென்னுஞ் சங்கடத்துக் குள்ளாகான்
சேதியொன்றுஞ் சொல்லாகில்லான் - சின்னத்தங்கம்
சித்த பிரமையென்பார் (எல்லோரும்) 5

நீதி அநீதிஎன்னும் நிலைமையொன்றும் இல்லாதவன்
மாதிரிகள் ஒன்றுஞ்செய்யான் - சின்னத்தங்கம்
மத்தனைபபோல் திரிவானடி. 6

நீறு மணியான் நெற்றியிலே பொட்டுமிட்டான்
கூறிய தைக்கூறான் - சின்னத்தங்கம்
குணமொன்று மில்லானடி. 7

ஆறுதலா யிருமென்னான் ஆணவத்தை நீக்குமென்னான்
மாறுபாடாய்ப் பேசிடுவான் - சின்னத்தங்கம்
மதியிழந்தான் என்பாரடி. 8

சின்னத் தனமாய் தெருவாலே போவாரை
என்னப்பன் பேசிடுவான் - சின்னத்தங்கம்
இவன்விசரன் என்பாரடி. 9

உல்லாச நடையனடி ஊரூராய்த் திரிவாரடி
எல்லோரு மிவனைக்கண்டு - சின்னத்தங்கம்
ஏழனஞ் செய்வாரடி. 10

பத்துப்பாட்டுப் படிப்போரும் கேட்போரும் பாரினிலே
வித்தகராய் வாழ்ந்துபின்னே - சின்னத்தங்கம்
விதேகமுத்தி சேர்வாரடி. 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லச் சொல்லச்சுவைக்குமே செல்லப்பன் திருநாமம்

சொல்லச்சொல்லச் சுவைக்குமே செல்லப்பன் திருநாமம்
அல்லும் பகலும்அற்ற ஆனந்தம் தருமோனம்
வெல்லவரும் மாந்தர்தம் வாயடக்கும் சிவஞானம்
கொல்லவரும் யமனும்குடிஓடிப் போய்விடுவான்
கல்லை யுருக்கிவிடும் கருணைவெள்ளம் பெருகிவிடும்
இல்லையென்னும் சொல்லை இல்லாமல் ஆக்கிவிடும். *(1)*

நல்லூரில் தேரடியில் நாங்கண்ட சிவயோகம்
சொல்ல முடியாத சுகத்தினைக் காட்டிவிடும்
வில்லை விடத்தையஞ்சா வீரசாந்தாம் ஊட்டிவிடும்
பல்லைக்காட்டி திரியாமல் பரலோகம் கூட்டிவிடும்
பத்துப்பாட்டு படிப்பவரும் கேட்டுச்சுவைப்பவரும்
வித்தக ராகவாழ்ந்து விதேகமுத்தி சேர்வாரே. *(2)*

குருபரன் அடியிணை ஏத்துதல் இன்பம்
குருபரன் அருட்பணி ஆற்றுதல் இன்பம்
குருபரன் அருள்வாக்காக்கிடும் இன்பம்
குருபரன் சரண்புகக் கூடிடும் இன்பமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசான் கூசான் பேசான்

ஒருபொல்லாப்பு மில்லையென்பான் ஆசான் - அவன்
உன்மத்தன் போல்திரிவான் கூசான். 1

வருவாரைப் போவாரை ஆசான் - வாயில்
வையாமல் வைதுவிடக் கூசான். 2

உண்மை முழுதுமென்பான் ஆசான் - அவன்
உறங்காமல் உறங்குவான் பேசான் 3

நன்மைதீமை அறியாதான் ஆசான் - அவன்
நாம் அறியோம் என்று சொல்லக் கூசான். 4

அப்படியே உள்ளதென்பான் ஆசான் - சொல்லி
ஆரறிவா ரென்றுநகை செய்வான். 5

முப்போதும் தேரடியில் இருப்பான் - ஆசான்
முகமலர்ந்து தன்னிலே சிரிப்பான். 6

விற்றூணொண் றறியாதான் ஆசான்- என்றும்
விசரனைப் போற்றிரிவான் கூசான். 7

கற்றோரும் அறியாத சீரான் - அவனைக்
கைதொழுது நின்றாலும் பாரான் 8

இன்னாளில் னென்றவரும் அறியார் - இவனை
ஏற்றித் தொழுதவரைக் குறியான். 9

பன்னாட் பழக்கத்தினால் சிலபேர் - இவனை
ஏற்றித் தொழுதவரைக் குறியான். 10

சிவமேநா மாமென்று சிந்திக்கச் சீரார்
சிவமேநா மென்று தெளிவோம் - அவமே
மனமே யுடன்போகும் மற்றுமோர் தெய்வம்
கனவிலும் எண்ணாது காண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சற்குரு தரிசனம்

இராகம்: சாமா தாளம்: ஆதி

பல்லவி

சற்குரு தரிசனம் சகலபாக்கிய சுகம்
தாளினை பணிநீ தினம்

அநுபல்லவி

தாந்தன்னை அறியுமே
சாந்தமுஞ் செறியுமே (சற்குரு)

சரணம்

பேரன்பு பெருகிவிடும் பேதைமை கருகிடும்
பிரியாப் பிரியமெல்லாம் பேசாம லகன்றிடும். (சற்குரு)

ஆகம விதிமுறை அகத்தினில் பொருந்திடும்
ஆசாபாச மகலும் நேசானு பூதிவரும். (சற்குரு)

தேவாதி தேவர்களும் செய்வார் பணிவந்து
சீவன் சிவனென்னும் தெளிவுமுண் டாகுமே. (சற்குரு)

சித்தத்தில் நித்தம் திகழும் சிவயோக
அத்தனை ஆழ்ந்துள்ளே பாராமல் - மெத்தவுமே
பத்திசெய் வார்போலப் பாரெங்கும் தேடியே
கத்தித் திரிந்தென்ன காண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக் குருமணியே போற்றி

### அறுசீரடி ஆசிரிய விருத்தம்

அன்பு நெறியு மருணெறியு மறியாதேனை நயந்து வந்தே
இன்ப நெறியிற் புகுத்திவிட்ட எந்தாய் நல்லைப் பதிக்கரசே
துன்ப மறியேன் சுகமறியேன் தொல்லை வினையும் யானறியேன்
முன்பு மறியேன் பின்பறியேன் முழுதுமுண்மை யெனுமுனியே 1

முனியே! முனிவர் முழுமுதலே! மூர்க்கனேனை ஆண்டு கொண்ட
தனியே தன்னொப்பா ரில்லாத் தலைவா! சகமீ மேழுக்கும்
இனியாய்! என்னை நீங்கா இறைவா நல்லைக் குருமணியே!
புனிதா! போற்றி! புண்ணியர்கள் நண்ணும் பொருளே போற்றி! 2

### எண்சீரடியாசிரிய விருத்தம்

போற்றியொரு பொல்லாப்பு மில்லை யென்ற
பூங்கழல்க ளவைபோற்றி புவியுள் ளோர்கள்
ஏற்றுகின்ற திருவடிக ளென்றும் போற்றி
எளியேனை யாண்டுகொண்ட கருணை போற்றி
சாற்றரிய மலர்சோலை தயங்கு கின்ற
தண்புனல்சேர் நல்லூரிற் குருவாய் வந்து
வீற்றிருந்தென் வினைதீர்த்த விமலா வுன்னை
வேறாக எண்ணுதற்கு விதியுமுண்டோ 3

உண்டோதா னுனைப்போல ஒருவ ரிந்த
உலகத்தில் உறுதிதந்தோ ருணர்ந்து பார்க்கில்
எண்டோள னாவாய்நீ என்னை உன்னை
எவர்பிரித்துச் சொல்லவல்லார் எந்தாய்! எந்தாய்!
வண்டோதை குறையாத வளஞ்சேர் நல்லைக்
குருமணியே! மவுனத்தின் வைப்பே! யுன்னைக்
கண்டோர்க்குங் குறையுன்டோ கலந்து கொண்டேன்
கள்ளுண்ட வண்டுபோ லாயி னேனே. 4

ஆயுநான் மறைதேடி யறியாவுன்னை
யாரறிவா ரரும்பொன்னே மணியே முத்தே
மாயவுட லுண்மையென மதித்து வாடி
மயங்காம லடியேனை நல்லூர் தன்னில்
தோயுமருட் குருவாகிச் சொரூபங் காட்டிச்
சுகம்பெறவே யிருத்திவைத்தா யினியெனக்கு
வாயுமுண்டோ வணங்குதற்கு வழிவே றுண்டோ
வள்ளலே யுள்ளதைநீ வழுத்து வாயே 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயனே சற்குருநாதா

இராகம் - சஹானா　　　　　　　　　　தாளம் - ஆதி

**பல்லவி**

ஐயனே சற்குரு நாதா - உனை
யண்டிவந் தேனருள் தாதா
துய்யனே சொற்பிர போதா - உனைத்
தோத்திரஞ் செய்தேன் பொற்பாதா　　　　(ஐய)

ஈயாத புல்லரைக் கூடி - நானும்
இடர்ப்பட் டேன்வெகு கோடி
ஓயாம லுன்புகழ் பாடி - நானும்
ஓடிவந் தேனுனைத் தேடி　　　　(ஐய)

ஆதார மாறையுந் தாண்டி - அருள்
அம்பலத் தேநின்று வேண்டி
சூதான மனந்தினந் தூண்டி - நானும்
தொடர்ந்துவந் தேனினைந் தாண்டி　　　　(ஐய)

## முழுவதும் உண்மை

**பல்லவி**

முழுவதும் உண்மையென்று
மோனமுனி சொன்னானன்று

**அநுபல்லவி**

பழுதொன்று மில்லையென்று
பண்ணுவாய் சிவதொண்டு　　　　(முழு)

**சரணங்கள்**

ஒழிந்துபோகும்பிறவி அழிந்துபோம் பழிபாவம்
எழுந்திருவிழித்துக்கொள் எல்லாம் உனக்குவெற்றி　　　　(முழு) 1

தளர்ந்துபோகாதேகுரு சாற்றிய ஞானமொழி
தெளிந்துகொண் டாற்சீவன் சிவனெனக் காணலாம்　　　　(முழு) 2

சொல்லித்து திக்கும்யோகசுவாமியைத் தினங்காக்கும்
செல்வன்திருப் பாதமேயல்லும்பகலுந்துணை　　　　(முழு) 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆள வேண்டுமே

இராகம் - சங்கராபரணம்
தாளம் - திரிபுடை

**பல்லவி**

சஞ்சல மிகவும் மிஞ்சுதே சற்குரு நாதா
தமியேனை யாள வேண்டும் (சஞ்சல)

**அநு பல்லவி**

வஞ்சம் பொறாமை கோபம் வர வர நெருக்குதே
வாணா ளினாசை மிகமிகப் பெருக்குதே. (சஞ்சல)

**சரணம்**

எப்படிச் சொன்னாலும்நீ யேனென்று கேளாமல்
செப்படி வித்தை செய்தல் திருவருட் காகுமோ
ஒப்புவமை யில்லாத அப்பனே செல்லப்பனே
உன்றுணையல்லாம லொருவரு மில்லை ஐயா. (சஞ்சல)

காலை யெழுந்திருந்து
கைகால் முகங்கழுவி
கோல மலரெடுத்து - கிளியே!
குருபதத்தைக் கும்பிடுவோம்
கோபக்ரோத மோகமாகிய
கூடாதகூட்டங் கூடாதே
நாடாதேயென்றுந் தேடாதே
நாமதுவெடி நாமதுவெடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ட பத்து

## (நாலடித்தரவு கொச்சக்கலிப்பா)

பொறிவழியே போய்ப்புகுந்து புலம்பித் திரிவேனை
நெறிவழியே நிறுத்தி நீயேநா னென்றுரைத்த
பெரியவனைப் பித்தனெனப் பிறர்பேசும் பெருமானைச்
செறிபொழில்சூழ் நல்லைநகர்த் தேரடியிற் கண்டேனே. 1

தந்தைதாய் மைந்தர் தமர்தார மென்றடியேன்
பந்தத்துட் பட்டு பாழாகப் போகாமே
சிந்தை தெளிவித்துச் சீரடியார் நடுவைத்த
எந்தை பெருமானை யிலங்குநல்லை கண்டேனே. 2

தேகமே மெய்யென்று சிதடனாய்த் திரிவேனை
மோக மறுத்தாண்ட முழுமுதலை மொய்குழலாள்
பாகம் மறைத்து பரிந்துவந்த பாக்கியத்தை
நாக மலர்சொரியும் நல்லை நகர் கண்டேனே. 3

இருவினையான் மதிமயங்கி யிடர்ப்பட்டுக் கிடப்பேனைக்
கருணையினா லாண்டு கொள்ளக் கடவுடிரு வுளங்கொண்டு
அருள்மேனி தாங்கி யவனியிலே வந்தானைத்
திருவாழும் நல்லைநகர்த் தேரடியிற் கண்டேனே. 4

காட்டிலே காளியுடன் கூத்தாடுங் கண்ணுதலோன்
நாட்டிலே ஞான குருவாய் நயந்துவந்து
மீட்டா னவன்றன் விரையார் மலரடியை
மாட்சிமைசேர் நல்லைத்தேர் மாணடியிற் கண்டேனே. 5

மாலயனுந் தேடி யறியா மலரடிகள்
கோல வருட்குருவாய்க் குவலயத்திலே போந்து
சாலப் பெரும்பகையை தானீக்கி யாண்டானை
ஞாலம் புகழுநல்லை தேரடியிற் கண்டேனே. 6

நானாரென் னுள்ளமா ரெனநாடு மெய்யடியார்
தானாக நின்றருள்செய் சங்கரனே தாரணியிற்
கோனாக வந்தாண்டன் குளிரார் திருவடியைத்
தேனார் பொழில்நல்லைத் தேரடியிற் கண்டேனே. 7

எட்டு மிரண்டு மறியா வெனக்கு நல்ல
பட்டமளிக்கப் பரிந்து வந்த மெய்ப்பொருளை
வட்டஞ்சூழ் தடிபரவும் மங்கைமார் கொண்டாடுஞ்
சிட்டர் வாழ் நல்லை நகர்த் தேரடியிற் கண்டேனே. 8

என்னையன்றி வேறொன்றுமில்லை யெனச்சொன்ன
அன்னையினு மன்புடைய வாசா னவனிதற்
கன்னலொடு செந்நெல் கமுகு கதலிபலா
மன்னுநல்லை மாநகரிற் றேரடியிற் கண்டேனே. 9

இரவுபக லற்ற ஏகாந்த வீட்டிலெனைப்
பரவிப் பணியவைத்த பரமன் குருவாகிச்
சரண கமலமலர் தலை தனிலே வைத்தவனைக்
குரவு மலர்குறையாக் குளிர் நல்லை கண்டேனே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்த ஆன்மா நித்தியம்

இராகம் - நடைபைரவி. தாளம் - ஆதி

**பல்லவி**

அந்த வாக்கும் பொய்த்து போமோ
ஆசான் நல்லூர் வீதியி லருளிய.

**அநுபல்லவி**

இந்த ஆன்மா நித்திய மென்றா (அந்த)

**சரணம்**

மங்கைய ராடவர் மைந்தர்கள் கூடி
மகிழ்ந்தும் புகழ்ந்தும் வரதனைத் தேடி
வந்தனை புரிய வருவார் கோடி
செந்தமிழ் நாவலன் செல்லப்பன் சொன்ன. (அந்த)

தேங்கா யிளநீர் தீங்கனி கொண்டு
திருவடித் தொண்டு செய்வதைக் கண்டு
ஐம்புல னடங்கி நின்றவ ருண்டு
ஆரறி வாரென ஆசான் சொன்ன. (அந்த)

கௌரி மனோகரி ஆனந் தாச்சி
கமல ஆச்சி செல்லாச்சி ஐவரும்
உவந்து சேவடி கும்பிடு முத்தமன்
தவத்தைச் செய்திடத் தந்திடு மருளே (அந்த)

ஆசானருளால் அகந்தை யழிந்தது
ஆசானருளால் அருண்மழை பொழிந்தது
ஆசானருளால் ஆனந்தம் விளைந்தது
ஆசானருளால் ஆசா னாயினேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரறிவார் என்றப்பன் சொல்வான்

"தீராத விளையாட்டுப்பிள்ளை - கண்ணன்" என்ற மெட்டு

ஆரறிவார் என்றப்பன் சொல்வான் - தன்னை
அணைநது வந்த பேர்களையே ஆதரித்துக் கொள்வான். 1

பாரறியார் இவருடைய தன்மை - பலர்
பைத்திய காரனென்று பரிகாசஞ் செய்வார். 2

தேரடியில் எந்நாளும் இருப்பான் - ஆசான்
தெருவாலே வருவாரைப் போவாரை வைவான். 3

ஆரடா நீயென்றே அதட்டி - ஆசான்
அன்பிலான் போலவே துன்புறுத்தி நிற்பான். 4

அப்படியே உள்ளதெனச் சொல்லி - ஆசான்
அந்தரங்க மாகவே பேசிக்கொண் டிருப்பான். 5

எப்படி இவன்றன்மை என்று - எவரும்
எண்ண முடியாமல் சும்மா இருப்பான். 6

பாவலர் நாவலர்கள் தாமும் - ஆசான்
பரிபாஷை அறியாமல் பதறியே போவார். 7

மூவர்களும் ஒன்றாகச் சேர்ந்து - நல்ல
மூர்த்தம் இதுவென்று முகமலர்ந்து நிற்பார். 8

செல்வர்பின் சென்று தினமலை யாமல்
நல்வரந் தருவாய் ஞானிகள் நாட்டமே
சில்பக றோன்றிச் சிதையா வண்ணம்
எல்லையில் கால மென்றனுக் கருளுதி
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பிடவா என்மனமே !

ஒருபொல்லாப்பு மில்லலையென்றென் உள்ளங் குளிரவைத்த
குரு நாதன் திருவடியே கும்பிடவா என் மனமே. 1

உண்மை முழுதுமென உறுதி எனக்களித்த
அண்ணலை நான்வணங்க அதிவிரைவாய் வாமனமே. 2

நாமறியோ மென்று நல்லூரிற் சொன்னவனைச்
சேம முடன்காணச் சீக்கிரமே வா என்மனமே. 3

அப்படியே உள்ளனதென அடிக்கடியே சொல்லுஞ்செல்
லப்பனை யான்காண அதிவிரைவாய் வாமனமே. 4

ஆரறிவா ரென்றென் அகங்களிக்கத் தேரடியிற்
பாரறியச் சொன்னவனைப் பாடவா என் மனமே. 5

தவராச சிங்கத்தைச் சற்குருவை நல்லூரில்
எவருமறி யாதவனை ஏத்தவா என்மனமே. 6

கந்தைத் துணியணிந்து காமங் குரோதமற்ற
எந்தை தனைக்காண இசைந்து வா என்மனமே. 7

மந்திர தந்திரமும் மானபிமானமிலாச்
சுந்தரனைக் காண தொடர்ந்து வா என்மனமே. 8

பிச்சைக்கே இச்சித்துப் பித்தனைப் போற்றிரிந்த
அச்சமில்லா ஆசானை அன்பு செய்ய வாமனமே. 9

ஆறாறு தத்துவத்துக் கப்பாலே உள்ளவனை
மாறாக் கருணையனை மருவா என்மனமே. 10

குருபரன் அடியிணை ஏத்துதல் இன்பம்
குருபரன் அருட்பணி ஆற்றுதல் இன்பம்
குருபரன் அருள்வாக்காக்கிடும் இன்பம்
குருபரன் சரணம்புகக் கூடிடும் இன்பமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவுந்தியார்

அருவாகி நின்றவன் ஆசானாய் நல்லூரில்
திருவருள் செய்தானென் றுந்தீபற
சீவன் சிவனென் றுந்தீபற. 1

ஆசைநி களத்தினை வேரொ டறுத்தவன்
பேசப் பெரியானென் றுந்தீபற
பிறப்பிறப் பில்லையென் றுந்தீபற. 2

இல்லைஉண் டென்று இயம்பவொண் ணாதவன்
நல்லூரில் வந்தானென் றுந்தீபற
நானே அவனென் றுந்தீபற. 3

ஈர்த்தென்னை ஆண்டவன் எழிலாரும் நல்லூரிற்
காத்தெம்மை ஆண்டானென் றுந்தீபற
கருணைக் கடலென் றுந்தீபற. 4

உளவறிந் தெல்லாம் உன்செயலென் பார்க்கு
அளவில்லா ஆனந்தனென் றுந்தீபற
ஆசை ஒழித்ததென் றுந்தீபற. 5

ஊரும் பேரும் இல்லான் உவந்தெனைத்
தானாய்வந் தாண்டானென் றுந்தீபற
சஞ்சலம் தீர்ந்ததென் றுந்தீபற. 6

எல்லா உலகமு மான பரம்பொருள்
நல்லூரில் வந்தானென் றுந்தீபற
நாமறி யோமென்றான் உந்தீபற. 7

ஏட்டி லெழுதிக் காட்ட வொண்ணாதவன்
நாட்டிற் குருவானான் உந்தீபற
நமக்குக்குறை வில்லையென் றுந்தீபற. 8

ஐம்புல னைந்தையும் ஆட்கொள்ளவல்லவன்
அன்பன்நல் லூரானென் றுந்தீபற
ஐயமொன் றில்லையென் றுந்தீபற. 9

ஒப்புயர் வற்றவன் எப்போது மினியவன்
அப்பன்நல் லூரானென் றுந்தீபற
ஆட்சேபம் இல்லையென் றுந்தீபற 10

ஓங்காரத்தின் உட்பொருளானவன்
ஆங்காரம் தீர்த்தானென் றுந்தீபற
அழிந்தது மாயையென் றுந்தீபற. 11

ஔவிய நெஞ்சத்தால் அறியவொண் ணாதவன்
செவ்வியருள் தந்தானென் றுந்தீபற
செல்லப்ப தேசிகனென் றுந்தீபற. 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்குருபர புங்கவ சிங்கமே

கட்டளைக் கலிப்பா

தன்னைத் தன்னால் அறிந்திட வேண்டுமே
தானா யெங்குஞ் செறிந்திட வேண்டுமே
பொன்னை மாதரைப் போக்கிட வேண்டுமே
புவியி னாசையை நீக்கிட வேண்டுமே
கண்ணப் போலறங் காத்திட வேண்டுமே
கமல பாதந் தொழுதிட வேண்டுமே
எண்ணம் யாவு மிறந்திட வேண்டுமே
என்கு ருபர ! புங்கவ சிங்கமே! 1

கசடு தீர்த்தறங் கற்றிட வேண்டுமே
கல்வியாற் பயன் பெற்றிட வேண்டுமே
அசடர் நட்பை அகற்றிட வேண்டுமே
அந்தி சந்தி அடி தொழ வேண்டுமே
நிசசொ ரூபம றிந்திட வெண்டுமே
நீங்கா தென்று மிருந்திட வேண்டுமே
அசலு னக்கிலை யென்ற குருபர!
ஆண்மை விஞ்சிடும் அற்புதச் சிங்கமே! 2

மூன்று மொன்றாய் முடிந்திட வேண்டுமே
முனையின் வாசல் திறந்திட வேண்டுமே
ஊன்று பாதத் துறங்கிட வேண்டுமே
உள்ளே யானந்தம் பொங்கிட வேண்டுமே
தூண்டு சோதி விழுங்கிட வேண்டுமே
தூய நிர்க்குண அற்புத பொற்பதம்
ஈண்டு தந்த இனிய குருபர!
என்னை யாண்டவா! இங்கித சிங்கமே! 3

இருளை நீக்கி இருந்திட வேண்டுமெ
எங்குந் தெய்வத்தை கண்டிட வேண்டுமே
பொருள நிந்தினிப் போற்றிட வேண்டுமே
பொய்ய முக்கா றகற்றிட வேண்டுமே
மருளைத் தந்து மயக்கும் பொருள்களை
மாற்றி யேயரு ளாக்கிட வேண்டுமே
பெருமை யிற்பிறர் பேசுங் குருபர !
பெத்த னென்னனையும் பேணிய சிங்கமே! 4

அஞ்சும் மூன்றும் அறிந்திட வேண்டுமே
ஆண வத்தை ஒழித்திடல் வேண்டுமே
இஞ்சி சூழும் இலங்கையில் ராவணன்
ஏத்திப் போற்றி இசைத்த முதல்வனே!
நஞ்சு கண்டத்திற் கொண்டவ ! நம்பனே !
நம்மை யாளுவான் நண்ணும் முதல்வனே!
பஞ்சின் மெல்லடிப் பரம குருபரா!
பாவி யேனையு மாட் கொண்ட சிங்கமே! 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டில் வேண்டாமை வேண்டிட வேண்டுமே

### கட்டளைக் கலிப்பா

வேண்டில் வேண்டாமை வேண்டிட வேண்டுமே
மிக்க அன்பருள் வாழ்ந்திட வேண்டுமே
மாண்டு மாண்டு பிறந்திட நேரினும்
மாத வமனம் மற்றொரு பற்றின்றி
ஊன்று பாதத் துறங்கிட வேண்டுமே
ஓம் சிவாய நமவென வேண்டுமே
ஈண்டெ னக்கொரு சொல்லா லுணர்த்திய
என்கு ருபர புங்கவ சிங்கமே!

மண்ணி னாசை மறந்திட வேண்டுமே
மதியி லேரவி சேர்ந்திட வேண்டுமே
விண்ணினோசை விளங்கிட வேண்டுமே
வேறோன் றின்றித் துலங்கிட வேண்டுமே
பண்ணும் ஓசையும் போன்ற பரமனைப்
பாடி யாடிப் பணிந்திட வேண்டுமே
என்னு ளேயருள் காட்டிய அண்ணலே
என்கு ருபர புங்கவ சிங்கமே!

நரியை நற்பரி யாக்கிட வேண்டுமே
நானும் நீயுமொன் றாகிட வேண்டுமே
திரிபு ரத்தை யெரித்திட வேண்டுமே
தேவ தேவனைக் கண்டிட வேண்டுமே
பெரியார் தம்பணி பேணிட வேண்டுமே
பிறவி யின் பயன் பெற்றிட வேண்டுமே
வறிய னேனையும் வாழ்வித்த அண்ணலே
வாழ்கு ருபர புங்கவ சிங்கமே!

வெளியி லேயொளி கண்டிட வேண்டுமே
வீணர் தங்களை விட்டிட வேண்டுமே
கழியி லேயிருந் தாறிட வேண்டுமே
துரிய வீட்டி லிருந்திட வேண்டுமே
களிகொள் யானைக் கட்டிட வேண்டுமே
காரணத்தை யறிந்திட வேண்டுமெ
தெளிய வேயருள் காட்டிட தெய்வமே
தேவர் போற்றுங் குருபர சிங்கமே!

காலைக் கட்டித் தவஞ்செய்ய வேண்டுமே
காமன் றன்னை யெரித்திட வேண்டுமே
மேலை வாசல் திறந்திட வேண்டுமே
வெளியி லேநடங் கண்டிட வேண்டுமே
மூல மந்திர மோதிட வேண்டுமே
ஞால மெங்கும் புகழ்ந்திடு தெய்வமே
நற்கு ருபர புங்கவே சிங்கமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எந்நாளோ

ஒருபொல்லாப்பு மில்லையென உரைத்த குருநாதன்
திருவடியைச் சேவிக்கு மருள்பெறுவ தெந்நாளோ

உண்மை முழுதுமென ஓதுந் திரு வாக்கு
என்னை விழுங்கி இருப்பதுவு மெந்நாளோ

ஆரறி வாரென்று அடிக்கடியே சொல்லும்
சீரறிந்த வாழும் செயலறிவ தெந்நாளோ

அப்படியே உள்ளதென அடிக்கடியே பேசும்
அப்பனைக் காணும் அருள்பெறுவ தெந்நாளோ

முடிந்த முடிவென்று முகமலர்ந்து சொன்னவன்றன்
அடிபணிந்து நிற்குநாள் இந்நாளோ எந்நாளோ

சீராரும் நல்லூர்த் தேரடியிலே யிருக்கும்
காராரும் மேனியனை காணும்நாள் எந்நாளோ

பித்தனென எல்லோரும் பேசுவதைக் கேட்டிருந்தும்
சித்தங்கலங் காதவனைச் சிந்திப்ப தெந்நாளோ

## ஓம் தத் சத்

இருவரும் தேடிக் காணா இறைவன் என்போல் உருத்தாங்கி
இணங்கி யெவரும் வணங்கும் நல்லையில் இன்னான் இவனென்ன
ஒருவரு மறியா தோடியுலாவி உவகை பூத்த முகத்தினராய்
ஒருநாள் என்றனை உற்று நோக்கி ஓர் பொல்லாப்புமில்லையென்று
அருவமுங் காட்டி உருவமுங் காட்டி அப்பாற் கப்பாலாம்
அருள்நிலை காட்டிக் காட்டி காட்டி அந்த மாதி யில்லாச்
சொரூபமுங் காட்டி சும்மாவிருக்கும் சூட்சத்தில் மாட்டிவிட்டான்
துன்பம் இறந்தன இன்பம் இறந்தன சோதி சோதி சிவசோதி. 1

சிவத்தினை வளர்க்கும் பாக்கிய மெமக்குச் சித்தித்த தினிமேலே
தெய்வம் வேறே உண்டென வெண்ணும் சிந்தையு மிறந்ததுவே
அவத்தினிற் செல்லும் மனத்தினை வெல்வோம் ஐம்பொறி வழிச்செல்லோம்
அழியா மெய்ப்பொருள் ஆகிய ஆன்மா அறிவோம் நாம் நன்றாய்
தவவழிச் செல்வோம் குருமொழி கொள்வோம் தன்னைத் தானறிவோம்
சாந்தம் பொறுமை ஏய்ந்த நற்பணி சந்தத மணிந்து கொள்வோம்
உவத்தலும் காய்தலும் ஓடி ஒளித்தன ஒன்றுங் குறைவில்லேம்
உண்மை முழுதும் நீ ஓதுக தினமும் ஓம் தத்சத் ஓம். 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவம்மானை

அங்குமிங்கு மாக வலைந்து திரிவேனைத்
தங்குங் கருணையினாற் றானாண்டு கொண்டான்
எங்கள் குருநாதன் எழிலார் திருவடியை
இங்குநாம் பாடி யின்புறுவோ மம்மானாய். 1

ஆருமறி யாம லந்தரங்க மாயருளைச்
சேரும் படிசெய்த செல்வக் குருநாதன்
ஊரும்பே ருமறியா வொருவன் கழல்பாடி
நீரும்பூவுங் கொண்டுநிதம் போற்றுதுங்காணம்மானாய். 2

இருவினையின் கட்டழித்து எல்லாஞ் சிவன்செயலாய்
கருதும் படிவைத்த கருணைநிறை ஆசான்றன்
திருவடியைப் பாடிநாம் சிந்தித்துச் சிந்தித்து
உருகி யுருகி யுணருவோ ம்மானாய். 3

ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை குருநாதன்
கூர்த்த திருநயனக் கொள்கையிற் பாவமெல்லாம்
தீர்த்தா னவன்றன் திருவடியை நாம்பாடித்
தோத்திரித் தென்றும் புகழ்பெறுவோ ம்மானாய். 4

உன்மத் தங்கொண் டொருவனைப் போற்றோன்றிச்
சின்னத் தனமான வார்த்தைகளை செப்பியென்றன்
கன்மனசை முற்றாய்க் கரைத்த குருநாதன்
என்னத்த னிணையடியை ஏத்துவோமம்மானாய். 5

சாதலும் பிறந்தலுந் தவிர்த்தெம்மை யாண்ட
போத குருவைப் புண்ணிய மூர்த்தியை
நாதங் கடந்த ஞான வெளியிடை
பேத மின்றிக் கண்டுபிறப் பற்றோம்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருமணி

புலனைவென்ற பெரியோர்கள் உளம்பூத்த மணி
பொள்ளாமணி என்றும் புதுமணி
இலமென்று வந்தடைந்தார் இடும்பை கெடுக்கும் மணி
எவராலும் விலைமதிக்க வொண்ணா மணி
பலநிறமாய்ப் பாரினிடைத் தோற்றும் மணி
பச்சைமால் மெச்சிப் பணியும் மணி
இலங்கையிலே எங்கு மிருக்கும் மணி
என்னைப் பணிகொண்ட குருமா மணி. 1

கசிந்துருகிப்பாடுவார் காணும் மணி
கண்மூன் றுடைய கதிர் மாமணி
வலிந்தென்னைப் பணிகொண்ட வண்ணமணி
மலரோனும் மாலவனுங் காணா மணி
இந்தோடு கங்கைசென்னி ஏந்தும் மணி
இளநாகம் மேனியிலே சாத்தும் மணி
அந்தமணி இலங்கையிலே வாழும் மணி
ஆரேனும் தேடுவார்க் ககப்படும் தெய்வ மணி 2

பந்தமெனும் பாழ்இருளைக் கிழிக்கும் மணி
பரவுவார்க் கிலவசமாய்க் கிடைக்கும் மணி
அந்தமுட னாதியில்லா அரும்பொன் மணி
அதிசயங்க ளநேகமெல்லாங் காட்டும் மணி
முந்திய மணிக்கெல்லாம் முதலான மணி
மூவர்களுந் தேவர்களும் பணியும் மணி
இந்தவளஞ் சேரிலங்கை வந்த மணி
எனையாண்ட குருமணியென் சொந்த மணியே. 3

ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமிலான் நல்லூர்க்
குருவாக வந்து குறைதீர்த்தான் - வருவாரை
வையாமல் வைது வரந்தருவான் நாமெல்லாம்
உய்யாமல் உய்வோம்உவந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவடி வாழ்க

## குறள்வெண்செந்துறை

அகரமாம் எழுத்துப்போல அனைத்தினுங் கலந்துநின்றே
இகபரம் இரண்டுமீந்த எழிற்குரு திருத்தாள் வாழ்க 1

ஆனுமாய்ப் பெண்ணுமாகி அன்னையும் பிதாவுமாகிக்
காணவே என்முன்வந்த கழலடி யென்றும் வாழ்க 2

இருவினை நீக்கியெம்மை இன்பமாம் நிலத்தில்வைக்கத்
திருவுருத் தாங்கிவந்த செல்வ! நின் திருத்தாள் வாழ்க 3

ஈன்றிடு தந்தைதாயோ டெய்திய சுற்றமாகித்
தோன்றிய குருவுமான துணைவ! நின் திருத்தாள் வாழ்க 4

உயர்ந்தார்க்குமுணரவொண்ணா ஒருவனே என்போல் வந்து
குணங்காட்டி ஆண்டுகொண்ட குருவின்சீர்ப்பாதம் வாழ்க 5

ஊசிமே னுனியினின்றே உக்கிர தவத்தையாற்றும்
மாசில்லா தவருங்காணா மலர்ப்பதம் மனத்தில் வாழ்க 6

என்னைநீ வேறாயெண்ணி இடர்ப்பட வேண்டாமென்று
தன்னைத்தந் தாண்டுகொண்டசற்குரு தாள்கள் வாழ்க 7

ஏதுமொன் றறநில்லென்றே யெனக்குநல் லருளைத்தந்த
தீதிலாத் தேசிகன்றன் திருவடி வாழ்க! வாழ்க! 8

ஊற்றார் பெற்றா ருடன்பிறந் தாரினும்
நற்றவத் தோரே நந்துணை யாகுங்
குற்றங் கடிந்து குணத்தை மேற்கொண்டு
செத்தவர் போலத் திரிவோம் நாமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# செல்வன் சீரடிகள் காப்பு

ஒரு பொல்லாப்பு மில்லை யென்னும்
ஓசையோடு உவந்து நோக்கி
திருவருள் தீக்கை செய்த
செல்வன் சீரடிகள் காப்பு. *1*

ஆரறி வாரென் றுன்னும்
அரியமந் திரத்தைத் தந்த
பேரறி வுடைய செல்வன்
பெய்கழ லென்றுங் காப்பு . *2*

முழுவதும் உண்மை யென்று
முகமலர்ந் தெனக்குச் சொல்லிப்
பழுதற ஆண்டு கொள்ளும்
பாதபங் கயமே காப்பு. *3*

பாராதி பூத மெல்லாம்
பரமன்தன் வடிவ மென்றே
சீராக எடுத்துச் சொன்ன
செல்வன்தா ளென்றுங் காப்பு. *4*

காயமே கோவி லாகக்
கண்டுபா வனைசெய் யென்று
நேயமாய் எனக்குச் சொன்ன
நிமலன்தான் என்றுங் காப்பு. *5*


பற்றினாற் பிறந்தி றந்து
பாரினில் சுழன்றா யந்தப்
பற்றினை விடுவாயென்ற
பரமன்தாள் என்றுங் காப்பு. *6*


ஆசானருளால் அகந்தை யழிந்தது
ஆசானருளால் அருண்மழை பொழிந்தது
ஆசானருளால் ஆனந்தம் விளைந்தது
ஆசானருளால் ஆசானாயினேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலயத்தின் முன்னைய தோற்றம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






நினைவாலய முன்றலில் செல்லப்பா சுவாமிகளின்
திரு உருவம் வீதி உலா வரும்பொழுது...

நல்லூர் ஆலய முன்றலில் திரு உருவ வீதி உலாவின்போது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நினைவாலய முன்றலில் செல்லப்பா சுவாமிகளின்
திரு உருவம் வீதி உலா வரும்பொழுது....


நல்லூர் ஆலய முன்றலில் திரு உருவ வீதி உலாவின்போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீதி உலாவின்போது நல்லூர் கோவில் வீதியில்...



கோவில் வீதி நாகவேந்திரா ஆலய முன்றலில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



22.03.2015 சுவாமிகளின் திரு உருவ பிரதிஷ்டை பூர்வாங்க கிரியைகள் ஆரம்பத்தின்போது...



அபிஷேக நிகழ்வில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அபிஷேக நிகழ்வில்



நூறாவது ஆண்டு குருபூசை பொங்கல் நிகழ்வில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கும்பாபிஷேகத்தின் போது...



கும்பாபிஷேகம் நிறைவுற்று தீபாராதனையின் போது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தீபாராதனையின் போது...



தீபாராதனையின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கும்பாபிஷேக குருவின் உபசாரத்தின் போது...




குருபூசையில் தொண்டுநாத சுவாமிகளுடன் ஆறுதிருமுருகன் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருபூசை நிகழ்வில் ஆலய பரிபாலகர் கனகரத்தினம் சுவாமிகளுடன்...




நூறாவது ஆண்டு குருபூசையில் ஆறுதிருமுருகன், தொண்டுநாத சுவாமிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொழிலதிபர் சாமி அவர்கள்



தொழிலதிபர் சாமியுடன் நினைவாலய பரிபாலகர்கள் திரு. ச. கனகரத்தினம், திரு ச. கனகசபாபதி அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆலயப் பரிபாலகர்களுடன் அன்பர் வே. சிவகுருநாதன் அவர்கள் .




நூறாவது ஆண்டு குருபூசையில் சுவாமிகளின் அலங்காரக்காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூறாவது ஆண்டு குருபூசையில் .



நூறாவது ஆண்டு குருபூசையில் அன்பர் வே. சிவகுருநாதன் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்



நூறாவது ஆண்டு குருபூசையில் .




நூறாவது ஆண்டு குருபூசையில் நல்லூர் சிவஸ்ரீ. வைகுந்தக்குருக்கள் அர்ச்சனை செய்யும்போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூறாவது ஆண்டு குருபூசையில் ஆலய முன்றலில் வழிபடும் அடியவர்கள்.



நூறாவது ஆண்டு குருபூசையில் சின்மயாமிஷன் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூறாவது ஆண்டு குருபூசையில் ஆலய முன்றலில் வழிபடும் அடியவர்கள்.




நூறாவது ஆண்டு குருபூசையில் அடியவர்களிற்கு கும்பாபிசேக பிரதமகுரு வீபூதிப்பிரசாதம் வழங்கியபோது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





செப்பில் வடிவமைக்கப்பட்ட செல்லப்பா சுவாமிகளின் திருவுருவ படத்தை ஆலயப் பரிபாலகர்களிடம் கையளிப்பு நிகழ்வின் போது.





செல்லப்பா சுவாமிகளின் திருவுருவப் படம் கையளித்த பின்னர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நூறாவது ஆண்டு குருபூசையில் கலந்துகொண்டு வழிபடும் அடியவர்கள் .


நூறாவது ஆண்டு குருபூசை நிறைவில் திரு. ச. கனகசபாபதி அவர்கள் நற்சிந்தனைப் பாடல்கள் ஓதப்படும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நற்சிந்தனை பாடல்கள் கூட்டாக அடியவர்கள் பாடுதல்




நூறாவது ஆண்டு குருபூசையில் ஆறுதிருமுருகன் அருளுரை வழங்கிய பொழுது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





செல்லப்பா சுவாமிகளின் வரலாற்று நூல் மீள் பதிப்பு வெளியீட்டு வைப்பின்போது ஆறுதிருமுருகன் அவர்கள்.




நூறாவது ஆண்டு குருபூசையில் தொண்டுநாத சுவாமிகளால் செல்லப்பா சுவாமிகளின் திருவுருவப்படத்தை அடியவர்களிற்கு வழங்கியபோது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ச.கனகரத்தினம் சுவாமிகள்




செல்லப்பா சுவாமிகளின் நினைவாலயத்தை 75 ஆண்டுகளாக பரிபாலித்துவரும்
திரு.ச. கனகரத்தினம் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நூறாவது ஆண்டு குருபூசையில் அருள் ஒளி பத்திரிகை செல்லப்பா சுவாமிகள் பற்றி எழுதி நினைவாக அன்றைய தினம் வெளியீட்டு வைக்கும் போது




அருள் ஒளி பத்திரிகை வெளியீட்டுரையின் போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நூறாவது ஆண்டு குருபூசையில் தொண்டுநாத சுவாமிகள் அருளுரை வழங்கிய பொழுது.



தொண்டு நாதசுவாமிகள் அருளுரையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. மா. வேதநாதன் அவர்கள் குருபூசையில் அருளுரை வழங்கல்.





யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்கள் குருபூசையில் அருளுரை வழங்கல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆலய பரிபாலகர் திரு. ச. கனகசபாபதி அவர்கள் குருபூசை நிகழ்வில் நிறைவுரையின் போது.



நூறாவது ஆண்டு குருபூசை, நல்லூர் தேரடியில் நடைபெறுகின்ற காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் தேரடியில் நூறாவது ஆண்டு குருபூசையில் திருமுறை பாராயணம்.



நல்லூர் தேரடியில் நூறாவது ஆண்டு குருபூசையில் கலந்து வழிபடும் அடியவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவாமிகளின் அலங்காரக் காட்சி.



நூறாவது ஆண்டு குருபூசையில்
நல்லை ஆதீன மண்டபத்தில் அன்னதானம்
நடைபெறுகின்ற காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லை ஆதீனத்தில் அன்னதான நிகழ்வு.



அன்னதான நிகழ்வில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகர் சுவாமிகள் வெளிப்படுத்திய மகிமையுடைய

# செல்லப்பா சுவாமிகள் நினைவாலயம்



ஒரு பொல்லாப்பும் இல்லை

முழுவதும் உண்மை

எப்பவோ முடிந்த காரியம்

யாமறியோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போஸ்கோ - நல்லூர்
021 222 0370